
லட்சுமி பாலாஜி பதிப்பகம்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்★ சங்கமித்த நெஞ்சம்... ★ முத்துலட்சுமி ராகவன்
முத்துலட்சுமி ராகவன்
சங்கமித்த நெஞ்சம்...


முத்துலட்சுமி ராகவன்
சங்கமித்த நெஞ்சம்...
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ சங்கமித்த நெஞ்சம்... ★ முத்துலட்சுமி ராகவன்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

" சங்கமித்த நெஞ்சம்"

1

எனது நெஞ்சம் உன் வசம்...

உனது நெஞ்சம் என் வசம்...

அழகான நிலவு..!

நிலவிற்கு அழகிருப்பதில் ஆச்சரியமில்லை.. அதிலும் பௌர்ணமியின் முழுநிலவின் அழகிற்கு ஈடு இணையில்லை..

ஆனால்.. அன்று ஹரிஹரன் பார்த்த நிலவிற்கு அழகு அதிகமாக இருந்தது.. பொங்கித் ததும்பியது..

அது எதனால் என்ற யோசனையுடன் அவன் திரும்பிப் பார்த்தான்.. கட்டிலில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த ரூபிணியைப் பார்த்ததும்.. அவனுக்கு என்றுமேயில்லாமல் இன்று பௌர்ணமி நிலவின் அழகு அதிகமாக மிளிர்வதற்கான காரணம் என்னவென்று புரிந்தது...

தூக்கத்தில் புரண்டு படுத்தவளின் முகத்தில் ஓர் சிரிப்பு வந்தது..

" கள்ளச் சிரிப்பு..?...

அவன் முகத்திலும்.. அந்தக் கள்ளச் சிரிப்பிற்கான காரணம் புரிந்து சிரிப்பு உதித்தது..

அவன் கட்டிலுக்கு சென்று அவளருகில் அமர்ந்து அவள் முகம் பார்த்தான்..

" இஞ்சி இடுப்பழகி..

மஞ்சள் சிகப்பழகி..

கள்ளச் சிரிப்பழகி..

மறக்க மனம் கூடுதில்லையே... யேய்....."

அவன் மெல்லிய குரலில் பாடினான்.. அவனது பாடல் சத்தத்தில் அவள் கண் விழித்தாள்.. விழித்தவளின் பார்வை வட்டத்தில் அவளருகில் அமர்ந்திருந்த ஹரிஹரன் தென்பட்டான்.. அவனது முகத்திலிருந்து அதீதக் காதலைக் கண்டவள்.. புரண்டு.. அவன் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்டாள்..

அவளது கரங்கள் உயர்ந்து அவன் கழுத்தில் மாலையாக விழுந்தது அவனை நோக்கி அவளது கரம் இழுக்க.. விருப்பத்துடன் அந்த இழுப்பிற்கு உடன்பட்டு... அவளது முகத்தோடு முகம் வைத்துத் தேய்த்தான் ஹரிஹரன்..

மல்லிகையின் நறுமணத்துடன் கூடிய ஒரு பிரத்யேகமான வாசத்தை அவள் மேல் உணர்ந்தவன் மயங்கினான்..

" மறக்குமோ மாமன் எண்ணம்..
மயக்குதே பஞ்சவர்ணம்.....

மடியிலே ஊஞ்சல் கட்ட....

வா.. நீதான்..."

இப்போது சற்று சத்தமாகவே அவளது காதினில் பாடினான் ஹரிஹரன்.. அவளது தூக்கம் மறந்து போக.. முகம் சிவந்து போனாள் அவள்..

" பார்த்து மயக்கினது பத்தாதுன்னு.. இப்ப பாடி மயக்க.. கிளம்பிட்டிங்களா.." அவள் குரலில் நிஜமான மயக்கம் தெரிந்தது..

" அப்படியா.. நீ என்னிடம் மயங்கிப் போனவளா..?"

அவளது மயக்கத்தை உணர்ந்த நிச்சயம் ஹரிஹரனின் குரலில் தென்பட்டது..

" பின்னே.. இல்லையா..?"

அவனது இடுப்பைச் சுற்றி அவளது கரம் வளைத்துக் கொள்ள அவன் குனிந்து அவளது கன்னத்தில் முத்தமிட்டான்..

" மயங்கிப் போனவதான்.. இப்படித் தூங்கினியாக்கும்..?"

" தூக்கம் வந்தால்.. தூங்க மாட்டாங்களா.."

" இப்ப ஏண்டி விழித்த..?"

" விழிப்பு வந்தா.. விழிக்க மாட்டாங்களா..?"

அவள் சிணுங்கினாள்.. அவன் என்னவோ பெரிய யுாஸ்யத்தைக் கேட்டு விட்டவனைப் போல.. ரசித்துச் சிரித்தான்..

" ரூபிணி..."

" ம்ம்ம்.."

" எதுக்குடி.. என்கிட்ட மயங்கின..?"

அவன் கேள்வியைக் கேட்டவளின் முகத்தில் வெட்கச் சிரிப்பு வந்தது.. விரல் நீட்டி.. அவனது நெற்றியைத் தொட்டவள்.. அப்படியே கோடிழுத்து அவனது தீர்க்கமான நாசியின் மீது வந்து நிறுத்தினாள்..

" அதுவா..?"

" அதுதான் சொல்லு.."

" நீங்க பெரிய பணக்காரர்.. எனக்கு.. பட்டும்.. வைரமுமாய் அலட்டிக்கனும்னு கொள்ளை ஆசை.. அதுதான்.. உங்க பணத்தைப் பார்த்து உங்ககிட்ட மயங்கிப் போனேன்.."

அவள் சொல்லும் போதே.. கலகலத்துச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பு.. அவளது வார்த்தைகளின் பொய்மையை அறிவிக்க.. ஹரிஹரன் நெகிழ்ந்து போனான்..

" ஏய்ய்.. சொல்லுடி.."

" என்னத்தைச் சொல்ல..?"

" ஏன் மயங்கின...?"

" நீங்க ஏன்.. என்னை மயக்கினீங்க..?"

அவளது குரலில் நிஜமான மயக்கம் ஒலித்தது. ஹரிஹரன் கிளர்ந்து அவள் மேல் சரிந்தான்..

சற்று முன் விட்டதை அவன் மீண்டும் தொடர.. ரூபிணி பேச்சிழந்து போனாள்..

" நடுஜாமம் கடந்தாச்சு..."

" ஆமாம்.. கடந்தாச்சு.."

" விடியப் போகுது..."

" ஆமாம்.. விடியப் போகுது.."

" இன்னும்.. ஒரு பொட்டுக்கூட தூங்கலை.."

" யார் தூங்கலை..? நீதான் கும்பகர்ணியைப் போல இப்பத் தூக்கம் போட்டாயே.."

" இது ஒரு தூக்கமா..? கோழித் தூக்கம்.."

" கோழித் தூக்கம்ன்னுதான் எல்லோரும் சொல்கிறாங்க.. சேவல் தூக்கமுன்னு யாராவது சொல்கிறாங்களா..?"

" இதன் மூலம்.. தாங்கள் சொல்ல வருவது என்னவோ.."

" கோழிதாண்டி.. தூங்கும்.. சேவல் தூங்காது.."

" தூங்காம ஊரையே எழுப்புமாக்கும்..?"

" இந்தச் சேவல்.. ஊரை எழுப்பாது.. உன்னைத்தான் எழுப்பும்.."

" ஏனாம்.. எனக்கு மட்டும் தூக்கம் வராதா..?"

" வரக்கூடாது.."

“ நான் தூங்க வேணாமா...?”

“ வேண்டாம்.. எனக்கு வேற ஒன்னுதான் வேணும்..” அவன் வேண்டியதை அவள் காதில் சொல்ல.. அவள் கிளர்ந்தாள்.. அவன் மார்பில் முகம் புதைத்து.. அவனுக்குள் ஒன்றிப் போனாள்..

அது முதலிரவு.. அவளுக்கும்.. அவனுக்குமான காதல் திருமணத்தின் பின்பு.. உரிமையுடன் அவர்கள் சந்தித்துக் கொண்ட முதலிரவு...

அவன் ஹரிஹரன்..,

வெறும் ஹரிஹரன் என்று சொல்வதைவிட.. விழுப்புரம் ஹரிஹரன் என்று சொன்னால்.. பிறந்த குழந்தை கூட அவனை எளிதாக அடையாளம் சொல்லி விடும்..

அந்த அளவுக்கு அவனது பெயர் பிரசித்தி பெற்றது..

அவன் சிங்கம்.. தனிக்காட்டு ராஜா.. முடி சூடா மன்னன்.. அவனது எல்லைக்குள் அவனது ராஜாங்கம் மட்டுமே நடந்து வந்தது.. அவனது வார்த்தைக்கு மறு வார்த்தையை அவன் சந்தித்ததே இல்லை..

அவள்.. ரூபிணி..,

அவனைப் போன்ற அடைமொழியோ.. அடையாளங்களோ இல்லாத சாதாரண இந்திய பிரஜை அவள்..

அவளுடைய பக்கத்து வீட்டுப் பாட்டிக்குக் கூட அவளது பெயரைச் சொல்லி விவரம் கேட்டால்.. பதில் சொல்லத் தெரியாது..

“ அப்படியா.. அந்த வீட்டில.. அப்படியொரு பொண்ணு இருக்கா..?” என்றுதான் பதில் சொல்லுவாள்..

அதற்குப் பதிலாக.. அவளைப் பெற்ற ரங்கநாதனின் பெயரையோ.. அவளை பத்து மாதம் சுமந்த வீரலட்சுமியின் பெயரையோ.. அவள் கூடப் பிறந்த தம்பி.. நவீனின்

பெயரையோ சொல்லி விசாரித்தால்.. உடனே பதில் கிடைத்து விடும்..

“ யாரைக் கேட்கறீங்க.. அந்த அடாவடிக்காரன் ரங்கநாததனையா கேட்கறீங்க.. அவனைத் தெரியாமல் இருக்குமா..? அதோ.. அந்த வீடுதான் அவன் வீடு.. ஆனா.. இந்த தெரு முழுமைக்கும் அவன் சொந்தக்காரன் என்பான்..”

“ வீரலட்சுமியா..? தெரியாம.. அவ வீட்டு வாசல்ல நின்னு காய் வாங்கிட்டேன்.. ஒரு வெங்காயத் தோல் பறந்து அவவீட்டு வாசலில் விழுந்துருச்சு.. அதுக்கு ஒரு சத்தம் போட்டா பாரு.. அப்பப்பா.. அந்த வாரம் முழுவதும்.. நான் வெங்காயத்தையே தள்ளி வச்சுட்டேன்னா பாருங்களேன்..”

“ எப்பப் பார்த்தாலும்.. கிரிக்கெட் மட்டையைத் தூக்கிப் பிடிச்சுக்கிட்டு.. யார் மண்டையை உடைக்கலாமுன்னு அலைகிறானே.. அந்த நவீன் பயலைப் பத்தியா கேட்கறீங்க..? நீங்களே இதுக்கு ஒரு நியாயத்தைச் சொல்லுங்க.. கிரிக்கெட் மட்டையை எடுத்தா பந்தைத்தானே அடிக்கனும்..? இவன் எதுக்கு.. மத்தவங்க மண்டை மேல அடிக்கிறான்..?”

இப்படிப்பட்ட வீட்டில்.. இருக்குமிடம் தெரியாமல் இருப்பவள்தான் ரூபிணி..

அவளுடைய அக்கா தாரிணியைப் பற்றிக் கூட மற்றவர்கள் விவரம் சொல்லி விடுவார்கள்.. ஆனால் ரூபிணியைப் பற்றிக் கேட்டால்..

“ அதுவா.. அந்தப் பெண் ரொம்பவும் சாது..” என்பதற்கு மேல்.. ஒரு விவரமும் சொல்ல மாட்டார்கள்..

அப்படிப்பட்ட சாதுவான ரூபிணி.. ஹரிஹரன் என்கிற ஆண் சிங்கத்தை.. தன் கடைக் கண் பார்வையில் கட்டிப் போட்டது பெரும் விந்தையிலும் விந்தைதான்..

ஊரே அவனைப் பார்த்து பயந்து விலகி நின்று மரியாதை செய்தபோது.. அவள் மட்டும்.. அவன் முகம் பார்த்து புன்னகை செய்தாள்..

மற்றவர்கள் அவனைக் கண்டு அஞ்சியபோது.. அவள் அவனை நேசித்தாள்.. காதலித்தாள்..

தொடுவானாய்.. தொலைதூரச் சூரியனாய்.. கைக்கு எட்டாத உயரத்தில் அவன் இருப்பதைப் பற்றிய கவலையில்லாமல் அவனிடம் மயங்கி நின்றாள்..

“ தொடுவான நிழலொன்றும்

தொட்டுவிடும் தூரமில்லை - அதை

எட்டி விரல் தொட்டுவிட்டால்..

என் மனதில் பாரமில்லை.. “

அவனைக் காதலித்த காலங்களில் அவளது டைரியில் இவ்வாறு எழுதி வைத்திருந்தாள் ரூபிணி..

பின்னாளில் ஓர் நாள் ஹரிஹரன் அந்தக் கவிதையை படிக்க நேர்ந்த போது.. புருவம் உயர்த்தி.. அவளையே இமைக்காமல் பார்த்தான்..

அந்தக் கவிவரிகள்.. அவளது காதலின் அளவை படம் பிடித்துக் காட்டின.. அந்தக் கவிதை சொல்லிய உண்மை அவளது காதலின் உண்மையை உணர்த்தும் விதமாய் இருந்தது.. “ ஊருக்குத்தான் நான் தொடுவானம்டி.. உனக்கு என்றைக்கும் உன் வானம்தான்...”

அவளைக் கட்டியணைத்து.. அவள் காதருகில் அவன் முணுமுணுத்தபோது.. அவள் மனம்.. அவள் வசத்தில் இல்லை..

அவன் முரடன்தான்.. கோபக்காரன் தான்... யாருக்கும் அஞ்சா நெஞ்சன்தான்.. சுட்டெரிக்கும் சூரியன்தான்.. “ தாதா” என்ற பின்புல அடையாளத்தைக் கொண்டவன்தான்..

ஆனால்.. அவளுக்கு மட்டும்.. அவன் காதலன்.. மென்மையானவன்.. கனிவானவன்.. நிலவின் குளுமை கொண்டவன்.. அவளது கண்ணசைவில் கட்டுப்படும் ஆண்மகன்...

# 2

எப்பொழுதும் உன் நினைவினிலே...

ஏங்குதடி எனது நெஞ்சம்...

அதே திருமண மண்டபம் ஒரு காலத்தில்.. ஹரிஹரன் மீது ரூபிணியின் மனதில்.. காதல் பொங்கி எழுந்த போது.. அதற்கு அணை கட்டி தடுத்து நிறுத்திய அவளுடைய தோழி ஜமுனாவின் திருமணம் நடந்த அதே மண்டபம்..

ஜமுனாவை கைபிடித்த நந்தகோபால் ஹரிஹரன் என்ஜினியரிங் காலேஜில் லெக்சரராக வேலை செய்கிறான்.. அதனால் அவனது திருமண வரவேற்பு செலவை ஹரிஹரன் ஏற்று அதை பிரம்மாண்டமாக நடத்திக் கொடுத்தான்..

" எல்லோருக்குமா ஹரிசார் இப்படி செலவு செய்வார்..?"

இப்படி ஆச்சரியமாக பேசியவர்களும் உண்டு.. ஏனென்றால் ஹரிஹரன் வள்ளல்தான்.. தன்னிடம் வேலை செய்கிறவர்களுக்கு தாராளமாக பணத்தை அள்ளி வழங்குபவன்தான்.. ஆனால் அவனது வேலைகளை பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னால் நின்று திருமண வரவேற்பை நடத்தி வைக்கும் அளவிற்கு நேரமிருப்பவனல்ல..

" பணம் வேண்டுமா..? வாங்கிக் கொள்.. என் திருமண மண்டபத்தில் உன் விசேசத்தை நடத்திக் கொள்கிறாயா..? செய்.. நான் வரவேண்டுமா..? நேரமிருந்தால் வருகிறேன்.."

இதுதான் அவனது வார்த்தையாக இருக்கும்.. அப்படியே நேரமிருந்தாலும்.. விசேசம் நடைபெற்று முடியும் தறுவாயில் வந்து ஓர் நிமிடம் தலையைக் காட்டி விட்டுப் போவான்.. அதுவும்.. மிக.. மிக.. முக்கிய மானவர்களுக்கு மட்டுமே இந்த மரியாதை கிடைக்கும்..

அப்படிப்பட்ட ஹரிஹரன்.. அவனிடம் வேலைபார்த்த நந்தகோபாலின் திருமண வரவேற்பிற்காக

டெல்லியிலிருந்து விமானத்தில் பறந்து வந்தான்.. திருமண வரவேற்பின் ஆரம்பத்திலிருந்து.. கடைசிவரை அவனது அனைத்து வேலைகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு.. கலந்து கொண்டான்..

இதுதான் அனைவரையும் ஆச்சரியப் பட வைத்தது.. இந்த அளவுக்கு நந்த கோபாலின் மேல் ஹரிஹரன் பாசம் காட்டுவான் என்று நந்த கோபாலே எதிர்ப் பார்க்கவில்லை.. அவனும் மனதிற்குள் பிரமித்து தான் போனான்..

அவர்களுக்கு என்ன தெரியும்..? ஹரிஹரன் முக்கியத்துவம் காட்டியது நந்த கோபாலுக்காக இல்லை என்பது...

நந்தகோபால் திருமணம் செய்து கொண்டிருந்த ஜமுனா.. ரூபிணியின் தோழி..

நந்தகோபாலின் சொந்த ஊரில் நடந்த திருமணத்தில் கலந்து கொள்ள முடியாத ரூபிணி கட்டாயம் திருமண வரவேற்பில் கலந்து கொள்ள வருவாள்.. ரூபிணியின் கலக்கத்திற்காக விலகியிருப்பதாக வாக்களித்து விலகியிருந்த ஹரிஹரன்.. அவளை ஒரேயொரு முறை கூட்டத்தின் மத்தியில் வைத்தாவது சந்தித்து விட வேண்டுமென்பதற்காக.. நந்த கோபாலின் திருமண வரவேற்பை தன் செலவில் தன் திருமண மண்டபத்தில் நடத்திக் காட்டினான்..

அந்த திருமண வரவேற்பில் கலந்து கொள்வதற்காக டெல்லியிலிருந்து பறந்தும் வந்தான்..

அன்றைய திருமண வரவேற்பில் தான்.. ரூபிணி தன் அனைத்து மனத் தடைகளையும் மீறி.. கரையுடைத்த வெள்ளமாக.. அவனைத் தேடி சரணடைந்தாள்..

தன் மனதில் ஒளித்து வைத்திருந்த காதலை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு.. ஹரிஹரனிடம் தன்னை ஒப்புக் கொடுத்தாள்..

“ பொன் விலங்கை வேண்டுமென்றே.

பூட்டிக் கொண்டேனே....”

அவள் பாடலில் மறுகிய போது.. ஹரிஹரன் மனதில் ஆண்மையின் கர்வம் பொங்கியது..

அவனுக்காக.. அவனுக்காக மட்டுமே... ஒரு பெண் உருகி மறுகுகிறாள்.. அவனது ஆண்மை வெற்றிப் பெருமிதம் கொண்டது.. அவளது பொன் விலங்கை அன்று அவன் உடைத்தான்.. அவள் மாட்டிக் கொண்டிருந்த மனச் சிறையிலிருந்து அவளை  அவன் விடுவித்தான்..

ஜமுனாவின் திருமண வரவேற்பில் கலந்து கொள்ள வந்திருந்த ரூபிணி.. மற்றவர்களின் வற்புறுத்தலுக்காக அன்று பாடிய பாடலில் அவளது மனக்கதவைத் திறந்தாள்..

“ உன் முகத்தைப் பார்ப்பதற்கே

கண்ணும் வந்தது..

உன் மார்பில் சாய்வதற்கே..

உடலும் வளர்ந்தது..

கன்னிமனம் உனக்கெனவே..

காத்திருக்குது.....

காவல் தாண்டி.. ஆவலுன்னை

தேடி ஓடுது.. தேடி ஓடுது..”

அன்று அவளது கண்கள் அலைபாய்ந்து அவனைத் தேடியதை.. இன்று அதே திருமண மண்டபத்தில்... அவர்களது திருமண வரவேற்பில் அவளது கணவனாக நின்று கொண்டிருந்த ஹரிஹரன் நினைத்துப் பார்த்தான்..

“ இதே கல்யாண  மண்டபத்தில்தான் இவள் பாடினாள்.. கண்களால் என்னைத் தேடினாள்.. ...

அவன் அவளைப் பார்த்த அதே வினாடியில் அவளும் அவனைப் பார்த்தாள்.. அவள் மனதிலும் இதே நினைவுதான் என்பதை அவளது விழிகள் உணர்த்தின..

“ ரூபிணி”

“ ம்ம்ம்..”

“ நினைவிருக்கா..?”

“ மறக்குமா..?”

அவளது ஒற்றை வரி பதில் அவளது காதலை உணர்த்த.. அவன் ஆசையுடன் அவளைப் பார்த்தான்..

அவள் கழுத்தில் மின்னிய புதுத்தாலிச் சரடு.. அவள் அவனது மனைவி என்பதை நினைவு படுத்த.. அவளை ஒட்டி நின்றான்..

“ என்ன..?” அவள் கிசுகிசுப்பாக வினவினாள்..

“ என்ன..?” அவன் அறியாதவனைப் போல அவளைப் பார்த்்தான்

“ தெரியாதா..?” அவள் பொய் கோத்துடன் முறைத்தாள்..

“ தெரியலைடி......” அவன் மெலிதாக கண் சிமிட்டினாள்..

3

நெஞ்செல்லாம் உன் நினைவிருக்க

நீயெங்கே சென்றுவிட்டாய்...?

மேடையில் கம்பீரமாக நின்று கொண்டிருந்த ஹரிஹரனைப் பொறாமையுடன் பார்த்தான் மூர்த்தி.. “ கடைசியில் ஜெயித்து விட்டானே... ...

“ என்ன மூர்த்தி வேகுதா..?” என்று கேட்டபடி அவனருகில் வந்து நின்றான் ஜவஹர்.

“ என்னப்பா இப்படிக் கேட்கிற..?” மூர்த்திக்கு கோபம் வந்துவிட்டது.. அவனே.... அவன் நூல் விடுகிற.. அல்லது

விட நினைக்கிற பெண்களையெல்லாம்.. வேறு ஆண்கள் காதலித்து.. கல்யாணம் பண்ணிக் கொண்டு போய் விடுகிற வயிற்றெரிச்சலில் இருந்தான்..

அப்போது போய்.. வெந்த புண்ணில் வேலை பாய்ச்ச ஜவஹர் நினைத்தால் அவன் கொதிக்க மாட்டானா..?

" அட.. என்னப்பா நீ.. பேன் அந்தப் பக்கம் ஓடுது.. நீ இந்தப் பக்கம் நிற்கிற.. வியர்வையில் வேகிறாயான்னு கேட்டா.. இந்த முறை.. முறைக்கிற..?" ஜவஹரின் பார்வையில் அப்பட்டமான விசமம் தெரிந்தது..

மார்கழி மாதக் குளிர் காலத்து மாலை நேரத்தில்.. ஜவஹர் வியர்வையைப் பற்றிக் கவலைப்பட்டுப் பேசினால்.. அதில் எந்த அளவுக்கு அக்கறையிருக்கும் என்பதை அறிந்து கொள்ள முடியாத முட்டாளா.. மூர்த்தி..?

அவனே ஒரு வீட்டை ஒன்பது வீடாக்குகிறவன்..

என்ன ஒன்று.. அதே தன்னம்பிக்கையில் அவன் ரூபிணிக்கு ஹரிஹரன் மீதிருந்த அதீதமான காதலை விளக்கும் மொட்டைக் கடிதத்தை ரூபிணியின் தகப்பனாருக்கு போட்டு விட்டான்..

விளைவு...? ஹரிஹரன் ஆள்கள் அவனது எலும்பை எண்ணி.. ஆஸ்பத்திரியில் படுக்க வைத்து விட்டார்கள்..

புத்தூர் வைத்தியமெல்லாம் முடிந்து.. இப்போதுதான் ஒருவழியாக.. எலும்புகள் ஒன்றோடொன்று ஒட்டி உறவாட ஆரம்பிக்க விழுப்புரத்திற்கு திரும்பி வந்திருக்கிறான்..

வந்தவுடனே.. ஹரிஹரன் திருமண வரவேற்பைப் பற்றிய செய்தி காதில் விழ.. கலந்து கொள்ளாமல் போனால்.. அதற்கும் ஹரிஹரன் எலும்பை எண்ணி விடுவானே என்ற பயத்தினால் ஓடோடி வந்திருந்தான்.."

என்னதான் எலும்பைப் பற்றிய கவலையும்.. அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பொறுப்புணர்ச்சியும் இருந்தாலும்.. அவன் போட்ட சதித்திட்டங்களையெல்லாம் தவிடு பொடியாக்கி விட்டு.. ரூபிணியின் அருகே

ஹரிஹரன் மாலையும் கழுத்துமாக நின்று கொண்டிருப்பதைக் காண அவனுக்குப் பொறுக்கவில்லை..

எரிதழல் பார்வையை பார்த்து மனதை ஆற்றிக் கொள்ள முயன்று கொண்டிருக்க.. அதற்குக்கூட விடாமல் ஜவஹர் வந்து நிற்கவும் அவனுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

“ டிசம்பர் மாசக் குளிரில் எனக்கு வியர்க்குமுன்னு அக்கறைப் படற ஒரே ஆள் நீயாத்தான் இருப்ப ஜவஹர்..”

“ என்னப்பா செய்றது.. ஆயிரம்தான் இருந்தாலும் நீ என் நண்பன்..”

“ யார்..? நான்..? உனக்கு..? நண்பன்..?”

“ எதுக்குப்பா இவ்வளவு சந்தேகமாக கேட்கிற..?”

“ தெரியாமல்தான் கேட்கிறேன்.. அப்படிப்பட்ட பெஸ்ட் பிரண்டா நீயிருந்திருந்தா.. ஆஸ்பத்திரியில கிடந்த என்னைப் பார்க்க ஏன் ஒரு நாள் கூட நீ வரலை..?”

“ ஆஸ்பத்திரியில கிடந்தயா..?”

“ ஏன் உனக்குத் தெரியாதா..?”

“ தெரியாதேப்பா.. த்சு.. த்சு..”

“ எதுக்கு இப்ப நாயைக் கூப்பிடுகிற..?”

“ அடச்சே.. பரிதாபப் படுகிறேன்ப்பா..”

ஜவஹரின் கண்களில் தெரிந்த கேலி அவனது வார்த்தைகளின் பொய்மையை உணர்த்த.. மூர்த்தி கடுப்பானான்..

“ யாருக்கு வேணும் உன் பரிதாபம்..?”

“ உனக்கு வேண்டாம்ன்னா விட்டு விடு.. ஆமாம்.. எதுக்காக ஆஸ்பத்திரியில் கிடந்த..? உன் உடம்புக்கு என்ன..?”

வேண்டுமென்றே ஜவஹர் கிண்டிக் கிளற.. மூர்த்தி காரணத்தை சொல்ல முடியாமல் பல்லைக் கடித்தான்..

“ ஆக்ஸிடெண்ட்..”

“ ஐயோ பாவம்..”

“ நான் கேட்டேனா..?”

“ எதைச் சொல்கிற..?”

“ உன்னைப் பாவம்ன்னு சொல்லச் சொல்லி நான் கேட்டேனா..?”

“ மனசு கேட்கலைப்பா..”

“ உனக்கா மனசு கேட்காது…? …

மூர்த்திக்குத் தெரியும்.. அவன் அடிபட்ட செய்தி அறிந்தவுடன் ஜவஹர் எல்லோருக்கும் காபி.. டிபன் வாங்கிக் கொடுத்து அதைக் கொண்டாடியிருப்பான் என்பது..

அவனுக்கு ஜவஹரின் மீது வன்மம் பொங்கியது.. அவனைச் சீண்டிப் பார்க்கும் ஆசை கிளம்பியது..

“ ஒரு வழியாய் காவடி தூக்கி.. ஜெயிச்சிட்ட..” என்றான் அவன்..

“ எதைச் சொல்கிற..?” ஜவஹரின் கண்கள் இடுங்கின..

“ இல்லை.. அந்த ப்ரீதி உனக்கு மடியவே மாட்டேன்னு அடம் பிடிச்சாளே.. அவளைக் கடைசியில் காவடி தூக்கி மடிய வைச்சுட்ட.. அதைச் சொன்னேன்..”, மூர்த்தியின் வார்த்தைகளில் கசடு இருந்தது..

“ ப்ரீதியைப் பத்திப் பேசாதே..” ஜவஹர் கண்டிப்பான குரலில் சொன்னான்..

வேறொருவர் வரலாமோ ...?

" இதென்னடா.. இப்படிச் சொல்கிற..? நம்ம ஆபிஸில் கூட வேலை பார்க்கிற பொண்ணு.. அது மேல உனக்கு எவ்வளவு உரிமையிருக்கோ அதே அளவு உரிமை எனக்கும் இருக்கு.. அதைச் சொன்னா உனக்கென்ன..?" இடக்காக கேட்டான் மூர்த்தி..

" அவ என் வொய்ப்பாகப் போகிறவ.."

" இன்னும் ஆகலைல்ல..?"

வாட் டு யு மீன்..?"

" கல்யாண மேடை வரைக்கும் வந்து மாறிப் போன கல்யாணங்கள் எத்தனையோ இருக்கு.. இதுவும் கூட அப்படியிருக்க சான்ஸ் இருக்கு.."

மூர்த்தியின் பேச்சில்.. அப்படி ஒரு சான்ஸ் அவனுக்கு கிடைத்து விடாதா என்ற ஆதங்கம் தெரிந்தது..

" இவன் அடங்க மாட்டான்.. ...

ஜவஹரின் முகத்தில் ரெளத்திரம் பொங்கியது...

" அப்படியா சொல்கிற..?" அமைதியாக வினவினான்..

அவனது முகத்தில் தென்பட்ட ரெளத்திரத்திற்கும்.. அவனது குரலில் தெரிந்த அமைதிக்கும் கொஞ்சம் கூட சம்பந்தமில்லாததைக் கவனித்த மூர்த்திக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது..

ஆனாலும்.. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல்..

" ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?" என்றான்..

" இதைப்பத்தி எனக்கொன்னும்.. தெரியலை.. கொஞ்சம் இரு.. அதோ.. அவரைக் கூப்பிட்டு.. நியாயத்தைக் கேட்போம்.."

சற்றுத் தொலைவில் அவர்களுக்கு முதுகு காட்டி நின்று கொண்டிருந்தவரைக் காண்பித்தான் ஜவஹர்..

" யார்.. அது..? ...

மூர்த்திக்கு அந்த ஆள் யாரென்று தெரியவில்லை.. அதனால் அவன் பேசாமல் ஜவஹரை வேடிக்கை பார்க்க..

" சார்.. சார்.." என்று ஜவஹர் அவரை அழைத்தான்..

அந்த ஆள் திரும்பிப் பார்த்தான்.. அவ்வளவுதான்.. வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மூர்த்திக்கு குலை நடுங்க ஆரம்பித்து விட்டது..

அந்த ஆள்.. ஹரிஹரன் உதவியாளர்..

" என்ன சார்..?" என்று வினவியபடி அருகில் வந்த அவனும் மூர்த்தியை பார்த்து விட்டான்..

அவனது புருவங்கள் உயர ஆரம்பித்த போதே.. மூர்த்தியின் முகம் வெளுக்க ஆரம்பித்து விட்டது..

" எதுக்கு சார் கூப்பிடிங்க.., இந்த ஆள் கூட உங்களுக்கென்ன பேச்சு வேண்டிக் கிடக்கு..?"

" இவன்கூடெல்லாம் மனுசன் பேசுவானா சார்? இவன்தான் என்னிடம் பேசினான்.."

" என்னவாம்..?"

" கல்யாணமேடைக்கு வருகிற கல்யாணமெல்லாம் நடந்து முடிகிற வரைக்கும் நிச்சயமில்லையாம்.. இதை எதுக்கு இங்கே வந்து நின்னுக்கிட்டு இவன் சொல்கிறான்னு எனக்குப் புரியலை.. உங்களுக்கு ஏதாவது புரியுதா சார்..?"

ஹரிஹரன் உதவியாளனுக்கு புரிந்ததோ.. இல்லையோ.. அடுத்து என்ன நடக்கப் போகிறது என்று மூர்த்திக்குப் புரிந்து விட்டது..

" தனியாப் பேசனும்.. வர்றியா.." உதவியாளன் மூர்த்தியின் தோளின் மீது கை போட்டு அன்பாக அழைத்துச் செல்ல.. வேறு வழியின்றி அவனோடு சென்றான் மூர்த்தி.. அவன் மனதில் கவலை எழுந்தது..

ம்ம்.. இப்ப.. எத்தனை எலும்புக நொறுங்கப் போகுதோ.. …

5

நீ சொன்ன வார்த்தையிலே…

என் நெஞ்சகமே துடிக்குதடி…

ரூபிணி அழகாக இருந்தாள்.. எப்போதும் அவள் முகத்தில் இருந்து வந்த இனம் புரியாத கலக்கம் மாறி.. ஓர் நிறைவு குடி கொண்டிருந்ததில் அவளது அழகு இன்னும் அதிகமாக கூடித் தெரிந்தது..

அதை ஹரிஹரன்னும் கவனித்தான்..

அலைபாய்ந்த அவளது விழிகள் அமைதியுடன் சுடர் விட்டன.. நிற்கின்ற முறையிலேயே ஒரு நிமிர்வு தெரிந்தது..”

அவன் சன்னக் குரலில் அவளிடம் சொன்னதும் அவள் முகம் சிவந்தாள்..

“ ஏனாம்.. இதுக்கு முன்னாலே யாராம்..?”

“ பயந்தாங்குளி..”

“ அப்படியா..? பயந்தாங்குளி.. ஹரிஹரனைக் காதலிக்கக் கூடாதா..?”

“ அதுதான் காதலிச்சுட்டயே..”

“ என்னவோ.. அலுப்பாய் சொல்கிறதைப் போல இருக்கு..”

ஹரிஹரன் தன் வரிசை பற்கள் தெரிய சிரித்தான்.. அவள் குரலில் தெரிந்த மனத் தாங்கல் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

“ இதுதாண்டி உலக மகா ஜோக்.. உன்னைக் காதலிக்கிறதில் நான் அலுத்துக்கல.. சலிச்சுக்கல.. இது உனக்கே தெரியும்..”

“ அப்புறம் எதுக்கு சொல்லிக் காட்டனுமாம்..?”

“ சொல்லிக் காட்டியது.. இப்போதைய என் ரூபிணியைப் பத்தி.. உன்கிட்ட ஒரு மாற்றம் தெரியுதுடி..”

“ கல்யாணம் பண்ணிக்கிட்டிங்கல்ல.. மாற்றம் தெரியத்தான் செய்யும்.. மயக்கம் குறையத்தான் செய்யும்..”

இப்படிச் சொன்னவளை ஏற இறங்கப் பார்த்த ஹரிஹரன் விழிகளில் மயக்கம் பொங்கித் ததும்பியது..

“ ஏய்ய்.. நேரம் காலம் தெரியாம உசுப்பி விடாதேடி.. உன் மேல.. எனக்கிருக்கிற மயக்கம் வரவர கூடிக்கிட்டே போகுதுடி.. அதுவாவது.. குறைகிறதாவது.”

ரூபிணியின் கன்னச் சிவப்பு அதிகரிக்க.. அவள் வெட்கத்துடன் அவனை இறைஞ்சல் பார்வை பார்த்தாள்..

“ ப்ளீஸ்.. இப்படியெல்லாம் பேசாதீங்க..”

“ அடிப்பாவி.. இப்படிப் பேசித்தானே என்னை டெல்லிக்கு துரத்தின? திரும்பவும் ஆரம்பிச்சுட்டியா..?”

குறும்பு செய்யும் அழிச்சாட்டியக்காரக் குழந்தையை தாயால் கோபித்துக் கொள்ள முடியுமா..?

இப்படி.. திருமண வரவேற்பு மேடையில் ஊர் பார்க்க நின்று கொண்டு சரஸம் பேசும் காதல் கணவனை அவளால்தான் கடிந்து கொள்ள முடியுமா..?

செய்வதறியாமால் அவள் தவித்துப் போனாள்.. அவளது தவிப்பை அவன் சுவாரஸ்யமாக வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான். அப்போது அவளைக் காப்பாற்ற வந்ததைப் போல.. ஜமுனாவும்.. நந்தகோபாலும் மேடையேறினார்கள்..

“ என்னடி.. என்ன சொல்கிறார் உன் ஹஸ்பெண்ட்..?”

தனது முதலாளி என்பதால் நந்தகோபால் மரியாதையுடன் பேசா மடந்தையாய் புன் சிரிப்புடன் நிற்க.. ஜமுனா ரூபிணியின் தோழியென்ற உரிமையுடன் ஹரிஹரனை குறும்புப்பார்வை பார்த்தபடி ரூபிணியிடம் கேட்டாள்..

ரூபிணி பதில சொல்லாமல் சிரிக்க.. அவளுக்குப் பதில் ஹரிஹரன் ஜமுனாவிற்கு இணையான குறும்புப் பார்வையுடன் பதில் சொன்னான்..

" உங்களைப பார்த்ததும்.. இவ என் பக்கத்தில் நிற்கப் பயந்துக்கிட்டு மேடையை விட்டு இறங்கி ஓடிப் போகப் போறேன்னு ஆரம்பிச்சிட்டா.."

" ஓ... அப்படியா..? .. அப்புறம்..?"

" அப்புறம்.. நான் தான் அவகழுத்தில் நான் கட்டியிருக்கிற தாலியை நினைவுபடுத்தி.. தைரியம் சொன்னேன்..

" என்ன தைரியம் சொன்னீங்க சார்..? அதையும்தான் சொல்லுங்களேன்.. கேட்போம்.."

" ஸோ.. கதை கேட்கிற முடிவோடதான் மேடையேறியிருக்கிறீங்கன்னு சொல்லுங்க.."

" பின்னே.. உங்க காதல் கதைக்கு பிள்ளையார் சுழிபோட்டவளே நான்தான்.. நான் கேட்காமல்.. வேற யாரு கேட்பாங்க.."

" உரிமைக் குரல் கொடுக்கறீங்களா.."

" ஆமாம் சார்.. நான் மட்டும்.. தேமேன்னு.. கோவில்பட்டியில் இருந்து விழுப்புரத்திற்கு வேலைபார்க்க வந்து.. லேடிஸ் ஹாஸ்டலில் என் ரூம்மேட்டாய்.. ரூமுக்குள் அடைக் கோழியாய் அடைகாத்துக்கிட்டு இருந்தவளை பாண்டிச்சேரிக்கு ஊர் சுற்றிப் பார்க்க வாடின்னு இழுத்துக்கிட்டு போகலைன்னு வைய்யுங்க.. உங்களுக்கும் ரூபிணி யாருன்னு தெரிந்திருக்காது..

இவளுக்கும் உங்களைப் பார்க்க வேண்டிய அவசியம் வந்திருக்காது..”

இதைச் சொன்னவளின் முகத்தை வெகு பிரியத்துடன் பார்த்த ரூபிணி.. அவளின் கைபற்றி அழுத்தினாள்..

“ தேங்க்ஸ்டி ஜமுனா..”

“ எதுக்குடி..?”

“ எல்லாத்துக்கும்..”

இதைச் சொன்ன ரூபிணியின் முகத்தை அளவற்ற காதலுடன் பார்த்தான் ஹரிஹரன்.. அவளின் இந்தக் காதல் அவனைத் தாலாட்டியது..

ஜமுனா சொல்லியது உண்மைதானே..

அவளுடைய பிறந்த நாளுக்கு பார்ட்டி கொடுக்கிறேன் பேர்வழியென்று அவள் ரூபிணியை இழுத்துக்கொண்டு பாண்டிச்சேரியை சுற்றிப் பார்க்க போக.. போன இடத்தில் ஹரிஹரனிடம் வேலை பார்த்த தடியன் ஒருவன் ரூபிணியிடம் வம்புக்கு வர.. பொறுக்க மாட்டாமல் ரூபிணி.. போலீஸில் புகார் கொடுத்து.. அவனைத் தூக்கி உள்ளே போட.. தனது ஆள் கோர்ட்டுக்குப் போகக்கூடாது என்பதற்காக ஹரிஹரன் ரூபிணியைப் பார்த்து பேச வர.. அவனிடம் ரூபிணி நடந்ததை விளக்க.. தவறுக்கு தண்டனை கொடுக்கிறேன் என்று அவன் வாக்களிக்க.. ரூபிணி உடனே தன் புகாரைத் திரும்பப் பெற்றக் கடிதத்தை எழுதி அவனிடம் தர.. அப்போது.. அவர்களுக்குள் ஒரு பூ மலர்ந்தது... அதுதான்.. அவர்களது காதலின் முதல்படி..

அந்தப் பூவை மலர வைத்து.. அதன் வாசத்தை அவர்கள் இருவரின் நெஞ்சுக்குள்ளும் உறைய வைத்த ஜமுனாவை இருவரும் அன்புடன் பார்த்தார்கள்..

“ நீங்க இதை மட்டுமா செய்தீங்க.. என் பெண்டாட்டியை என் மேல இருக்கிற காதலை ஒப்புக் கொள்ள விடாம மிரட்டி வைச்சிருந்தீங்களே.. அதைச்சொல்ல மறந்துட்டிங்களே..”

ஹரிஹரன் விளையாட்டுப் பேச்சைப் போல சொல்லி விட்டான்..

“ காதலைப் பற்றி எனக்கு அப்பத் தெரியலையே சார்..” நந்தகோபாலைக் காதலுடன் பார்த்தபடி ஜமுனா சொன்னாள்..

“ இப்பத் தெரிஞ்சிருக்குமே..”

“ காதலைப் பற்றியும் தெரிஞ்சுக்கிட்டேன்.. உங்க காதலின் உறுதியைப் பத்தியும் புரிஞ்சுக்கிட்டேன்.. நீங்க ரொம்பவும் லக்கி  சார்.. என் பிரண்ட் உங்களை உயிருக்குயிராய் காதலிக்கிறா.. இப்படிப்பட்ட காதல் கிடைக்க நீங்க கொடுத்து வைத்து இருக்கனும்..”

அந்தக் கொடுத்து வைத்தவன்.. ரூபிணியை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்து வைக்க.. அருகே நந்தகோபால் நிற்கும் உணர்வில் ரூபிணி லஜ்ஜையுற்றாள்..

“ ஏய்ய்.. சும்மாயிருடி.. நீ வேற கிளப்பி விடாதே..”

“ அப்படிப் போடு.. அப்ப சார்.. உன்கிட்ட லவ் டயலாக்கை அள்ளி விட்டுக்கிட்டு இருந்தாராக்கும்..”

“ அதையேன் கேட்கிற.. இது ரிசப்சன் மேடைங்கிறதே அவருக்கு மறந்து போச்சு..”

“ நீ பக்கத்தில் நின்னா.. அவருக்கு உலகமே மறந்துதான் போகும்..” ஜமுனா கேலியுடன் சிரித்துவிட்டு மேடையை விட்டு இறங்கினாள்.. சற்று நேரத்தில் மெல்லிசைக் கச்சேரியில் பாடல் ஒலித்தது..

“ என்னருகே நீயிருந்தால்....
இயற்கையெல்லாம்
மாறுவதேன்..?”

உன்னருகே நானிருந்தால்..                உலகமெல்லாம்
சுழலுவேன்..?”

ஹரிஹரன் விழிகளும்.. ரூபிணியின் விழிகளும் சந்தித்துக் கொண்டன.. ரூபிணி மெலிதாகச் சிரித்தாள்..

“ இது ஜமுனாவின் வேலை..”

“ தெரியுது..”

அவன் ரசனையுடன் மனைவியைப் பார்க்க.. அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு அடுத்த விருந்தாளியை எதிர் கொணடாள்..

“ வா ப்ரீதி.. வாங்க ஜவஹர் சார்..”

வரவேற்றபடியே அவர்களை அறிமுகப் படுத்துவதற்காக ஹரிஹரனை பார்த்தாள் ரூபிணி..

“ இது..” என்று அவள் ஆரம்பிக்கும்போதே..

“ தெரியும்..” என்றான் அவன்..

“ இவங்க உன்னுடன் ஆபிஸில் வேலைப் பார்க்கிற ப்ரீதி.. இவர் அவங்களை தினத்துக்கு ஒரு சிசுவேஷன் சாங்கைப் பாடிக் காதலித்த காதலர்.. இவங்க காதல் இப்ப கல்யாணத்தில் முடியப் போகுது.. சரிதானே..”

“ ரொம்ப சரி..” என்று ரூபிணி சிரிக்க.. பிரீதியோ விழி விரித்து ஆச்சரியப் பட்டாள்..

“ எப்படி  சார்..? எங்களைப் பத்தி இத்தனை விவரங்களை பிட்டுப்பிட்டு வைக்கறீங்க..?”

“ அதெல்லாம் மேஜிக்..” ஹரிஹரன் சிரித்தான்..

ஜவஹருக்கு அந்த ஆச்சரியமே வரவில்லை.. அவனுக்கு ஹரிஹரனை பற்றித் தெரியுமே.. அவர்களைப் பற்றிய விவரங்களை ஹரிஹரன் சொல்லாமல் இருந்திருந்தால் தான் அவன் ஆச்சரியப்பட்டிருப்பான்..

“ ஹலோ ஜவஹர்..”

இயல்பாக ஹரிஹரன் கை கொடுக்க.. பதிலுக்கு பவ்யமாக கை கொடுத்தான் ஜவஹர்..

“ எப்ப உங்க கல்யாணம்..?”

“ உங்களை முந்திக்குவோம்ன்னு நினைத்தோம் சார்.. ஆனால் உங்க வழக்கப்படி நீங்க முந்திக்கிட்டிங்க..” ஜவஹர் ப்ரீதியை ஜாடையாக பார்வையிட்டான்..

“ அதுதானே.. ஊருக்குப் போகிறேன்னு போனவ.. திரும்பி வரும்போது தாலியோட வந்து நிற்கிறா.. கேட்டால் எனக்கும் சாருக்கும் கல்யாணமாகிருச்சுன்னு சொல்கிறா..” மனத்தாங்கலுடன் சொன்னாள் ப்ரீதி..

“ அது பெரிய கதை ப்ரீதி..”

எவ்வளவு பெரிய கதையா இருந்தாலும்.. என்கிட்ட இருந்து எப்படி நீ அதை மறைக்கலாம்..? உன்னிடம் சொல்லிக்காம நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா நீ சும்மா விட்டிருப்பியா..” ப்ரீதி ரூபிணியுடன் சண்டையிடத் தயாரானாள்..

“ இதுக்குத்தான் மூணுமணிநேரமா அலங்காரம் பண்ணிக்கிட்டு கிளம்பி வந்தியா..?” ஜவஹர் கேலியாகக் கேட்டான்..

“ எதுக்குன்னு கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க ஜவஹர்..” ஹரிஹரன் தூண்டி விட்டான்..

“ ரிசப்ஷன் மேடையில் ஏறி.. உங்க வொய்பபோட சண்டை போடத்தான் இவள் கிளம்பி வந்தாளான்னு கேட்டேன் சார்..” ஜவஹர் விளக்கம் கொடுத்தான்..

“ ரூபிணி... என்று பெயர் சொல்லி அழைக்காமல் அவன் கெட்டிக்காரத் தனமாக “ உங்க வொய்ப்... என்று குறிப்பிட்டதை ப்ரீதியும்.. ரூபிணியும் கவனிக்கவே செய்தார்கள்..

ஹரிஹரன் அதைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.. இயல்பாக ஜவஹரை அருகில் நிற்க வைத்து வீடியோவுக்கு போஸ் கொடுத்தான்..

“ அவர் எப்போதும் போல என் பெயரைச் சொல்லவில்லையே..”

ப்ரீதியும்.. ஜவஹரும் மேடையை விட்டு இறங்கியதும் வியப்புடன் சொன்னாள் ரூபிணி..

ஹரிஹரன் கடினமான முகத்துடன் அவளைப் பார்த்தான்.. அவனது பார்வை அவளை கடிந்து கொண்டது.. எதற்காக கடிந்து கொள்கிறான் என்று அவளுக்குப் புரியவில்லை..

" என்னங்க..?" என்றாள் ரூபிணி.. புரியாதவளாக..

" ஹரிஹரனைப் பற்றி உன் பிரண்டின் காதலனுக்குத் தெரிந்திருக்கிறது.. ஆனால்.. கட்டிக் கொண்ட உனக்குத் தெரியவில்லை.."

" புரியலை.."

" புரியனும்.. இனியொரு முறை இப்படி கேட்டு வைக்காதே.. அன்டர்ஸ்டான்ட்..?"

ரூபிணிக்கு காரணம்  பிடிபடவில்லை..

" என்னன்னு சொல்லாம என் மேல் கோபப்பட்டா.. நான் என்னன்னு நினைக்கிறது.." மனத்தாங்கலுடன் சொன்னாள்..

" ம்த்சு... இதைப் புரியாதவ.. என் பெண்டாட்டியா..?"

" என்னவோ.. கழுத்தை நீட்டி தாலியை வாங்கிக்கிட்டேன் .. இப்பவாவது.. என்னன்னு சொல்லுங்களேன்.."

" ஹரிஹரனின் பெண்டாட்டியின் பெயரைச் சொல்லும் தைரியம் யாருக்கும் இருக்காது.. உன் பிரண்டின் காதலனுக்கு அது தெரிந்திருக்கிறது.. உனக்குத் தெரியவில்லை.."

அந்த நொடியில் தனது நட்பு வட்டாரத்திலிருந்து விலகி தான் தனிமைப்பட்டு விட்டதை உணர்ந்தாள் ரூபிணி..

" ரூபிணி.. ... என்று இயல்பாக அழைத்த ஜவஹர் இனி அவளை அப்படி அழைக்க மாட்டான்.. அவள் முகம் பார்த்துப்

பேசத் துணிய மாட்டான்..

“ என்ன இது.. ?...

மெலிதான கோப அலையொன்று ரூபிணியின் மனதில் எழுந்தது..

“ இவன் மட்டும் ப்ரீதியிடமும்.. ஜமுனாவிடமும் சிரித்துப் பேசலாம்.. ஆனால்.. நான் மட்டும் பேசா மடந்தையாய் நிற்க வேண்டுமா ?...

அவளது மனதைப் படித்தவனைப் போல..

“ நானாக உன் தோழிகளிடம் பேசவில்லை.. அவங்க பேச்சுக்கு பதில் சொல்லியிருப்பேன்.. அவ்வளவுதான்.. அதுவும்.. அவர்கள் உன் தோழிகள் என்பதற்காகத்தான்..”

“ நீங்க மட்டும் அவங்க பெயரைச் சொல்லி கூப்பிடலாமா?”

“ இல்லையே.. மேக்ஸிமம் அவங்க பெயரைச் சொல்வதைத் தவிர்த்து இருக்கிறேன்.. நீதான் கவனிக்கவில்லை.. “

“ என்னவோ போங்க.. எனக்கு ஒன்னும் புரியலை..”

“ கொஞ்சம்.. கொஞ்சமாய் புரிந்து கொள்வாய்..”

அவர்கள் மேடையில் ரகசியம் பேசிக் கொள்வதை லேசான பொறாமையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள் தாரிணி..

“ இங்கே என்னடி பண்ணுகிற..?”

தாரிணியின் கணவன் குமார் அவளருகில் வந்தான்..

“ என் தங்கைக்கு கிடைத்திருக்கிற வாழ்க்கையைப் பார்த்து பூரிச்சுக்கிட்டிருக்கேன்..”

தாரிணியின் வார்த்தைகளில் பூரிப்புக்கு பதில் அவளது மனப் புகைச்சல் வெளிப்பட.. குமார் முகம் கருத்தது..

“ உன்னைப் பார்த்தா.. பூரிச்சுப் போகிறவளைப் போலத் தெரியலையே..”

“ காமாலைக் கண்ணுக்கு.. கண்டதெல்லாம் மஞ்சளாகத்தான் தெரியும்..”

“ அவளுக்கு கிடைச்சிருக்கிற வாழ்க்கையைப் பார்த்து வயித்தெரிச்சல் படுகிறயா.. அவளுக்கு கிடைச்சிருக்கிற ஹஸ்பெண்டைப் பார்த்து பொறாமைப் படுகிறாயா..?”

“ உங்க புத்தி போகிற போக்கு இருக்கே.. கருமம்.. கருமம்..”

“ அப்புறம் எதுக்குடி முகத்தை இப்படி வச்சுக்கிட்டு இருக்கிற..?”

“ நானும்தான் காதலிச்சேன்.. காதலிச்சவரையே கல்யாணமும் பண்ணிக்கிட்டேன்..”

“ அதை ரொம்பவும் வருத்தத்தோட சொல்கிறதைப் போல இருக்கே..”

“ என் தங்கையும் காதலிச்சா.. காதலிச்சவர் அவளையே கல்யாணமும் பண்ணிக்கிட்டார்..”

“ இரண்டு கதையும் ஒன்னுபோலத் தானே இருக்கு..?”

“ உங்க மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க.. இரண்டு கதையும் ஒரே கதையா..? உங்களைக் கல்யாணம் பண்ணிக்க.. நான் நகையையும்.. பணத்தையும் அள்ளிக் கொடுக்க வேண்டியிருந்தது.. அதுவே ரூபிணியின் காதலர் அவளை வைரத்தால் இழைச்சு.. பணத்தை இறைச்சு கல்யாணம் பண்ணிக் கிட்டார்.. காதலிக்கிறதிலயும் முகராசி வேணும் போல.. ம்ஹீம்.. எதுக்கும் கொடுப்பினை இருக்கனும்..”

தாரிணி இழுத்து விட்ட பெருமூச்சின் அனல் தாங்காமல் வெதும்பிப் போன குமார்.. பொறுக்க முடியாமல் “ ஆமாம்டி.. ஊரறிஞ்ச தாதாவை கொஞ்சம் கூட பயப்படாம ஒருத்தி காதலிச்சா.. அவன்  வைரத்தாலேதான் அவளை

இழைப்பான்.. பணத்தை தண்ணீராய்தான் கொட்டுவான்..” என்று சொல்லி விட்டான்..

6

# சிங்கத்தின் நெஞ்சத்தில்...

## சிறுமானே குடிவந்ததென்ன...?

அதுவரை எரிச்சலுடன் பேசிக் கொண்டிருந்த தாரிணியின் முகம் மாறி விட்டது.. அவள் பதட்டத்துடன் சுற்றும் முற்றும் பார்த்தாள்..

“ எதுக்குடி இப்படிப் பார்த்து வைக்கிற..?” குமார் புரியாமால் கேட்டான்..

“ உங்களுக்குத்தான் பயம்.. பத்துங்கிறது இல்லாம போயிடுச்சு.. ஆனா உங்களுக்கு கழுத்தை நீட்டி வைத்திருக்கிற எனக்கு இருக்க வேணாமா?”

“ புரிகிறதைப் போல பேசித் தொலைடி..”

“ இது விழுப்புரம்.. இங்கே வந்து ஹரிஹரனைப் பற்றி இவ்வளவு உயர்வாய் பேசுகிறீங்களே.. உங்களுக்கு நெஞ்சழுத்தம் அதிகம்தான்.. யார் காதிலாவது இது விழுந்து வைத்துத் தொலைத்தால் என்ன ஆகிறது..?”

தாரிணியின் பதட்டம் குமாரையும் தொற்றிக் கொள்ள அவன் வாயை மூடிக் கொண்டான்.. ஆனால்.. ரூபிணியைப் பெற்ற தகப்பனாரான ரங்கநாதன் வாயை மூடிக் கொள்வேனா என்று அடம் பிடித்தவராய் வீரலட்சுமியிடம் தொணதொணத்துக் கொண்டிருந்தார்..

“ ம்ஹீம்.. பணத்தையும்.. பகட்டையும் பார்த்து மயங்கி.. என் சின்ன மகளின் வாழ்க்கையை நாசம் பண்ணிட்டடி..”

“ வேறு எதைப் பார்த்திருக்கணும்ங்க..? உங்க அக்கா மகனின் பொறுக்கித் தனத்தையும்.. பொறம்போக்குத்

தனத்தையும் பார்த்து மயங்கி அவனுக்கு பொண்ணைக் கொடுத்திருக்கனுமா..?”

“ ஆயிரம் இருந்தாலும் அவன் என் அக்கா மகன்..”

“ என் சின்ன மருமகன் கோடியில் ஒருத்தர்.. எனக்கு ஆயிரம் இருக்கிற மொள்ளமாரியெல்லாம் மருமகனா வர வேணாம்.. கோடியில் ஒருத்தரா இருக்கிற என் சின்ன மருமகன்தான் மருமகனா வரணும்..”

“ அதுதான் வந்துட்டானே..”

“ அவன்.. இவன்னு பேசிவைக்காதீங்க..”

“ ஏன்..? அவனுக்கு இந்த மரியாதை போதாதா..?

“ அவர் பேச்சை விடுங்க.. அவருக்கு எந்த மரியாதையும் போதும்.. நீங்க மரியாதை கொடுத்தால்தான் அவருக்கு மரியாதை கூடப்போகுதா..? அவருக்கு உள்ள மரியாதையே ஊருப்பட்டது இருக்கு.. நான் அதுக்காக சொல்லலை..”

“ வேற எதுக்காக சொன்ன..?”

“ மாப்பிள்ளைகிட்ட வேலை பார்க்கிறவங்க அவரு மேல கண் மூடித் தனமா பாசம் வச்சிருக்காங்களாம்.. மாப்பிள்ளையைப் பற்றி ஒரு எழுத்து தவறாப் பேசினாலும்.. எலும்பை எண்ணி விட்டுத்தான் வேற வேலை பார்ப்பாங்களாம்.. மாப்பிள்ளையாவது.. மாமனாருன்னு முகத்தாட்சண்யம் பார்ப்பார்.. அவர்கிட்ட வேலை பார்க்கிறவங்க அந்த தாட்சண்யம் பார்ப்பாங்களா..?”

வீரலட்சுமியின் வீர விளக்கவுரையைக் கேட்ட ரங்கநாதன் குலை நடுங்கிப் போனார்.. அவசரமாக அவர் தனது திருவாயை மூடிக் கொள்ள..

“ அஃது … என்ற பார்வையுடன் மகன் பக்கம் திரும்பினாள் வீரலட்சுமி…

“ அத்தான் என் படிப்பைப் பத்தி விசாரிச்சாரும்மா..” நவீன் சொன்னான்..

“ என்னடா கேட்டார்..?”

“ எப்ப படிப்பு முடியப் போகுதுன்னு கேட்டார்.. சொன்னேன்.. மேலே படிக்க.. அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கறேன்னு சொன்னார்..”

அவன் கண்கள் கனவில் மிதக்க.. வீர லட்சுமியின் மனம் நன்றியில் மிதந்தது..

“ ஒரு நாள்.. ஒரு பொழுதாவது பெரிய மருமகன் என் மகனின் படிப்ைப் பத்தி கேட்டிருப்பாரா.....

அவளது மனம் போகும் திசையை அறிந்து கொண்ட ரங்கநாதனுக்கு அது பொறுக்கவில்லை..

“ அடேங்கப்பா.. அமெரிக்காவில் படிச்சாத் தான் அது படிப்பா? இந்தியாவில் படிச்சா அது உசத்தியில்லையா..? நம்ம நாட்டில் படிச்சவனைத்தான்.. அமெரிக்காக்காரன்.. வருந்தி.. வருந்தி அழைச்சு வேலை கொடுக்கிறாண்டி..”

ரங்கநாதன் தனது கோபத்தை வேறு வகையில் வெளிப்படுத்த முனைவதை வீரலட்சுமி கண்டு கொண்டாள்.. கணவரை முறைத்தாள்..

“ இப்ப அதுக்கு என்னங்கறீங்க..”

“ என் மகன் வெளிநாட்டுக்கெல்லாம் படிக்க போக மாட்டான்..”

“ ஏண்டா நவீன்.. நீ வெளிநாட்டுக்கு படிக்கப் போக மாட்டாயா?”

“ யார் சொன்னது..?”

“ உன் அப்பாதான் சொல்கிறாரே..”

அவருக்கென்ன..? அவரா படிக்கப் போகிறார்..? படிக்கிறவன் நான்..”

“ என்னடா சொல்கிற..? என் பேச்சை நீ மீறுவாயா..?”

“ இப்ப உங்களுக்கு என்னதான்  வேணும்ப்பா..?”

“ அப்பன் பேச்சை மதிக்காத தறுதலைக்கு தம்பியா நீ இருக்கக் கூடாதுடா நவீன்..”

“ ஊஹூம்.. நான் அம்மா பேச்சை மதிக்கிற அக்காவுக்கு தம்பியாகத்தான் இருப்பேன்..”

“ நீ உருப்படவே மாட்டேடா..”

“ அதெல்லாம் அவன் உருப்படுவான்.  நீங்க அவன் பேச்சை விட்டு விட்டு வேற பேச்சைப் பாருங்க..”

“ விட்டால் பிடிக்க முடியாதுடி..”

“ இப்படித்தான் ரூபிணி விசயத்திலயும் சொன்னீங்க.. உங்களால அவளை இழுத்துப் பிடிக்க முடிஞ்சுதா..?”

“ எங்கே.. அதுதான்.. என் கண்ணெதிரிலேயே பெருமாள் கோயிலில் தாலியைக் கட்டி.. ரிசப்ஷனில் கொண்டு வந்து உட்கார வைச்சுட்டாரே உன் அருமை மருமகன்..”

ஜாக்கிரதையாக .. ஹரிஹரனை “ அவர்… என்று விளித்த கணவரின் பாதுகாப்பு உணர்வை கவனித்த வீரலட்சுமி தனக்குள் சிரித்துக் கொண்டாள்..

“ அதுதானே.. நீங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறேன்னு வாக்குக் கொடுத்துட்டு.. பெருமாள் கோவிலில் அபிஷேகம்.. குடும்பத்தோட வாங்கன்னு சொல்லி எங்களை இழுத்துக் கொண்டு போய் நிறுத்துவீங்க.. என் மருமகன் என்ன விவரமில்லாதவரா? அதுதான் பின்னாலேயே வந்து உங்க அக்கா மகனை துரத்திட்டு அதே மணவறையில் பெருமாள் கோவிலில் உங்க கண்ணுக்கு முன்னாலேயே உங்க மகளின் கழுத்தில் தாலியைக் கட்டி.. தான் யாருன்னு நிரூபிச்சுட்டாருல்ல..”

தன் வீர மருமகனின் பெருமையை கூற ஆரம்பித்தாள் வீரலட்சுமி.. அதை “ ஊம்… கொட்டிக் கேட்க விருப்பமில்லாத ரங்கநாதன் மற்றவர்களிடம் பேசப் போவதைப் போல அங்கிருந்து நகர்ந்து விட்டார்..

“ ஆனாலும் உங்க அப்பாவுக்கு இவ்வளவு அளும்பு ஆகாதுப்பா..”

“ விடுங்கம்மா.. அவரோட அக்கா மகனுக்கு அக்காவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க முடியலைங்கிற வயித்்தெறிச்சல்.. பேசத்தான் செய்வாரு கண்டுக்காதீங்க..”

நவீன் தாயை அமைதிப் படுத்தினான்..

மெல்லிசைக் கச்சேரியின் இனிய கானம் பொங்கித் ததும்பி அங்கே இருந்த அனைவரையும் இசைச் சாரலாய் நனைத்துக் கொண்டிருந்தது..

“ நெஞ்சத்திலே.. நீ..

நேற்று வந்தாய்....

நேற்று முதல் ஓர்

நினைவு தந்தாய்..

நினைவு தராமல்

நீயிருந்தால்......

கனவுலகில் நான்

வாழ்ந்திருப்பேன்..”

அந்த முன்னிரவுப் பொழுதில் ஒலித்த மெல்லிசை ரூபிணியின் மனதை ஏதோ செய்தது.. அருகே கம்பீரமாக நின்று கொண்டிருந்த தன் காதலனை அவள் பார்த்தாள்.. அவள் விழிகளில் தெரிந்த காதல் மழையை அவனும் பார்த்தான்..

7

நெஞ்சத்திலே இடம் கேட்டேன்...

உன்நெஞ்சம் என்சொந்தமென்றாய்...

ரூபிணி அழகாக இருந்தாள்.. என்றையும் விட.. அன்று அவளின் அழகு மிகுதியானதாக இருந்ததாக ஹரிஹரனுக்கு¤ ் தோன்றியது..

அவள் முகத்தில் தெரிந்த ஒளிர்வைக் கவனித்தபடி மேடையேறி வந்த வடகத்திக்காரர்களுக்கு கை கொடுத்தான் ஹரிஹரன்..

“ நமஸ்தே மேம்..” என்று கை குவித்தவர்களுக்கு பதிலுக்கு கை குவித்த ரூபிணி அவர்களை அடையாளம் கண்டு கொண்டாள்..

“ ஏங்க..?”

அவளது கேள்வியைப் புரிந்து கொண்ட ஹரிஹரன் “ இவங்க.. அவங்கதான்..” என்று ரகசியப் புன்னகை செய்தான்..

ஹரிஹரÅ ட« ் காதல் சொல்லாத காலத்தில் ஒருமுறை அலுவலகத்தில் உள்ளவர்களுடன் சேர்ந்து சாப்பிட நட்சத்திர யுாட்டல் ஒன்றுக்கு ரூபிணி செல்ல வேண்டி வந்தது..

மற்றவர்களுக்கு முன்னால் போய் விட்டவளிடம் மூர்த்தி வந்து சரசம் பேச முயன்றான்.. அவனிடமிருந்து தப்பிக்க வழி தேடி சுற்றும் முற்றும் பார்த்தவளின் கண்களில்.. அவளையே பார்த்தபடி அமர்ந்திருந்த ஹரிஹரன் தென்பட்டான்..

ரூபிணி சட்டென்று அவனருகில் போய் அமர்ந்து விட்டாள்.. அன்று அவனுடன் “ பிஸினஸ் லன்ச்... சாப்பிட வந்திருந்த வடக்கத்திக்காரர்கள்தான் அவர்கள்...

“ அன்னைக்கு அவங்க என்னவோ சொன்னாங்களெ.. அதுக்கு நீங்க கூடச் சிரிச்சீங்களே..”

“ ஏய்ய்.. இது ரிசப்ஷன் மேடைடி..”

“ அதனால் என்ன..?”

“ நைட் சொல்கிறேன்..”

ஹரிஹரன் வார்த்தைகளில் அந்த இரவைத் தேடிய ஏக்கமிருந்தது.. அதைப் புரிந்து கொள்ளாதவளாக ரூபிணி.. அந்த விசயத்திலேயே குறியாக இருந்தாள்..

" இல்லை.. இப்பவே சொல்லுங்க.."

" இப்ப கூட்டமிருக்குடி.."

" இருந்தால் என்ன..?"

அவன் பதில் சொல்லாமல் அவளை முறைத்தான்.. அடுத்த விருந்தினர் மேடைக்கு வர.. அந்தப் பேச்சு அப்படியே நின்று விட்டது..

திருமண வரவேற்பு முடிய வெகு நேரமாகி விட்டது.. பின்னிரவு வேளையில் அறைக்குள் நுழைந்த ரூபிணி அலுப்புடன் கட்டிலில் சரிந்து கண்களை மூடிக் கொண்டாள்..

அவள் மேல் ஹரிஹரன் கரம் விழுந்தது.. விழிதிறக்காமல் அவள் சிணுங்கினாள்..

" ஐ ஆம் ஸோ டயர்டு.."

" ஸோ..?"

" நான் தூங்கனும்.."

" தூங்கு.."

அவன் அவளை நெருங்கி ஆக்ரமித்தபடி கூறினான்.. ரூபிணி அயர்வுடன் அவன் கை விலக்க முயன்றாள்.. முடியவில்லை.. அவனது பிடி இரும்புப் பிடியாக இருந்தது..

" இதுதான் தூங்கச் சொல்கிற லட்சணமா..?"

கேள்வி கேட்டவளின் கன்னத்தில் முத்தமிட்ட ஹரிஹரன் குரலில் அளவு கடந்த தாபம் தெரிந்தது..

" தூக்கம் வருவது உனக்குத்தான்.. எனக்கில்லை.."

" ஸோ..?"

" நீ தூங்கு.. நான் தூங்காமல் உன்னை ரசிக்கிறேன்.."

“ வெறுமனே ரசிக்கிற ஆளா நீங்க..?”

அவன் அவளது பேச்சை ரசித்துச் சிரித்தான்.. “ தெரியுதில்ல.. அப்புறமெதுக்கு கேள்வி கேட்கிறவ..?”

அவன் அதற்கு மேல் பேசாமல் அவளை இறுக்கிக் கொள்ள அவள் பேச்சிழந்தாள்.. தூக்கம் மறந்தாள்.. அவனுடன் ஒன்றிப் போனாள்..

விடியலின் அருகாமையில் அவளை விடுவித்து தூங்க அனுமதித்தான் ஹரிஹரன்.. அவன் மார்பில் தலை வைத்து கண்மூடியவள் கிசுகிசுப்பாக வினவினாள்..

“ இப்பாவாவது சொல்லுங்களேன்..”

“ எதை...?”

“ அந்த நார்த் இன்டியன்ஸ் ஹிந்தியில் உங்ககிட்ட அன்னைக்கு என்ன சொன்னாங்க..?”

“ அதுவா..?”

“ ரி” ரன் அவள் பக்கமாக புரண்டு படுத்தான்.. அவள் முகத்தின் மீது விழுந்த முடிக்கற்றையை விலக்கியவாறு மெதுவான குரலில் பேசினான் “ நான் டில்லியில் ஃபைவ் ஸ்டார் “ ாட்டல் ஒன்னைக் கட்டிக்கிட்டு இருக்கேனில்லையா..?”

“ அதுதான் தெரியுமே.. அதுக்காகத்தானே ஐயா என்னை விட்டுப் பிரிந்து மாதக் கணக்கில் டெல்லி போய் தங்கியிருந்தீங்க..”

“ அபாண்டமாய் பேசக்கூடாது.. நீதானே போக வைத்தே..”

“ என்மேல் பழியா..?”

ரூபிணியின் குரலில் வருத்தம் தெரிந்தது.. ஹரிஹரன் முகத்தில் கனிவு அதிகமானது..

“ பூஞ்சை மனசுடி உனக்கு..” என்றபடி அவளது நெற்றியில் முத்தமிட்டான்..

“ நீங்க ஒன்னும் என்னைக் கொஞ்ச வேணாம்..”

அவள் குழந்தைத் தனமாக முகம் திரும்பிக் கொள்ளவும்.. அவனுக்கு சிரிப்பு வந்து விட்டது.. கடகடவென்று சிரித்து விட்டான்..

“ ஏன் சிரிக்கறீங்க..?” அவள் சண்டைக்கு வந்தாள்..

“ போடி முட்டாள்.. உன்னை நான் கொஞ்சாம.. வேற யாரு கொஞ்சுவாங்களாம்..”

அவன் கேட்டதும் அவளுக்கு வெட்கம் வந்து விட்டது.. அவன் மார்பில் லேசாகக் குத்தினாள்..

“ என் மேல் கை வைக்க பெரிய.. பெரிய ரௌடிகளே பயப்படுவாங்க.. நீ ஈஸியா கைவைக்கிறயே..” அவன் புருவங்களை உயர்த்தினான்..

ரூபிணி சொந்தத்துடன் அவன் மார்பில் முகவாயை ஊன்றி முகம் நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.. அவளது விழிகளில் கர்வம் தெரிந்தது.. அது அவளது பேச்சிலும் தொனித்தது..

“ உங்க மேல நான் கைவைக்காம வேற யாரு வைப்பாங்களாம்..”

இந்தக் கேள்வியில் ஹரிஹரன் கிறங்கிப் போனான்.. தன் மேல் கவிழ்ந்திருந்த அவளது முகம் பற்றி அருகில்.. வெகு அருகில் இழுத்தான்.. அவனது முகத்தோடு முகம் இழைத்த ரூபிணி விழி மூடிக் கொண்டாள்.. அந்த நொடியின் உணர்வில் அவர்கள் இருவரும் கலந்து விட்டார்கள்..

“ இந்த நொடி இப்படியே உறைந்து விட்டால் என்ன..?... நினைத்ததை வாய் விட்டு ரூபிணி சொல்ல. அதையே நினைத்துக் கொண்டிருந்த ஹரிஹரன் உடலில் லேசான ஓர் அதிர்வு வந்தது..

“ இது எப்படி சாத்தியம்..?... அவன் திகைத்தான்..

கண்ணதாசனின் திரைப்படப் பாடலில் வருமே..

“ நான் பேச நினைப்பெதெல்லாம்..

நீ பேச வேண்டும்…

நாளோடும் பொழுதோடும்…

உறவாட வேண்டும்… …   என்று….

அதைப் போல நிஜத்தில் நடப்பது சாத்தியமா…?

ஹரிஹரன் ஒரு முறை ரூபிணியிடம் இதே பாடல் வரிகளைப் பாடிக் காட்டியிருக்கிறான்..

அன்று பாடியதை.. இன்று உணர்வு பூர்வமாக அவன் உணர்ந்தான்..

“ ரூபிணி…..”

“ ம்ம்ம்…”

“ ஐ லவ் யுடி..”

அவள் இதற்குப் பதிலாக காதலைச் சொல்லவில்லை.. கை நீட்டி விரல்களால் அவனது முடியைக் கலைத்து கோதினாள்..

8

தாயாக மடி தாங்கி…

கனிய வைத்தாய் என் நெஞ்சம்தனை…

ஹரிஹரன் மனதில் “ யா… வென்று பிரவாகமாய்.. பேரலையாய் உணர்வுகள் பொங்கி எழுந்தன..

என்றோ ஒரு நாள் அவனது முடி கோதிய தாயின் அண்மையை அன்று அவன் உணர்ந்தான்…

சொந்தமென்று சொல்லிக் கொள்ள தாய் தந்தையும்.. கூடப் பிறந்தவர்களும்  இல்லாமல் தனிமரமாய் நின்றவன்.. அன்று தன் மனைவியிடம் அவை அனைத்தையும் ஈடு செய்யும் சொந்தத்தை கண்டான்..

ஊருக்கெல்லாம் நிழல் கொடுத்த ஆலமரமாய் நின்றவன்.. அன்று அவனுக்கொரு நிழல் கிடைத்த நிறைவில் இளைப்பாறினான்..

அவனை அண்டி நின்றவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த வள்ளலானவன்.. அன்று அவனுக்கொரு அடைக்கலத்தை ரூபிணியிடம் கண்டான்..

பாரதி சொன்னானே..

“ யாதுமாகி நின்றாய்...... என்று...

அந்த “ யாதுமாகி .... என்ற சொல்லை அவனுக்கு உணர்த்தி அனைத்துமாக அவனுக்கு.. அவள்.. ஆகிப் போனாள்.

அவன் மெல்லிய குரலில் அவள் காதினில் பாட ஆரம்பிக்க.. அவளும் இணைந்து கொண்டாள்..

“ சொல்லொன்றும் மொழியென்றும்..

பொருளென்றும் இல்லை...

சொல்லாத.. சொல்லுக்கு..

விலையேதும் இல்லை..

ஒன்றோடு.. ஒன்றாகி

உயிர் சேர்ந்த பின்னே....

உலகங்கள் நமையன்றி

வேறேதும் இல்லை....

வேறேதும் இல்லை.... “

அவன் மார்பில் தலைசாய்த்து விழி மூடியிருந்த ரூபிணி அப்படியே தூங்கிப் போய் விட்டாள்..

அவளருகில் அவனும்... அவனருகில் அவளும் இருக்கும் நிறைவில் அவனும் உறங்கிப் போனான்..

மறுநாளின் விடியலில் கண் விழித்த ரூபிணி .. அவளை இறுக்கிக் கொண்டு.. உறங்கிக் கொண்டிருந்த ஹரிஹரனை¡ கண்டு கனிவாகச் சிரித்துக் கொண்டாள்..

மெதுவாக.. மிக மெதுவாக அவனது உறக்கம் கலைத்துவிடாமல் கரம் விலக்கி எழுந்து குளியலறைக்குள் புகுந்தாள்..

" வனஜா.. என்ன செய்துக்கிட்டு இருக்கே.."

சமையலறையில் நுழைந்த ரூபிணியை மரியாதையுடன் பார்த்தாள் வனஜா..

" காபி கலந்துட்டு.. காலை டிபனுக்கான வேலையை ஆரம்பிச்சுடடேன்ம்மா.."

" வள்ளி வந்தாச்சா..?"

" காலம்பரவே வந்துட்டாம்மா.. வாசலைப் பெருக்கி கோலம் போட்டுட்டு.. கீழே பூராவும் பெருக்கித் துடைச்சுட்டா.. இப்பத்தான் மாடிக்குப் போறா..."

" கார்மேகம் எங்கே..?"

" காய் வாங்கப் போயிருக்கு.."

" டிரைவர் வந்தாச்சா..?"

" ம்ம்.. காரைக் கழுவி.. துடைச்சுக்கிட்டு இருக்காரு.."

" வீட்டில் இருக்கிற விருந்தாளிகளுக்கு காபி கொடுத்து விட்டயா..?"

" அப்பவே.. வள்ளிக்கிட்ட கொடுத்து விட்டேன்ம்மா.."

" சரி.. நகரு.. ஐயாவுக்கும்.. எனக்கும் காபி கலந்துக்கறேன்.."

" நான் கலந்து தருகிறேனேம்மா.."

" வேணாம்.. ஐயாவுக்கு தேவையானதை நான் பார்த்துக்குவேன்.."

ரூபிணி காபியை கலந்து கொண்டிருக்கையில் சமையறையின் வாசல்படியில் வீரலட்சுமி வந்து நின்றாள்..

மகளின் கேள்விக் கணைகளைக் கவனித்துக் கொண்டிருந்த அவள் மனதில் வியப்பும்.. பூரிப்பும்.. போட்டி போட்டுக் கொண்டு மையமிட்டிருந்தன..

“ ரூபிணியா இப்படி அதிகாரமாய் பேசுவது..? ...

மகளின் தோரணையைக் கண்டு வியந்தும். மகிழ்ந்தும் போனாள் வீரலட்சும்ி..

காபியை மூடி போட்ட பீங்கான் பிளாஸ்கில் ஊற்றி.. இரண்டு காபி  கப்புகளையும்.. பிளாஸ்க்கையும் டிரேயில் எடுத்து வைத்து கைகளில் ஏந்திக் கொண்டு நிமிர்ந்த ரூபிணி தாயைப் பார்த்ததும் தயங்கி நின்றாள்..

“ காப்பி சாப்பிட்டீங்களாம்மா..?”

“ எல்லோரும் சாப்பிட்டாச்சு.. நீ போய் மாப்பிள்ளைக்கு காபியைக் குடு..” வீரலட்சுமி இதமாக புன்னகைத்தாள்..

மெல்லிய சிரிப்புடன் ரூபிணி அவளைக் கடந்து.. மாடிப்படியேறினாள்.. அவர்களின் அறைக்கதவைத் திறந்து உள்ளே சென்று கதவை மூடினாள்.. ஹரிஹரன் அருகே அமர்ந்து அவனது முடி கோதி எழுப்பினாள்..

“ பொழுது விடிஞ்சாச்சு..”

கண்விழித்த ஹரிஹரன்.. அவளையே அள்ளிப் பருகுவதைப் போலப் பார்த்தான்..

ஈரத் தலை முடியை தளர்வாக பின்னலிட்டு.. அன்றுதான் பூத்த புது மலர் போல சிரித்தவளின் தோளில் கரம் வைத்து தன் பக்கமாக இழுத்துக் கொண்டான் அவன்..

“ விடிஞ்சாச்சுன்னு சொன்னேன்..” அவள் விலகாமல் கொஞ்சினாள்..

“ விடிஞ்சா.. பெண்டாட்டியைக் கொஞ்சக் கூடாதுன்னு சட்டம் எதுவும் இருக்கா..?”

“ சட்டம் போட்டாலும்.. நீங்க கேட்டுட்டுதான் வேற வேலை பார்ப்பீங்க..”

“ எனக்கும்.. என் பெண்டாட்டிக்கும்  இடையில் எந்தச் சட்டமும் வரமுடியாதுடி..”

அவனது இறுக்கமான அணைப்பிற்கு இசைந்து கொடுத்தாள் ரூபிணி.. அவனது வேகத்திற்கு இணையான வேகத்தைக் காண்பித்தாள்.. அவளது கன்னத்தில் இதழ் பதித்தவனின் நெற்றியில் அவள் இதழ் பதித்தாள்..

ஒருவழியாக அவன் எழுந்து அமர்ந்த போது.. காபியை கப்பினில் ஊற்றி.. அவனிடம் நீட்டினாள்..

“ நீ...”

“ இதோ..”

அவள் இன்னொரு கப்பை எடுத்துக் கொள்ள முனைய.. தடுத்து அவனது காபிக் கோப்பைக்கு அருகே இழுத்தான் ஹரிஹரன்.

“ இது வேறயா..” என்று பிணங்கிக் கொண்ட போதும் ரூபிணி.. அவன் கேட்டதைத்தான் செய்தாள்..

காபியைக் குடித்தவன்.. அவள் மடியில் சரிந்து கொள்ள அவனது நெற்றியை வருடியபடி..

“ குளிக்கலையா..?” என்று வினவினாள் ரூபிணி..

“ குளிக்கனும்..”

“ கீழே.. அப்பாம்மா.. அக்கா பேமிலி.. நவீன்.. எல்லாம் உங்களுக்காக காத்திருக்கிறாங்க..

“ ம்ம்ம்.. போகலாம்..”

“ டிபன் சாப்பிட வேணாமா..?”

“ ம்ம்ம்.. சாப்பிடலாம்..”

அவன் எழுந்திருக்கும் உத்தேசமில்லாமல் அவள் மடியில் முகம் புதைத்து.. அவளது இடுப்பைச் சுற்றி

கையைப் போட்டு வளைத்துக் கொண்டான்..

“ என்னங்க..?”

அவனை விலக்கும் வகை தெரியாமல் திகைத்தாள் ரூபிணி.. இப்படி அவளை விட்டு விலக மனமில்லாமல் அவனிருந்தால் எப்படி மற்ற வேலைகளைக் கவனிப்பான் என்றிருந்தது அவளுக்கு..

“ உங்களுக்கு ஆயிரம் வேலையிருக்குங்க..”

“ இருக்கட்டும்டி..”

“ அதையெல்லாம் பார்க்க வேணாமா..?”

“ வேண்டாம்..”

இப்படி பள்ளிக்கு போக அடம் பிடிக்கும் சிறுவன்.. தாயின் முந்தானைக்குள் ஒளிந்து கொள்வதைப் போல.. அவள் மடியில் முகம் புதைத்துக் கொண்டு எழுந்து கொள்ள மறுப்பவனை இயலாமையுடன் பார்த்தாள் ரூபிணி..

9

காலம் முழுதும் உன் காலடியில்...

தஞ்சமய்யா.. எனது நெஞ்சம்...

அவளாலும் அவனை எழுப்பி.. விலக்கி.. அனுப்பி வைக்க முடியவில்லை..

அவனைப் பார்த்தால் தப்பு.. பேசினால் தப்பு.. நினைத்தால் தப்பு என்று அவளது தோழிகளும்.. சுற்றியிருந்த சமூகமும்.. அவளை மிரட்டி வைத்திருந்தனர்..

அதை உடைத்து.. அவனிடம் சேர்வதற்குள் எண்ணற்ற மனப் போராட்டங்களையும்.. நிஜப் போராட்டங்களையும் சந்தித்து விட்டாள் ரூபிணி..

அத்தனை போராட்டத்திற்குப் பின்னால் அவனை அடைந்தவள் அவள்... அவனுக்கு இருக்கும் அதே காதலின் வேகம்.. அவளிடமும் இருந்தது.. அவனைப் விட்டுப் பிரியாமல் இருக்க மனம் துடித்தாள் அவள்..

" ரூபிணி.."

" ம்ம்ம்.."

" இப்படியே எங்கேயாவது ஓடிப் போயிடலாமா..?"

இதைக் கேட்பவன் அவளைத் தொட்டுத் தாலிகட்டிய உரிமையுள்ள கணவன்..

அவள் " களுக்... என்று வாய் பொத்தி சிரித்தாள்.. அவன் அவள் மடியில் புரண்டு படுத்து.. அண்ாணாந்து அவள் முகம் பார்த்தான்..

" எதுக்குடி சிரிக்கிற..?"

" நாம புருசன் பெண்டாட்டி.."

" அதை நீயெனக்கு நினைவு படுத்துகிறாயா..?"

" அது சரி.. வாய்க்குவாய்.. என் பெண்டாட்டி.. என் பெண்டாட்டின்னு கொஞ்சுகிற ஆளுக்கு இது தெரியாமப் போகுமா..?"

" தெரியுதுல்ல .. அப்புறம் எதுக்காக அதைச் சொன்ன..?"

" உலகத்திலேயே.. பெண்டாட்டியைப் பார்த்து.. ஓடிப் போகலாமான்னு கேட்ட முதல் புருசன் நீங்களாகத்தான் இருப்பீங்க.."

அவள் மீண்டும் வாய் பொத்திச் சிரிக்க.. இப்போது அவனும் அவளோடு சேர்ந்து சிரித்தான்..

" உனக்கு இப்படிக்கூட பேசத் தெரியுமா..?"

" பின்ன.. என்னையென்ன. ஊமைன்னா நினைச்சீங்க..?"

“ ஊஹீம்.. பயந்தாகுளி.. பேசாமடந்தைன்னு நினைச்சேன்..”

“ நினைப்பீங்க.. நினைப்பீங்க..”

“ நான் ஓடிப் போகலாமான்னு கேட்டது.. வேற அர்த்தத்தில் ..”

“ வேற அர்த்தத்திலா...”

“ அடேங்கப்பா.. இப்படியொரு வியாக்கினம் வேற இருக்கா..?”

“ இருக்கே..”

“ அதையும் சொல்லுங்களேன்.. பார்க்கலாம்..”

“ ஹனிமூனுக்கு ஓடிப் போயிடலாமான்னு கேட்டேன்..”

ரூபிணி விழி விரித்தாள்.. இது ஏன் தனக்குத் தோன்றவில்லையென்று அவளுக்குத் தோன்றியது..

மற்றவர்களிடமிருந்தும்.. கடமைகளிலிருந்தும் விலகி.. அவனுக்கும்.. அவளுக்குமான ஒரு உலகை சிருஷ்டித்துக் கொள்ள.. இதை விடச் சிறந்த வழி.. வேறெதுவும் இருக்க முடியாது என்று அவள் மகிழ்ந்து போனாள்..

அவளது முகத்தில் வெளிச்சம் பரவ.. அவளது மனத்தைப் படித்து விட்டான் ஹரிஹரன்..

அவனுக்கும்.. அவளுக்குமான தனிமையை அவள் விரும்பியதை உணர்ந்து கொண்டவனின் உடலில் மின்சாரம் பரவியது..

அவனைக் குறித்த.. அவளது தேடலைப் பற்றிய கர்வம் எப்போதும்.. அவனுக்குள் உண்டு.. அன்றும் அந்தக்கர்வம் பொங்கி எழ.. அவன் கிளர்ச்சியுற்றான்..

“ வாங்க.. ஓடிப் போயிடலாம்..” அவள் கிறங்கிய குரலில் சொன்னதும்.. அவனது உணர்வுகள் கரையுடைத்தன..

அவளது மனைவியாக இருந்த.. அவனது காதலியை இழுத்து வேகத்துடன் ஆக்ரமித்தான் ஹரிஹரன்..

காதல் என்பது ஒரு போதை.. அதில் மூழ்கித் திளைத்த தேடலில் ஓர் கர்வம் இருந்தது.. அதையும் மீறி.. ஒருவரைப் பற்றிய மற்றொருவரின் தேடலும் அதிகமாக இருந்தது..

ரூபிணி மீண்டும் குளித்து முடித்தாள்.. ஈர உடலுடன் அவளருகில் வந்து பின்னாலிருந்து கட்டியணைத்தான் ஹரிஹரன்.

“ மூணாவது தடவை குளிக்க முடியாது..”

“ ஏன் முடியாது..?”

“ கீழே அப்பாம்மா.. எல்லோரும் வெயிட் பண்ணிக்கிட்டு இருக்காங்க..”

“ இன்னும் கொஞ்ச நேரம் வெயிட் பண்ணட்டுமே..”

“ ப்ளீஸ்”

அவள் கெஞ்ச ஆரம்பித்து விட்டாள்.. போனால் போகிறதென்று அவன் அவளை விடுவித்தான்..

ஈரமுடியுடன் நின்று கொண்டிருந்தவனை டவலுடன் நெருங்கினாள் ரூபிணி..

“ என்னடி..?”

“ இப்படித்தான் சொட்டச் சொட்ட தண்ணியுடன் நிற்பீங்களா..?”

அவள் குழந்தையைக் கடிந்து கொள்வதைப் போல கடிந்து கொண்டபடி அவனுக்கு தலையை துவட்டி விட்டாள்.. அவன் அசையாமல் அமர்ந்து.. சிறுவனைப் போல.. அவளுக்கு தலையைக் காட்டிக் கொண்டிருந்தான்..

“ இந்த டிரெஸ்ஸை போட்டுக்கங்க..”

அவன் வியப்புடன் அவள் நீட்டிய துணிகளை வாங்கிப் போட்டுக் கொணடான்.. அவனது சட்டையின்

பொத்தான்களை அவள் போட்டு விடுவதை ஓர்வித மன இதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்..

“ முடிந்ததா..?”

பெருமை கலந்த சிரிப்புடன் கேட்டவனை நெருங்கி தன் சேலை முந்தானையால் அவனது முகத்தை துடைத்து விட்ட ரூபிணி..

“ முடிந்தது..” என்றாள்..

இப்படியெல்லாம் கூட ஒரு பெண்ணால் தான் பேணப் படுவோம் என்று நினைத்துக் கூட பார்த்திராத ஹரிஹரனுக்கு அவளது செய்கையெல்லாம் இனித்தது..

அவளையே பார்த்தபடி.. அவன் அறையை விட்டு வெளியேற முயன்ற போது..

“ ஒரு நிமிசம் நில்லுங்க.. “ என்று அவன் கை பிடித்து நிறுத்தினாள் ரூபிணி..

“ இன்னும் என்னடி..?” அவன் புருவம் உயர்த்தினான்..

“ நேத்து நைட் நான் கேட்டதுக்கு பதிலைச் சொல்லுங்க..”

“ எப்போ கேட்ட..?”

அவன் சில தருணங்களை ஞாபகப் படுத்தி.. “ அப்போதா..... என்று வினவிய போது.. அவள் முகம் சிவந்து போனாள்..

“ ச்சீய்.. எதுக்கு.. எதைச் சொல்கிறீங்க.. உங்களை..,”

“ எப்பன்னு எனக்கு நினைவு வர வேணாமா..?”

அவன்  அறியாதவனைப் போல வினவினாலும்.. அவனது விழிகளில் தெரிந்த விசமம் அவனைக் காட்டிக் கொடுத்தது..

“ உங்களைத் திருத்தவே முடியாது..”

“ வா.. என்னைத் திருத்து..” அவனது கரங்கள் அவள் தோள் பற்றி இழுக்க.. அவள்.. அவன் மேல் விழுந்தாள்.. அவனது கரங்கள் பரவிப் படற ஆரம்பிக்க..

“ ஊஹீம்.. இது வேலைக்கு ஆகாது..” என்று பிடிவாதமாக அவனது கரத்தை விலக்கினாள்..

“ ஏண்டி..” அவன் குரலில் ஏமாற்றம் தெரிந்ததது..

“ திரும்பவும் ஆரம்பிக்காதீங்க..” கண்டிப்புடன் சொன்னாள்..

“ எதை..?” அறியாதவனைப் போல அவன் மீண்டும் கேட்டான். அவள் அவனையே இமைக்காமல் பார்க்க.. அவன் சிரித்தான்.. அவனது சிரிப்பு அவள் முகத்திலும் பரவ…

ஸ்வீட்.. ராஸ்கல்..” என்று செல்லமாக அவனைக் கடிந்து கொண்டாள்..

“ வா.. இந்த ஸ்வீட் ராஸ்கலுக்கு.. என்ன தண்டனை கொடுக்கனுமோ.. அதைக் கொடு..” அவன் அவளை இழுத்தான்..

“ ஒன்னும் வேணாம்.. அந்த வடக்கத்திகாரங்க அன்றைக்கு உங்ககிட்ட என்ன சொன்னாங்களோ.. அதைச் சொல்லுங்க..”

அவன் கழுத்தில் கைகளை மாலையாக்கிக் கொண்டு கேட்டவளை காதலுடன் பார்த்தான் ஹரிஹரன்..

## 10

ஊருக்கு என்ன தெரியும்…

உன்நெஞ்சம் என்னைத் தேடுவதை..

“ அவங்க நம்ம ஹோட்டலைக் கட்டிக்கிட்டு இருக்கிற பிரமோட்டர்ஸ்..”

“ நம்ம ஹோட்டலா.?”

அவள் புரியாமல் விழிக்கவும் அவன் முகத்தில் சினம் படர்ந்தது..

“ பின்ன அது யாருடைய ஹோட்டல்..?”

அவனது கோபத்தின் காரணம் புரியாமல் அவள் அப்பாவியாக.. “ நீங்க கட்டுகிற ஹோட்டலில்லையா..?” என்று கேட்டு வைத்தாள்.

“ நான் யாருடி..?”

“ ஐய்யே.. இதுகூடத் தெரியாதா..?”

“ தெரியலை.. சொல்லு..”

“ என் புருசன்..”

“ உன் புருசனோட ஹோட்டல் உன்னுடையதில்லையா..?”

தன் தவறு புரிந்தவளாக நாக்கைக் கடித்துக் கொண்டு.. தன் தலையில் தானே குட்டிக் கொண்டாள் ரூபிணி..

“ ஸாரி.. ஸாரி..”

“ இனியொருதரம் இப்படி கெக்கே.. பிக்கேன்னு பேசி வைக்காதே..”

“ வாயைத் திறக்கவே மாட்டேன்..”

ரூபிணி உத்திரவாதம் அளித்த பின்னால்.. ஒரு வழியாக மலையிறங்கினான் ஹரிஹரன்..

“ டெல்லிக்கு என்னை வரச் சொன்னாங்க..”

“ யாரு..?”

“ நம்ம ஹோட்டலைக் கட்டிக்கிட்டு இருக்கிற பிரமோட்டர்ஸ்..”

“ ம்ம்ம்”

“ நான் போகலை..”

“ ஏன்..?”

“ உனக்குத் தெரியாதா..?”

“ அப்போது தெரியாது...”

“ அது என்னவோ.. உன்னைத் தெரிந்து கொண்ட பின்னாலே.. எனக்கு விழுப்புரத்தை தாண்டி.. வேறு ஊர்களுக்கு போக கால் வரலை.. அது எத்தனை முக்கியமான.. பெரிய வேலையாக இருந்தாலும் சரி.. நான் விழுப்புரத்தில் தான் இருக்கனும்ன்னு நினைச்சேன்..”

ரூபிணியின் மனதில் காதல் அலையடித்தது..

“ வேறு வழியில்லாம அவங்க என்னைத் தேடி விழுப்புரத்துக்கே வந்துட்டாங்க.. பிஸினெஸ் லன்ச்சுக்காக ஹோட்டலுக்கு வந்தோம்.. அங்கே நீயும் வந்தாய்.. என் பக்கத்தில் உட்கார்ந்தாய்..”

அவன் மயக்கத்துடன் கூற.. அவளது மனம்.. மலரும் நினைவுகளுக்குள் போனது..

“ நீங்க.. டோட்டலா அவங்களை மறந்துட்டு என் பக்கம் திரும்பி உட்கார்ந்திட்டீங்க..” அவள் முகம் சிவந்தாள்..

“ அதேதான்.. அதைப் பார்த்தவங்க.. என்னிடம்.. உங்க “ மும்தாஜ்... இங்கே இருக்கிறப்போ.. தாஜ்மஹால் இருக்கிற டில்லிக்கு நீங்க எப்படி வருவீங்கன்னு கேட்டுச் சிரிச்சாங்க..”

“ நீங்களும் தலையாட்டி சிரிச்சீங்க..”

“ நீ உடனே.. அவங்க என்ன சொன்னாங்கன்னு கேட்ட.. உன் மனதை என்னிடமும்.. என் மனதை உன்னிடமும் சொல்லாத நிலைமையில்.. நீதான் என் மும்தாஜ்ன்னு அவங்க சொன்னதை எப்படி நான் உன்னிடம் சொல்ல முடியும்..?”

“ அதுக்காக.. இன்னொரு நாள் சொல்கிறேன்னு சொல்லி மழுப்பலாமா..?”

“ சொன்னேனா இல்லையா..?”

“ எப்பச் சொன்னீங்க..? இத்தனை நாள் கழித்து.. இப்பச் சொல்லியிருக்கிறீங்க.. அதுவும்.. இரண்டு நாள்களாய் நான் விடாமல் தொணத்தியதால் சொல்லியிருக்கறீங்க..”

“ விடுடி.. விடுடி.. இப்ப இதுதான் பிரச்சனையா..?”

அவன் கைகள் மீண்டும் அவளை வளைக்கத் தொடங்க.. அவள் சாமர்த்தியமாக அவன் பிடியிலிருந்து நழுவி.. அறைக் கதவைத் திறந்து விட்டாள்..

“ இருடி.. உன்னை கவனிச்சுக்கிறேன்..”

அவன் சிரித்தபடி படியில் இறங்க.. கூடச் சேர்ந்து சிரித்தவாறு ரூபிணியும் இறங்கினாள்..

அவர்கள் சிரித்த முகமாய் சேர்ந்து இறங்குவதைக் கண்ட ரங்கநாதனின் முகம் கடுத்தது..

“ சாப்பிட்டிங்களா அத்தை..”

ஹரிஹரன் ரங்கநாதனுக்கு பின்னால் நின்று கொண்டிருந்த வீரலட்சுமியிடம் அக்கறையுடன் வினவியதும்.. ரங்கநாதனுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

“ இவனுக்கு என்னையெல்லாம் கண்ணுக்குத் தெரியாதா..?...

“ இன்னும் சாப்பிடலை மாப்பிள்ளை..”

மருமகனின் கரிசனத்தில் மகிழ்ந்து போன வீரலட்சுமி.. பதவிசாகக் கூறியதும்.. ஹரிஹரன் தன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான்..

“ வாட்...? இவ்வளவு நேரமாகவா பசியோட இருந்தீங்க..?”

அவனது பதட்டத்தை கண்ட ரங்கநாதன் பல்லைக் கடித்தார்..

“ நல்லா.. மாமியாருக்கு குல்லாய் போடக் கத்துக்கிட்டு இருக்கான்...

“ நீங்க வராம.. நாங்க எப்படிப் சாப்பிடுவது மாப்பிள்ளை..?”

“ ஏன்.. வாயால்தான் சாப்பிடனும்..? அப்படி இவ சாப்பிட மாட்டாளாமா..?...

“ அடடா.. நான் வந்தாலும்.. வராவிட்டாலும் நீங்க நேரத்துக்கு சாப்பிட்டுவிடனும் அத்தை..”

“ என்னா கரிசனம்.. என்னா கரிசனம்.....

“ அதைப் போல நீங்களும் நேரத்துக்கு சாப்பிட்டுருங்க மாப்பிள்ளை.. இல்லைன்னா உடம்புக்கு நல்லதில்லை..”

“ போதும்டி.. மாமியாரும்.. மருமகனும் பாச மழையைப் பொழியறதைப் கொஞ்சம் நிப்பாட்டுங்க.. மூச்சுத் திணறுது..”

“ நீங்க சொல்கிறது.. என் அம்மாவே வந்து சொல்கிறாப் போல இருக்கு அத்தை..”

“ போச்சுடா.. அம்மா சென்டிமென்டை அவிழ்த்து விட்டுட்டானா..? இதைச் சொன்னால் போதுமே.. தாய் மனசு தலை விரிச்சாடுமே.....

“ நானும் உங்க அம்மாதான் மாப்பிள்ளை..”

“ ஆயுா.. தாய் குலத்தின் பாசம் வழுக்க ஆரம்பிச்சாச்சு......

“ நானும் உங்களை அப்படித்தான் நினைக்கிறேன் அத்தை..”

“ என்னை எப்படிப்பா நினைக்கிற..?...

“ நீங்க எனக்கு மருகனில்லை..”

“ ஆயுா.. இப்பத்தான்.. இவ எனக்கு தர்ம பத்தினி.....

“ என் மகன்..”

“ அடிப்பாவி காலை வாரிட்டயே......

“ வெறும் மகனில்லை அத்தை..”

“ வேற எப்படி மகன்ப்பா.. வெல்லம்.. சர்க்கரை.. கருப்பட்டி.. ஜீனின்னு எல்லாம் சேர்ந்த மகனா.....

“ உங்க மூத்த மகன் அத்தை..”

“ வைச்சாண்டா ஆப்பு, என் பெண்டாட்டிக்கு இது ஒன்னு பத்தாதா.. இனி தினமும் இவன் பெயரைச் சொல்லி.. சாமியாட ஆரம்பிச்சுருவாளே.....

“ எனக்கு இது போதும் மாப்பிள்ளை..”

“ அப்பாடி.. போதும்ன்னு என் பெண்டாட்டி அவ திருவாயால சொல்லிட்டா.. இனி இந்த பாச மழையில் வழுக்கிறதை ரெண்டு பேருமே நிறுத்திடுவாங்க.....

“ இப்பத்தான் என் மனம் குளிர்ந்துச்சு..”

“ என்னடா இது.. இவ போதும்ன்னு சொன்னதை நம்பி.. நான் மகிழ்ந்து போனா.. இவ.. பாச மழையில நனைஞ்சு.. ஜன்னியை வர வழைச்சுக்காம விட மாட்டேன்னு அடம்பிடிக்கிறாளே.....

“ நீங்க கவலையே படாதீங்க அத்்தை..”

“ அதை அவகிட்ட ஏம்ப்பா சொல்ற..? என்கிட்ட சொல்லு.....

“ உங்களுக்கு மூத்த மகனா நானிருக்கேன்..

அதற்குமேல் தாங்க மாட்டாத ரங்கநாதன்.. தன் இருப்பை ஹரிஹரனுக்கு உணர்த்தும் பொருட்டு.. மெல்ல இரும்பினார்..

அப்போதுதான் அவரைப் பார்ப்பதைப் போலப் பார்த்த ஹரிஹரன்.. “ என்ன மாமா.. நீங்களும் இங்கேதான் இருக்கீங்களா..?” என்று கேட்டு வைத்தான்..

“ தேவைதான் எனக்கு.....

நொந்து போன ரங்கநாதனின் விழிகள் வீரலட்சுமியைச் சுட்டன..

11

யாதுமாகி நின்றவளே - என்...

நெஞ்சத்திலே குடி வந்தவளே...

தாரிணியின் கணவன் குமார் ஏற்கனவே மகா கடுப்பில் இருந்தான்.. அவனை விட எல்லா வகையிலும் உயர்ந்தவனாக.. அவனால் தொட்டுவிடக் கூட முடியாத தூரத்திலிருந்த ஹரிஹரன் அவனுக்கு சகலையாக வாய்த்ததில் அதிகமான ஆற்றாமை அவனுக்கிருந்தது..

அவனால் சொல்ல முடிந்தது.. ஹரிஹரன் “ தாதா... இமேஜைத்தான்.. அதையும் அப்போது பொடிப்பொடியாக்கிக் கொண்டிருந்தான் ஹரிஹரன்..

“ ஏன் மாப்பிள்ளை.. இந்த ஊரில் உங்களுக்கு சொந்தமாய் காலேஜ் இருக்குதாமே..?”

அறியாதவளைப் போல வினவி வைத்து.. வீரலட்சுமி வெற்றிகரமாக.. ஹரிஹரன் பெருமைகளைப் பற்றிய பேச்சை துவக்கி வைத்தாள்..

“ அது மட்டுமில்லை அத்தை.. கல்யாண மண்டபம்.. ஷாப்பிங் காம்பளெக்ஸ்.. ஹோட்டல்.. சினிமா தியேட்டர்.. இதெல்லாம் கூட இருக்கிறது..,” ஹரிஹரன் இயல்பாக சொல்ல ஆரம்பித்தான்..

இடையில் எழுந்து போக முடியாமல் ரங்கநாதனும் அவரது மூத்த மருமகனும் அவதிப்பட்டுப் போனார்கள்..

சாப்பிட்டு மேஜையில் பேச்சு ஆரம்பித்ததால்.. பாதி உணவில் போக முடியாத இக்கட்டான நிலைமை அவர்களுக்கு..

“ கடலூரில் ஏதோ இருக்கிறதாமே..?”

ரங்கநாதனின் எரிக்கும் பார்வையைக் கண்டு கொள்ளாமல் அடுத்த கேள்விக் கணையை வீரலட்சுமி வீசினாள்..

“ ஆமாம் அத்தை.. கடலூரிலும்.. பாண்டிச்சேரியிலும் பிஷ்ஷிங் எக்ஸ்போர்ட் கம்பெனிகள் இருக்கு..”

“ அப்படியா மாப்பிள்ளை..”

“ அம்மா.. பாண்டிச்சேரியிலயும் இவருக்கு ஸ்டார் ஹோட்டல் இருக்கு..” ரூபிணி பெருமையுடன் கணவனைப் பார்த்துக் கொள்ள.. தாரிணி குமாரை முறைத்தாள்..

குமாருக்கு தாளமாட்டாத குறையாகப் போய் விட்டது.. ஹரிஹரன் “ தாதா... இமேஜ் தூள் தூளாகிப் போய் விட.. அவனது “ மிகப் பெரிய தொழிலதிபர்... என்ற  இமேஜ் விசுவரூபமெடுத்து எழுந்து நின்றது.. அது .. குமாரின் ஒரேயொரு ஹரிஹரன் எதிர்ப்பு அஸ்திரத்தை தவிடு பொடியாக்கிக் கொண்டிருந்தது..

“ நவீனின் எதிர்காலத்தை நினைத்து ரொம்பக் கவலைப்பட்டுக்கிட்டு இருந்தேன் மாப்பிள்ளை..”

அதற்கு மேல் பொறுக்க முடியாமல் ரங்கநாதன் வீரலட்சுமியின் பேச்சில் குறுக்கிட்டார்..

“ கவலைப்பட என்னடி இருக்கு..? அவன் என்ஜினியரிங் படிக்கிறான்.. டவுனில் சொந்த வீடு இருக்கு.. கிராமத்தில் வயல்.. தோட்டம்.. இருக்கு..”

“ கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு இருக்கீங்களா..?”

“ ஏண்டி..?”

“ இதெல்லாம் ஒரு சொத்தா..?”

“ பின்னே.. இல்லையா..?”

நேற்று வரை.. இவற்றை மிகப்பெரிய சொத்தாக நினைத்து பேசி வந்த மனைவியின் திடீர்பல்டியைக் கண்ட

ரங்கநாதன் பல்லைக் கடித்தபடி வினவினார்..

“ த்சு.. கடல் இருக்கிற இடத்தில.. ஒரு துளி தண்ணியைக் காட்டி பெருமை பேசினா.. அது எடுபடுமா..?”

அது எடுபடுமோ.. படாதோ.. இனிமேல் தங்களின் பேச்சு.. சுத்தமாக எடுபடாது என்று மாமனாருக்கும்.. அவரது மூத்த மகருமகனுக்கும் புரிந்து விட்டது..

என்றுமே ரங்கநாதனுக்கும்.. குமாருக்கும்.. ஒருவரைக் கண்டால்.. மற்றொருவருக்கு ஆகாது..

காதல் என்ற பெயரில்.. மூத்த மகளை வளைத்துப் போட்டு ரங்கநாதனின் கடைசி பைசா வரை கறந்து விட்ட குமாரின் மேல் ரங்கநாதனுக்கு தீராத வன்மம் உண்டு..

அந்த வன்மத்தை உணர்ந்து விட்ட குமாருக்கு மாமனாரைக் கட்டோடு பிடிக்காது..

“ கஞ்சாம்பட்டி மாமனாருடி என் அப்பா..” என்று தாரிணியிடம் அடிக்கடி சொல்வான்..

அதன் காரணமாக அவர்களுக்குள் அடிக்கடி மோதல் உருவாகும்.. “ என் அப்பாவை எப்படி.. நீங்க.. அப்படிச் சொல்லப் போச்சு...?” என்று தாரிணி எகிறுவாள்..

“ உள்ளதைத்தானே சொன்னேன்.. உன் அப்பா.. கஞ்சாம்பட்டியில்லாம.. பெரிய கொடை வள்ளலா..” என்று கேட்பான் குமார்..

“ உங்களுக்கு கேட்டதையெல்லாம் அள்ளி.. அள்ளி கொடுத்தாரே... அப்புறம்.. அவர் வள்ளலில்லாமல் வேற யாராம்..” தாரிணி பதிலடி கொடுப்பாள்..

“ என்னத்தைடி அள்ளி கொடுத்துட்டார்.. கோவில்பட்டி வீட்டையும்.. கிராமத்தில இருக்கிற சொத்தையும் எனக்கு எழுதியா கொடுத்துட்டார்..?” குமாரின் நியாயம் இப்படித்தான் இருக்கும்..

“ அது வேற குறையா..?”

“ ஆமாண்டி.. அதுக்கென்ன இப்ப..?”

“ திட்டம் போட்டுத்தான் என்னைக் காதலிச்சிருக்கீங்க..”

“ இதோபார்.. என்னை என்ன வேணும்னாலும் குறை சொல்லு.. ஆனா.. என் காதலைப் பற்றிச் சொல்லாதே..”

“ போதும்.. உங்க காதலைப் பற்றி வெளியில் சொல்லாதீங்க..” அவர்களின் சண்டை.. சிந்து பாத்தின் கன்னித் தீவைப் போல முடிவில்லாமல் நீண்டு கொண்டே போகும்..

அப்படிப்பட்ட.. அற்புதமான மாமனார்.. மருமகனின் உறவைக் கொண்ட ரங்கநாதனும்.. குமாருக்கு.. திடீரென்று மனதால் ஒன்றுபட்டு விட்டதாக உணர்ந்தார்கள்..

“ இவ ஆடற ஆட்டம் தாங்கலை.. இவனை எல்லாம் பெரிய இவனைப் போல.. நினைச்சுக்கிட்டு.. சூடம்.. சாம்பிராணியைக் காட்டிக்கிட்டு இருக்காளே..” என்று ரங்கநாதன் முணுமுணுத்ததும்.. குமார் ஆனந்தம் பொங்கியது..

அவன் தன் மாமனாரை.. பாசப் பார்வையால் பார்த்து வைத்தான்..

“ அத்தை மட்டும் தனியா ஆடலை மாமா.. இவளுமில்லை சேர்ந்துகிட்டு ஆடறா..”

சந்தடி சாக்கில் தன் மனைவியின் மேல் குற்றப் பத்திரிக்கை வாசித்தபடி.. மாமனாருடன் ஐக்கியமாகி விட்டான் குமார்..

இருவரும் அன்யோன்யமாக குனிந்து.. குனிந்து.. ஒருவர் காதில் ஒருவர் கிசு கிசுத்துக் கொள்வதைக் கண்ட தாரிணிக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை..

“ என்னம்மா.. இது.. கிழக்கும் மேற்கும்.. ஒன்னாயிடுச்சு..”

“ ஆமாண்டி.. “ அவளும் அதே அதிசயப் பார்வையை மகளின் பக்கம் வீசினாள்..

“ அது வேற ஒன்னுமில்லைம்மா.. ஒரு சின்ன பார்முலாதான் இவங்க இரண்டு பேரையும்.. ஒன்னாச் சேர்த்து வைச்சிருக்கு..”

“ என்ன பார்முலாடா நவீன்..?” தாரிணிக்கு அதை அறிந்து கொள்ளும் ஆவல் முட்டி மோதியது..

“ எதிரிக்கு எதிரி நண்பன்..”

நவீன் சொன்னதும் தாரிணி சிரித்து விட்டடாள்.. ஹரிஹரன் கூரிய விழிகள் அவள் திசையில் திரும்ப.. அவளது சிரிப்பு பாதியிலேயே உறைந்து போனது..

“ நவீன் ஒரு ஜோக் சொன்னான்..” அவள் குற்ற உணர்வுடன் தங்கை கணவனிடம் தன்னிலை விளக்கம் சொல்ல.. குமார் அவளை முறைத்தான்.

“ இவ அவசியம் இவனுக்கு விளக்கம் சொல்லித்தான் ஆகனுமா..? சிரிப்பு வந்தால் சிரிக்க வேண்டியது தானே.....

ஹரிஹரன் மற்றவர்களின் பல்வேறுப்பட்ட மன உணர்வுகளைக் கண்டு கொள்ளாமல் மைத்துனனைப் பார்த்துப் புன்னகைத்தான்..

“ அப்படியா..? என்ன நவீன்.. உன் அக்காவிடம்தான் ஜோக் சொல்வியா..? என்னிடம் சொல்ல மாட்டாயா..?”

“ அப்படியெல்லாம் ஒன்னுமில்லை அத்தான்..”

நவீன் முகம் சிவந்து போக.. ஹரிஹரன் பலமாக சிரித்தான்.. மைத்துனன் சகலைக்கு கொடுத்த முக்கியத்துவத்தை கண்டு குமார் முகம் கருத்தான்..

12

நீ போன பாதையிலே..

என் நெஞ்சகமே தொடருதடி...

சாப்பிட்டு முடித்தவுடன் மகளையும்.. மருமகனையும் கணவர் மறுவீட்டு விருந்துக்கு அழைப்பார் என்று எதிர்பார்த்த வீரலட்சுமி ஏமாந்து போனாள்..

அந்த நினைவே இல்லாதவரைப் போல.. அவர் வெகு மும்முரமாக குமாரிடம் ரகசியம் பேசிக் கொண்டிருந்தார்..

அவருக்கு அதை நினைவுபடுத்த வீரலட்சுமி காட்டிய கண் ஜாடைகளும். சமிஞ்கைகளும் பயனற்றுப் போயின..

அவர் புரியாத பார்வையொன்றை பார்த்து வைக்க.. வீரலட்சுமிக்கு அவருடைய திட்டம் விளங்கி விட்டது..

" தூங்குகிறவங்களை எழுப்பலாம்.. தூங்குகிறதைப் போல நடிப்பவங்களை எப்படி எழுப்புவது..?...

அவரை உசுப்பி எழுப்பும் எண்ணத்தை உடனடியாக கைவிட்டு விட்டாள் வீரலட்சுமி..

" மண்ணை நம்பி மரமிருக்கலாம்.. ஆனா உன்னை நம்பி.. நானில்லை..... என்று கூறும் பார்வையினை கணவரை நோக்கிப் பார்த்து வைத்தாள்.. தானே களத்தில் இறங்கினாள்..

" மாப்பிள்ளை.. இப்பக் கிளம்பினால்தான்.. ராத்திரிக்குள் ஊர் போய் சேர முடியும்.."

" அதுக்குள்ள கிளம்பனுமா..? ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டு ஒரு வாரம் தங்கியிருந்துட்டு போங்களேன்.."

" நாங்க மட்டும் போகிறதுக்கா உங்களிடம் சொன்னேன்..?"

" பின்னே..?"

" நீங்களும்.. ரூபிணியும்.. மறுவீட்டு விருந்துக்கு வரனும் மாப்பிள்ளை.. அதுக்கு அழைக்கத்தான் உங்க மாமனாரும்.. நானும் இங்கே தங்கியிருந்தோம்.."

வீரலட்சுமி சாமர்த்தியமாக கணவரை பேச்சில் இழுக்கப் பார்க்க.. அவர் " அப்படியா..?... என்ற பார்வையை

பார்த்து வைத்து.. அவளுக்கு ரத்த அழுத்தத்தை எகிற வைத்தார்..

" மனுசன் சிக்குவேனான்னா.. இப்படித் தண்ணி காட்றாரே..... அவள் பல்லை கடித்தாள்..

" அப்படின்னா..?" ஹரிஹரனுக்கு விளங்கவில்லை..

" பாவம்.. தாய் தகப்பன் பக்கத்திலிருந்து வளர்ந்திருந்தா அவருக்குத் தெரிந்திருக்கும்.. அவரே.. தானாய் தன் போக்கில் வளர்ந்தவர்.. அவருக்கு நாட்டு வழக்கத்தைப் பத்தி என்ன தெரியும்..?" ரங்கநாதன் தேவையில்லாமல் பரிதாபப் பட்டார்..

இத்தனை நேரம் வாயை மூடிக் கொண்டிருந்த மனிதன் அப்படியே இருந்து தொலைத்திருக்க கூடாதா என்றிருந்தது வீரலட்சுமிக்கு..

தன்னை வீரலட்சுமியின் மூத்த மகனென்று அறிவித்திருக்கும் சின்ன மருமகனின் சார்பாக போர்கொடியை உயர்த்தினாள்.. அவள்..

" உங்களைக் கூடத்தான் உங்க அப்பாவும்.. அம்மாவும் பக்கத்தில இருந்து.. பார்த்துப் பார்த்து வளர்த்தாங்க.. நீங்க என்னத்தை வளமையோட இருந்து வைக்கறீங்க..?"

" ஏண்டி.. என் வளமைக்கென்ன குறைச்சல்..?"

" ஒரு பொறம்போக்கு.. பொறுக்கிப் பயலை... அக்கா மகன்னு சொல்லிக்கிட்டு பெத்த மகளை.. பாழும் கிணத்தில் தள்ளி விடப் பார்த்த ஆள்தானே நீங்க..?"

ரங்கநாதன் அவசரமாய் வாயை இறுக மூடிக் கொள்ள.. இப்போது ஹரிஹரன் அவரை கருணைப் பார்வை பார்த்தான்..

" விதி... யென்று நினைத்துக் கொண்டார் ரங்கநாதன்..

" கல்யாணம் ஆனதும்.. பெண்ணின் பிறந்த வீட்டுக்கு.. புதுப் பெண்ணும்.. மாப்பிள்ளையும்.. விருந்துக்கு வரனும் மாப்பிள்ளை.."

“ நைஸ் அப்புறம்..?”

“ நாங்க சீர்வரிசையோட பலகாரக் கூடையைக் கொடுத்து அனுப்புவோம்..”

“ பலகாரக் கூடையா..? வாட் இஸ் திஸ்..?”

“ பலகாரங்களை.. வித விதமா செய்து.. மாப்பிள்ளை வீட்டுக்கு கொடுத்து அனுப்புவோம்..”

ஹரிஹரன் சிநேகிதப் சிரிப்பொன்றை உதிர்த்தான்..” அத்தை.. ஆக்சுவலாய்.. எங்க கல்யாணம் விழுப்புரத்தில நடந்திருக்கனும்.. பட்.. சூழ்நிலை சரியில்லை..”

“ என் வீட்டுக்காரர் சரியில்லைன்னு சொல்லுங்க மாப்பிள்ளை..”

அதை கட்டின பெண்டாட்டி சொல்லலாம்.. மகளைக் கல்யாணம் செய்து கொண்டிருக்கும் மருமகன் எப்படிச் சொல்வது என்ற நினைவுடன ரூபிணியைப் பார்த்தான் ஹரிஹரன்..

“ பழைய பேச்சு.. எதுக்கும்மா..?”

அவள் தன் வழக்கப்படி இருதரப்பையும் சமாதானப் படுத்தி வைத்தாள்..

“ ஸோ.. எங்க கல்யாணம் கோவில் பட்டியில் நடந்து விட்டது.. இப்ப ரிசப்ஷனைத்தான் விழுப்புரத்தில் வைத்திருக்கோம்..”

“ அதனால..?”

“ அதனால்.. மறுவீட்டு விருந்து அப்பவே முடிந்து விட்டதுன்னு நினைத்துக்கங்க அத்தை..”

“ என்ன மாப்பிள்ளை இப்படிச் சொல்லிட்டீங்க..?”

“ நோ அதர் வே அத்தை.. எனக்கு மூச்சு விட நேரமில்லை.. அவ்வளவு வேலைகள் இருக்கு.. அதோட.. நானும் ரூபிணியும்.. நாளைக்கு காலைல.. பிளைட்டில் கிளம்பனும்..”

இதைக் கேட்ட தாரிணியின் விழிகள் பொறாமையில் ஜ்வலிக்க ஆரம்பிக்க.. குமார்.. இருப்புக் கொள்ளாமல் நெளிந்தான்..

“ பிளைட்டில் கிளம்பனுமா..?”

“ ஆமாம்.. அத்தை.. நாங்க.. ஹனிமூனுக்கு.. பாரிஸ் போகிறோம்..”

“ ம்” ீம்.. இவளும்.. நானும்.. ஒரே அம்மாவின் வயிற்றில்தான் பிறந்தோம்.....

தாரிணி விட்ட பெருமூச்சு.. குமாரைச் சுட்டது..

“ அப்படியா மாப்பிள்ளை..”

தேன் நிலவுக்கு கிளம்புகிறவர்களை மறுத்துப் பேசக் கூடாது என்பதினால் வீரலட்சுமி மௌனம் காக்க ஆரம்பிக்க..

“ அப்ப.. நாம புறப்படலாமா..?” என்று உற்சாகமாக எழுந்தார் ரங்கநாதன்..

அதுவரை பேசாமல் அடங்கி.. ஒடுங்கியிருந்தவரின் சுறுசுறுப்பைக் கண்டதும்.. வீரலட்சுமி.. அவரை

“ வீட்டுக்கு வாங்க கவனிச்சுக்கறேன்..... என்ற பார்வையொன்றை பார்த்து வைத்தாள்..

“ எங்கே புறப்படறீங்க மாமா..?” ஹரிஹரன் அன்பொழுகக் கேட்டான்..

“ வேற எங்கே போவோம்.. எங்க ஊருக்குத்தான் போகிறோம்.. எங்களுக்கும் வேலையிருக்கு.. ஆயிரம் ஜோலியிருக்கு.. மூச்சுவிட நேரமில்லாமத்தான் இருக்கு..”

ஹரிஹரன் சொன்னதையே அவனிடம் திரும்பவும் ஒப்புவித்தார் ரங்கநாதன்..

“ பலே..... குமார் பார்வையால் தன் மாமனாரை பாராட்டினான்..

“ நாமும் கிளம்பனும் தாரிணி.. புராஜெக்ட் வொர்க்கை முடிக்காம லீவு சொல்லிட்டு வந்திருக்கோம்.. டீம் லீடர் அன்னைக்கே நம்ம ரெண்டு பேரையும்.. காய்ச்சு.. காய்ச்சுன்னு காய்ச்சிட்டார்..”

தங்களுக்கும் மூச்சுவிட நேரமில்லாமல் வேலையிருப்பதை புலப்படுத்தினான் குமார்..

இதைப் போல எத்தனையைப் பார்த்திருப்பேன்..? என்றது போன்ற பார்வையைப் பார்த்த ஹரிஹரன்.. அவர்களை சட்டை செய்யாமல் வீரலட்சுமியைப் பார்த்து..

“ நாளைக்கு நானும்.. ரூபிணியும் பாரின் போகிறோம் அத்தை.. எங்களுக்கு “ டாடா... சொல்லிவிட்டு நீங்க கிளம்பலாமில்லையா..”

வீரலட்சுமி உடனடியாக அதற்கு சம்மதித்து விட்டாள்.. வேறு வழியில்லாதவர்களாய் மற்றவர்களும் அங்கேயே தங்கினார்கள்..

13

பூவோடு பொட்டும் வைத்தாய்

உன் புன்னகையில் நெஞ்சை கொள்ளை கொண்டாய்..

ரூபிணி அதற்கு முன்னால்.. விமானத்தில் பயனித்ததில்லை.. மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தென்பட்ட பரபரப்பை விழி விரிய பார்த்தபடி.. ஹரிஹரனை ஒட்டி நடந்தாள்..

அவளது படபடப்பை உணர்ந்த ஹரிஹரனுக்கு அது புதுமையான அனுபவமாக இருந்தது..

“ எனக்கு இதெல்லாம் ஒரு விசயமே இல்லை..... , என்பதைப் போன்ற பார்வையை பார்த்துக் கொண்டு..

அதேரீதியல் அளந்து விட்டுக் கொண்டிருந்தான் குமார்..

" ஆக்சுவலி.. லாஸ்ட் இயர்லேயே.. என்னை யு. எஸ். ஏக்கு அனுப்புகிறதா இருந்தாங்க.. நான்தான் வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்.."

" ஏன் மாப்பிள்ளை..?"

" உங்க பொண்ணு தனியாய் இருக்கனுமே மாமா.."

" அதைச் சொல்லுங்க.."

ரங்கநாதன் சந்தோசமாக தாளம் போட.. குமாரின் தம்பட்டம் தொடர்ந்தது..

என்னவோ.. அவன் மட்டும் என்ஜினியராக வேலை பார்ப்பதைப் போலவும்.. தாரிணி " கைநாட்டு கேஸ்... போலவும்.. அவன் அலட்டிக் கொண்ட விதத்தில் வீரலட்சுமிக்கு எரிச்சல் மண்டியது..

" ஏன் தாரிணி.. உன்னை உன் கம்பெனியில் பாரினுக்கு அனுப்ப செலக்ட் பண்ணலியா..?" என்று மகளைக் கேட்டாள்..

" பண்ணினாங்களே.. உங்க மாப்பிள்ளை தான் வேணாம்ன்னு சொல்லிட்டார்..

" எதுக்காம்..?"

" அவர் ஒரு ஊருக்கு.. நான் ஒரு ஊருக்குன்னு போக வேண்டி வந்தது.. அதனால்தான்.."

" ஓ.. கதை அப்படிப் போனதா..?"

வீரலட்சுமி இடக்காக வினவியபடி மூத்த மருமகனைப் பார்த்தாள்.. அவன் விரோதமாக பதில் பார்வை பார்த்தான்..

" ஏண்டி.. நாம எதுக்கு வந்தோம்...?" மனைவியிடம் குமார் காட்டமாக வினவினான்..

" இதென்னங்க ேகள்வி? ரூபிணியும்.. அவளோட ஹஸ்பெண்டும் ஹனிமூன் போகிறாங்கள்ல.. அதுக்கு வழியனுப்ப வந்திருக்கிறோம்.."

“ நான் இதைக் கேட்கலைடி..”

“ வேற எதைக் கேட்டிங்க..?”

“ பெங்களூரிலிருந்து எதுக்கு வந்தோம்…”

“ அப்பாம்மாவைப் பார்க்கப் போகலாம்ன்னு சொல்லி உங்களை கோவில்பட்டிக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்தேன்..”

“ பொய் சொல்லியிருக்கிற.. உன் மனசில.. உன் தங்கையின் காதலுக்கு சப்போர்ட் பண்ணனும்கிற எண்ணம் இருந்திருக்கு.. அதை மறைச்சு என்னை இழுத்துக்கிட்டு வந்திருக்கிற..”

“ அதென்ன பெரிய கொலைக் குற்றமா..?”

“ வந்ததும்தான் வந்தோம்.. வந்த இடத்தில் உன் தங்கையின் காதலுக்கு உன் சப்போர்ட்டே தேவைப்படாமல் கல்யாணம் ஆகியிருச்சு.. அதில் கலந்து கொண்டோம்.. உடனே.. ஊரைப் பார்க்க திரும்பிப் போயிருக்கனுமா வேண்டாமா..?”

“ என்னங்க இது.. அவசரக் கல்யாணம்.. விழுப்புரத்தில் கிராண்டா ரிசப்ஷனை ஏற்பாடு பண்ணிட்டாங்க.. அதில் கலந்துக்காம என்னால் எப்படி இருக்க முடியும்? அவ என் கூடப் பிறந்த தங்கை..”

“ இதைச் சொல்லி என் வாயை அடைத்து விடு.. ரிசப்ஷன்தான் முந்தா நாளே முடிந்துருச்சு.. நேற்றே நாம பெங்களூருக்கு கிளம்பியிருக்கனுமா இல்லையா..?”

இன்றைக்குத்தான் போகப் போகிறோமே..?

“ நான் கேட்பது நேற்று ஏன் போகலைங்கிறதைப் பற்றி..”

“ நான் சொல்கிறது.. இன்றைக்கு நாம போயிடலாம்கிறதைப் பற்றி..”

“ நேற்றைப் பற்றி முதலில் பதில் சொல்லு..”

“ அதுதான் முடிஞ்சு போச்சே.. நீங்க இன்னைக்கு இருக்கிற நிலைமையை மட்டும் பாருங்க..”

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருந்த போது.. ரூபிணியும் ஹரிஹரனு« விமானத்திற்கு செல்வதற்கான ஒலிபெருக்கிஅறிவிப்பு வந்து விட்டது..

அவர்கள் கையாட்டி விட்டு விமானத்தை நோக்கிப் போனார்கள்.. அதைப் பார்த்துக் கொண்டிருந்த தாரிணியின் விழிகளில் படர்ந்த மெலிதான ஏக்கத்தைக் கவனித்த குமாருக்கு.. அவளுக்கான வெளிநாட்டு பயணத்தை தான் மறுத்தது தவறோ என்ற எண்ணம் தோன்றியது..

“ ஸாரிடி..”

பெங்களூர் திரும்பும் வழியில் காரை ஒட்டியபடி அவன் சொன்னான்.. தாரிணி வியப்புடன் அவனைப் பார்த்தாள்.. அதற்கு முன்னால் அவன் இத்தனை இதமாக அவளிடம் பேசியதே இல்லை..

காதல் சொன்ன நாள்களிலேயே குமார் இறுக்கமானவன்தான். திருமணத்திற்கு பின்பு அவன் முற்றிலும் இறுக்கமானவனாக தன்னைக் காட்டிக் கொண்டான்..

தாரிணியும்.. அவனும் காதலித்து மணந்து கொண்டவர்கள் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியதே இல்லை..

அப்படிப்பட்டவனின் வாயிலிருந்து உதிர்ந்த இதமான வார்த்தையைக் கேட்ட தாரிணிக்கு ஆச்சரியம் வந்தது..

“ எதுக்கு ஸாரி சொல்கிறீங்க..?”

“ நான் உன் பாரின் ப்ராஜெக்டை அவாய்ட் பண்ணச் சொல்லி உன்னை ஃபோர்ஸ் பண்ணியிருக்கக் கூடாது..”

“ அதுக்கென்ன இப்ப...?”

“ இல்லை.. சொல்லனும்னு தோணிச்சு.. சொன்னேன்..”

தாரிணி மெலிதாக புன்னகைக்க.. அவளிடம் தென்பட்ட அற்புதமான ஓர் சாந்தம் கலந்த அழகை அன்றுதான் உணர்ந்தான் குமார்..

அழகானவள்.. அவனைப் போல் என்ஜினியரிங் படித்தவள்.. கூட வேலை பார்ப்பவள்.. வசதியான.. அவன் வீட்டில் கேட்கும் சீர் வரிசைகளை முகம் சுளிக்காமல் செய்யக்கூடிய பெற்றோருக்கு மகளாகப் பிறந்தவள்.. இத்தனைக்கும் மேலாக ஒரே இனம்..

இத்தனையும் யோசித்து.. கணக்கிட்டு அவளிடம் காதல் சொன்ன புத்திசாலி அவன்..

அவனது கணக்குப் பிரகாரம் நடந்து.. அவள்.. அவனது மனைவியாக ஆன பின்னாலும்.. அவளை அவன் முழுமையாக காதலித்ததே இல்லை..

அன்று அவள் மேல் அவனுக்குள் காதல் உண்டானது..

“ தாரிணி”

“ ம்ம்ம்”

“ ஐ லவ் யுடி”

“ இதைத்தான் நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியே என்கிட்டச் சொல்லிட்டீங்களே..”

“ அந்தக் காதல் வேற.. இந்தக் காதல் வேறடி..”

“ ஈஸிட்..?”

“ நிஜமாத்தான்.. உன் தங்கையை அந்த ஹரிஹரன் காதலிக்கிறதெல்லாம் ஒரு காதலா..? அதைவிட அதிகமாய் உன்னை நான் காதலிக்கிறேன்டி..”

கணவனின் மனம் போகும் திசையை உணர்ந்த தாரிணிக்கு சிரிப்பு வந்தாலும்.. அவள் சிரிக்கவில்லை..

மாறாக.. கணவனுக்கு அருகே நெருக்கமாக அமர்ந்து.. அவன் தோள் மேல் தலை சாய்த்துக் கொண்டாள்..

சில நேரங்களில்.. வாழ்க்கையை.. வாழ்க்கையாய்.. வாழ்வதற்கும் சில பொறாமையான தூண்டல்கள் தேவைப் படுகின்றன..

கோவில்பட்டியை நோக்கிச் சென்று கொண்டிருந்த காரில் டிரைவரின் அருகே அமாந்திருந்த ரங்க நாதன்.. அடிக்கடி எதையோ சொல்ல முயன்றவராக.. வாய் திறந்தார்..

வீரலட்சுமி.. உடனே “ க்கும்..” என்று தொண்டையை செறுமி வைத்தாள்.

அவர் அவசரமாக வாயை மூடிக் கொண்டார்..

இந்த நாடகத்தை கவனித்துக் கொண்டிருந்த நவீனுக்கு.. அதன் பிண்ணனியை அறிந்து கொள்ளா விட்டால்.. தலைவலி வந்து விடும் போலத் தோன்றிவிட

“ என்னம்மா..?” என்று தாயின் காதை கடித்தான்..

“ அது வேற ஒன்னுமில்லைடா மகனே.. உன் அப்பாவுக்கு அவரோட சின்ன மருமகனைப் பத்தி ஏதாவது புரணி பேசியாகனும்.. அதுக்காக வாயைத் திறந்து வைக்கிறார்.. பக்கத்தில் காரோட்டிக்கிட்டு வருகிற வாட்ட சாட்டமான டிரைவர்.. உன் சின்ன அத்தானின் கார் டிரைவர்.. அதை ஞாபகப் படுத்த நான் இறுமி வைக்கிறேன்.. ஜாக்கிரதையாய் வாயை மூடிக்கிறார்.. “ என்று.. தாழ்ந்த குரலில் அவள் விளக்கம் சொன்னாள்..

நவீன் வாய்விட்டு சிரிக்க.. டிரைவர் அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு சேர்ந்து சிரித்தான்..

## 14

அந்தி மழை நேரத்திலே...

என்நெஞ்சம்.. நனையுதடி.. உன் காதலிலே...

குளிருக்காக.. நீண்ட கோட்டைப் போட்டுக் கொண்டிருந்தாள் ரூபிணி.. சேலை கட்டி நீண்ட பின்னலுடன் இருந்தாள்.. நெற்றியில் பொட்டுடன்.. மை தீட்டிய விழிகளுடன் மங்களகரமான அழகுடன் மிளிர்ந்தவளுக்கு.. அந்த மேற்கத்திய கோட் அழகாகப் பொருந்தியது..

அவளுடன் இணைந்து நடந்த ஹரிஹரன் பக்கவாட்டில் நடந்து வந்த மனைவியின் அழகை ரசித்தான்..

சேலை கட்டியிருந்த ரூபிணிக்கு அந்த நீண்ட கோட் வெகு பாந்தமாக பொருந்தியது.. அவள் நடக்கும் போது ஆடிய பின்னல் அவளது பின்னங் கால்களை மாறிமாறித் தொட்டது...

“ என்ன அப்படிப் பார்க்கறீங்க..?”

“ பார்க்கிறதைப் போல இருக்கே.. பார்க்கிறேன்..”

“ ஐய்யே.. எவளையோ சைட் அடிக்கிறதைப் போல பெண்டாட்டியையும் சைட் அடிக்கனுமா..?”

எவளையோ சைட் அடித்தால்தான் தப்பு.. பெண்டாட்டியை சைட் அடித்தா என்ன தப்பு..?”

ஹரிஹரன் பேசியபடி மனைவிக்கு அருகே நெருங்கி நடந்தான்.. அவள் விளையாட்டாய் அவனது கையைக் கிள்ள.. அவள் தோள் மீது கைபோட்டு இறுக்கிக் கொண்டான்..

“ என்ன இது..? தெருவில் போய்..” ரூபிணி விலக முயன்றாள்..

அவன் தன் வழக்கப்படி கடகடவென்று சிரித்தான்.. ஆனால் அவளை விட்டு விலகவில்லை.. அவளையும் விலக அனுமதிக்கவில்லை..

“ இது நம்ம ஊர் தெருவில்லைடி.. பாரிஸ் தெரு.. அங்கே பார்..”

அவன் கை காட்டிய திசையில் ஒரு ஆங்கிலேய ஆணும் பெண்ணும் இறுக்கமாக தழுவி முத்தங்களை பரிமாறிக் கொண்டிருந்தனர்..

“ அதைப் பார்த்தியா..?”

“ ச்சீய்.. நட்ட நடு ரோட்டில்.. இப்படியா செய்வாங்க..?”

“ அவங்க என்னடி செய்வாங்க.. இங்கே சுற்றியிருக்கிற அத்தனை பேரும் இந்த வேலையைத்தானே செய்துகிட்டு இருக்காங்க..

ஹரிஹரன் சொன்னதும் சரியாகவே இருந்தது.

அந்த நீண்ட பாலத்தின் ஓரப் பகுதிகளில் நின்று கொண்டிருந்த ஜோடிகள் அனைவரும் கட்டித் தழுவிக் கொண்டுதான் இருந்தார்கள்..

வெள்ளைப் பஞ்சு மூட்டங்களாய் பனி சூழ்ந்திருந்தது.. பாலத்தின் அடியில் ஓடிக் கொண்டிருந்த நீரில் படகுகள் சென்று கொண்டிருந்தன.. குளிர் பிரதேசத்தின் சீதோஷ்ண நிலை.. உடலை ஜில்லிடச் செய்தது..

ஹரிஹரன் பேச்சிழந்து நின்ற மனைவியை இழுத்து தழுவிக் கொண்டான்.. ரூபிணி சங்கடப் பட்டாலும் விலக முனையவில்லை..

அவளது இதழ் நோக்கி அவன் குனிந்த போது..

“ யாராவது பார்த்துவிடப் போகிறாங்க..” என்று மட்டும் சொன்னாள்..

“ இதையெல்லாம் பார்க்கிறதை நம்ம ஊரில்தான் செய்வாங்க.. இவங்களுக்குத்தான் இது ஒரு மேட்டராவே தெரியாதே..” ஹரிஹரன் அவளது முகம் நோக்கிக் குனிந்து விட்டான்..

ரூபிணி கண் மூடிக் கிறங்கி நின்றாள்.. அவளை விட்டு அவன் முகம் விலக்க வெகு நேரமானது.. அவளது கை விரல்களோடு விரல்களை பிணைத்தபடி.. பாலத்தின் கைப் பிடிச் சுவரின் வேலைப் பாடுகளைக் காட்ட ஆரம்பித்தான்..

அவளது சேலையையும்.. நீண்ட பின்னலையும்.. அவளைக் கடந்து சென்ற வெள்ளைக்காரர்கள் ரசித்துப் பார்த்தபடி சென்றார்கள்.. அவளைத் திரும்பிப் பார்த்து தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்..

" என்ன பேசிக்கிறாங்க..?" ரூபிணி சந்தேகம் கேட்டாள்..

" யார் இந்த தேவதைன்னு பேசிக்கிறாங்க.."

ஹரிஹரன் அவள் தோள் மீது இரண்டு கைகளையும் போட்டு அவள் முகம் பார்த்தபடி கூறினான்..

" நிஜத்தை சொல்லுங்க.." ரூபிணி சிணுங்கினாள்..

" நிஜத்தைத்தான் சொல்கிறேன்.. " அவளது நெற்றியில் முத்தமிட்டான் அவன்..

" எதுக்கெடுத்தாலும் முத்தமா..?"

" ஏன்..? அதில் உனக்கு இத்தனை மனக்குறையா..?"

" அப்படி நான் சொன்னேனா..?"

" ப்ளீஸ்.."

அவன் மார்பில் அவள் முகம் புதைத்துக் கொண்டாள்.. அவனது கைகள் அவளது தோள் தடவி.. முதுகில் படர்ந்த போது.. அவளது கைகளும் அவனது முதுகில் படர்ந்து பரவின..

அவளது கூந்தலில் முகம் புதைத்தவனின் சூடான இதழ்கள் அவளது பின்னங் கழுத்தில் படிந்தன..

குளிருக்கு கதகதப்பாக.. அவனது நெருக்கத்தை அளித்தபடி அவளது முடி கோதி முகம் பார்த்தான் ஹரிஹரன்..

" சூடாய் காபி சாப்பிடலாமா..?"

" இங்கேயா..?"

ரூபிணியின் விழிகள் பாலத்தின் இரு கோடிகள் வரைத் துழாவின.. " என்ன பார்க்கிற..? யாராவது சைக்கிளில் காபி கேனைக் கட்டிக்கிட்டு விற்கிறாங்களான்னு பார்க்கிறியா..?"

அவள் அந்த நினைவோடுதான் பாாத்தாள்.. அதை ஹரிஹரன் கண்டுபிடித்து கேலியாக வினவிய விதத்தில் அவள் முகம் சிவந்து போனாள்..

" நீங்கதானே காபி சாப்பிடலாமான்னு கேட்டீங்க..?"

" அந்த பாலத்துக்கு மேல நின்னு சாப்பிடலாமான்னு கேட்கலை.. பாலத்து அடியில் சாப்பிடலாமான்னு கேட்டேன்.."

" பாலத்துக்கு அடியிலயா...?"

ரூபிணி யோசனையுடன் பாலத்தின் கைபிடியின் மீது சாய்ந்து எட்டிப் பார்த்தாள்.. அகன்ற இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு சுத்தமான ஆற்று நீர் ஓடிக் கொண்டிருந்தது..

" தண்ணிக்குள்ள போய் காபி குடிக்க முடியுமா..?... அவள் குழம்பிப் போனாள்..

அவளது குழப்பத்தை ரசித்தான் ஹரிஹரன்.. அவனுக்கு அவள் செய்கை எல்லாம் புதுமையாகவும்.. ரசிக்கும் படியும் இருந்தன..

" என்ன பார்க்கிற..?"

அப்போதுதான் பாலத்தின் இரு கோடிகளையும் பார்வையால் துழாவி சைக்கிள் கேன் காபி வருகிறதா என்று பார்த்து அவனது கேலிக்கு ஆளாகி இருந்தாள் ரூபிணி..

மறுபடியும் அவனது கேலிக்கு ஆளாக அவள் விரும்பவில்லை.. அதனால்..

" சும்மா.." என்று சொன்னாள்..

" சும்மா.. யாராவது பார்ப்பாங்களா..?"

“ ஏன் பார்க்கக் கூடாதா..?”

“ ஊஹீம்.. ஏதாவது விசயமிருக்கும்..”

“ ஒரு விசயமுமில்லை..”

“ அப்படி நீ சொன்னா.. நான் நம்பிவிடுவேனா..?”

“ வேற எதுக்குப் பார்த்தேன்.. நீங்களே சொல்லுங்க..”

“ தண்ணி எவ்வளவு ஆழமிருக்கும்ன்னு பார்த்தியா..?”

அவன் சொன்னதும்தான்.. ஆற்று நீரின் ஆழம் எவ்வளவாக இருக்கும் என்ற எண்ணமே ரூபிணிக்கு வந்தது..

அவள் குனிந்து ஆற்று நீரை மீண்டும் பார்த்தாள்..

“ எவ்வளவு ஆழமிருக்கும்..?” என்று அவனிடமே கேட்டாள்..

“ பத்து ஆள் சேர்ந்து நின்னா எவ்வளவு ஆழமிருக்குமோ.. அதை விட அதிகமாகவே இருக்கும்.. ஆக.. நீ ஆற்று நீரின் ஆழத்தைப் பார்க்கக் குனியவில்லை..”

“ இவன் ஒருத்தன்.. இதிலேயே நிற்கிறான்.....

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவனது பார்வை அவளது உதட்டின் மீது படிந்தது..

“ அதையேன் கஷ்டப்படுத்தற..”

அவள் முகம் சிவக்க .. மீண்டும் ஆற்று நீரை பார்த்தாள்..

“ வேற எதுக்குடி பார்த்த..? ஆற்றுத் தண்ணி இங்கேயெல்லாம் இவ்வளவு சுத்தமாயிருக்கு.. நம்ம ஊரில் அழகான கூவம் ஆற்றுத் தண்ணியையே.. சாக்கடையாய் மாற்றி வைச்சிருக்காங்களேன்னு பார்க்கறியா..?”

“ ஆமாமில்ல.....

அவள் அவசரமாகக் குனிந்து.. சுத்தமான ஆற்று நீரின் சுகாதாரமான தோற்றத்தை பார்வையிட.. அவன்

இதழ்களில் கேலிச் சிரிப்பு உதித்தது..

## 15

அன்றொருநாள்.. முன் பனியில்..

என் நெஞ்சத்தை திருடிச்சென்றாய்...

ஆற்று நீர் ஸ்படிகம் போல தெளிவான சுத்தத்துடன் ஓடிக்கொண்டிருந்தது.. அதன் மேற்பரப்பு பளபளக்க.. ரூபிணி தன்னையறியமால்

“ நிஜம் தான்.. “ என்று சொல்லி விட்டாள்..

“ எதை.. நிஜம்தான்னு சொல்கிற..?”

“ இந்த ஆற்றுத் தண்ணி எவ்வளவு சுத்தமாயிருக்குன்னு பார்த்தீங்களா..?”

“ ஸோ.. நீ இந்தக் காரணத்துக்காகவும் ஆற்றுத் தண்ணியைப் பார்க்கல... சொல்லு.. வேற எதுக்காக பார்த்த..?”

அவன் அதிலேயே நிற்க.. ரூபிணி அதைக் கவனிக்காதவளாக பேசினாள்..

“ மதராஸபட்டினம் படத்தைப் பார்த்திருக்கீங்களா..?”

“ எனக்கு படம் பார்க்க நேரமிருந்ததில்லை.. பட்.. இந்த படம் நம்ம தியேட்டரில் ஓடினப்போ.. ஆடிட்டை செக் பண்ணப் போயிருந்தேன்.. அப்போ படத்தில் இம்ரெஸ் ஆகி.. பொறுமையாய் உட்கார்ந்து முழுப் படத்தையும் பார்த்தேன்..”

“ அதுதான் இந்தப் படத்தின் ப்ளஸ்..”

“ இப்ப எதுக்கு அந்தப் படத்தை நினைவு படுத்தற..?”

“ அந்தப் படத்தில.. அந்தக்காலத்து கூவம் நதி எவ்வளவு அழகாக இருந்ததுன்னு காட்டுவாங்க.. அந்தப்

பாலம் கூட.. இப்ப நாம நிற்கிற இந்தப் பாலத்தின் டிசைனைப் போலவே இருக்கும்..”

“ யெஸ்.. யெஸ்..”

“ இப்ப.. இந்த ஆற்றில் படகுகள் போகிறதைப் போல.. அப்ப கூவம் நதியில் படகுகள் போய்கிட்டு இருக்கும்..”

“ ம்ம்ம்..”

“ இந்த ஆற்றுத் தண்ணியின் இந்தச் சுத்தம்.. அப்ப.. அந்த ஆற்றுத் தண்ணியில இருக்கும்.. ஆனா பாருங்க எப்பேற்பட்ட பொக்கிசத்தை நாம.. எப்படி ஆக்கி விட்டோம்..?”

ஹரிஹரன் பதில் சொல்லாமல் ரூபிணியின் ஆற்றாமையைக் கேட்டுக் கொண்டிருந்தான்..

“ ஆற்று நீர் வரலாற்று பொக்கிசம்.. நமக்கு தெய்வம் கொடுத்த வரம்.. அதைப் பாதுகாக்க வேண்டாமா..? எங்கேயெல்லாம் ஆறு ஓடுகிறதோ.. அங்கேயெல்லாம் கழிவு நீரை அதோடு இணைத்து மாசுபடுத்த யார் நமக்கு அதிகாரத்தை கொடுத்தது..? ஆற்றங்கரையை கண்டு விட்டால் அதில் உடகார்ந்து அதன் அழகை ரசிக்கனும்.. அதை விட்டுவிட்டு.. அங்கேதான் நாம சாய பேக்டரிகளைக் கட்டுகிறோம்.. வேஸ்டேஜான சாயத் தண்ணிகளை.. ஆற்றுத் தண்ணிக்குள்ள பாய்ச்சுகிறோம்.. நாம செய்கிற அராஜகத்துக்குத்தான் இயற்கைக்கு கோபம் வந்து.. சுனாமியால் எழுந்திருக்குது.. “ தானே… புயலாய் ஆட்டம் காட்டுது..”

மென்மையை மட்டும் காட்டும் அவளது முகம் கோபத்தில் பல்வேறு உணர்வுகளை பிரதிலிப்பதைக் கண்ட ஹரிஹரனுக்கு.. முதன் முதலாக அவளைப் பார்த்த நிகழ்வு நினைவுக்கு வந்தது..

அன்றைக்கும் இதைப் போல்தான் ஹரிஹரனிடம் வேலை செய்த ஆள் செய்த அநியாயத்தைப் பற்றி அவள் கண்டித்துப் பேசினாள்..

அப்போதும் இதைப் போல அவளது முகம் பல்வேறு உணர்வுகளைப் பிரதிபலித்தது..

“ பெண் என்பவள் மகா சக்தி..,... என்று அவன் நினைத்துக் கொண்டான்..

அவளுக்கு சாந்த சொருபியாய் அமைதி காட்டத் தெரியும்.. இரக்கமே வடிவானவளாக கருணை காட்டத் தெரியும்.. காதலின் அருவியாக.. காதலைக் கொட்டத் தெரியும்..

இத்தனையும் தெரிந்தவளுக்கு அநியாயத்தையும்.. அநீதியையும் கண்டால் ஆத்திரப்படவும் தெரியும்..

“ இவள் அருமையானவள்.. ...

அவனுக்கு அவள் மீதான காதல் அதிகரித்தது..

ஊரைச் சுற்றிப் பார்க்கப் போன இடத்தில் வம்பு செய்தவனை போலிஸில் புகார் செய்து தண்டித்ததில் அவளது ரௌத்திரம் வெளிப்பட்டது..

அது.. சிறுமையையும்.. பாதகத்தையும் கண்டால் பொங்கும் ரௌத்திரம்..

தன்னிடம் வேலை பார்ப்பவனை தானே தண்டிப்பதாக ஹரிஹரன் வாக்குக் கொடுத்ததும் உடனடியாக தனது புகாரை அவள் திரும்பப் பெற்றுக் கொண்டதில் அவன் மீதான அவளது நம்பிக்கை வெளிப்பட்டது..

அது.. அவனைக் கௌரவப் படுத்திய நம்பிக்கை..

தவறு செய்தவனே அவளைத் தேடி வந்து மனைவி குழந்தையோடு காலில் விழுந்த போது.. அவள் மன்னித்தாளே.. அதில் அவளது பகைவனுக்கும் அருளும் காருண்யம் வெளிப்பட்டது..

அது பெண்களுக்கு உரித்தான தாய்மையின் காருண்யம்..

அவளது வேண்டுகோளுக்கு இணங்கி உடனடியாக அவன் அவளுக்கு மன்னிப்பைக் கொடுத்து வேலையில்

சேர்த்துக் கொண்டதும்.. அவள் நெகிழ்ந்து போனாளே.. அதில் அவளது இளகிய மனம் வெளிப்பட்டது..

அது.. பெண்மையின் மென்மை வெளிப்படுத்திய மன இணக்கம்.. அவன் மீது காதல் கொண்டதை தன் பார்வையிலேயே வெளிப்படுத்தினாளே.. அது.. ஹரிஹரன் ஆண்மையை கர்வப் படுத்திய பார்வை..

அவனிடம் எலலாம் நீயே என்று சரணடைந்தாளே.. அது ஹரிஹரன் ஆண்மைக்கு அவள் கொடுத்த பரிசு..

சொந்த ஊரில்.. எல்லோரின் கண் முன்னாலும்.. மணமேடையில் அமர்ந்து.. “ வா... என்று அவன் பார்வையிலே அழைத்ததும் தயங்காமல் அவனருகில் அமர்ந்து.. அவன் கட்டிய தாலியைத் தன் கழுத்தில் வாங்கிக் கொண்டாளே.. அது.. ஹரிஹரன் ஆண்மைக்கு அவள் கொடுத்த வெற்றி..

அவளைச் சந்திக்கும் வரை.. வாழ்க்கையே போர்க்களமாகத்தான் ஹரிஹரன் வாழ்ந்து வந்தான்..

என்றைக்கு அவளைச் சந்தித்தானோ.. அந்த நொடியிலிருந்து அவனது வாழ்வின் போக்கே மாறிவிட்டது..

ஹரிஹரனை.. வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ ஆசைப்பட வைத்தவள் அவள்தான்..

அவள் அவனுக்கு அனைத்துமாக அவன் வாழ்விற்குள்.. வந்தாள்.. வாழ்வில் ஒளிந்திருந்த அனைத்து சந்தோசங்களையும் அவனுக்கு அறிமுகப் படுத்தினாள்..

போர்க்களத்தில் வாளேந்தி நின்றவன்.. வாளைக் கீழே போட்டு விட்டு.. அவள் மடியில் இளைப்பாற ஆரம்பித்தான்..

அந்த இளைப்பாறல்கள்தான் எத்தனை இனிமையானவை..,

“ இங்கே பாருங்களேன்.. இந்த ஊர்களிலெல்லாம்.. பழங்கால கட்டிடங்களை எல்லாம் அரசாங்கமே

பராமரிக்குது.. அதன் பழமை கெடாமல் ஆராதிக்குது.. நாம என்ன செய்கிறோம்..? பழையகாலக் கட்டிடங்களையெல்லாம் இடித்து விட்டு புதுப்புது கட்டிடங்களை உருவாக்குகிறோம்..”

“ அதில் தப்பென்ன ரூபிணி..?”

“ பழமை அழிகிறதே…”

இந்திய நாட்டின் பாரம்பரியத்தை மறக்காதவளாக நெற்றி வகிட்டில் பொட்டிட்டு இருந்தவளை ஆழமாக பார்த்தான் ஹரிஹரன்.. பழமையின் சின்னமாக.. காலம்காலமாக.. இந்திய மண்ணில் போற்றப்படும் கணவன் மனைவி உறவின் அடையாளமாக அவள் மிளிர்ந்தாள்..

“ பழமை அழியாது ரூபிணி.. காலத்தால் அழிக்க முடியாத நிறைய விசயங்கள் நம் ரத்தத்தில் ஊறியிருக்கும்.. அதால் நீ கவலைப் படுவதை நிறுத்திவிட்டு வா..”

“ எங்கே..?”

“ காபி சாப்பிட..?”

“ தண்ணிக்குள்ளேயா..?”

அவள் பயத்துடன் கேட்க.. அவன் கடகடவென்று சிரித்தான்..

“ இல்லை.. தண்ணிக்கு மேலே..”

அவள் இன்னும் அதிகமாக பயந்து விட்டாள்..

“ ஏங்க.. நமக்கென்ன தெய்வ சக்தியா இருக்கு..?”

“ ஏன் இப்படிக் கேட்கிற..?”

“ தண்ணிக்கு மேலே நடக்க நம்மால் எப்படி முடியும்..?”

அவள் அறியாமையுடன் வினவி வைக்க.. அவன் அதற்கும் சிரித்தான்..

“ மக்கு.. மக்கு..”

“ எதுக்கு இத்தனை “ மக்கு ... போடறீங்களாம்..?”

“ இப்படி மக்கு மாதிரி பிஹேவ் பண்ணினா வேற எப்படிச் சொல்வாங்க..?”

“ இந்த மக்கைத்தான் விரட்டி.. விரட்டி நீங்க காதலிச்சீங்க.. அது நினைப்பில் இருக்கட்டும்..”

“ காதலிச்சேன்னு சொல்லு.. விரட்டி.. விரட்டி.. காதலிச்சேன்னு சொல்லாதே.. காதல் விசயத்தில் நான் ஜென்டில்மேன்..”

“ இந்த ஜென்டில்மேன்தான் துப்பாக்கியைத் தூக்கிக்கிட்டு வந்தார்..”

“ அது உன் அத்தை மகனைவிரட்ட..”

“ அப்போ.. நீங்க.. விரட்டினதை இப்பவாவது ஒப்புக்கறிங்களா.. இல்லையா..?”

ஒரு விரலை உயர்த்தி அவள் விளையாட்டாய் மிரட்ட.. அவன் அவள் காதைப் பிடித்துத் திருகினான்..

“ என்னையே மிரட்டறே.. உம்..?”

“ ஸ்ஆ.. வலிக்குது..”

அவள் பொய்யாய் அலற.. அவர்களைக் கடந்து போன வெள்ளைக்கார ஜோடி நின்று அவர்களைப் பார்த்தது..

“ ஆர் யு லவ்வர்ஸ்..?” அந்த வெள்ளைக்காரப் பெண் வினவினாள்..

“ வி ஆர் ஹஸ்பெண்ட் அனட் வொய்ப்..” ஹரிஹரன் சொன்னான்..

“ ஓ..” உதட்டைக் குவித்தபடி அவர்கள் நகர்ந்து விட்டனர்..

“ எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை என் பெண்டாட்டியாக்கி இருக்கிறேன்..? அந்தப் பெண் ஈஸியாய்

“ காதலியா?… ன்னு கேட்கிறாளே..” ஹரிஹரன் குறை சொன்னான்..

“ அப்போ .. சார்.. என்னைக் காதலிக்கல..” ரூபிணி புருவங்களை உயர்த்தினாள்..

“ யார் சொன்னது..?”

“ இப்ப அந்தப் பெண் அதைத்தானே சொன்னா.. அதுக்குப் போய் பெரிசா சலிச்சுக்கறீங்க..”

“ ஏண்டி.. உன்னை முதன் முதலில் பார்த்தப்போ வாயில்லாப் பூச்சின்னு நினைச்சுக்கிட்டேன்.. ஆனா.. நீ எப்படி வாயடிக்கிற..”

“ இந்தக் காலத்தில் வாயிருக்கிறவங்கதான் பிழைக்க முடியும்..”

“ ஈஸிட்..? வா.. அதைப்பத்தி காபியை குடித்துக்கிட்டே பேசலாம்..”

“ நான் வரமாட்டேன்..”

பாலத்துக்கு அடியில் போகும் படிகளில் அவன் இறங்க.. ரூபிணி பயந்து பின் வாங்கினாள்..

“ ஏண்டி..?”

“ தண்ணிக்கு மேல.. நடக்கவெல்லாம் எனக்குத் தெரியாது..”

“ இப்படிப் பேசினா.. மக்குன்னுதான் சொல்வாங்க..”

“ நீங்க எப்படி வேணும்னாலும் சொல்லிட்டுப் போங்க.. ஆனா நான் தண்ணிக்கு மேலே நடக்கிற விளையாட்டுக்கெல்லாம் வர மாட்டேன்..”

“ உன்னை யாருடி தண்ணிக்கு மேல நடக்கச் சொன்னது..?”

“ பின்னே..?”

“ தண்ணிக்கு மேலே நாம நடக்க வேண்டாம்.. போட் நடந்து வரும்.. அங்கே பாரு..”

ஹரிஹரன் சுட்டிக் காட்டிய திசையில் ஒரு மோட்டார் படகு வேகமாக வந்தது.. அவர்கள் நின்று கொண்டிருந்த பாலத்தின் அடியில் நின்றது.. சிலர் அதிலிருந்து இறங்கினர்.. ஹரிஹரன் ரூபிணியை அழைத்துக் கொண்டு அதில் ஏறினான்..

படகின் மேல் தளத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்த ஹரிஹரனு«.. ரூபிணியும்.. கரையோரத்தில் தெரிந்த வீடுகளையும்.. தெருக்களையும் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர்..

சூடாக காபி வந்தது.. ஹரிஹரன் ரூபிணியிடம் காபிக்கோப்பையைத் தந்தான்..  சூடான காபியை ரசித்துப் பருகியவளிடம் “ தண்ணிக்கு மேலே உட்கார்ந்துக்கிட்டு.. சூடா காபி குடிக்கிறது என்பது.. இதுதான்.. “ என்றான்..

அவனது கலாட்டாவில் முகம் சிவந்தாலும் ரூபிணி அதை வெகுவாக ரசித்தாள்..

இரவில் அவர்கள் தங்கியிருந்த “ ாட்டலுக்கு திரும்பிய போது ரூபிணியின் உடல் கிடுகிடுத்துக் கொண்டிருந்தது..

அறைக்குள் நுழைந்ததும்.. ë£ டரை ஆன் பண்ணி விட்டு கம்பளிக்குள் சுருண்டு கொண்டவளை சாப்பிட அழைத்தான் ஹரிஹரன்ள..

“ எனக்கு ஒன்னும் வேண்டாம்..” என்றாள் ரூபிணி..

“ வெறும் வயிறாய் படுக்கக் கூடாது.. வா..”

“ பளீஸ்.. என்னை விட்டு விடுங்களேன்..”

“ ஏண்டி.. உனக்கே இது நியாயமாய இருக்கா..? நான் மூன்றடி தள்ளி.. விலகி நிற்கிறேன்.. என்னை விட்டு விடுன்னு சொன்னா என்ன அர்த்தம்..?”

“ சாப்பிடக் கூப்பிட வேணாம்ன்னு அர்த்தம்..”

“ அதுதான் ஏன்..?”

“ என்னத்தை சாப்பாடு இது..? உப்பில்லாம.. உரப்பில்லாம “ உவ்வே... எனக்கு குமட்டுது..”

ஹரிஹரன் அவளருகில் அமாந்து அவள் தோள் பற்றித் தன் பக்கமாய் திருப்பினான்..

“ இப்பத்தான் ஹனிமூனுக்கு வந்திருக்கோம்.. அதுக்குள்ள “ உவ்வே... யா.. ? அதெல்லாம் நாம் ஹனிமூன் முடிஞ்சு போன பின்னாலதான் வரனும்..”

ஏன் அவன் அப்படிச் சொல்கிறான் என்று புரியாமல் திருதிருத்த ரூபிணி.. அர்த்தம் புரிந்ததும் முகம் சிவந்தாள்..

“ ஐய்யே.. எப்போதும் உங்களுக்கு ஒரே நினைப்புத்தானா?”

“ ஹனிமூனில் வேற என்ன நினைப்பிருக்கும்..?”

அவனும் கம்பளியில் புகுந்தான்.. குளிரில் வெடவெடத்தவளை அவன் இறுக்கிக் கொள்ள.. அவளது வெடவெடப்பு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்தது..

அதை உணர்ந்து அனுபவித்தபடி அவளது காதோரமாக ஹரிஹரன் பாடினான்..

“ சலக்கு.. சலக்கு

ஜரிகைச் சேலை..

சலக்கு.. சலக்கு..

விலக்கு.. விலக்கு..

வெட்கம் வந்தா..

விலக்கு.. விலக்கு..

உனக்குத் குளிரினா...

என்னை எடுத்துப்

போர்த்திக்கோ..

மாமன் உடம்பு மேல..

மச்சம் போலே ஒட்டிக்கோ..

அடடா.. அல்வாத்துண்டு

இடுப்பு.. ஐ.. இடுப்பு..

அழகா பத்திக்கிச்சு..

நெருப்பு.. சுடு.. நெருப்பு..”

அந்தக் குளிரும்.. அவனது நெருக்கமும் அவளை என்னவோ செய்தன.. அவளது காதோரமாக அவன் பாடிய பாடல் அவளை எங்கோ இழுத்துச் சென்றது..

கம்பளிக்குள் கட்டிக் கொண்டிருந்தவர்களை நெருப்பு பற்றிக் கொண்டது.. ஜ்வலித்த அந்த நெருப்பின் தனலில் இருவரும் ஒருவரைரொயருவர் தேட ஆரம்பித்தனர்..

ஹரிஹரன் சூடான இதழ்கள் அவளது முகம் முழுவதும் முத்தங்களைப் பதித்த போது.. ரூபிணி தன் வசமிழந்து அவனிடம் அடைக்கலம் புகுந்திருந்தாள்..

ஆண்மையின் ஆலிங்கனம் பெண்மையை ஆட்கொண்டது.. விடுபட விரும்பாமல் அவளும்.. விடுவிக்க விரும்பாமல் அவனும்.. தேடலைத் தொடர்ந்தனர்..

தேடி முடித்தபின்.. ஓய்ந்து போய் விலகினவர்களுக்கு பசித்தது.. சாப்பிட்டு முடித்தபின்.. மீண்டும் தேடல் ஆரம்பித்தது..

தேனிலவிற்காக இருவாரங்கள் அங்கே கழிக்க நினைத்து வந்தவர்கள் ஒரு மாத காலமாக அதை நீடித்தனர்..

ஒருவரையொருவர் விட்டு விலகாமல்.. அந்த ஒரு மாத காலமும்.. அட்டை போல ஒட்டிக் கொண்டு.. சுற்றித் திரிந்தனர்.. தேனிலவு முடிந்து.. தாயகம் திரும்பிய போது.. ரூபிணியின் மனம் நிறைந்திருந்தது..

16

நெஞ்சத்தை சொந்தங்கொண்டாய்

நீங்காத பந்தம் கொண்டாய்...

அந்தி நேரத்துக் காற்று உடல் மீது படிய.. தோட்டத்தைச் சுற்றி வந்தாள் ரூபிணி..

வெளிச்சம் மறைந்து.. மெல்லிய இருளின் படலம் அவளை சுற்றிக் கவிய ஆரம்பித்திருந்தது..

" இன்னும் அவர் வரலையே.....

கவலையாக நினைத்துக் கொண்டாள்.. அவளது பார்வை வாசல் கேட்டின் மீதே படிந்து நின்றது..

அவன் வர இன்னும் கூட நேரமாகலாம் என்று அவளுக்கு தோன்றியது.. வீட்டுக்குள் செல்லத் திரும்பினாள்.. ஆனால் வீட்டுக்குள் போக மனமில்லாமல் போர்டிகோவின் அருகே கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் அமாந்து விட்டாள்..

" அம்மா.."

" என்ன வனஜா.."

" நைட்டுக்கு என்ன சமைக்கட்டும்..?"

" சப்பாத்தியும்.. குருமாவும் வை.. அப்படியே தயிரைத் தாளிச்சு.. தயிர்சாதம் செய்து விடு.."

" சரிங்கம்மா.."

" கத்தரிக்காய் பிரை பண்ணிவிடு.. தயிர் சாதத்திற்கு அதுதான் தோதாக இருக்கும்.."

" ஆகட்டும்மா.."

வனஜா போய் விட்டாள்.. ஊஞ்சல் கம்பியில் கன்னத்தை வைத்தபடி.. ரூபிணி ஹரிஹரனு¡ காக காத்திருக்க ஆரம்பித்தாள்..

" அம்மா.."

" என்ன வள்ளி..?

" என் பொண்ணு ஸ்கூலுக்குப் போகனும்.."

இவள் எதற்கு இதை நம்மிடம் வந்து சொல்கிறாள் என்று குழம்பிப் போனாள் ரூபிணி..

விசித்திரமாக வள்ளியைப் பார்த்தடி..

" போகட்டுமே.. அதிலென்ன பிரச்சனை..?" என்று கேட்டாள்

" இல்லேம்மா.. ஸ்கூல் பீஸ்.. யூனிபார்ம். நோட்டுன்னு செலவு இருக்கு..."

வள்ளியின் குரல் தயங்கி ஒலிக்க.. ரூபிணிக்கு அப்போதுதான் வள்ளியின் தேவை என்ன என்று புரிந்தது..

" நாளைக்கு காலையில மறக்காம நினைவு படுத்து வள்ளி.. பணம் தர்றேன்.."

" சரிங்கம்மா.."

வள்ளி முகமலர்ச்சியுடன் உள்ளே போய் விட்டாள்.. ரூபிணி மீண்டும் வாசலை நோக்கி தவமிருக்க ஆரம்பித்தாள்..

" அம்மா.."

திரும்பிப் பார்த்தாள்.. வனஜா நின்றிருந்தாள்.. ரூபிணிக்கு ஆச்சரியமாய் இருந்தது..

" அதற்குள்ளேயே நைட் டிபனை செய்து முடிச்சிட்டாயா..?" என்று கேட்டாள்...

" அதில்லைம்மா.."

" வேற என்ன.."

" எனக்கும் பையன் இருக்கான்.."

“ இருக்கட்டுமே..... என்று இருந்தது ரூபிணிக்கு.. வேலை மெனக்கெட்டு இதை எதற்கு வந்து இந்த நேரத்தில் இவள் சொல்கிறாள்..? என்ற நினைவோடு வனஜாவின் முகம் பார்த்தாள் ரூபிணி..?

“ என்ன வேணும்.. வனஜா..?”

“ என் பையனுக்கும் நாளைக்கு மறுநா ஸ்கூல் திறக்குது..”

“ ஓ..”

ரூபிணிக்கு புரிந்து விட்டது...

வள்ளியின் பெண்ணுக்கு பள்ளியில் சேர உதவிப் பணம் தருவதாக ரூபிணி வாக்களித்ததை.. வனஜா கேட்டிருக்கிறாள்..

உடனே தன் மகனுக்கும் அதே உதவியைப் பெற அவசரமாக ஓடி வந்திருக்கிறாள்..

“ கார்மேகம்..”

ரூபிணி உரத்த குரலில் அழைத்தாள்.. கார்மேகம் ஓடி வந்தான்..

“ என்னங்கம்மா..”

“ டிரைவரையும்.. செக்யூரிட்டியையும் கூப்பிடுங்க..”

“ இதோங்கம்மா..”

அடுத்த நிமிடம்.. கார்மேகத்துடன்.. டிரைவரும்.. செக்யூரிட்டியும் வந்து நின்றார்கள்..

எஜமானியம்மாள் எதற்காக அழைத்தாளோ.. என்ற பதட்டம் அவர்கள் முகத்தில் அப்பியிருந்தது..

“ கார்மேகம்.. உங்க வீட்டில் ஸ்கூல் போகிற பிள்ளைகள் இருக்கிறாங்களா..?”

“ என் மகன் இருக்கான்ம்மா..”

ரூபிணியின் பார்வை டிரைவரின் மீது படிய.. அவன் அவசரமாக " என் மகள் ஸ்கூல் போகிறாம்மா.." என்றாள்..

" செக்யூரிட்டி..?"

" ஸ்கூலுக்கு போகிற பொண்ணு இருக்கும்மா.."

" சரி.. நீங்க எல்லோருமே.. நாளைக்கு காலையிலே உங்க வீட்டில் படிக்கிற பிள்ளைகளுக்காக.. உதவிப் பணம் வாங்கிக்கங்க.."

" சரிங்கம்மா.."

அவர்கள் தங்களுக்குள் பேசியபடி செல்ல.. ரூபிணி வனஜாவைப் பார்த்தாள்

" அவங்களுக்குச் சொன்னதுதான் உனக்கும்.."

" ஆனா.. அம்மா.."

வனஜா எதையோ கேட்க நினைத்து.. கேட்காமல் தயங்க.. ரூபிணி புன்னகைத்தாள்..

" நீ உன் மகனுக்காக உதவி கேட்ட.. அவங்க கேட்கலை.. நான் கூப்பிட்டு விட்டு உதவி செய்வதாக சொல்லி இருக்கிறேன்.. அதைத்தானே. ஏன்னு கேட்க நினைக்கறே..?"

" ஆமாம்... என்று சொல்ல முடியாமல் வனஜா மௌனித்தாள்..

" வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும்ன்னு ஆகிவிடக் கூடாது.. வள்ளி கேட்டவுடன்.. நான் உன்னையும் கூப்பிட்டு விசாரிச்சிருக்கனும்.. விட்டு விட்டேன்.. நீயாய் கேள்விப்பட்டு.. வள்ளிக்கு செய்ததைப் போல.. உனக்கும் உதவி செய்யச் சொல்லி கேட்டு வந்திருக்கிறாய்.. அவங்க மூனு பேருக்கும் உங்களுக்கு கிடைத்த உதவியைக் கேட்டதும் இந்த எண்ணம் மனசில் வந்து.. கேட்கத் தயங்கி நின்னா என்ன செய்கிறது..? ஒரு வீட்டில் வேலை செய்கிறவங்களில் ஒருத்தருக்கு உதவி செய்து.. இன்னொருத்தரை விடக் கூடாது.. எல்லோரையும் ஒன்னு

போல நினைக்கனும்.. அதனால்தான அவங்களை கூப்பிட்டு விட்டேன்..”

வனஜா வியந்த முகத்துடன் அவள் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த போது.. ஹரிஹரன் கார் உள்ளே நுழைந்தது..

“ ஐயா வந்திட்டாங்க..” வனஜா அவசரமாக உள்ளே விரைந்து விட்டாள்..

ரூபிணி முகம் மலர எழுந்து.. காரின் அருகே சென்றாள்.. கார் கதவைத் திறந்து இறங்கிய ஹரிஹரனிடம்..

“ வந்துட்டிங்களா..?” என்று நெடுங்காலம் பிரிந்திருந்தவளைப் போலக் கேட்டாள்..

“ ஏண்டி .. மதியம் சாப்பிட வீட்டுக்கு வந்துட்டுத்தானே போனேன்..

“ ஆமாம்..”

“ இதோ இருக்கிற பாண்டிச்சேரிக்குத்தானே போயிருந்தேன்..?”

“ ஆமாங்க.. அதுக்கென்ன இப்ப...?”

“ என்னவோ.. வருசக்கணக்காய்.. உன்னை விட்டு விட்டு தூர தேசம் போய் திரும்பி வந்தவனிடம் கேட்கிறதைப் போல கேட்டு வைக்கிறயே..”

“ எனக்கு அப்படித்தான் தோணுது.. அதுக்கென்னங்கறீங்க..”

இப்படிக் கேட்டவளின் கண்களில் மயக்கம் பொங்கி வழிந்தது.. விட்டால்.. அந்த இடத்திலேயே அவனை அணைத்து விடுபவள் போல தாபத்துடன் அவனைப் பார்த்த ரூபிணியின்.. உடலும்.. மனமும் அவனைத் தேடுவதை.. அவனால் புரிந்து கொள்ள முடிந்தது..

இதற்காகத்தான்.. இந்த தேடலை அவளிடம் காணும் சுகத்திற்காகத்தான்.. எங்கேயிருந்தாலும் வீட்டுக்கு அவன்

விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிறான்..

17

நெஞ்சோடு நெஞ்சம் கலந்து...

சங்கமித்த நெஞ்சமானோம்..

...

அவனது கோட்டைக் கழட்ட உதவியபடி ரூபிணி வினவினாள்..

" ஏன்.. இவ்வளவு லேட்..?"

ஹரிஹரன் மனம் பொங்கியது..

இப்படியொரு கேள்வியை அவனைப் பார்த்துக் கேட்க ஆளில்லாமல் தனித்து வாழ்ந்தவன்.. அவளது அதட்டலுக்கு அடிபணிந்து பதில் சொன்னான்..

" நேரமாகிருச்சுடி.."

" அதுதான் ஏன்னு கேட்டேன்.."

அவனது கழுத்து டையை அவிழ்த்தபடி நெருங்கி நின்றபடி ரூபிணி கேட்டாள்..

அவள் பின்னலில் சூடியிருந்த மலரின் வாசம் அவனை மயக்கியது.. கழுத்து டையை உறுவி.. அவள் கழுத்தில் மாலையாகப் போட்டு அருகே இழுத்துக் கொண்டான் அவன்..

" அதுதான் நேரமாச்சுன்னு சொன்னேனே.."

அவள் பாணியிலியே பதில் சொன்னவனின் கண்கள் சிரித்தன.. அவன் டையை சுண்டியிழுத்ததினால் அவன் மேல் மாலையாக விழுந்தவளின் கரங்கள் அவன் கழுத்தை வளைத்துக் கொண்டன..

" வீட்டில் ஒருத்தி காத்துக்கிட்டு இருப்பான்னு நினைப்பு வேணாமா..?

அவனது சட்டையை வாசம் பிடித்துக்கொண்டே அவள் வினவ.. அவனது கரங்கள் அவளது தோளைத் தடவிப் படர்ந்தன..

" எங்கே.. என் முகத்தைப் பார்த்துச் சொல்லு.."

அவன் குரலில்.. அவள் முகம் பார்த்தவள்.. மயங்கிப் போனாள்..

" என்ன சொல்லவாம்..?"

" எனக்கா.. உன் நினைப்பில்லை. இருபத்தி நாலு மணி நேரமும் உன் நினைப்புத் தாண்டி.."

அவன் குனிந்து அவளது காதோரமாக இதைச் சொல்லும் போது அவனது மீசையின் ரோமங்கள் காதில் உராய.. இன்ப அவஸ்தைக்கு ஆளானாள் ரூபிணா..

" இருபத்தி நாலு மணி நேரமும் என் நினைப்பில் இருக்கிகறவரா இருந்தா.. இவ்வளவு லேட்டா வருவீங்களா..?"

" வேலையிருந்துச்சுடி.."

" என்னைவிட உங்களுக்கு வேலை பெரிசா தோணிருச்சா..?"

" உன்னை விட எனக்கு எதுவுமே பெரிசில்லை ரூபி.. உனக்கு இது தெரியாதா..?"

அவன் " ரூபி... என்று அழைத்ததும் அவள் கிறங்கி அவன் தோள் மேல் சாய்ந்து நின்றாள்..

அவனது தோள் வளைவில் முகம் புதைத்து அணைத்து நின்றவளால் விலக முடியவில்லை.. அவனது கைகள் அவளது உடல் மேல் பரவிப் படற ஆரம்பித்தபோது.. அவள் விழிப்பு வந்தவளாக விலக முயன்றாள்..

" ஏண்டி.." அவன் விட மறுத்தான்..

" சாப்பிட வேண்டாமா..?" அவள் கொஞ்சினாள்..

" உன்னிடம் இது ஒன்னு இருக்கு ரூபிணி.. எனக்காக பாகாய் உருகி கிட்டே வருவாய்.. நானும் உருகினால் விலகி விடுவாய்.. மனுசனைப் படுத்தற ரூபிணி.."

அவன் சலிப்பாகக் கூறினான்.. அவனது குரலில் ஏமாற்றத்தைக் கவனித்த ரூபிணி.. மீண்டும் அவன் அணைப்பில் புகுந்தாள்.. ஆவலுடன் அவள் மேல் படர்ந்த அவனது கைகளை அனுமதித்தாள்.. அவன் தாபத்துடன் அவளது இதழ் தேடிச் குனிந்தபோது விலகிக் கொள்ளாமல் நின்றாள்..

ஹரிஹரன் உடலில் உணர்வுகள் அலையலையாய் பொங்கின.. அவன் சட்டையைக் கூடக் கழட்டாமல் அவளோடு கட்டிலில் சரிந்தான்..

அவனது வேட்கை வெள்ளமாக பொங்கி எழ.. ரூபிணி அவனுக்குள் ஐக்கியமானாள்..

" தங்கம்டி நீ.."

அவள் நெற்றியில் முத்தமிட்டு.. அவன் விலகி மல்லாந்து படுத்தான்.. ரூபிணி புரண்டு அவன் மார்பில் தலை வைத்து கண் மூடிக் கொண்டாள்.. அவள் தலையில் சூடியிருந்த மலர்கள் உதிர்ந்து.. அவன் மார்பில் பரவிக் கிடந்தன..

" மஞ்சளிலே நீ கொடுத்தாய் மங்கலம்...

இந்த மஞ்சத்திலே நான் கொடுத்தேன்.. சங்கமம்..

நெஞ்சத்திலே பூசி விடும் சந்தனம்...

அதைக் கொஞ்சட்டுமே நீ கொடுத்த குங்குமம்.....

உன்னைத் தஞ்சமென்று தழுவிக் கொண்டது பெண் மனம்..

இனிக் கொஞ்சமல்ல.. கோடி கொள்ளும்.. உன் மனம்......."

அவள் மெல்லிய குரலில் பாடினாள்.. அதைப் போன்ற பாட்டை அதற்கு முன்னால் கேட்டிராத ஹரிஹரனுக்கு அந்தப்பாடல் ஓர்விதக் கிளர்ச்சியை உண்டு பண்ணியது..

" விளக்கேற்றி வைக்கிறேன்..

விடிய.. விடிய.. எரியட்டும்..

நடக்குப் போகும் நாள்களெல்லாம்

நல்லதாக நடக்கட்டும்.. நடக்கட்டும்.."

அவள் பாடி முடித்த போது.. அவன் வியப்புடன் கேட்டான்..

" எங்கேயிருந்துடி இவ்வளவு அழகான பாடல்களைப் பிடிக்கிற..?"

" எல்லாத்தையும் நமக்காக கொடுக்க ஒரு மன்னர் இருக்காரில்ல.."

" மன்னரா.?"

" ஆமாம்.. மெல்லிசை மன்னர்.."

" நீ அன்றைக்குப் பாடிய பாட்டுக் கூட இதைப் போலவே அழகா இருந்தது.."

" நான் அழகா இல்லையா..?"

அவள் கொஞ்சலாக கேட்டாள்..

" அழகி.. நீ பேரழகி.. என்னை மயக்கிப் பிழிகிற ராட்சஸ அழகிடி நீ.."

அவன் கட்டிக் கொண்டான்.. அவனது முடி கோதியபடி அவள் இறைஞ்சும் குரலில் கூறினாள்..

" சாப்பிடப் போகலாம்ங்க.."

" மெதுவாப் போகலாம்.."

" நாம சீக்கிரம் சாப்பிட்டு வேலையை முடிச்சாத்தானே மற்ற வேலையாள்களும் சாப்பிட்டுவிட்டு கிளம்ப முடியும்..?"

அவள் சொல்வதிலும் ஒரு அர்த்தம் இருப்பதை புரிந்து கொண்டவனாக அவன் எழுந்து கொண்டான்..

“ ஆமாமில்ல.. இரு.. குளிச்சுட்டு வர்றேன்..”

அவன் முகம் பார்த்துப் பரிமாறினாள் அவள்.. அன்றைய நிகழ்வுகளை அவளிடம் பேசியபடி அவன் சாப்பிட்டு முடித்தான்.. இரவு நேர தொலைக்காட்சி செய்திகளை அவன் பார்த்துக் கொண்டிருந்த போது அருகில் வந்து அமர்ந்த ரூபிணி அவளிடம் பால் தம்பளரை நீட்டடினாள்..

வாங்கிக் கொண்டவன்.. செய்திகளில் கவனமாக.. அதை ஒரே மூச்சில் காலி செய்து விட்டு அவளிடம் காலி தம்பளரை நீட்டினான்.. வாங்கிக் கொண்ட ரூபிணி நகர்ந்தாள்..

இரவின் நிசப்தத்தில்.. அவனிடம் பேச அவளுக்கு ஏராளமான செய்திகள் இருந்தன..

ஏஸியின் மெல்லிய விளக்கொளி அறையில் பரவியிருக்க அவர்கள் சங்கமித்த நெஞ்சங்களோடு ஒட்டி உறவாடினார்கள்.. விடியலின் அருகாமையில் அயர்ந்து தூங்கினார்கள்..

18

யாருக்கும் சொல்லாதே...

என் நெஞ்சமென்றும் உன்னிடம் தஞ்சம்...

“ சென்னைக்குப் போகனும் ரூபி..”

கழுத்து டையை சரி செய்தபடி கூறினான் ஹரிஹரன்..

அவனுடைய லேப் டாப்பை எடுத்து அவனது கைப்பையில் வைத்துக் கொண்டிருந்த ரூபிணி அவசரமாக நிமிர்ந்து பார்த்தாள்..

“ நானும் வருகிறேன்..”

“ நீ எதுக்குடி..?”

“ நான் எதுக்கா..? அந்த அளவுக்கு வந்து விட்டீங்களா..?”

அவள் கோபத்துடன் முகம் திருப்பிக் கொண்டு அமர்ந்து விட்டாள்.. சிறு குழந்தையைப் போல அவள் பிணங்குவதைக் கண்டவனுக்கு அவளது செய்கையைக் கண்டு வேடிக்கையாக இருந்தது..

டையை மறந்து.. மனைவியின் அருகில் அமர்ந்து அவளது முகம் திருப்பியவன்.. அவள் விழிகளுக்குள் பார்த்தான்..

“ இதோ இருக்கிற சென்னை.. காலையில் சீக்கிரமாய் கிளம்பிப் போனால்.. லேட் நைட்டில் திரும்பி விடப் போறேன்.. இதுக்குப் போய் இவ்வளவு பெரிய கேள்வியைக் கேட்கறியே..”

“ உங்களுக்கு அவ்வளவு ஈஸியாத் தோணுதில்ல..”

“ ஏய்ய்.. ச்சீ.. இது என்ன.. சின்னக் குழந்தையைப் போலக் கண்ணைக் கசக்கிகிட்டு..? கண்ணைத் துடை..”

“ இங்கேயானா.. காலையில் மெதுவாக் கிளம்பிப் போவீங்க.. மதியம் சாப்பிட வந்துடுவீங்க.. நைட்டில் சீக்கிரமாய் திரும்பிருவீங்க.. அதுக்கே உங்களைக் காணாம எனக்கு ஏக்கமாய் இருக்கும்..”

அவனுக்கு அவளின் உணர்வுகள் புரிந்தன..

“ இதில.. விடியறதுக்கு முன்னாலேயே கிளம்பிப் போயிட்டு.. மறுநாள் விடிகிற நேரத்தில் வருவேன்னு சொன்னா.. எப்படிங்க..?”

“ எப்படி..,?... என்று அவளது உள்ளம் தவிப்பதை அவளது குரல் எதிரொலித்தது..

“ நாள் பூராவும் உங்களைப் பார்க்கலைன்னு எனக்குப் பைத்தியமே பிடிச்சுரும்..”

அவன் மேல் அவள் பைத்தியமாக இருப்பதை வார்த்தைகளால் அவள் ஒப்புக் கொண்டபோது அவனது மனம் நெகிழ்ந்து விட்டது..

அவளது முடி கோதி.. அவள் முகத்தை கைகளில் ஏந்தி நெற்றியில் முத்தமிட்டான் " ரி" ரன்..

" உனக்கு இப்ப என்னடி வேணும்..?"

" பதில் தெரியனும்.."

" எதைப் பத்தி..?"

" அன்னைக்கு கோவில்பட்டிக்கு என்னைத் தனியா அனுப்பாதவர் இன்னைக்கு விழுப்புரத்தில தனியாய் இருக்க வச்சிட்டு சென்னைக்கு போக ஏன் நினைக்கிறார்..?"

" போடி பைத்தியம்.."

" அது தெரிந்த கதைதானே.."

" கோவில்பட்டி உன் பிறந்த ஊர்.. விழுப்புரம் என் ஊர்.. உன் பிறந்த வீட்டுக்கு உன்னைத் தனியாய் அனுப்ப மாட்டேன்னு சொன்னேன்.. என் ஊரில்.. என் வீட்டில்.. உன்னை இருக்க வைத்து விட்டு.. வேலை விசயமாய் வெளியே போகிறேன்னு சொல்கிறேன்.. இதுவும்.. அதுவும்.. ஒன்னா..?"

ரூபிணி பதில் சொல்லாமல் அவனுடைய சட்டை பொத்தான்களைத் திருகிக் கொண்டிருந்தாள்.. அவளது மனச் சிணுங்கல் அதில் வெளிப்பட்டது..

ஹரிஹரன் அவளது மோவாயைத் தூக்கி.. முகம் பார்த்தான்..

" என் தங்கமில்ல.."

" இல்லை.."

" என் வைரமில்ல.."

" இல்ல..."

“ என் செல்லமில்ல..”

“ இல்ல..”

“ என் பெண்டாட்டியில்ல..”

அதுவரை அவன் கேட்டதற்கு எல்லாம் இல்லை இல்லை என்று பதிலைச் சொல்லிக் கொண்டருந்தவள்.. இதற்கும் அந்த பதிலைச் சொல்ல முடியாமல் வாய் மூடிக் கொள்ள.. அவன் பலமாக சிரித்தான்..

“ இதுக்கு மட்டும் ஏண்டி பதிலைச் சொல்லாம.. ஊமையாகிட்ட..? மத்ததைப் போல சொல்ல வேண்டியதுதானே..”

அவனது சிரிப்பில் அவள் முகம் சிவந்து போனது.. அவள் கோபத்துடன் எழுந்து கொள்ள முயல.. அவன்.. அவளது கை பிடித்து இழுத்தான்.. அவள் அவன் மடியில் விழுந்தாள்.. அவனது கரங்கள் அவளைச் சுற்றி இறுக்கிக் கொண்டது..

அவள் காதோடு குனிந்து ரகசியம் பேசினான்.. ஹரிஹரன்.

“ சொன்னாக் கேட்கனும்..”

“ நான் சொன்னா நீங்க கேட்க மாட்டீங்களா..?”

“ என்மேல் உனக்கு ஆசையிருக்கா இல்லையா..?”

“ இதென்ன அபத்தமான கேள்வியைக் கேட்டுகிட்டு..”

“ பதிலைச் சொல்லுடி.. அபத்தத்தைப் பற்றி அப்புறமாய் பேசலாம்..”

“ கடலளவு இருக்கு..”

“ அப்புறம் ஏண்டி.. என் வேலைப் பளுவை புரிஞ்சுக்க மாட்டேன்கிற.. நான் ஒரு ஆள்.. எத்தனைத் தொழிலைப் பார்க்கனும்னு உனக்குத் தெரியுமா.. தெரியாதா..?”

அவன் கேள்வியில் அவள் திகைத்துப் போனாள்.. அவனுக்கான வேலைச் சுமைகளைப் பற்றி அவளுக்குத்

தெரியும் தானே..

“ தெரியும்..” என்று இழுத்தாள்..

“ ராகம் போடதே.. சரியாய் பதில் சொல்லு..”

“ தெரியும்ங்க..”

“ அப்புறம் ஏண்டி என்னைப் புரிஞ்சுக்காம பேசற..?”

“ உங்களை யார் தனியாய் இத்தனை சுமைகளையும் சுமக்கச் சொன்னது..?”

“ வாய் வார்த்தைகளில் மட்டும் கரிசனம் காட்டாம.. செயலில் அதைக் காண்பிக்கப் பாரு..”

“ எப்படி..”

“ காலாகாலத்தில் எனக்கு மகனைப் பெற்றுக் கொடு.. அவன் வந்து.. என் கடமைகளைக் குறைப்பான்..”

இப்போது ரூபிணியின் முகம் சிவந்து மலர்ந்து விட்டது.. அந்த இனிய மனநிலைமையில் அவளிருக்கும் போதே தன் கோரிக்கையை அவள் முன் வைத்தான் ஹரிஹரன்..

“ என்ன.. நாளைக்கு சென்னைக்கு போய் விட்டு வரவா..”

“ ம்ம்ம்..”

அவள் சம்மதித்து விட்டாள்.. அவன் ஆசுவாசமாகி சிரித்தான்..

“ அம்மாடி.. இந்த ஒரு முணுமுணுப்பை உன் வாயிலிருந்து வரவைக்க.. நான் என்ன பாடுபட வேண்டியிருக்கு..”

ரூபிணி மௌனமாக எழுந்து அவனருகில் வந்து அவன் டை முடிச்சைச் சரி செய்து விட்டாள்..

பாண்டிச்சேரி “ யூார்பரில் ஹரிஹரன் நின்று கொண்டிருந்த போது.. அவனது செல்போன் ஒலித்தது..

“ சொல்லுங்க ராம்..”

“ சார்..  சேட்டை பிடித்து விட்டோம்..”

“ சரி.. என்ன செய்யனுமோ.. அதைச் செய்து விடுங்க..”

போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு கடலைப் பார்த்தான்.. கடல் அலைகள் ஆர்ப்பரித்து சீற்றத்துடன் எழுந்து கரையில் மோதின..

“ பிரகாஷ்..”

“ சார்..”

“ ராம்கிட்டயிருந்து போன் வந்தது..”

“ என்ன சொன்னான் சார்..?”

“ சேட்டைப் பிடிச்சிட்டான்.. இனி ஆக வேண்டியதை பாருங்க.. எதுவும் மிஞ்சக் கூடாது..”

“ ஓகே சார்..”

மறுநாள் அதிகாலையில் ஹரிஹரன் சென்னைக்கு கிளம்பி போய்விட்டான்.. அவனில்லாத தனிமையைப் போக்க.. ரூபிணி டிவியின் முன்னால் அமர்ந்தாள்..

தொலைக்காட்சியின் செய்திச் சேனல் ஒளிர்ந்தது.. ரத்தகாயங்களுடன் இறந்து கிடந்த ஒருவனின் உடலைக் காட்டியது..

“ விழுப்புரத்தின் எல்லையில் பலத்த கத்திக் குத்துகளுடன் ஹீராலால் சேட் என்னும் வாலிபன் இறந்து கிடந்தான்.. போலீஸ் புலன் விசாரணை செய்கிறது..”

டீவியில் செய்தி வாசிப்பாளரின் குரல் ஒலிக்க.. ரூபிணி முகம் மாறினாள்..

19

சொன்னது நீ தானா…?

சுடர்கொடியே.. என் நெஞ்சதில் நீ…

அந்த ஹீராலால் சேட்டைப் பற்றிய விவரம் ரூபிணிக்கு ஓரளவு தெரியும்.. அவனை அவள் பார்த்ததில்லை.. ஆனால் அவனது பெயரைச் சொல்லி.. ஹரிஹரன் தன் உதவியாளர்களிடம் பேசியதை அவள் கேட்டிருந்தாள்.. அதிலிருந்து சில விவரங்களை கிரகித்து இருந்தாள்..

அன்றைய இரவில் அவளுக்குத் தூக்கம் வரவில்லை.. சிந்தனையுடன் இரவைக் கழித்தாள்.. விடிகிற நேரத்தில் ஹரிஹரன் வந்து விட்டான்.. காரிலிருந்து இறங்கும் போதே.. மாடியறையில் விளக்கெரிவதைப் பார்த்து விட்டான்..

“ தூங்காம எனக்காக காத்திருக்கிறா.....

அவனது உடலில் ஓர்விதமான பரபரப்பு உற்பத்தியானது.. அவனைத் தேடும் அவளது ஆவலைக் காண இரண்டிரண்டு படிகளால் தாவி ஏறி.. மாடியறைக்குள் நுழைந்தான்..

“ இன்னும் தூங்கலையா..?”

கிறக்கத்துடன் அவளைப் பார்த்தபடி அவன் நெருங்க.. அவள் பின் வாங்கினாள்..

“ தூக்கம் வரலை..”

“ ஏன்..?”

“ உன் நினைப்பில்தான்..... என்று அவள் சொல்வாள் என்ற கணிப்பில்.. அதைக் கேட்கும் ஆசையில் வினவினான் ஹரிஹரன்..

“ பல நினைப்பு..”

அவள் முகம் இருகியிருந்தது.. அவளது அந்தப் பதிலைக் கேட்ட ஹரிஹரன் பார்வை கூர்மையானது.. அவளது முக இறுக்கத்தை அப்போதுதான் அவன் கவனித்தான்.. அவனது புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது..

“ என்னடி..?”

அந்த ஒரு வார்த்தையில் ஓராயிரம் கேள்விகள் பொதிந்திருந்தன.. அது ரூபிணிக்கும் புரிந்திருந்தது..

இப்படிப்பட்ட ஒதுக்கமான மனநிலையில் அதற்கு முன்னால் அவளிருந்து.. அவன் பார்த்ததே இல்லை..

காதல் கொண்ட காலங்களில் மற்றவர்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு அவள் அவனுடன் பேச தயங்கினாலும்.. அவளது பார்வை அவனிடம் ஒட்டுதலையே காட்டும்.. ஒரு போதும் விலகலைக் காட்டியதில்லை..

அன்று அவளது பார்வை விலகலைக் காட்டியது.. அது ஹரிஹரனை மிகவும் பாதித்தது..

அது எதனால் என்ற கேள்வி பூதாகாரமாய் எழுந்து அவன் நெஞ்சில் நின்றது..

“ சொல்லுடி..”

“ ஹுராலால் சேட் என்று ரூபிணி ஆரம்பிக்க.. ஹரிஹரனுக்கு சட்டென்று விவரம் புரிந்து விட்டது..

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ரூபிணியின் விழிகள்அதைக் கண்டு பிடித்து விட்டன..

“ எவனோ ஒருத்தனைப் பற்றி.. நமக்கு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு..?”

“ அவன் எவனோ ஒருத்தனா..?”

“ ஆமாம்.. எவனோ ஒருத்தன்தான்.. பின்னே.. அவன் வேற யாரு..? எனக்கு சொந்தமா? இல்லை உனக்கு சொந்தமா..?”

“ உங்களுக்கு அவனைத் தெரியாதா..?”

“ நீயென்ன வக்கீலா? குறுக்கு விசாரணையெல்லாம் பலமா இருக்கு..”

“ நான் உங்க பெண்டாட்டி நினைவிருக்கா..”

“ நினைவிருக்கப் போய்த்தான்.. உன்னை பேச விட்டு.. வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கேன்.. இல்லைன்னா.. இந்த ஹரிஹரனின் முகம் பார்த்து ஒருத்தர் கேள்வி கேட்டுற முடியுமா..?”

“ இப்படியே.. எத்தனை நாள்தான் நீங்க அராஜகம் பண்ணுவீங்க..”

ஹரிஹரன் முகம் மாறியது.. கண்கள் தீப்பிழம்பாய் ஒளிர்ந்தன.. ரூபிணியின் தோளைப் பற்றி முரட்டுத்தனமாக உலுக்கினான்..

“ ஆமாண்டி.. நான் அராஜக்காரன்தான். இந்த அராஜகம் செய்கிறவனை ஏன் காதலிச்ச..?”

அவனது இரும்புப் பிடியில் ரூபிணியின் தோள்பட்டை வலித்தது.. அவளது விழிகளில் அந்த வலியைக் கண்ட ஹரிஹரன் பிடி தளர்ந்தது..

“ ஏண்டி என் கோபத்தைக் கிளப்புற..?” என்று ஆற்றாமையுடன் கேட்டான்..

“ ஏன்அவனைக் கொன்றீங்க..? ரூபிணியின் பார்வை ஹரிஹரனைத் துளைத்தது..

திரும்பவும் ரௌத்தரமான “ ரி” ரன். தன் கை முஷ்டியை மடக்கித் தன் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்தான்..

“ இதோ பார் ரூபிணி.. இருபது மணி நேரமாய்.. ஓய்வில்லாம வேலைபார்த்துட்டு வந்திருக்கேன்.. எனக்கு ரெஸ்ட் வேனும்.. நான் தூங்கனும்.. அதனால.. என்னைத் தொந்தரவு பண்ணாம வாயை மூடிக்கிட்டு இரு..”

அவன் வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் பேசினான்.. ஆனால் ரூபிணி அதை பொருட்படுத்தவே இல்லை..

“ என்ன வேலை செய்தீங்க..? அவனைக் கொல்கிற வேலையா..?” என்று கேட்டாள்..

அடுத்த நொடியில் ஹரிஹரன் கை அவளது கன்னத்தில் இடிபோல இறங்கியது..

அடியின் வேகத்தில் அறையின் மூலையில் போய் அவள் விழுந்தாள்.. அவளருகே குனிந்த ஹரிஹரன்.. ஒற்றை விரலைத் தூக்கி காட்டி அவளை எச்சரித்தான்..

" ஜாக்கிரதை.."

அதே வேகத்துடன் குளியலறைக்குள் புகுந்து விட்டான்.. உடை மாற்றி அவன் வெளியே வந்த போது.. ரூபிணி விழுந்த இடத்திலேயே. சுருண்டு கிடந்தாள்.. அவனுக்கு மனம் தாங்கவில்லை.. அவளருகில் சென்று தோள் தொட்டுத் திருப்பினான்.. கலைந்து கிடந்த அவள் முடியை கோதி சீர்படுத்தினான்..

" எழுந்திரு.. வா.. கட்டிலில் படு.." என்று கனிவாகக் கூறினான்..

வெறுப்புடன் அவன் கையை ரூபிணி தட்டி விட்டாள்.. ஹரிஹரன் முகத்தில் கடினம் மீண்டது..

" எழுந்திருன்னு சொன்னேன்.."

இப்போது அவன் குரல் கட்டளையாக ஒலிக்க.. அவள் அதை அலட்சியப் படுத்தினாள்..

" உன்னைத் தாண்டி சொல்கிறேன்.. எழுந்திரு.."

அவள் அசையவில்லை.. அவனுக்கு கோபம் பீறிட்டது.. அவளது இடுப்பில் கை கொடுத்து.. பலவந்தமாக அவளைத் தூக்கினான் அவள் திமிறினாள்.. அவன் அவளது திமிறலை லட்சியமே பண்ணவில்லை..

அவளை கட்டிலில் படுக்க வைத்து விட்டு.. அருகில் படுத்தவன் விளக்கை அணைத்தான்.. அவளது இடுப்பில் கை போட்டான்..

ரூபிணியின் உடலில் ஓர் அதிர்வு தோன்றியதை அவனால் உணர முடிந்தது.. அவன் மனம் அதிர்ந்தது..

அவன் தொட்டவுடனே அவள் உடலில் ஏற்படும் ரசாயன மாற்றத்தை அவன் நன்கு உணர்வான்..

இப்படிப்பட்டஅதிர்வை இப்போதுதான் அவன் அறிகிறான்.. அவனால் அதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை..

" ரூபி.. இங்கே பார்.. நான் சொல்கிறதைக் கேள்.."

அவளை அவன் பக்கமாகத் திருப்ப அவன் முயன்றான்.. அவள் மரவட்டையாய் சுருண்டு கொண்டாள்..

கட்டிலின் விளிம்பில் கிடந்தவளை தொந்தரவு செய்ய மனமின்றி கண் மூடிக் கொண்டான் ஹரிஹரன்..

அவனது மனதில் புயல் அடித்தது..

இதைப் போன்ற ஓர் விலகலை அவளிடமிருந்து அவன் எதிர்பார்க்கவில்லை.. இப்படியொரு அதிர்வை அவள் வெளிப்படுத்துவாள் என்று அவன் நினைத்தும் பார்த்தது இல்லை..

## 20

காற்றோடு தூதுவிட்டேன்...

காதலியே.. என்நெஞ்சத்தை சொன்னேன்..

காலையில் அவன் முகம் பார்க்காமல் காபிக் கோப்பையை நீட்டிய ரூபிணியின் கை தொட்டு நிறுத்த முயன்றான் ஹரிஹரன்..

அவள் விலகிச் சென்று விட்டாள்..

அவன் குளித்து விட்டு வந்த போது.. அவனுக்கான உடைகள் தயாராக இருந்தன.. ஆனால்.. அவள் மட்டும் அறையில் இல்லை..

அவள் துவட்டி விடாத ஈரத் தலையை தானே துவட்டிக் கொண்டான. அவள் முடி கோதாமல் தன் தலையை தானே

வாரிக் கொண்டான்..

அவள் போட்டுவிடாமல் தன் சட்டையை தானே போட்டுக் கொண்டான்.. அவள் திருகாத பொத்தான்களைப் பார்த்துக் கொண்டான்..

அவள் உதவியில்லாமல் தானே டையைக் கட்டிக் கொண்டவனுக்கு.. ஏனோ.. மனதில் பாரம் ஏறி அமர்ந்திருந்தது..

தாயின் உதவியில்லாமல் தானாகக் கிளம்பி.. பள்ளிக்குச் செல்லும் சிறுவனைப் போல அவன் தன்னை உணர்ந்தான்..

அத்தனை நாளாகத் தெரியாத தாயின் பிரிவு அன்று அவனுக்குத் தெரிந்தது..

அத்தனை நாளாக உணராத தந்தையின் நிழலில்லாத கொடுமையை அன்று அவன் உணர்ந்தான்..

கண்ணாடியில் தெரிந்த தன்னையே ஹரிஹரன் பார்த்துக் கொண்டான்..

" அராஜக்காரன்...

ரூபிணியின் குரல் அவன் மனதில் எதிரொலித்தது..

எவனைப் பார்த்த மாத்திரத்தில் பார்வையை விலக்கிக் கொள்ள முடியாமல் அவள் மயங்கி நிற்பாளோ.. அவனைப் பார்த்து அவள் சொன்ன வார்த்தை..

" அராஜகக்காரன்...

ஹரிஹரன் பெருமூச்சு விட்டான்..

எதற்காக அவளுக்கு அவன் மேல் இத்தனை கோபம் வந்தது என்று நினைத்துப் பார்த்தான்..

" நான் கத்தியெடுத்தவன் ரூபிணி..... தனக்குள் சொல்லிக் கொண்டான்..

" என்னால் கத்தியை கீழே போட முடியாது.. போடவும் விட மாட்டார்கள்.. நானென்ன ஆசைப்பட்டா கத்தியைத்

தூக்கினேன்? இது புலி மேல் சவாரி.. ஏறி விட்டேன்.. இனி இறங்க முடியாது.. இதை ரூபிணிக்கு எப்படி புரிய வைப்பேன்..?...

தளர்வாக மாடிப்படிகளில் இறங்கினான்.. யூலில் இருந்த தொலைக்காட்சியில் திரைப்பட பாடல் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது..

" உனக்கென்ன மேலே நின்றாய்..

ஓ.. நந்த லாலா..?

உனதாணை பாடுகின்றேன்..

நான் ரொம்ப நாளா..."

" யூல் சுவரில் மாட்டப்பட்டிருந்த குருஷேத்திர ஓவியத்தை பார்த்தபடி.. அசையாமல் நின்றான் ஹரிஹரன்..

பாரதப் போர் நடந்து கொண்டிருந்தது.. காண்டிபத்தை தூக்கி எறிந்து விட்டு தளர்ந்து அமர்ந்து விட்்ட அர்ஜீனனின் முன்னால் கிருஷ்ணன் விசுவரூபமெடுத்து நிற்கிறார்..

கைகூப்பி மனம் குமுறும் அர்ஜீனனுக்கு கீதோபதேசம் செய்கிறார்..

" செய்வது நீ...

செய்ய வைப்பது நான்.....

கடமையைப் புரிந்து கவலையை விடச் சொன்ன கண்ணனை இமைக்காமல் பார்த்தான் ஹரிஹரன்.

" ஆடாத மேடையில்லை..

போடாத வேசமில்லை..

சிந்தாத கண்ணீரில்லை....

சிரிப்புக்கும் பஞ்சமில்லை"

டைனிங் டேபிளில் அவன் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் தட்டை வைத்த ரூபிணியை பார்த்தபடி அமர்ந்தான் ஹரிஹரன்..

அவளது கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன..

“ ஏன் இத்தனை துயரப் படுகிறாள்..?... அவனது இதயம் பொங்கியது..

அவன் என்ன ராட்சஸனா..? அவளென்ன ஒரு ராட்சஸனுக்கு மனைவியாகிவிட்டாளா.? எதற்கு இப்படித் துக்கப்படுகிறாள்..

“ ரூபிணி.. நானாக எதையும் செய்யவில்லையடி.. இதைச் செய்யாமல் இருக்க என்னால் முடியாது.. அந்த “ë ராலால் சேட் நல்லவனில்லைடி.....

இதைச் சொன்னால் ரூபிணி என்ன சொல்வாள்..? “ அவன் நல்லவனா.. கெட்டவனான்னு தீர்மானிக்க நீங்க யாரு..?... என்று கேட்பாள்..

அவன் தீர்மானிக்க கூடாதுதான்.. ஆனால் அவனை அப்படிப்பட்ட தீர்மானங்களை எடுக்க வைத்தது யார்..?

“ கால் கொண்டு ஆடும் பிள்ளை..

நூல் கொண்டு ஆடும் பொம்மை.....

உன் கையில் அந்த நூலா...?

நீ சொல்லு.. நந்தலாலா......”

திரைப்படப் பாடலின் வரிகளை கண்ணனைப் பார்த்து மனதிற்குள் கேட்டுக்் கொண்டான் ஹரிஹரன்..

பாராமுகத்துடன் ரூபிணி தட்டில் வைத்த தோசையை வெறித்துப் பார்த்தான்.. அவனுக்குள்ளே இருந்த கோபக்கார ஹரிஹரன் கிளர்ந்து எழுந்தான்..

தட்டை தள்ளி விட்டு எழுந்து விட்டான் ஹரிஹரன்..

சாப்பிடாமல் அவன் வெளியேற.. ரூபிணி விக்கித்துப் போய் நின்று விட்டாள்..

யூலில் இருந்த கண்ணாடி ஷோகேஸை துடைத்து கொண்டிருந்த வள்ளி நிமிர்ந்து புதிருடன் பார்ப்பது அவளுக்கு புலப்பட்டது..

தோசை வார்த்துக் கொண்டிருந்த வனஜா சமையலறையில் இருந்து எட்டிப் பார்தததும் ரூபிணியின் கவனத்தில் பட்டது..

அவள் ஓர் நொடி அசைவற்று நின்றாள்.. அடுத்த நொடியில் வாசலுக்கு ஓடினாள். ஹரிஹரன் செல்போனில் பேசியபடி படி இறங்கிக் கொண்டிருந்தான்..

" கார்மேகம்.." என்று அழைத்தாள்..

தோட்டத்தில் இருந்த கார்மேகத்தின் காதுகளில் அவளது அழைப்பு விழ வாய்ப்பேயில்லை என்பது அவளுக்கு மிக நன்றாக தெரியும்..

அவளது எதிர்பார்ப்பின்படி கார்மேகத்திற்கு பதில்.. ஹரிஹரன் திரும்பிப் பார்த்தான்..

" சாப்பிட்டு விட்டு போகச் சொல்லுங்க கார்மேகம்.."

அங்கு இல்லாத கார்மேகத்திடம் சொன்னாள் அவள்.. ஹரிஹரன் பல்லைக் கடித்தான்..

" எதிரிக்கு போடறதைப் போல சாப்பாட்டைப் போட்டா மனுசன் சாப்பிடுவானான்னு கேளு கார்மேகம்.."

அவள் பாணியிலியே அவன் பதில் கொடுத்தான்..

" சிரிப்பும்.. பேச்சும்.. தானாய் வரனும்.. அதையும் துப்பாக்கிக் காட்டி வர வழைக்கக் கூடாது.."

ஹரிஹரனைப் பார்க்காமல் வேறு திக்கில் பார்த்தபடி ரூபிணி பேசினாள்..

" வீட்டிலே நான் துப்பாக்கியைத் தூக்கியதில்லை.. வீடை வீடாய்த்தான் வைத்திருக்கிறேன்.. வெளியில நடக்கிறதை வீட்டுக்குள்ள கொண்டு வந்து குழப்பறது யார்..?"

“ ஸோ.. வெளியே என்ன நடந்தாலும்.. அதை நான் கேட்கக் கூடாது..? அப்படித்தானே..?”

“ கேட்கலாம்.. என்ன நடந்ததுன்னு கேட்கலாம்.. எல்லாம் தெரிந்ததைப் போலப் பழிப் போடக்கூடாது..”

“ எது நடந்திருந்தாலும்.. ஒரு உயிரை எடுக்கிறது அதிகப்படியான ஒன்று.. அதைச் செய்ய நீங்கள் யார்..?”

கோபத்தின் வேகத்தில் அவனிடம் நேருக்கு நேராக மோதி விட்டாள் ரூபிணி..

21

என் நெஞ்சத்தை கொடுத்துத்தானே...

உன் நெஞ்சத்தை நானும் கேட்டேன்...

“ ஹரிஹரன்..,”

அவன் அழுத்தமாகப் பதில் சொன்னான்..

“ நான் ஹரிஹரன்.. எனக்கு எது சரியென்று படுகிறதோ.. அதைத்தான் நான் செய்வேன்.. இவனுக்கு இதுதான் என்று நான் தீர்மானித்து விட்டேன்.. அதைச் செய்தும் விட்டேன்..

“ நீங்கள் என்ன கடவுளா..”

“ கடவுளின் பிரதிநிதி..”

ஹரிஹரன் கோபத்துடன் கார் கதவை திறந்து ஏறி விட்டான்..

“ சாப்பிடாமல் போகிறானே..... மனம் பதைத்தாள் ரூபிணி..

அவள் தடுப்பதற்குள் கார் கிளம்பி பறந்து விட்டது.. ரூபிணி சோர்ந்து போனவளாக வாசல் படியில் அமர்ந்து விட்டாள்..

அவர்களுக்கு திருமணமான நாள் முதல் அன்று வரை அவன் அவள் கையில் சாப்பிடாமல் வெளியே போனதேயில்லை..

இத்தனைக்கும் அவனுக்கு விழுப்புரத்திலும்.. பாண்டிச்சேரியிலும் ெயுா£ டமீகŸ இருந்தன..

அத்துடன்.. அவன் திருமணத்திற்க்கு முன்னால் அவனுடைய ெயுா£ டமீகஙமீ தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்..

அவனுடைய வாழ்வில் மனைவியாக ரூபிணி நுழைந்த பின்னால் அவனது வழக்கம் மாறியிருந்தது.. எங்கேயிருந்தாலும்.. அவள் கையால் சாப்பிடுவதற்காக வீட்டிற்கு ஓடி வந்து விடுவான் அவன்..

அன்று வழக்கத்தை மறந்து அவன் போய் விட்டான்..

“ வெளியேவாவது சாப்பிடனுமே..... அவள்மனம் தவித்தாள்..

“ அம்மா.. என்னம்மா.. இங்கே உட்கார்ந்திருக்ங்கீங்க..?” வள்ளி ஓடி வந்தாள்..

காய் வாங்க வேண்டுமே என்ற நினைவுடன் வீட்டுப்பக்கம் வந்த கார்மேகத்தின் கண்களிலும் அதே கேள்வி இருந்தது..

“ கார்மேகம்..”

“ அம்மா..”

“ ஐயா சாப்பிடாமப்போகிறார்..”

“ ஏன்ம்மா..? சாப்பாடு ரெடியாகலையா..?”

கார்மேகத்தின் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் மௌனித்தாள் ரூபிணி..

அவளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த வள்ளி.. இரு கைகளின் ஆள் காட்டி விரல்களையும் கொக்கி போல ஆக்கி அதைப் பிணைத்துக் காட்டினாள்..

அதற்கு அர்த்தம்..” ஐயாவுக்கும். அம்மாவுக்கும் சண்டை..... என்பதாகும்..

கார்மேகம் ஆச்சரியத்துடண் ரூபிணியைப் பார்த்தான்..

அவள் மீது ஹரிஹரனுக்கு இருக்கும் ஆழ்ந்த காதலை அவன் அறிவான்..

கார்மேகம் ஹரிஹரன் வலது கை..

அதனால்தான்.. தன் திருமணத்திற்கு பின்னால்.. வீட்டிற்கு பாதுகாப்பாக இருக்க வேண்டிய முக்கிய பொறுப்பை கார் மேகத்தை நம்பி ஒப்படைத்திருக்கிறான் ஹரிஹரன்..

ரூபிணியின் பார்வைக்கு கார்மேகம்.. தோட்டக்காரன்.. தோட்ட வேலை இல்லாத சமயங்களில்.. வீட்டிற்குத் தேவையான காய்கள்.. மளிகை சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து தருபவன்..

ஆனால் உண்மையில் அவன் ரூபிணிக்கு பாதுகாவலாளி வேலையில் இருப்பவன்..

அதை ரூபிணி அறிய மாட்டாள்..

“ இது தெரிஞ்சா.. அவ பயப்படுவா..” என்றான் ஹரிஹரன்..

“ நம்மளைப் போல கத்தியைத் தூக்கியவங்களுக்கு எதிரி எல்லாத்திக்கிலயும் இருப்பாண்டா கார்மேகம்.. என்னைக் குறி வைப்பவன்.. ரூபிணியைத்தான் முதலில் குறி வைப்பான்.. அதனால் இருபத்தி நான்கு மணி நேரமும் வீட்டுக்கு காவலாய் நீ இரு..”

“ சரிங்கய்யா..”

“ ஜாக்கிரதை.. ரூபிணிக்கு உன் மேல் சந்தேகம் வந்து விடக் கூடாது.. நீ உன்னை வெளிக்படுத்திக்காதே..”

“ இதை நீங்க எனக்கு சொல்லனுமாய்யா..?”

ஹரிஹரன் சொல்லுக்கு கட்டுபட்டவன் கார்மேகம்.. மலையுச்சியில் இருந்து “ குதி..... என்று ஹரிஹரன் சொன்னால்  மறு வார்த்தை பேசாமல் குதிக்கக் கூடிய தன்னைமயுடையவன் அவன்..

வெள்ளை வேட்டி சட்டையுடன்.. மரியாதையான பார்வையுடன் அதிகம் பேசாமல் வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் கார்மேகம்.. ஒரே நேரத்தில் நூறு நபர்களை தன் கையில் அடித்தே கொன்று விடும் வல்லமை படைத்தவன் என்பது ரூபிணிக்கு தெரியாது..

“ இந்தாங்க கார்மேகம்.. செலவுக்கு வைத்துக்குங்க..” என்று ரூபிணி கொடுக்கும் சில நூறு ரூபாய்களை.. பவ்யமாய் வாங்கிக் கொள்ளும் கார்மேகத்தின் பெயரில் பாண்டிச்சேரியில் மிகப்பெரிய அடுக்கு மாடிக் கட்டிடமே இருக்கிறது என்பதை அவள் அறியாள்..

கார்மேகம் மட்டுமல்ல.. அந்த வீட்டின் கார் டிரைவராக பணியாற்றும் சோமு.. செக்யூரிட்டியாக வாசலைக் காவல் காக்கும் தாம்சன்.. இவர்களுக்கும்.. பாண்டிச்சேரியில் பெரிய வீடுகள் இருந்தன..

அவர்களும்.. ரூபிணியின் காவலுக்காக அமர்த்தப் பட்டிருந்தவர்கள்தான்..

அவர்களுக்கு ஹரிஹரன் வழங்கும் மாதச் சம்பளம்.. பல ஆயிரம் ரூபாய்கள்..

அதையறியாமல் ரூபிணி அவர்கள்மீது பரிதாபப்பட்டு அவர்களின் பிள்ளைகளுக்கு படிப்புக்கு பண உதவி செய்தாள்..

அந்தச் செய்தியை கேட்ட ஹரிஹரனுக்கு சிரிப்புதான் பொத்துக் கொண்டு வந்தது.. ஆனாலும்.. அவள் அதற்கு காரணம் கேட்பாள் என்பதால் சிரிப்பை அடக்கிக் கொண்டு பேசாமல் இருந்தான்..

சோமுவும்.. தாம்ஸனும் ஹரிஹரன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்றாலும்.. அவர்கள் இருவருமே கார்மேகத்தின் கீழே வேலை பார்ப்பவர்கள் தான்..

அவர்களைக் கட்டுப்படுத்தி ஆணை பிறப்பித்து வீட்டை பாதுகாப்பது கார்மேகம்தான்..

ஹரிஹரன் இல்லாத சமயங்களில் ரூபிணி கோவிலுக்குப் போவதாக இருந்தால்.. சோமுவிடம் காரை எடுக்கச் சொல்வாள்.. அப்போது.. கார்மேகம்.. முன் சீட்டில் அமர்ந்து கொள்வான்..

" நீங்க எதுக்கு கார்மேகம்..? ரூபிணி வியப்புடன் வினவுவாள்.."

" நீங்க கோவிலுக்குள்ள போயிட்டு வருகிற வரைக்கும்.. டிரைவருக்கு பேச்சுத் துணைக்கு ஆள் வேணுமாம்மா.."

கார்மேகத்திடம் அவளது கேள்விக்கான பதில் உடனுக்குடன் கிடைத்து விடும்..

" அப்படியா சோமு..?" ரூபிணி புருவம் உயர்த்தும்போது..

" ஆமாங்கம்மா.. " என்றுதானே சோமு சொல்லியாக வேண்டும்..?

அவன் அதையே சொல்வான்..

தன்னை நம்பாமல் கார்மேகம் கூட வருவதில் சோமுவுக்கு மனவருத்தம் உண்டு.. அதை கார்மேகத்திடம் அவன் வெளிப் படுத்தியபோது.. அவன் சோமுவின் தோளின் மீது கை போட்டான்..

" நான் ரோட்டில் கிடந்தப்போ.. என்னை ஆதரிச்சு ஆளாக்கினவரு நம்ம ஐயாடா.. எனக்கு ஒரு பெண்டாட்டியை கட்டி வைச்சு.. குடும்ப வாழ்க்கையை அடையாளம் காட்டின கடவுள்டா அவரு.. அவருக்கு ஒரு வாழ்க்கை அமையலயேன்னு என் மனசு கிடந்து அடிச்சுக்கும்.. எங்கேயிருந்தோ இந்தம்மா தேவதையைப் போல வந்தாங்க.. நம்ம ஐயா மேல உசிரா இருக்காங்க.. இவங்களைக் காவல் காக்கிற பொறுப்பை.. என்னை நம்பி ஐயா ஒப்படைச்சிருக்கார்.. இந்த விசயத்தில் .. நான்

என்னைத் தவிர.. வேற யாரையும் நம்ப மாட்டேண்டா சோமு.. நீ என்னைத் தப்பா எடுத்துக்காதே..

அப்படிப்பட்ட கார்மேகத்திடம்.. ரூபிணி.. தன் கவலையைக் கொட்டினாள்..

“ அவர் பட்டினியாய் போகிறார் கார்மேகம்..” ரூபிணி கண்ணீர் குரலில் கூறினாள்..

கார்மேகத்திற்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.. அவன் அதுவரை ஹரிஹரனை¥ பற்றி இப்படிப்பட்ட கவலைகளைப் பட்டதே இல்லை..

ஹரிஹரன்தா‹ மற்றவர்களை கவனித்து வந்தான்.. அவனைக் கவனிக்க வேண்டும் என்று நினைக்கக் கூட அவனது ஆள்கள் பயப்படுவார்கள்.. அந்த அளவுக்கு ஹரிஹரன் கம்பீரமானவன்..

“ கார்மேகம்.. சாப்பிட்டாயா..?” என்று ஹரிஹரன் தான் கேட்பான்..

“ இன்னும் இல்லைங்கய்யா..” கைகட்டியபடி பதில் சொல்வான் கார்மேகம்..

“ முதலில் சாப்பிட்டு வா..”

பணத்தை நீட்டுவான் ஹரிஹரன்.. அப்படிப்பட்ட ஹரிஹரÅ ட« ் “ நீங்க சாப்பிட்டு விட்டீங்களா... என்று கேட்கும் துணிச்சல் யாருக்கும் வந்ததில்லை..

ஆனால்.. ரூபிணி கவலைப் படுகிறாள்.. அவர் பட்டினியாய் போகிறாரே என்று கண்ணீர் விடுகிறாள்.. அவளது துக்கத்தைக் காண கார்மேகத்திற்கு சகிக்கவில்லை..

“ எதுக்கும்மா கவலைப்படறீங்க.. சாப்பாட்டை டிபனில் போட்டுக் குடுங்க..” என்று யோசனை சொன்னான்..

“ ஐயாகிட்ட நீ கொண்டு போய் கொடுத்து விடுகிறாயா..? அவள் முகம் மலர்ந்தாள்..

“ நானா..?”

அடாது மழை பெய்தாலும் விடாது கடமையைச் செய்கிற காவாலாளியாயிற்றே அவன்.. அவனா நகருவான்..?

“ சோமுகிட்ட கொடுத்து விடலாம்மா..” என்றான்..

“ அதுவும் சரிதான்..” ரூபிணி உள்ளே ஓடினாள்..

சற்று நேரத்தில் ஹரிஹரனுகான காலை உணவை சுமந்து கொண்டு கார் வெளியேறியது..

“ இன்ியாவது சாப்பிடுங்கம்மா..”

வனஜா வலுக்கட்டாயமாக தோசையைத் தட்டில் வைத்துச் சாப்பிடச் சொன்னாள்.. அவளுடைய வற்புறுத்தலுக்காக ரூபிணி ஒரு துண்டை எடுத்து சாம்பாரில் தோய்த்து வாயில் வைக்கப் போனாள்.. ஏனோ அவளுக்கு குமட்டிக் கொண்டு வந்தது..

“ உவ்வே..” என்ற சத்தத்துடன் வாஷ்பேஷினுக்கு அருகே ஓடினாள்..

“ என்னாச்சும்மா? ..”

வள்ளி ஓடிவந்து ரூபிணியின் தலையைப் பிடித்தாள்..

பதறி ஓடிவந்த வனஜாவை முறைத்தாள்..

“ ஏன் வனஜா.. சாம்பாரைச் சாப்பிட்டதும் அம்மா வாந்தியெடுக்கறாங்களே.. என்னத்தை பண்ணி தொலைச்சே.. “ என்று வேறு விசாரித்து.. வனஜாவின் வயிற்றில் புளியை கரைத்தாள்..

“ அடிப்பாவி.. என் சமையலைச் சாப்பிடுத்தான் அம்மா வாந்தியெடுக்கிறாங்கன்னு நீ முடிவே பண்ணிட்டயா..? இந்தக் கையில் சமைச்சுப் போட்டா எட்டூருக்கு மனக்கும்டி..”

“ அந்தப் பெருமையை விடு.. நடப்புக்கு வா.. அம்மா எப்படி வாந்தி எடுக்கிறாங்க..”

அதட்டி அவர்களை வாயை மூடவைக்கும் தெம்பில் ரூபிணி இல்லாததால்.. அவர்கள் அடித்துக் கொள்ளாத

குறையாக வழக்கடித்துக் கொண்டிருக்கையில்.. கார் திரும்பி வந்தது..

" அம்மா.." சாப்பாட்டு டிபனுடன் சோமு உள்ளே வந்தான்..

" என்ன..?... என்று பார்வையிலேயே கேட்டாள் ரூபிணி..

" ஐயா சாப்பிடலைம்மா.."

ஹரிஹரனை¢ சாப்பிட வைக்க முடியவில்லையே.. என்ற குற்ற உணர்வுடன் சோமு கூறிக் கொண்டிருந்த போது.. நிற்க முடியாமல் ரூபிணி மயங்கிச் சரிந்தாள்..

" அம்மா.."

வனஜாவும்.. வள்ளியும் அவள் தரையில் விழு முன்னர் தாங்கிப் பிடித்துக் கொண்டனர்..

ரூபிணியை அவர்கள் சோபாவில் படுக்க வைத்துக் கொண்டிருந்த போது.. கார் மேகத்திடமிருந்து ஹரிஹரனுக்கு போன் பறந்தது..

" ஐயா.."

" சொல்லு கார்மேகம்.."

" அம்மா மயக்கம் போட்டுட்டாங்கய்யா.."

மறுநொடியில் போன் துண்டிக்கப் பட்டது.. கார்மேகத்திற்கு தெரியும் அடுத்த சில நிமிடங்களில் ஹரிஹரன் வந்து விடுவான் என்பது..

" தாம்ஸன்.. வாசல் கதவை திறந்து வை.."

" எதுக்குப்பா.."

" இப்ப ஐயா வந்திடுவார்.."

" உனக்கென்ன ஜோஸியமா தெரியும்..?"

" ஆமாம்ன்னுதான் வைத்துக்கேயேன்.."

கார்மேகத்தின் ஜோஸியம் உண்மையானது.. புயல் வேகத்தில் ஹரிஹரன் கார் தெரு முனையில் திரும்புவதைக் கண்ட தாம்ஸன்.. அலறியடித்துக் கொண்டு கதவைத் திறந்தான்..

ஹரிஹரன் காரிலிருந்து இறங்கி.. ஒரே தாவில் படிகளைக் கடந்து வீட்டிற்குள் போனான்..

சோபாவில் மயங்கிக் கிடந்த ரூபிணியின் தலை மாட்டில் அமர்ந்து.. அவள் முகத்தில் ஈரத் துணியால் துடைத்து விட்டு.. எழுப்ப முயன்று கொண்டிருந்த வள்ளியும். வனஜாவும்.. அவனைக் கண்டதும் அவசரமாக எழுந்து நின்றார்கள்..

“ ரூபி.. ரூபி..” அவள் கன்னத்தை தட்டி.... அவளை சுய உணர்வுக்கு கொண்டு வர முயன்றான் ஹரிஹரன்..

அவள் கண் விழிக்கவில்லை..

“ என்ன ஆச்சு..?”

வள்ளியையும்.. வனஜாவையும் பார்த்துக் கேட்டான் அவன்.. அவர்கள் கைகளைப் பிசைந்தார்கள்..

“ ஐயா.. அம்மா இவ வைச்ச சாம்பாரைச் சாப்பிட்டுத்தான் வாந்தி எடுத்தாங்க..” வள்ளி ஆரம்பித்து வைக்க.

“ ஐயையோ.. “ என்று வனஜா அலறினாள்..

“ ஐயா.. இதை நம்பாதீங்க.. அம்மா ஒருவாய் கூடச் சாப்பிடலைங்க.. சாப்பிட உட்கார்ந்தவங்க.. வாந்தி எடுக்க ஆரம்பிச்சுட்டாங்க..”

வனஜா தந்நிலை விளக்கம் கொடுக்க.. வள்ளி அதிலும் ஒரு குற்றத்தை கண்டு பிடித்தாள்..

“ வெறும் வாசத்தைப் பிடிச்சே.. அவங்க வாந்தி எடுக்க ஆரம்பிச்சுட்டாங்கன்னா சொல்ற..? அப்ப.. நீ வச்ச சாம்பாரின் லட்சணம் எப்படியிருக்கும்..?”

வனஜாவினால் வள்ளியின் பேச்சை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை..

“ ஐயா.. இத்தனை நாளா சமைக்கிறேன்.. இது வரைக்கும் ஒரு குறையாவது நீங்க கண்டிருக்கீங்களா..?

ஹரிஹரன் திருமணத்திற்கு முன்பு.. பெண்களை வீட்டு வேலைக்கு வைத்துக் கொண்டதில்லை..

தூங்க மட்டுமே வீட்டைத் தேடி வருபவன் அவன்.. சாப்பாட்டு வேலைகளெல்லாம் ெயுா£ டÈ லெயெ முடித்து விடுவதால்.. வீட்டைப் பராமரிக்க ராமையா என்றவரை வேலையில் வைத்திருந்தான்..

திருமணத்திற்கு பின்பு.. ரூபிணியின் வசதிக்காக வள்ளியையும்.. வனஜாவையும்.. வேலையில் அமர்த்தினான்.. ராமையாவை கல்லூரி யுா° டலு¡ கு மாற்றி விட்டான்..

அதனால்.. அந்தப் பெண்களின் வழக்கைத் தீர்க்க அவனால் முடியவில்லை..

எதுவும் பேசாமல்.. ரூபிணியைக் கைகளில் வாரிக் கொண்டவன் காருக்கு விரைந்தான்.. கார்மேகம் அவசரமாக கார் கதவைத் திறக்க.. பின் சீட்டில் அமர்ந்து.. அவன் மடியில் ரூபிணியைப் படுக்க வைத்துக் கொண்டான்..

“ காரை எடு கார்மேகம்.. நீ வீட்டைப் பார்த்துக்க சோமு..”

கார்மேகம்.. காற்றை விட விரைவாக காரை ஓட்டினான்..

22

என் நெஞ்சத்தை வைத்துக்கொண்டு...

உன் நெஞ்சத்தை எனக்குக்கொடு...

ஹரிஹரனைக் குளிர்விக்கும் வார்த்தைகளைச் சொல்லப் போகிற மகிழ்ச்சி.. அந்த லேடி டாக்டரின் முகத்தில் தாண்டவமாடியது..

“ நீங்க அப்பாவாகப் போறீங்க சார்.. உங்க மிஸஸ் கன்சீவ் ஆகியிருக்காங்க..”

சோர்வுடன் அவன் தோள் மேல் தலைசாய்த்திருந்த ரூபிணியைச் சுற்றி வளைத்திருந்த அவனது கரங்கள் அவள் மேல் இறுக்கமாகப் பதிந்தன..

“ தேக்ங்ஸ் டாக்டர்.. இவ இப்படி சோர்ந்து கிடக்கிறாளே..”

“ தாய்மை அடைகிறதுன்னா சும்மாவா..? இவங்களுக்குன்னு இல்லை.. தாய்டையடைகிற எல்லாப் பெண்களும் இதைச் சந்திச்சுத்தான் ஆகனும்.. ஆறு மாத காலம் வரைக்கும்.. வாந்தியும் மயக்கமும் இருக்கத்தான் செய்யும்..”

“ இவ தாங்குவாளா..?”

“ நீங்க தாங்க வைக்கனும்..”

“ புரியலை..”

“ அவங்களுக்கு மன ரீதியான சக்தியைக் கொடுங்க.. அவங்க மனசைப் பாதிக்கிறதைப் போல பேசாதீங்க.. செய்யாதீங்க.. ஒரு கண்ணாடிப் பாத்திரத்தை கையாள்கிறதைப் போல கவனமாய் இவங்களை கையாளுங்க..”

“ ஓ கே டாக்டர்..”

ரூபிணியைத் தாங்கிப் பிடித்தபடி மருத்துவ மனையை விட்டு வெளியே வந்தான் ஹரிஹரன்..

காத்திருந்த கார்மேகத்தின் முகத்தில் ரூபிணியின் உடல் நிலையைப் பற்றிய கவலை தெரியவும்.. அவனை சமாதானப் படுத்தும் விதத்தில் புன்னகைத்தான்..

“ ஒன்றுமில்லை போல.....

கார்மேகம் நிம்மதியுடன் கார் கதவைத் திறந்து விட்டான்.. ரூபிணியை அமரவைத்து.. அருகில் அமர்ந்த ஹரிஹரன்.. அவளைத் தனது தோளில் சாய்த்துக் கொண்டான்.. கார் கிளம்பியது..

“ கார்மேகம்..”

“ ஐயா..”

“ நம்மகிட்ட வேலை பார்க்கிற எல்லோருக்கும் புதுத் துணி எடுத்துக் கொடுக்க ஏற்பாடு பண்ணு.. கூடவே இனிப்புகளையும் பழங்களையும் ஒரு கவரில் போட்டுக் கொடுக்கச் சொல்லு..”

“ என்னங்கய்யா விசேசம்..”

ஹரிஹரன் குரலில் தென்பட்ட உற்சாகத்தைக் கவனித்தபடி கார்மேகம் ஆவலுடன் கேட்டான்..

“ என் மகன் வரப் போகிறாண்டா..”

“ ம்ம்ம்.. அதுக்குத்தான் வாந்தியும் .. தலை சுத்தலுமா இருந்திருக்கா..”

“ அது தெரியாம.. வனஜாவை இந்த வள்ளி ஒரு வழி பண்ணிட்டா..”

“ என்கிட்டேயும் வழக்கு வந்தது..”

“ வனஜாவின் சாம்பாரைக் குற்றம் சொல்லிட்டா..”

“ செம ஜோக்.. ஹா.. ஹா..”

காலையில் இறுகிய முகத்துடன் சாப்பிடாமல் வீட்டை விட்டுச் சென்ற ஹரிஹரன் முகம் கார்மேகத்தின் நினைவில் வந்தது..

இப்போதைய ஹரிஹரன் உற்சாகத்தை மன நெகிழ்ச்சியுடன் முன்னாலிருந்த கண்ணாடியின் வழியாகப் பார்த்தான் அவன்..

கார் வீட்டுக் காம்பவுண்டிற்குள் நுழைந்ததுமே.. வள்ளி ஆவலாய் ஓடி வந்தாள்..

“ டாக்டர் என்னங்கய்யா சொன்னாரு..? சாப்பாடு சரியில்லைன்னுதானே சொன்னாரு..”

“ உனக்கு அதிலதான் எத்தனை நம்பிக்கை..” கார் மேகம் தலையில் அடித்துக் கொண்டான்..

“ சாம்பாரில் என்ன கோளாரு வந்திருக்கும்ன்னு கேட்க வந்தா இப்படிக் கோவிச்சுக்கறீங்களே..” வள்ளி மனத்தாங்கலுடன் சொன்னாள்..

“ நீ முதல்ல வழியை விட்டு விலகி நில்லு..” காாமேகம் அதட்டினான்..

ரூபிணியை அழைத்துக் கொண்டு ஹரிஹரன் மாடியேறினான். பாதி வழியில் திரும்பி வனஜாவைப் பார்த்தவன்..

“ இவ சாப்பிட்டாளா..?” என்று கேட்டான்..

“ ஆமாங்கய்யா..” என்று வள்ளி இடையில் குரல் கொடுக்க..

“ இல்லலைங்கய்யா..” என்றாள் வனஜா..

“ எனக்கும்.. இவளுக்கும்.. மாடிக்கு டிபனை எடுத்துக்கிட்டு வா.. “ ஹரிஹரன் படியேறி விட்டான்..

தனது சாப்பாட்டில் ஒரு குறையுமில்லை என்று நிருபணமாகி விட்டதால் நிம்மதியுடன் வனஜா ஹரிஹரனுக்கு« ரூபிணிக்கும் யுா£ ் பாக்ஸில் தோசைகளை வார்த்து அடுக்க ஆரம்பிக்க.. கார்மேகத்திடம் நியாயம் கேட்டாள் வள்ளி..

“ ஏங்க..”

என்னமோ.. கட்டின கணவனை அழைப்பதைப் போல அவள் கொஞ்சலுடன் அழைக்கவும்..

“ என்னங்க..? என்று பதிலுக்கு கேலியாக வினவினான் கார்மேகம்..

“ இவ வைச்ச சாம்பாராலேதான் இத்தனை வினையும்..”

“ அப்படிங்களா..?”

“ இதைச் தெரிஞ்சப்புறமும்.. அந்தச சாம்பாரையையே சாப்பிடக் கொண்டு வரச் சொல்லி நம்ம ஐயா சொல்லாமுங்களா..?”

“ தாராளமாச் சொல்லாமுங்க..”

“ நீங்களே இப்படிச் சொன்னா எப்படிங்க..?”

“ நானேன்னு எந்தக் கணக்கில் சொல்கிறீங்க..?”

“ நீங்க நல்லவங்க.. வல்லவங்க.. நாலும் தெரிஞ்சவங்க..”

“ இதைப் பாரு.. நம்மப்பத்தி இம்புட்டுத் தெரிஞ்சு வைச்சிருக்கீங்க.. இத்தனையை தெரிஞ்சவங்க ஒன்னைத் தெரிஞ்சுக்காம பேரியட்டீங்களே..”

“ என்னவாம்..?”

“ அம்மா வாந்தியெடுத்து மயக்கம் போட்டதுக்கு வனஜா வைச்ச சாம்பார் காரணமில்லையாம்ங்க.. டாக்டரம்மா வேற சொன்னாங்க..”

“ நீங்க சரியாக் கேட்டிருக்க மாட்டிங்க..”

“ எனக்கு காது செவிடில்லைங்க..”

“ அப்படி என்னத்தை சொல்லிப்புட்டாங்க..?”

“ ஐயாவுக்கு மகன் பொறக்கப் போகிறாருங்க.. அதனால அம்மாவுக்கு மசக்கை வந்து வாந்தி எடுத்திருக்கிறாங்க..”

வள்ளியின் பாணியிலேயே பேசிக் கொண்டு வந்த கார்மேகம் சொல்லியதைக் கேட்டதும்.. வனஜா சந்தோசப் பட்டுப் போனாள்..

“ நிசமாத்தான் சொல்கிறீங்களா.. “ என்று கேட்டாள்..

“ நிஜம்தான் வனஜா.. ஐயாகிட்ட வேலை பார்க்கிற எல்லோருக்கும் புதுத்துணியும்.. இனிப்பும்.. பழங்களும் வாங்கிக் கொடுக்கச் சொல்லி ஐயா சொல்லியிருக்கிறார்.. உனக்கும் அது உண்டு.. வள்ளி உனக்கும் சேர்த்துதான் கிடைக்கும்..”

வள்ளிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.. அவள் பேந்தப் பேந்த வழித்தாள்..

“ இனியாவது என் சமையலைப் பத்தி நொட்டனை சொல்லாம சாப்பிட்டுப் பழகு.. செஞ்சு வைக்கிறதை முழுங்கிறதில் ஒன்னும் குறைச்சல் இல்ல.. ஆனா ஐஞ்சு நிமிசத்தில் என் மேல பழி போட முத ஆளா கிளம்பிட்டயே..”

வள்ளியை சாடிவிட்டுத்தான் வனஜா மாடியேறினாள்..

ரூபிணியைக் கட்டிலில் படுக்க வைத்து அருகில் அமாந்து தலை கோதிக் கொண்டிருந்த ஹரிஹரன்.. அறையின் அழைப்பு மணியின் ஒலியைக் கேட்டதும் அவசரமாக எழுந்தான்..

வனஜாவிடமிருந்து ஹாட் பாக்ஸையும்.. தட்டுக் களையும் வாங்கிக் கொண்ட ஹரிஹரன் கதவை சாத்தி விட்டான்..

ரூபிணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வனஜாவுக்கு.. ஹரிஹரன் கதவைச் சாத்தி விட்டதால் ஏமாற்றத்துடன் அவள் போய் விட்டாள்..

கண்மூடிப் படுத்திருந்த ரூபிணியின் கன்னத்தில் விரல்களால் தட்டி எழுப்பினான் ஹரிஹரன்..

“ ரூபி.. எழுந்திரு..”

“ ம்ம்ம்..”

“ கொஞ்சமாய் சாப்பிடுடி..”

அவள் தளர்வாக எழுந்து அமாந்து கொண்டாள்.. ஹரிஹரன் தோசையை விண்டு.. அவளுக்கு ஊட்ட

ஆரம்பித்தான்.. அவனையே பார்த்தபடி.. மறுக்காமல் சாப்பிட்டாள் ரூபிணி..

“ நீங்க..? “ அவளது கேள்வியில் இறைஞ்சல் இருந்தது..

“ இதோ..” அவளது கன்னம் தட்டிய ஹரிஹரன் அவள் முன்னாலேயே சாப்பிட ஆரம்பித்தான்..

23

நான் வெல்ல முடியாதவன்…

என் நெஞ்சத்தை.. எப்படிவென்றாய்…

“ அந்த ஆள் பாவம்.. அப்பாவிடி.. தானுண்டு.. தன் வேலையுண்டுன்னு இருக்கிற மனுசன்..”

கட்டிலின் தலைப் பகுதியில் தலையணைகளை நிமிர்த்திப் போட்டு அதில் முதுகைச் சாய்த்து அமாந்து.. கால்களை நீட்டியிருந்தான் ஹரிஹரன்..

ரூபிணி அவன் மடியில் தலைவைத்து சுருண்டு படுத்திருந்தாள்.. அவளது விரல்களோடு.. விரல்களைப் பிணைத்தும்.. பிரித்தும் விளையாடியபடி ஹரிஹரன் பேச.. ரூபிணி கேட்டுக்கொண்டிருந்தாள்..

“ ம்ம்ம்..”

“ இந்த ஹீராலால் விழுப்புரத்திற்கு வந்து நகைக் கடையை ஆரம்பிச்சு ஒரு வருசம்தான் ஆகுது.. அந்த மனுசனின் பொண்ணு இவனோட நகைக்கடையில் வேலை பார்த்திருக்கு..”

“ ம்ம்ம்..”

“ இவனுக்கு பொம்பளைப் பித்து இருந்திருக்கு.. அதை வெளியே தெரியாம மறைச்சு வைச்சிருக்கான்..”

“ ம்ம்ம்…”

“ அந்தப் பொண்ணு பாவம்.. வயசில சின்னப் பொண்ணு.. ப்ளஸ் டூ முடிச்சதும் காலேஜீக்குப் போக வசதியில்லாம. குடும்ப கஷ்டத்துக்காக வேலைக்கு போன பெண்ணாம்..”

“ ம்த்சு..”

“ அந்த நாயின் பார்வையில் இந்தப் பொண்ணு பட்டுத் தொலைச்சிருக்கு..”

“ கடவுளே..”

“ அவன் இந்தப் பொண்ணுகிட்ட ஆசை வார்த்தை பேசியிருக்கான்.. இந்தப் பொண்ணு மசியலை...”

“ ம்ம்ம்..”

“ காசு பணத்தைக் காட்டியிருக்கான்.. போடான்னு வேலையை விட்டு நின்னுருச்சு..”

“ அதுதான் சரி..”

“ ஆனா.. அவன் சரியில்லாதவன் ஆச்சே..”

“ என்ன ஆச்சு..?”

“ இந்தப் பொண்ணு வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க முடியுமா..?”

“ அதெப்படி முடியும்..?”

“ டெய்லரிங் தெரிஞ்ச பொண்ணு.. நம்ம கார்மென்ட் கம்பெனியில வேலைக்கு சேர்ந்திருச்சு..”

“ நம்மகிட்ட வேலை பார்க்கிற பெண்ணா..?” ரூபிணி கோபத்துடன் வினவினாள்..

அது உடமைக்காரியின் கோபம்.. என் வேலையாட்கள் என் பொறுப்பு.. என்ற உரிமையுணர்வில் எழுந்த கோபம்..

“ வேலை பார்த்த பெண்ணுன்னு சொல்லு..” ஹரிஹரனின் முகம் கடினமாக மாறிவிட்டது..

“ அப்படின்னா.. ?” ரூபிணிக்கு புரியவில்லை..

“ அந்தப் பெண் இப்ப உயிரோடு இல்லை..”

“ மைகாட்.. ஏன்..?”

“ ஏனா ..? கசப்புடன் கேட்டான் ஹரிஹரன்.

“ வேலை முடிஞ்சு திரும்பின பெண்ணை.. ஆளில்லாத ரோட்டில்.. வழிமறிச்சு.. காரில் தூக்கிப் போட்டுக் கிட்டுப் போயிட்டான் இந்தப் பொறுக்கி..”

“ யார்..? அந்த ஹீராலால் சேட்டா..?”

“ அவனேதான்.. அந்தப பெண் வீட்டுக்கு வரலைன்னு நம்ம கம்பெனிக்கு தகவல் வந்தது. என் ஆள்களை அனுப்பி தேட விட்டேன்.. ஊரைத் தாண்டிக் காட்டுக்குள் அவள் பிணமாய் கிடைத்தாள்..”

ரூபிணி பேச்சிழந்தாள்..

சில நாட்களாக.. ஹரிஹரன் “ ஹீராலால் சேட் என்பவனைத் தேடச் சொல்லி.. போனில் பேசிக் கொண்டிருந்ததை அவள் கேட்டிருந்தாள்..

“ அவன் பெயர் ஹீராலால் சேட்..”

“ என்னை யாருன்னு நினைச்சான்..?”

“ என்கிட்டயே இவன் வாலாட்டுகிறானாமா..?”

“ எங்கிருந்தோ வந்த நாய்..”

“ யாரு ஊாரில் வந்து.. யாரு வேலையைக் காட்டறது..”

“ இந்த ஹரிஹரனைப் பத்தி அவனுக்குத் தெரியலை..”

“ அவன் இந்த உலகத்தின் எந்த மூலைக்குப் போனாலும் தேடிப் பிடிங்க..”

இப்படிப்பட்ட வார்த்தைகளை கோபமாய் ஹரிஹரன் கூறுவதைக் கேட்டிருந்த ரூபிணி.. டிவியில் “ ஹீராலால் சேட் என்ற பெயரைக் கேட்டதும்.. சட்டென்று அவனது

கொலையில் ஹரிஹரன் சம்மந்தப் பட்டிருப்பதை கண்டு கொண்டு விட்டாள்..

" கற்பழிச்சு கொலை பண்ணிப் போட்டுட்டு.. யாருக்கும் தெரியாதுன்னு கடையைத் திறக்க வந்திட்டான் ராஸ்கல்.."

" அவன்தான்னு எப்படிக் கண்டு பிடிச்சீங்க.."

" அவன் காருக்குள்ள அவ இருந்ததை ரோட்டில் போன சில பேர் பார்த்திருக்காங்க.. இது ஹரிஹரனின் ஏரியா ரூபிணி.. எனக்குத் தெரியாமல் எதையும் மறைத்து விட முடியாது.."

" பாவி.."

" படுபாவி.. ஒரு பெண்ணுக்கு இப்படிப்பட்ட கொடுமையைப் பண்ணி விட்டு.. வெளியே தெரியக் கூடாதுன்னு அவளைக் கொலையும் பண்ணியிருக்கானே.. இவனை என்ன செய்கிறது..? கண்டத் துண்டமாய் வெட்டி.. நாய்க்கும்.. நரிக்கும் இரையாகப் போடனுமா.. வேணாமா..?"

அவனது குரலில் தென்பட்ட வன்முறையைக் கேட்கக்கூடச் சகிக்கவில்லை ரூபிணிக்கு.. அதே சமயம் அவனது கோபத்திற்கும் குறையாத தார்மீக கோபம்.. அவள் மனதில் தீயாகக் கனன்றது..

" பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ

பயங்கொள்ள லாகாது பாப்பா

மோதி மிதித்து விடு பாப்பா - அவர்

முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா.....

பாரதி உயிரோடு இருந்திருந்தால்.. ஹரிஹரன் கொடுத்த அதே தண்டனையைத்தான் கொடுத்திருப்பானோ..?

ஆமாம் என்றே ரூபிணிக்குத் தோன்றியது..

“ அவனைக் கண்டு பிடிச்சுட்டோம்கிற செய்தியை அவன் மோப்பம் பிடிச்சு.. தலை மறைவாகிட்டான்.. நாங்க தேடினோம்.. ஹைதராபாத்தில் மாட்டினான்..”

“ விழுப்புரத்தில் அவனுடைய டெட்பாடி கிடைத்ததே..”

“ எந்த இடத்தில் அந்தப் பெண்ணின் பிணம் கிடந்ததோ.. அந்த இடத்திற்கு அவனைக் கொண்டு வந்து கொல்லச் சொன்னேன்..”

ரூபிணி பேசவில்லை.. கனத்த மௌனம்.. இரும்புப் போர்வையாக அவர்கள் மேல் கவிந்தது..

அந்த மௌனத்தை விலக்கும் சக்தி ரூபிணிக்கு இல்லை.. ஆனால் ஹரிஹரன் இரும்பு மனிதன் ஆயிற்றே..

இரும்புப் போர்வை அவனை என்ன செய்து விடும்..?

அவன் எளிதாக மௌனத்தை உடைத்தான்..

“ எனக்கு இதுதான் சரின்னு பட்டுச்சு ரூபிணி.. அவனை என்ன செய்ய முடியும்ன்னு நீ நினைக்கிற..? போலீஸில் பிடித்துக் கொடுத்தால் எளிதாக அவன் கேஸை உடைத்துவிட்டு வெளியே வருவான்.. அவன்தான் செய்தான்னு எல்லோருக்குமே தெரியும்.. ஆனால் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியை கோர்ட் கேட்கும்.. அந்தப் பெண்ணை கொலை செய்ததற்கு கூட என்னால் சாட்சி ரெடி பணிணிவிட முடியும்.. அதற்கு முதலில் வன் கொலையாய் அவளை கற்பழித்திருக்கிறானே.. அதுக்கு சாட்சி ரெடி பண்ணச் சொன்னால்.. நான் என்ன செய்வது..?”

பெண்ணென்று ஏன் பூமியில் பிறந்தோம் என்று நொந்து போனாள் ரூபிணி..

ஒரு பாடலில் வருமே..

“ வேட்டையாடும் மானானேன்..... என்று அதைப் போல.. வேட்டையாடப்படும் போகப் பொருள் தான் ஒரு பெண்ணின் உடலா..?

அது தாய்மையானது.. கருணை வடிவமானது.. அதை ஏன் எந்தக் காமுகனும் உணர்வதில்லை..?

“ பாதிக்கபட்டவளை அவன் கொன்று விட்டான்.. அவனை என் ஆள்கள் கொன்று விட்டார்கள்.. எனக்கு இதுதான் நீதி.. என் ஊரில் இதுதான் நான் வைத்திருக்கும் சட்டம்... அந்தப் பெண்ணின் ஆத்மா சாந்தியடையனும்ன்னா.. நான் இதைச் செய்துதான் ஆகனும்.. உனக்குத் தெரியுமா..? அந்தப் பெண் போனதிலிருந்து அவளுடைய குடும்பத்தார் பச்சைத் தண்ணியைக் கூடக் குடிக்கவில்லை.. இந்த நாயை கொன்று போட்ட பின்னால் தான் அவங்க தண்ணியைக் குடிச்சாங்க..”

இறந்தவர்களைவிட.. அவர்களின் சொந்தங்களாக உயிரோடு இருப்பவர்கள் தினம் தினம் துக்கத்தில் சாகிறார்கள்.. இது கொடுமை..

24

நெஞ்சத்திலே குடிவந்தும்...

என்காதலையா சந்தேகித்தாய்...?

“ போலீஸ் என்கவுண்டரும் இதே வேலையைத்தான் செய்யுது.. அதே வேலையைத்தான் நானும் செய்தேன்.. இது அராஜகம்ன்னா.. நான் அராஜகக்காரன்தான்..

ரூபிணி அவன் மடியில் இறுக்கமாக முகம் புதைந்தாள்.. அவளது கண்ணீர் அவன் மடியை நனைத்தது..

“ ம்த்சு.. அழக்கூடாது..”

“ தெரியாமல் பேசிட்டேன்..”

" இதையெல்லாம் தெரிஞ்சுக்காதேன்னுதான் நான் சொல்கிறேன்.. என் உலகமே வேறு ரூபிணி.."

" ஆனா.. என் உலகம் நீங்கதானே.."

" நிச்சயமாய்.. உனக்கு நான் எல்லாமுமாக இருப்பேன்.. உன் காதலனாய்.. உன் கணவனாய்.. உனக்கு மட்டும் சொந்தமானவனாய்.. நீ நினைக்கிற உன் ஆண்மகனாக நானிருப்பேன் ரூபிணி.. ஆனா.. என் நிழலை நீ ஆராய முனையாதே.."

" நான் வேணும்ன்னு செய்யலை.."

" நானும் நீ இதைச் செய்யக் கூடாதுங்கிறதுக்காக சொல்லலை.. உன் மனசு பூ மனசு.. இதையெல்லாம் நீ தாங்கிக்க மாட்டாய்... நான் பதினைந்து வயதிலேயே போராட ஆரம்பித்தவன்.. என்னைச்சுற்றி நடக்கும் வன் முறை என்னைப் பாதிக்காது.. உன்னை பாதிக்கும்.. நீ என் மேல் மட்டும் நம்பிக்கை வை ரூபி.."

" நான் உங்களை நம்பவில்லைன்னா நினைக்கறீங்க..?"

" நான் அநியாயம் செய்கிறேன்னு நினைத்துவிட்ட.."

" இல்லை.. இது.. அப்படி இல்லை.."

" உன்னால் என்னை வெறுக்க முடியாதுடி.. எனக்கு அது தெரியும்.. ஆனா.. என் செய்கையில் நீ குற்றம் கண்டு பிடித்தால் மனசுக்குள் நொந்து போவாய்.. உன்னிடம் அன்றைக்கு நான் சொல்லியிருக்கிறேன். என் கண் முன்னால் என்னைப் பெற்றவர்களை ஒரு ரெளடி கொன்றான்.. அன்று பட்ட என் மனத்துயரத்தை இன்று வரை நான் அனுபவித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.. அந்த மன வலியும்.. மன வேதனையும் எனக்குத் தெரியும்.."

" வேண்டாம்.. பழசை நினைக்காதீங்க.."

" முடியலைடி.. அந்தப் பெண்ணைச் சேர்ந்தவங்க பரிதவிச்சு கதறிய போது.. அவங்க இடத்தில்.. என்னை நான் கண்டேன் ரூபிணி.. அன்றைக்கு என்னைப்

பெத்தவங்க சாவுக்கு நியாயம் கிடைக்கனும்னு நான் போராடலையா..?

இன்றைக்கு அந்தப் பெண்ணின் சாவுக்கு நியாயம் கிடைக்க வைக்கலேன்னா இந்த ஹரிஹரன் கத்தியைத் தூக்கியதற்கு அர்த்தம் என்ன இருக்கு..?”

“ ஹரி..”

“ இது ஹரிஹரனின் ஏரியா.. என் எல்லைக்குள் எந்த கொடுமையும் நடக்க விடாமல் நான் காத்து வைத்திருக்கிறேன் .. போன வருசம் வந்த நாய் இந்த ஊரின் புனிதத்தை கெடுத்திடுச்சு.. அதைச் சும்மா விடலாமா..?”

“ போதும் ஹரி.. வேற பேசுங்க..”

ரூபிணி கெஞ்சினாள்.. ஒரு வழியாக தன் ரௌத்திரத்திலிருந்து வெளியே வந்தான் ஹரிஹரன்..

“ நீ கன்சீவ் ஆகியிருக்கே.. இப்ப எதையும் நீ மனசில் போட்டு உழட்டிக்க் கூடாது.. என்னைப் பற்றி எல்லாம் தெரிஞ்சும் என்னைக் காதலிச்சு .. கல்யாணம் பண்ணிக்கிட்டவ நீ.. உன் மனசில் என்னைப் பத்தி ஒரு தப்பான அபிப்ராயம் நேத்து வந்திருச்சு.. அது மாறனும்கிறதுக்காகத்தான் நான் நடந்ததையெல்லாம் உன்கிட்டச் சொன்னேன்.. அதுக்காக.. அதையே நினைச்சுக்கிட்டு இருக்கக் கூடாது..:

“ ம்ம்ம்..”

“ என் மகன் உன் வயிற்றில் இருக்கான்..”

இதுவரை மறந்திருந்த அந்த நினைவு மனதில் வர ரூபிணியின் முகம் மென்மையானது..

“ நான் நினைச்சே பார்க்கலை..”

“ யாரை..? என்னயா..?”

“ ச்சீ.. மறந்தால்தானே.. உங்களை நினைக்க..”

" இதைப் பாருடா.. என் முகம் பார்த்துக் கூடச் சாப்பாடு போட மாட்டாளாம்.. இவ என்னை மறக்காமல் நினைச்சுக்கிட்டே  இருந்தாளாம்.. கதை சொல்கிறா..."

" நான் சொல்கிறது கதையா..?"

" சண்டைக்கு வருகிறாயா.."

" உங்க கூட சண்டை போட என்னால் முடியுமா..? நீங்க யாரு..?"

" உன் புருசன்.."

ஊரையெல்லாம் தன் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கும் வல்லமை படைத்த ராஜாவாக இருந்தாலும் உன் கணவன் என்று நெற்றியடியாய் பதில் சொல்லி விட்டான்...

ரூபிணி கிளர்ந்து அவன் மடியினில் முகம் புதைத்தாள்.. இரண்டு நாள்களாக அவள் காட்டிய பாராமுகத்தால் உன்மத்தம் பிடித்தவனைப் போல ஆகியிருந்த ஹரிஹரனுக்குŸ உணர்வலைகள் பொங்கின.. அவளை இறுக்கிக் கொள்ள அவன் முனைந்த போது அவளது உடல் நிலை குறித்த எண்ணம் மனதில் வர.. தன்னைக் கட்டுப் படுத்திக் கொணடான்..

அவனது இறுக்கமான நெருக்கத்தை எதிர்பார்த்து முகம் சிவக்க விழிமூடிக் கொண்டிருந்த ரூபிணி.. எதிர்பார்த்தது  நிகழாததால் விழி திறந்து அவன் முகம் பார்த்தாள்..

அவள் முகத்தில் கேள்வி இருந்தது.. அது ஹரிஹரனுக்கு புரிந்தது.. அவன் மெல்லச் சிரித்து விட்டு அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான்..

பூவிதழைப் போல அவளது நெற்றியில் படிந்து அவன் உதடுகள் விலக. ரூபிணி ஏமாற்றமடைந்தாள்..

அது ஹரிஹரன் வழக்கமாக கொடுக்கும் முத்தமல்ல..

அவனுக்கு மென்மையைத் தெரியாது.. வன்மையாகத்தான் அவளை கையாள்வான்.. அவன் கிளர்ந்து விட்டால் அவள் புயலில் சிக்கிய பூங்கொடியைப் போல் ஆகிவிடுவாள்..

அப்படிப்பட்ட வேகக்காரன் காட்டிய நிதானம் அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தது..

“ என்னடி..?”

அவனது கேள்வி கேட்கும் பார்வையை உணர்ந்த ஹரிஹரன் கேள்வி கேட்டான்..

“ அதைத்தான் நானும் கேட்கிறேன்.. என்னாச்சு...?”

அவள் எதைக் கேட்கிறாள் என்பதை ஹரிஹரனா புரிந்து கொள்ள மாட்டான்..

“ டாக்டர் சொன்னதை மறந்துட்டியா..?”

“ என்ன சொன்னாங்க..?”

“ ஒரு கண்ணாடிப் பாத்திரத்தைக கையாள்வதைப் போல.. உன்னைக் கையாளனும்ன்னு சொன்னாங்க..”

ரூபிணி பதில் சொல்லவில்லை.. பேச்சை மாற்றினாள்..

“ இன்னைக்கு ஐயா எங்கே ஊர் சுற்றப் போகிறாராம்..?”

“ இனி உன்னை விட்டுட்டு எங்கேயும் போகிறதாயில்லை..”

“ ஏனாம்..? மகன் வரப் போகிறான்னு அக்கறையா..?”

“ அப்படியில்லை.. இந்த ஒரு நாள் உன்னைவிட்டுவிட்டு போய் விட்டு வந்ததற்கே இவ்வளவு பெரிய இடைவெளி நமக்குள் வரப் பார்த்தது.. இனிமேல் இந்த விஷப் பரிட்சைக்கு நான் தயாராக இல்லை..”

“ தோடா.. ஊரே இவரைப் பார்த்து பயப்படுது.. இவர் என் கோபத்தைப் பார்த்து பயப்படுகிறாராம் .. நம்பவா

முடியுது..?”

ஹரிஹரன் குனிந்து ரூபிணியின் முகத்தோடு முகம் வைத்துத் தேய்த்தான்.. ரூபிணி கண்மூடி அந்த உணர்வலைகளில் திளைத்து எழுந்தாள்..

“ நம்புடி.. எனக்கு யாரைப் பார்த்தும் பயமில்லை.. எதுக்கும் நான் அஞ்ச மாட்டேன்.. ஆனா.. நீ முகம் திருப்பினா தாங்க மாட்டேன்..”

ரூபிணி பேச்சிழந்தாள்.. அவனைக் கண்ட நாள் முதல் இந்த நாள் வரை அவன் காட்டிக் கொண்டிருந்த அபரிதமான காதலின் சக்தியில் அவள் கட்டுண்டாள்.. அவனது அதீதமான காதலின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டாள்..

“ இப்படிப்பட்டஅன்புக்கு பாத்திரமாக நான் என்ன தவம் செய்தேன்..?... என்று மெய் சிலிர்த்துப் போனாள்..

இவனா தாதா? இவனா வன்முறையாளன்..? இவனா எல்லோரும் பயப்படுகிற அடையாளத்தை உடையவன்..? இல்லை.. இவன் மனிதன்.. இவன் காதலன்.. இவன் மிகச் சிறந்த கணவன்.. இவனின் காதலைப் பெற்றது ரூபிணி பெற்ற வரம்..

25

நெஞ்சத்தில் நேற்றுவந்தாய்...

தஞ்சத்தினை எனக்களித்தாய்...

உறக்கமின்றி கழித்த இரண்டு இரவுகளின் தாக்கத்தினாலும் மனப் போராட்டம் நீங்கி மனம் இறகைப் போல லேசாகி விட்டதாலும்.. தாய்மையின் மசக்கை தந்த அயர்வினாலும்.. அன்று இரவு ரூபிணி அயர்ந்து தூங்கினாள்..

ஊடே அவளுக்கு விழிப்பு வந்து விட புரண்டு படுத்து அருகில் பார்த்தாள்.. அவளருகே ஹரிஹரன் இல்லை..

“ எங்கே போய் விட்டான்..?...

கட்டிலில் எழுந்து அமர்ந்து சுற்றும் முற்றும் பார்த்தாள்..

அவளைத் தனியாக விட்டுவிட்டு அவன் எங்கேயும் போக மாட்டான்.. அப்படிப் போக வேண்டிய வேலை வந்திருந்தாலும் அவளிடம் சொல்லாமல் அவன் போக மாட்டான்.. இது அவளுக்கு சர்வ நிச்சயமாகத் தெரியும்..

“ பாத்ரூமில் இருக்கிறானோ.....

உடைமாற்றும் அறைக்குள் இருந்த பாத்ரூமின் கதவைப் போய் பார்த்தாள்.. அது வெளிப் புறமாக தாழிடப் பட்டிருந்தது..

“ முன் பக்க ரூமில் இருக்கிறானோ.....

அவர்களது படுக்கையறை.. பெரிதாக பிரம்மாண்டமாக இருக்கும்.. முதலில் இருக்கும் அறையில் ஹரிஹரன் லேப்டாப் மற்றும் கண்ணாடி ஷோகேஸில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அவனது தொழில் சம்மந்தமான பைல்கள் போன்றவை இருக்கும்..

பெரிய.. சொகுசான சோபாக்கள் போட்பட்டிருக்கும் அந்த அறை.. ஏறக்குறைய ஹரிஹரனுக்கு அலுவலக அறை..

அவனுடைய தொழில் சம்மந்தமாக வீட்டில் பார்க்க வேண்டிய வேலைகள் அனைத்தையும் அந்த ரூமில் அமர்ந்துதான் அவன் பார்ப்பான்.. அப்போதும் அவனுக்கு.... ரூபிணி பக்கத்து சோபாவில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க வேண்டும்..

“ நான் பேசினா உங்களுக்கு டிஸ்டர்ப்பா இருக்காதா..?”

“ நீ பேசலேன்னாதான் நான் டிஸ்டர்ப் ஆவேன்..”

அவன் கண்சிமிட்டுவான்.. அதில் உள்ள அர்த்தத்தை புரிந்து கொண்டவள் முகம் சிவப்பாள்..

“ பேசிக்கிட்டே எப்படி வேலை பார்ப்பீங்க..?”

“ இந்த வேலைக்கு பேச்சு தடையில்லை..”

வேறு எந்த வேலைக்குப் பேச்சு தடையாக இருக்கும்..? என்று ரூபிணி கேட்க மாட்டாளா..

அவளுக்கே அது புரியும்.. லஜ்ஜையுடன் அவள் உதட்டைக் கடித்துக் கொள்ள.. அதற்கு மேல் அவனுக்கு வேலை ஓடாது.. எழுந்து விடுவான்..

“ என்ன..?”

அவள் விழிகள் மின்ன.. அறியாதவளைப் போல வினவுவாள்..

அவனோ வேட்கையுடன் அவளை நெருங்குவான்..

“ என்னன்னு சொல்றேன்.. வா..”

அவனில்லாத முன்னறையைப் பார்த்தபொழுது .. அவளுக்கு அந்த ஞாபகங்கள் வந்தன..

“ இங்கேயும் இல்லையே.....

முன்னறையை அடுத்திருந்த விசாலமான அறையில் மிகப் பெரிய கட்டில்கள் போடப்பட்டிருந்தன.. அந்த அறையை ஒட்டிய அறையும் பெரியதே..

சுவர் மர அலமாரிகள் பதிக்கப்பட்டு.. ஆளுயுயர கண்ணாடியும்.. அதற்கான மர அறைகளும் நடு நாயகமாக பதிக்கப் பட்டிருந்த அந்த அறை.. உடை மாற்றும் அறை..

அதையொட்டியதுதான்குளியலறை..”

அங்கேதான் அவனில்லையே.....

ரூபிணியின் விழிகள் .. படுக்கையறையின் முன்புறமாக இருந்த பால்கனின் கதவை நோக்கின.. அது மூடியிருந்தது ஆனால்.. உள்பக்கமாக தாழிடப் படாமல் இருந்தது..

“ பால்கனியில் இருக்கிறான்.....

ரூபிணி நிம்மதியடைந்தாள்.. பால்கனிக் கதவை திறந்து பார்த்தாள்.. அந்த அகன்ற பால்கனியில் ஹரிஹரன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான்..

“ இந்தக் குளிரிலா.....

ரூபிணி அவன் முன்னால் போய் நிற்கவும்.. அவனது நடை நின்றது.. அவசரமாக அவளது கன்னத்தை தொட்டான்..

“ உள்ளே போ ரூபிணி.. பனிக்காற்று அடிக்குது..”

“ அடிச்சா என்ன..?”

“ உன் உடம்புக்கு ஆகாது..”

“ உங்க உடம்புக்கு மட்டும் ஆகுமா..?”

“ ஏய்ய்.. உன் கன்னம் ஜில்லிட்டுப் போச்சுடி..”

“ என் கன்னம் ஒன்னும் ஜில்லுன்னு இல்லை.. உங்க கைதான் ஜில்லுன்னு இருக்கு...”

ரூபிணி அவனது கைகளைப் பிடித்து உள்ளங் கைகளையும் தன் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்..

சட்டென்று ஹரிஹரன் அவனுடைய கைகளை உறுவிக் கொண்டான்.. அவளுக்கு முதுகு காட்டி நின்றபடி ...

“ உள்ளே போடி..” என்றான்..

“ அதை என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்க..”

“ உள்ளே போன்னு சொன்னேன்..”

“ ்நீங்களும் வாங்க.. போகலாம்..”

“ நான் அப்புறமாய் வருகிறேன்..”

“ எப்ப..?”

“ கொஞ்ச நேரம் கழித்து..”

“ அதுவரைக்கும் இங்கே என்ன வேலை..?”

“ உள்ளே புழுக்கமாக இருக்கு..”

இப்படிச் சொன்னவனை விசித்திரமாகப் பார்த்தாள் ரூபிணி.. மார்கழி மாதக் குளிரில் புழுக்கமாக இருக்கிறதா..?

“ புழுக்கம்.. உடம்பிலா.. மனசிலா..?”

“ த்சு…”

“ மார்கழியில் புழுங்குதுன்னு சொன்ன முதல் ஆள் நீங்கதான்..”

“ நீ போய் படு..”

“ அப்படியே புழுங்கினாலும்.. ரூமில் ஏஸி இருக்கு.. அதைப் போட்டுக்க வேண்டியதுதானே..”

“ இயற்கைக் குளிர் இருக்கிறப்போ.. செயற்கை குளிர் எதுக்கு..?”

“ இதைச் சொல்லித்தான் நான் ரூமில் இருக்கிற ஜன்னல்களைத் திறந்து வைச்சிருக்கேன்.. கொடைக்கானல் மலையில் இருக்கிறதைப் போல குளிர் ரூமெல்லாம் நிறைச்சிருக்கு..”

அவனது ஒவ்வொரு காரணத்தையும் ரூபிணி உடைக்க.. அவன் எரிச்சல் பட்டான்..

“ என்னடி நினைச்சுக்கிட்டு இருக்கே..?”

“ உங்களைத்தான்…”

இந்தப் பதில் ஏதோ ஒரு வகையில் அவனை பாதிப்புக்கு உள்ளாக்குவதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.. அவன் கோபத்துடன் வார்த்தைகளை வீசினான்..

“ நீ உன் லிமிட்டைத் தாண்டறே ரூபிணி..”

“ எனக்கு லிமிட்டே இல்லைங்க..”

“ யார் சொன்னது..?”

“ நீங்கதான் சொன்னீங்க.. மறந்துட்டிங்களா..?”

“ இப்ப நான் சொல்றேன்.. போய் படு..”

“ நீங்களும் வாங்க..”

“ நான் வர நேரமாகும்..”

“ அப்போ.. அதுவரைக்கும் நானும் இங்கே இருக்கேன்..”

“ வேண்டாம் ரூபிணி.. என் கோபத்தைக் கிளப்பாதே..”

“ எது வேண்டாம்..? நானா..?”

அவன் அவளை முறைத்தான்.. அவனது பார்வையில் அனல் வீசுவதை அந்த நிலா வெளிச்சத்தில் தெளிவாகக் கண்டாள் ரூபிணி..

மங்கிய நிலவொளியில் அவள் தேவதையைப் போல் தெரிய தாகத்துடன் அவளைப் பார்த்துதான் ஹரிஹரன்..

“ போய் விடு ரூபிணி..”

“ நீங்களும் வாங்கன்னு சொல்லிட்டேன்..”

“ கொஞ்ச நேரம் நடந்து கொடுத்து விட்டு  வருகிறேன் ..”

“ நேத்து நைட் ஒன்னும் ஹெவியான  சாப்பாடில்லை... அது ஜீரணமாகலைன்னா   இப்படி நடக்கறீங்க..?”

“ நடக்கிறதுக்கு கூட உன்னிடம் காரணம் சொல்லனுமா?”

“ இதுக்கு முன்னால் நீங்க இப்படிக் கேட்டதேயில்லை.. நான் கேட்காமலேயே காரணம் சொல்லியிருக்கீங்க..”

“ எல்லாத்துக்கும் உனக்கு விளக்கம் சொல்லனும்னு எனக்கொன்னும் அவசியமில்லை.. போ.. போய் படு..”

அவள் போகவில்லை.. மாறாக அவனை நெருங்கினாள்.. அவனது தோள் மீது கைகளை மாலையாக்கி அவன் முகம் பார்த்தாள்..

இது நெஞ்சமடி நெஞ்சம்…

உன்னிடம் சங்கமித்த நெஞ்சம்…

மார்கழிக்  குளிர்காற்று அவர்களது உடலை குளுமையாகத் தழுவிக் கொண்டிருந்தது.. நிலா வெளிச்சம் அவர்களைச் சுற்றி இதமான ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தது..

நிலவின் ஒளியில் ஹரிஹரனை ஊடுறிவிப் பார்த்தாள் ரூபிணி..

பார்வையிலேயே அவனது மனத்தைப் படிக்க முயல.. அவன் அவளது கைகளை விலக்கி.. முகம் திருப்பி நின்று கொண்டான்.. அவன் தோள்பற்றி தன் பக்கம் திருப்பினாள் ரூபிணி. அவனுக்குள் ஓர் இறுக்கம் ஏற்படுவதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

அவனை நெருங்கி.. அவன் தோள் மீது தலை சாய்த்து காதோடு கிசுகிசுப்பான குரலில் வினவினாள்..

“ டாக்டர்.. கண்ணாடிப் பாத்திரத்தை கையாள்வதைப் போலக் கையாளனும்ன்னு தான் சொல்லியிருக்காங்க. கையாளவே வேணாம்ன்னு சொல்லலியே..”

அவள் சொன்னதம் அர்த்தம் அவனுக்கு பிடிபட.. அவன் கிளர்ந்து அவள் தோள் பற்றினான்..

“ ஏய்ய்….”

“ எனக்கு  உங்களைத் தெரியாதா..? இப்படி விடிய.. விடிய நடந்தால் எல்லாம் சரியாகி விடுமா..? எத்தனை நாளைக்கு இப்படியே நடப்பீங்க..?”

“ நீ என்ன நினைத்துக் கொள்வாயோன்னு தான்…”

அந்த வல்லவனுக்கும் பேச்சு வராமல் வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக் கொள்ளும் என்பதை அன்றுதான் அறிந்தாள் ரூபிணி..

வாய் மூடி " க்ளுக்... கென்று சிரித்தாள்..

அவன் முகத்தில் லஜ்ஜை வந்திருந்தது..

" ஏய்ய்.. போக்கிரி..." என்று அவள் காதைத் திருகினான்..

" ம்ஹீம்.. நானெல்ாலாம் போக்கிரியாகிறேன்.. போக்கிரியாய் இருக்க வேண்டியவர்.. மார்கழிக்குளிரில் விடிய.. விடிய.. நடை பழகுகிறார்.. எல்லாம் நேரம் தான்.."

" உன்னை...,..."

அவளுடன் ஒட்டி உராய வழி கிடைத்து விட்ட சந்தோசத்தில் அவளை அலாக்காக கைகளில் அலுங்காமல் குழுங்காமல் தூக்கிக் கொண்டான் ஹரிஹரன்..

அவன் கழுத்தில் கை கோர்த்து.. அவன் முகத்தோடு முகம் வைத்துக் கொண்டவள்..

" பால்கனிக் கதவை யார் மூடறது..? " என்று ரகசியமாய் பெசினாள்..

" ம்ஹீம்.. காதோடு கிசுகிசுக்கிறாளே.. என்ன சொல்லப் போகிறாளோன்னு " ஜிவ்வுன்னு ... ஆகிக் காது கொடுத்துக் கேட்டா கதவை மூடச் சொல்கிறா.."

அவன் போலியாய் அலுத்துக் கொண்டபடி.. அவளை மென்மையாக கட்டிலில் கிடத்தி விட்டு.. கதவை மூடித் தாழிட்டான்.. அவளை நெருங்கினான்..

அப்போதும் அவளைத் தொட அவன் தயங்க.. அவள் அவனை இழுத்துக் கொண்டாள்..

" கதவை மூடச் சொன்னது.. தள்ளி நிற்கிறதுக்காக இல்லை.."

" கிளப்பி விடாதேடி.."

" கிளம்புங்கன்னு நான் சொல்கிறேன்.."

" ஒன்னும் ஆகாதில்ல.."

“ எதுவும் ஆகாது..”

“ ரூபி..”

அவன் தாகத்துடன் அவளை நெருங்கினான்.. ஒரு மலரைப் போல அவளைத் தொட்டான்.. கலந்தான்..

“ தேங்க்ஸ்டி..: என்று விலகியவன்.. அடுத்த சில நொடிகளில் அயர்ந்து உறங்கி விட்டான்..

தூக்கம் பறந்து போனவளாக தூங்கிக் கொண்டிருந்தவனின் முகம் பார்த்த ரூபிணி மனம் நெகிழ்ந்து போனாள்..

இவனது தேவை இதுதான்.. முதலிலேயே இது கிடைத்திருந்தால் இந்நேரம்.. இரண்டு தூக்கம் போட்டிருப்பான்..

இருந்தும் அவன் அவளைக் கேட்கவில்லை.. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள.. மார்கழிக் குளிரில்.. பால்கனியில் நடந்து கொண்டிருக்கிறான்.. இவன் முரடனாம்.. கோபக்காரனாம்..

ரூபிணியின் மனம் இளகியது.. அவன்முடி கோதி மென்மையாக அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் அவள்..

“ ம்ம்ம்..”

தூக்கத்திலேயே முணுமுணுத்தவனின் கை இயல்பாக அவளைத் தேட.. அவன் கைகளுக்குள் புகுந்து கொண்டள் அவள்..

அவன் மார்பில் தலை வைத்து தூங்கியும் போனாள்..

மறுநாள் அவன் வேலைகளைக் கவனிக்க வெளியே போன பின்னால் அறையில் ஓய்வாக படுத்திருந்தாள் ரூபிணி..

அவளது செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பார்த்தாள்.. அவன் அழைத்துக் கொண்டிருந்தான்..

“ என்னங்க..?”

" என்ன செய்கிற..?"

" சும்மா.. படுத்திருக்கேன்.."

ஓர் நொடி மறுமுனை நிசப்தமாக இருந்தது.. அடுத்துப் பேசிய அவன் குரலில் பதட்டம் தெரிந்தது..

" ஒன்னும் பிரச்னையில்லையே.."

இவன் ஏன் இப்படிக் கேட்கிறான்..? என்று குழம்பிப் போனாள் ரூபிணி..

" என்ன பிரச்சினை..?"

" அது.. அது வந்து.."

அவன் வார்த்தைகள் வராமல் தடுமாறுவதைக் கண்டதும் அவளுக்குப் புரிந்து விட்டது..

" ஐய்யே.. உங்களுக்கு இதே கவலைதானா..?

இதைவிட்டு வேற நினைப்பில்லையா..?"

அவளது இலகுவான பேச்சில் அவன் நிம்மதியாகிவிட்டதை அடுத்து அவன் இயல்பாகப் பேசியதிலிருந்து அவள் உணர்ந்து கொண்டாள்..

" அதில்லை ரூபிணி.. படுத்திருக்கேன்னு சொன்னியே.. அதனால கவலைப் பட்டுட்டேன்.."

" இதில கவலைப்பட என்ன இருக்கு..?"

" ஒன்னும் இல்லைங்கறியா.."

" ஒன்னுமே இல்லை.. ஊரில்.. உலகத்தில்.. யாருமே குழந்தை பெற்றுக்கிறது இல்லையா..? எல்லோரும் விரதமா இருக்கிறாங்க..?"

" அப்புறம் எதுக்கு படுத்திருக்க..?"

" வேற என்ன செய்கிறது.. ? கீழே போனா.. சமையலறைப் பக்கம் கால் போகுது.. தாளிச்ச வாசனை வந்தால் கூட வாந்தி வருது.. வாசல் பக்கம் போனா.. தோட்டத்திற்கு கால் போகுது.. வள்ளி வேணாம்ங்கிறா..

அதான்.. மாடிக்கு வந்துட்டேன்.. புக் படிக்கலாமுன்னு தோணுச்சு.. அதான் ஓய்வாப் படுத்து புத்தகம் படிச்சுக்கிட்டு இருக்கேன்..”

“ அவ்வளவுதானே.. வேற ஒன்னும் இல்லையே..”

“ எதுவும் இல்லை..”

“ அப்போச் சரி..” அவன் நிம்மதியாகக் கூறினான்.. சற்று நேரம் அவளுடன் பேசிக் கொண்டிருந்தவன்..

“ தேங்ஸ்டி..” என்றான்..

“ எதுக்கு..?” அவளுக்குப் புரியவில்லை..

“ உனக்குத் தெரியாதா..?” கிறங்கிய குரலில் அவன் ரகசியம் பேசியதும் அவளுக்குப் புரிந்து விட்டது..

“ ச்சீய்..” என்று முகம் சிவந்தாள்..

“ ஏய்ய்.. எனக்கு எப்படியிருந்துச்சுன்னு உனக்குத் தெரியுமா..?”

“ போதுமே.. அதுக்குத்தான் நைட்டே தேங்ஸ் சொல்லியாச்சே..”

“ இப்பவும் சொல்லனும்னு தோணுச்சு..”

“ உங்களுக்கு வேற வேலையே இல்லையா..?”

“ அது நிறைய இருக்கு..”

“ அப்போ.. அதைக் கவனிக்க வேண்டியது தானே..”

“ எனக்காக நீ சொன்னயோன்னு மனதில் ஒரு சஞ்சலம்.. இப்ப உனக்கு உடம்புக்கு எப்படி இருக்குன்னு தெரிஞ்சுக்கலைன்னா வேலையே ஓடாதுங்கிற நிலைமை.. அதான் போன் பண்ணினேன்.. நீ நல்லாயிருக்குன்னு சொல்லிட்டேல்ல.. இனிமே வேலைகளை ஊதித் தள்ளிர மாட்டேன்..?”

அவன் போனை வைத்த பின்னும் வெகு நேரம் அவனது வார்த்தைகளே ரூபிணியின் காதுகளில்

ஒலித்துக் கொண்டேயிருந்தன..

27

நெஞ்சத்தை சொந்தங்கொண்டாய்...

நீங்காத பந்தம் கொண்டாய்...

அவனுக்கான தேவையை அறிந்த பின்னால் ரூபிணி அவனை வாட விடவில்லை..

அவனது தயக்கத்தையும்.. பயத்தையும் உடைத்தாள்.. அவனது தேவையை அளித்தாள்..

அவனும் மென்மையாக அவளுடன் கலக்க ஆரம்பித்தான். அதனால் அவளுக்கு எந்த பிரச்சினையும் இல்லை என்ற நிம்மதியில் அவனும் அவனது தேவைகளை பூர்த்தி செய்து விட்ட நிறைவில் அவளும் நிம்மதியாக வாழ்க்கையை நடத்தினார்க்ள..

ரூபிணியின் வயிறு மேடிட்டது.. அவளது வாந்தியும் மயக்கமும் நின்று விட்டது.. ஆறு மாத கர்ப்பிணியாக அவள் இருந்த போது.. வீரலட்சும்ி.. கணவரை இழுத்துக் கொண்டு மகளைப் பார்க்க வந்தாள்..

அவள் வருவதாகக் கூறியவுடனேயே.. அவர்களை அழைத்துக் கொண்டு வர காரை அனுப்பி விட்டான் ஹரிஹரன்..

“ நமக்கு காரில் போக வக்கில்லையா..?” ரங்கநாதன் கத்த ஆரம்பித்தார்..

“ ஏனில்லை..? நிறைய இருக்கு.. நீங்களும்.. நானும்.. கை நிறைய சம்பாதிக்கிறோம்.. தாராளமா கார் வாங்கலாம்.. ஏன் இன்னும் அதை நீங்க வாங்கலை..?”

வீரலட்சுமி கேள்வி கேட்க.. ரங்கநாதன் அவளை முறைத்தார்..

“ முறைக்காமல் பதிலைச் சொல்லுங்க..”

“ திமிராடி..”

“ ஆமாம்.. இப்ப அதுக்கு என்னங்கறீங்க..?”

“ ரௌடிக்கு பொண்ணைக் கொடுத்திருக்கேயில்ல.. அதான்.. நீயும் பொம்பளை ரௌடியா மாறிட்டே..”

“ எனக்கு நல்லா வந்திரும் வாயில.. நான் ரௌடியா மாறினேன்னு வையுங்க.. நீங்க தாங்கவே மாட்டிங்க..”

“ இனித்தான் புதுசா மாறனுமா..?”

கோபம் வந்து விட்ட வீரலட்சுமி.. கையிலிருந்த பாத்திரத்தை தூக்கி வீசியெறிந்தாள்.. கடைசி நொடியில் அதைக் கவனித்து விட்ட ரங்கநாதன் விலகிக் கொள்ள.. பாத்திரம் யூாமீ சுவரில் பட்டு விழுந்தது..

ரங்கநாதன் உண்மையிலேயே அரண்டு போய் விட்டார்.. வீரலட்சுமியும் கோபப்டுவாள்.. வெறும் வார்த்தைகளில் வெளிப்படுகிற கோபம் அது..

அதுவும் கூட.. அவர் குரல் உயர்த்தி பேசி விட்டாள் வெளிப்படாது.. அடங்கி விடுவாள்..

அப்படிப்பட்டவள் இப்படி ஆக்ரோசமாக பாத்திரத்தை தூக்கி விட்டெரிவாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை..

அவரது நினைப்பு.. அவர் பார்வையால் வெளிப்பட்டது..

“ என்னடி இது..? நீயா இப்படிச் செய்கிற..?”

“ பேசாதீங்க..”

அவள் வெறுப்புடன் முகத்தைத் திருப்பி கொண்டாள்..

“ நான்தான் இப்படிச் செய்கிறேன்.. நீங்க செய்ய வைத்திருக்கீங்க..”

“ நான் என்னடி செய்தேன்..?”

“ எதைத்தான் செய்யலை.. ஒன்றா.. இரண்டா.. அதை என் வாயால் சொன்னால்.. எனக்குத்தான் வாய் வலிக்கும்..”

“ அடேங்கப்பா.. நீ இப்படியெல்லாம் பேசுவியா..”

“ பேசுவேன்.. பேசாம விட்டு.. விட்டுத்தான். நீங்க இந்த அளவுக்கு வந்திருக்கீங்க..”

“ எதைப் பேசாம விட்டுட்ட..?”

“ எதையா..? நீங்களும்.. நானும் கைநிறைய சம்பாதிக்கிறோம்ன்னு சொன்னீங்களே.. அந்த சம்பாத்தியமெல்லாம் எங்கே போச்சு..?”

அவள் எங்கே வருகிறாள் என்பது புரிந்து போக ரங்கநாதன் வாயை மூடிக் கொண்டார்..

“ என்ன.. பேச்சைக் காணோம்..? இப்ப வசதியா வாயை மூடிக்குவீங்களே.. எனக்கு பற்றிக்கிட்டு வருது..”

மனைவியின் குத்தல் பேச்சினால் ரோசம் வரப்பெற்ற ரங்கநாதன் வாய் திறந்தார்..

“ எங்கே போச்சுன்னு உனக்குத் தெரியாதா..? தெருவிலேயா கொட்டினேன்..”

“ தெருவிலதான் கொட்டினீங்க..?”

“ அடிச்சுப் பல்லைக் கழட்டி விடுவேண்டி..”

“ அதுக்கு நான் பல்லைக் காட்டிக்கிட்டு உட்கார்ந்திருப்பேனா..? என் சின்ன மருமகனை பஞ்சாயத்துக்கு கூப்பிட்டுருவேன்.. ஜாக்கிரதை..”

உண்மையிலேயே ரங்கநாதனுக்கு இப்போது பயம் வந்து விட்டது.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமலிருக்க அவர் படாதபாடு பட்டார்..

வீரலட்சுமியோ.. அணையுடைந்த வெள்ளமாக தன் ஆற்றாமையைக் கொட்டிக் கொண்டிருந்தாள்..

“ ஊரில் .. உலகத்தில் கூடப் பிறந்தவங்க இருக்கிறதுதான்.. உங்க கூடப் பிறந்த பிறப்பைப் போல்

யாரும் இருக்க மாட்டாங்க..”

“ என் அக்காவைப் பேசாதே..”

“ பேசாம..? இப்படியொரு ஒட்டுண்ணி பிறவியை உலகத்திலேயும் நான் பார்த்தில்லை..”

“ புருசன் சரியில்லைன்னா .. அது பாவம் என்ன பண்ணும்..?”

“ சரியில்லாதவன்னு நீங்க கண்டிங்களா..? அவர் என்ன குடிகாரனா..? இல்லை பொறுக்கியா..?”

“ சம்பாதிக்கலையே..”

“ அப்படி உங்க அக்கா சொன்னதுதான்.. உங்களுக்கு அது தெரியுமா..”

“ பலசரக்குக் கடையில் என்ன வருமானம் வந்துரப் போகுது..?”

ஒரு வருமானமும் வராம உங்க அக்கா வீட்டைக் கட்டி.. கடையையும் சொந்தமா வாங்குச்சு..?”

“ அது.. அது..”

“ நீங்க வாங்கிக் கொடுத்தீங்களா..?”

“ நான் கொடுத்த பணம் பாதிதாண்டி வரும்..”

ரங்கநாதன் வாயால் கெட்டார்.. வீரலட்சுமி.. தன் வீரத்தை பார்வையிலேயே புலப்படுத்தினாள்..

“ ஆக.. நீங்க பாதிப் பணத்தை கொடுத்ததை உங்க வாயாலேயே ஒப்புக்கறீங்க..”

“ அதுக்கு மேலதான் நீ இறுக்கிப் பிடிச்சுட்டயே..”

“ இல்லைன்னா.. நானும்.. உங்களை நம்பி நான் பெத்துக்கிட்ட பிள்ளைகளும் தெருவுகில்ல வந்திருப்போம்..?”

வீரலட்சுமி சொன்னதில் இருந்த உண்மையை உணர்ந்தவராய் ரங்கநாதன் பல்லைக் கடித்துக் கொண்டு

மௌனமாக இருந்தார்..

அவரும்.. வீரலட்சுமியும் கை நிறைய சம்பாதித்தார்கள்.. அந்தப் பணத்தில் குடும்பத்தை மேம்படுத்தாமல் ரங்கநாதன் அவருடைய அக்காவுக்கு பண உதவியை தாராளமாக செய்தார்..

“ நீ மட்டும் இல்லைன்னா.. நானும் என் மகனும் என்ன கதிக்கு ஆளாகியிருப்போமோ..” என்று கண்ணைக் கசக்கி தம்பியிடம் வழிப்பறி செய்வதைவிட மோசமாக அவரது அக்கா பணம் பறித்தாள்..

அவள் சொல்வது போல.. அவளது பிழைப்பு ஒன்றும் அதோகதியாக இல்லையென்று அவளுடைய ஊரைச் சேர்ந்த வீரலட்சுமியின் உறவினர் ஒருவர் ஒரு நாள் கூறிய போது தான் வீரலட்சுமி விழித்துக் கொண்டாள்..

“ சிவகாசி கடைத் தெருவில மளிகைக் கடையை சொந்தமா வாங்குறது ஒன்னும் அவ்வளவு ஈஸியில்லைம்மா.. உன் நாத்தனார் மெயினான ஏரியாவுல வீட்டைக் கட்டினதும் இல்லாம.. கடையையும் விலைக்கு வாங்கிருச்சுன்னா பார்த்துக்கயேன்..”

“ எப்படி பெரியப்பா..? அவங்க கடையிலதான் ஓட்டமே இல்லைன்னு அவங்க சொல்கிறாங்களே..”

“ அதுவா ஓட்டமில்லாத கடை..? அது ஓடுகிற ஓட்டத்தை வைத்துத்தானே உன் நாத்தனா.. ஊரு பூராவும் வட்டிக்கு கொடுத்து வாங்குது..”

“ புருசன்காரர் சரியில்லைன்னு சொல்றாங்களே..”

“ நல்ல மனுசன்ம்மா அவரு.. உழைப்பாளி.. ராப்பகலா.. சோறு தண்ணியில்லாம.. கடையே கதின்னு கிடக்கிறாரு.. அவரைப் போல ஒரு புருசன் கிடைச்சதினாலதான் உன் நாத்தனா.. இந்த ஆட்டம் போடுது.. “ வீரலட்சுமி விழித்துக் கொண்டாள்..

நீ பேசும் வார்த்தையிலே...

என் நெஞ்சகமே.. சிலிர்க்குதடி...

" அடுத்த தெருவில் வீடு பார்த்திருக்கேன்.."

வீரலட்சுமி ஒருநாள் மாலையில் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் கணவனிடம் கூறினாள்..

" யாருக்கு வீடு பார்த்திருக்கிறா..?... ரங்கநாதனுக்குப் புரியவில்லை..

அவருக்கு புரிவதைப் பற்றிக் கவலைப் படாமல் வீரலட்சுமி உள்ளே சென்று விட.. இவரும் பின்னாலேயே சென்றார்..

" யாருக்குடி வீடு பார்த்திருக்கிறே..? உன் பிரண்டுக்கா..?"

" இல்லை.."

" தெரிஞ்சவங்களுக்கா..?"

" இல்லை.."

" எதிர்வீட்டுப் பொண்ணு.. வீட்டை காலி பண்ணச் சொல்கிறாங்கன்னு உன்கிட்டப் புலம்புச்சே.. அதுக்கா..?"

" இல்லை.."

" பக்கத்து வீட்டுப் பொண்ணு அது குடியிருக்கிற வீடு சௌகரியமா இல்லைன்னு உன்கிட்டச் சொல்லிக்கிட்டு இருந்துச்சே.. அதுக்கா..?"

" இந்த மனுசன் ஊமைக் கோட்டானைப் போல் இருந்துக்கிட்டு எதிர்வீட்டுப் பெண்ணிலிருந்து.. பக்கத்து வீட்டுப் பெண் வரைக்கும்.. தெரிஞ்சு வைச்சுக்கிட்டு இருக்காரே.. இவரை என்ன செய்தால் தேவலாம்..?...

" இல்லை.." என்று பல்லைக் கடித்தாள் வீரலட்சுமி.

“ இப்ப எதுக்கு இவ தேவையில்லாம பல்லைக் கடிக்கிறா..” ரங்கநாதன் யோசித்தார்..

“ ஏண்டி.. எல்லாத்துக்கும் இல்லை.. இல்லைன்னு பதில் சொன்னா என்ன அர்த்தம்..?”

“ இல்லைன்னு அர்த்தம்..”

“ அப்ப வீடு பார்த்திருக்கேன்னு ஏன் சொன்னே..?”

“ வீடுபார்த்திருக்கேன்.. அதனால சொன்னேன்..”

திரும்பவும் ஆரம்பித்த இடத்துக்கே பேச்சு வர.. ரங்கநாதன் கைளைத்துப் போனார்.. தாங்கமாட்டாதவராய்..

“ ஏய்ய்.. நீயே.. யாருக்கு வீடு பார்த்திருக்கேன்னு சொல்லிருடி..” என்று கெஞ்சவே ஆரம்பித்து விட்டார்..

“ எல்லாம்.. எனக்கும்.. என் பிள்ளைகளுக்கும் தான்..” வீரலட்சுமி கெத்தாகப் பதில் சொல்லிவிட்டு படுக்கயைறைக்குள் நுழைந்து விட.. ரங்கநாதன் அவசரமாக அங்கே ஓடினார்..

“ என்னடி சொல்கிறே..?”

“ ஏன்.. தமிழில்தானே சொன்னேன்.. புரியலையா..?”

“ நீ சொல்றதுக்கு என்ன அர்த்தம்ன்னு கேட்டேன்..”

“ நானும்.. என் பிள்ளைகளும் தனிக்குடித்தனம் போகிறோமுன்னு அர்த்தம்..” விறைப்பாக பதில் சொன்னாள் வீரலட்சுமி.. அரண்டு போனார் ரங்கநாதன்..

“ உன் பிள்ளைங்களா.. அதுக என் பிள்ளைகள்டி..”

“ அந்த நினைப்பிருந்தா சம்பாதிக்கிற பணம் முழுவதையும் உங்க அக்கா வீட்டில கொண்டு போய் கொட்டுவீங்களா..?”

“ இதுக்குத்தான் இத்தனை ஆர்ப்பாட்டமா..?...

விசயம் ஒருவழியாக ரங்கநாதனுக்கு விளங்கியது..

“ கூடப்பிறந்தவளுக்கு செய்யாதவன் ஒரு உடன் பிறப்பாடி..?”

“ அப்படி.. நீங்க உங்க அக்காவுக்கு உடன் பிறப்பாகவே இருங்க.. எப்ப நீங்க எனக்கு புருசனாகவும்.. என் பிள்ளைகளுக்கு அப்பாவாகவும் இருப்பீங்களோ.. அப்ப நாங்க உங்க கூட குடித்தனம் பண்ண வர்றோம்..”

“ அப்படின்னா..”

“ தனிக்குடித்தனம்தான்..”

“ பொம்பளை ராஜ்ஜியம் கட்டி ஆட நினைச்சா வீடு விளங்குமா..?”

“ இதை உங்க அக்காகிட்டப் போய் சொல்லுங்க..”

“ நீ ராஜ்ஜியம் கட்டிக்கிட்டு ஏன்.. எங்க அக்காவை இழுக்கறே..”

“ பொம்பளை சம்பாதிக்கனும்.. அந்தப் பணத்தை வாங்கி செலவளிக்கனும்.. ஆனா.. ராஜ்ஜியம் கட்ட மட்டும் ஆம்பளைதான் வரனும்.. பெம்பளைக வரக்கூடாது.. அவங்க அடுப்படியிலேயே முடங்கிப் போகனும்.. நல்லாயிருக்குங்க உங்க நியாயம்..”

“ இப்ப எதுக்குடி இப்படியொரு குண்டைத் தூக்கிக் போடற..”

“ இதோ பாருங்க.. எனக்கும் மூணு பிள்ளைகளாயிருச்சு.. என் கூட வேலை பார்க்கிறவங்க எல்லாம்.. நகை நட்டு.. பணம் காசு.. சொந்த வீடுன்னு இருக்கிறப்போ.. நான் மட்டும்.. இன்னமும் வாடகை வீட்டிலேயே காலம் தள்றேன்.. மாசத்திலே பாதிநாள் பட்ஜெட் இடிக்குது.. பணம் பற்றாக்குறையாயா இருக்கு.. ஒரு நாளாவது கைகுளிர செலவளிச்சோம்.. ஒரு சினிமாவுக்கு போனோம்.. கோவிலுக்கு போனோம்.. கடை கண்ணிக்குப் போனோம்ங்கிறது இல்லை.. இது என்ன பிழைப்பு..? இந்தப பிழைப்புக்கு நாங்க தனியாகவே போயிடறதுதான் பெட்டர்..”

“ தனியா போனா மட்டும் என்ன மிஞ்சும்..?”

“ என் சம்பளமாவது மிஞ்சுமில்ல.. என் சம்பளத்தை வைத்து என்னையும் .. என் பிள்ளைகளையும் பார்த்துக்க எனக்குத் தெரியும்.. நீங்க உங்க சம்பளத்தை வாங்கி.. உங்க அக்காவுக்கு சீரு செய்வீங்களோ.. இல்லை.. ஆட்டுக்குட்டிக்கு சீர் செய்வீங்களோ.. செய்துக்கங்க.. எனக்கு என்ன வந்தது..?”

வீரலட்சுமி தீவிரமாக வீட்டிலிருந்த சாமான்களை மூட்டை கட்ட ஆரம்பிக்கவும் ரங்கநாதன் கலவரமானார்..

“ இதையெல்லாம் ஏண்டி மூட்டை கட்டற..?”

“ நல்லாயிருக்கே.. இதுல ஒரு ஸ்பூனையாவது நீங்க உங்க கைக் காசை போட்டு வாங்கியிருப்பீங்களா..? எல்லாம் என் பிறந்த வீட்டிலயிருந்து வந்தது.. மீதத்தை நான் வாங்கினேன்..”

அதுதான் ரங்கநாதனுக்கு தெரிந்த செய்தியாயிற்றே..

பாவம் வீரலட்சுமி.. கையில் வாங்கும் சம்பளப் பணத்தை அப்படியே ரங்கநாதனிடம் கொடுத்து விட்டு.. போனஸ் போன்ற அதிகப்படி வருமானத்தில் வீட்டிற்கு தேவையானதை வாங்கிப் போடுவாள்..

உண்மையாகவே.. வாசலில் டெம்போ வந்து நிற்கவும் ரங்கநாதன் சரணாகதியானார்..

“ இதெல்லாம் வேண்டாம் வீரலட்சும்ி..”

“ ம்ஹும்.. இது கதைக்கு ஆகாது.. என் சம்பளத்தையாவது நான் காப்பாத்தியாகனும்ன்னா.. தனியாய் போயிடறதுதான் பெட்டர்..”

“ இப்ப நான் என்ன செய்யனும்..? அதைச் சொல்லு..”

“ உங்க சம்பளப் பணத்தை அப்படியே கொண்டு வந்து என் கையில் கொடுத்து விடனும்.. வீட்டு நிர்வாகத்தை இனி நான்தான் பார்ப்பேன்.. இதுக்குச் சம்மதம்ன்னா.. சேர்ந்து இருக்கிறதைப் பத்தி யோசிக்கலாம்..”

“ என் சம்பளத்தை அப்படியே உன்னிடம் கொடுத்து விடுகிறதா..? அது எப்படி முடியும்..?”

“ இத்தனை நாளாய் நான் அதைச் செய்யலையா..? என்னால் முடிந்தது.. உங்களால் முடியாமல் போகுமா..?”

“ எனக்கும் செலவிருக்குமுல்ல..”

“ என்ன செலவு..?”

“ கைச் செலவுதான்..”

“ நியாயமான செலவுக்கு பணம் கிடைக்கும்..”

“ அக்காவுக்கு..”

“ ஊஹூம்.. இது ஆகாத ஜோலி… பிள்ளைகளா.. உங்க புத்தகப் பைகளை மூட்டைக் கட்டிட்டு அப்பாவுக்கு டாட்டா சொல்லுங்க.. அவர் அவரோட அக்கா வீட்டுக்கே போய் சேரட்டும்..”

ரங்கநாதன் அடங்கிப் போனார்.. வீரலட்சுமி தடாலடியாக வீட்டு நிர்வாகத்தை கைப்பற்றினாள்.. இரண்டு.. மூன்று மாதங்களுக்கு விடாமல் பணம் கேட்டு வந்த ரங்கநாதனின் அக்காவிடம் வீரலட்சுமி வேண்டுமென்றே வாய் சண்டை வளர்த்ததில்.. அவள் இனிமேல் தம்பியிருக்கும் ஊர்பக்கமே திரும்பிப் பார்க்க மாட்டேனென்று சபதம் செய்துவிட்டுப்போய் விட்டாள்..

“ கிளிக்கு இறக்கை முளைச்சிருச்சு.. அது பறந்து போயிருச்சு..” என்று பகடி பேசிய தாரிணியிடம்..

“ இல்லைடி மகளே.. அந்தக் கிளிக்கு ரெக்கை முளைச்சு ரொம்ப நாளாகுது.. இப்ப உன் அப்பாக்கிட்ட பணம் கறக்க முடியாதுன்னு தெரிஞ்சு போச்சு.. அதனால்.. பறந்து போயிருச்சு.”, எனறாள் வீரலட்சுமி…

ஆங்கிலேயரிடமிருந்து பாரதத்தை மீட்க இந்தியர்கள் போராடியதைப் போல.. ரங்கநாதனின் அக்காவிடமிருந்து அவரைக் காப்பாற்ற வீரலட்சுமி போராட வேண்டியிருந்தது..

ஒருவழியாக.. திருமணமாகி.. பத்து வருடங்கள் கழித்து.. மூன்று பிள்ளைகளுக்கு தாயான பின்னால் குடும்ப நிர்வாகத்தை கைப்பற்றினாள் வீரலட்சுமி..

## 29

## சங்கமித்த நெஞ்சத்திற்கு..

## பிரிவென்றும் வந்ததில்லை ...

சொந்தமாக ஒரு வீடு.. மூன்று பிள்ளைகளுக்கும் பெரிய படிப்பு.. இரண்டு பெண்களுக்கான நகைகள்.. பேங்கில் பணம் கையிருப்பு.. என்று தற்போது ரங்கநாதன் வாழ்ந்து வரும் வாழ்க்கை.. வீரலட்சுமி அவருக்கு காப்பாற்றிக் கொடுத்தது..

தாரிணியின் திருமணத்தின் போது.. குமாரின் வீட்டினர் கேட்ட சீர்வரிசையை தாராளமாக செய்ய முடிந்தது.. வீரலட்சுமியின் உபயம்தான்..

அவள் மட்டும் தடாலடியாக செயல்படாமல் இருந்திருந்தால் ரங்கநாதன் அவர்களின் குடும்பத்தை ஒரு வழி பண்ணியிப்பார்..

எந்த வித் கெட்ட பழக்கங்களுக்கும் ஆட்படாமல் ஒரு குடும்பத்தை சீர் குலைக்க ஒரு குடும்பத் தலைவனால் முடியும் என்பதற்கு ரங்கநாதன் ஒரு சிறந்த உதாரணம்..

பண வகையில் ரங்கநாதனின் அக்காவை ரங்கநாதனிடமிருந்து பிரித்த வீரலட்சுமியால்.. பெண்களின் திருமணம் என்று வந்த போது பிரிக்க முடியவில்லை..

“ ஒற்றை உடன் பிறப்பு.. என் தம்பியின் மகளைக் கட்டாமல் வேற எவளை.. என் மகனுக்கு கட்டி வைப்பேன்..? “ என்று சொந்தம் பேசிக் கொண்டு ரங்கநாதனின் அக்கா வந்து நின்று விட்டாள்..

“ வேற எவ பொண்ணு கொடுப்பா..? “ வீரலட்சுமி மகள்களிடம் பொறுமினாள்..

“ மனுசனாப் பிறந்தவனுக்கு ஒன்னு ரெண்டு கெட்ட பழக்கம் இருப்பது சகஜம்தான்.. ஆனா.. உலகத்தில இருக்கிற அத்தனை கெட்ட பழக்கங்களையம் வைத்திருக்கிற ஒரே மனுசன்.. உங்க அக்கா மகனாத்தான் இருக்க முடியும்.. “ கணவரிடம் எகிறினாள்..

ரங்கநாதன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை.. “ ஆயிரம்தான் இருந்தாலும்.. அவன் என் அக்கா மகன்டி..” என்றார்..

“ இதுக.. நான் பெற்ற பெண்கள்..”

“ எனக்கும் அதுகதான் பெண்கள்..”

“ அந்த நினைப்பிருந்தா ஒழுங்கான மாப்பிள்ளையாய் பாருங்க..”

“ ஏன்..? இவனுக்கென்ன குறைச்சல்ணேன்.. இவனுக்கு வீடில்லையா.. வாசலில்லையா..? சொத்து சுகமில்லையாண்னேண்..”

“ எல்லாத்துக்கும் “ ணேன்..... ணேன்..... போடாம முதலில் இவனுக்கு படிப்பிருக்கான்னு சொல்லுங்க..”

“ காமராஜரெல்லாம் எந்தப் பள்ளிக் கூடத்துக்கு போய் படிச்சாருண்ணேன்.”

“ நினைச்சேன்.. வார்த்தைக்கு வார்த்ததை நீங்க “ ணேன்..... போடும் போதே நினைச்சேன்.. நிச்சயம் காமராஜரை வம்புக்கு இழுப்பீங்கன்னு.. காமராஜர் படிக்கலை.. வாஸ்தவம்தான்.. அதுக்காக படிக்காத தற்குறியெல்லாம் காமராஜர் ஆகி விட முடியுமா..? அதுக்கெல்லாம் ஒரு தகுதி வேணும்ன்ணேன்..”

ரங்கநாதனின் பேச்சுக்கு பேச்சு.. எதிர்பேச்சு பேசி வாயடைக்க வைத்தாலும் வீரலட்சுமிக்கு பெற்ற மகள்களின் வாழ்க்கையை நினைத்து வயிறு கலங்கிக் கொண்டுதான் இருக்கிறது..

அவளுக்கு ரங்கநாதனின் முரட்டுப் பிடிவாதத்தைப் பற்றி நன்கு தெரியும்.. அவருடைய அக்கா பாசத்தைப் பற்றி அதைவிட அதிகமாக தெரியும்..

இந்த " வீம்பு பிடிச்ச மனுசனால என் பொண்ணுக வாழ்க்கை.. என்ன கதிக்கு ஆளாகப் போகுதோ.......

அவள் பரிதவித்துக் கொண்டு இருந்த போது.. தாரிணி காதல் என்ற பெயரில் குமாரைக் கொண்டு வந்து வீரலட்சுமியின் முன்னால் நிறுத்தி.. அவள்வயிற்றில் பால் வார்த்தாள்..

ஒரே இனம்.. ஒரே படிப்பு.. ஒரே ஊரில்.. ஒரே கம்பெனியில் வேலை.. குமாரைப் பெற்றவர்களும் படித்து வேலைக்குப் போகிறவர்கள்..

ரங்கநாதனுக்கு மறுப்புச் சொல்ல வழியில்லாமல் போனது.. குமாரின் வீட்டில் அதிகமாக சீர்வரிசையைக் கேட்கவும்.. கிடைத்தது வாய்ப்பென்று ரங்கநாதன் ஆட்சேபிக்க முனைந்தார்.. " பணத்தாசை பிடிச்சவங்க.. இவங்க வீட்டுக்கு மருமகளய் என் மகளை அனுப்ப மாட்டேன்.."

" இதோ பாருங்க.. இவங்க காதல் விவகாரம் ஊர் பூரா தெரிஞ்சுருக்கு.. வேற வழியில்ல.. நாம இவங்க கேட்கிறதைச் செய்து.. பெண்ணைக் கட்டிக் குடுத்துதான் ஆகனும்.."

ரங்கநாதன் அடங்கினாலும்.. பண உதவி செய்ய மாட்டேனென்று அழிச்சாட்டியம் செய்தார்..

வீரலட்சுமி மனம் தளரவில்லை.. சேமிப்புகளை எடுத்து கடைசிப் பைசா வரைக்கும் செலவு செய்து மூத்த மகளை ரங்கநாதனின் அக்கா மகனிடமிருந்து காப்பாற்றி அனுப்பி வைத்தாள்..

இளைய மகளையாவது தக்க வைத்துக் கொள்ள வேண்டுமமென்ற ஆவேசம் ரங்கநாதனுக்குள் இருந்தது..

அதற்கு தகுந்தாற்போல ரூபிணி குனிந்த தலை நிமிராமல் அடக்க ஒடுக்கமாக.. அமைதியின் சிகரமாக இருந்தாள்.. “ நிச்சயம்.. இவ தான் அக்காவுக்கு மருமகள்.....

ரங்கநாதனின் இந்தக் கனவிலும் மண் விழுந்தது.. ரூபிணியும் காதலித்து வைத்தாள்.. நல்லவேளையாக தாரிணி தேர்வு செய்த குமாரைப் போல.. ஒரே இனம்.. ஒரே படிப்பு என்று இல்லாமல்.. ரூபிணி ஹரிஹரனை¡ காதலித்து வைக்க.. ரங்கநாதன் மறுப்பதற்கு நிறைய காரணங்கள் அவருக்கு கிடைத்து விட்டன..

“ ஜாதி விட்டு ஜாதி கல்யாணம்ங்கிறதெல்லாம் இந்த ரங்கநாதனின் குடும்பத்தில் நடக்காது..”

ரங்கநாதன் முதல் அஸ்திரத்தை எய்தார்..

“ இந்தக் காலத்தில.. இதெல்லாம் சகஜம்..” வீரலட்சுமி அவரது வாதத்தை உடைத்தாள்..

“ ஊரறிஞ்ச தாதாடி அவன்.. அவனுக்குப் போய் என் பெண்ணைக் கொடுப்பதா..? அடுத்த அஸ்திரத்தை அவர் பிரயோகிக்க..

“ பொறுக்கிக்கு..” தாதா... எவ்வளவோ மேல்..” என்று அதையும் வீரலட்சுமி உடைத்தாள்.

கடைசி  நிமிசத்தில் ஹரிஹரனுக்கு சம்மதம் சொல்வது போல போக்குக் காட்டிவிட்டு.. “ சாமி கும்பிட வாங்க... என்று குடும்பத்தை விடிவதற்கு முன்னால் பெருமாள் கோவிலுக்கு அழைத்துச் சென்றார்.. அங்கே தயாராக இருந்த ரங்கநாதனின் அக்கா மகனுக்கு மகளை தாரை வார்த்துக் கொடுக்க அவர் முயல.. துப்பாக்கியுடன் ஹரிஹரன் பிரசன்னமானான்..

“ எழுந்திருடா..” என்று ரங்கநாதனின் அக்கா மகனை ஓட்டிவிட்டு.. அப்போதே.. அந்தக் கோவிலிலேயே ரங்கநாதனின் கண்ணுக்கு முன்னாலேயே ரூபிணியின் கழுத்தில் தாலியைக் கட்டி விட்டான். இளைய மகளும் கை நழுவிப் போனது ரங்கநாதனைப் பாதித்தது.. அதிலும் அவர் கண் முன்னாலேயே அவர் மகளுக்கு துணிச்சலாக

தாலியைக் கட்டிய ஹரிஹரனின் மேல் அவர் மனதில் ஆழ்ந்த வன்மம் உருவானது..

“ இப்போ எதுக்குடி விழுப்புரத்துக்கு போகனும்ன்னு குதிக்கிற..?”

“ ஊம்.. என் மக.. முழுகாம இருக்கிறா.. பெத்தவளா நான் அவ வாய்க்கு பிடித்தமா எதையாவது செய்து போட முடிஞ்சுதா..?”

“ அவன்தான் என் பெண்ணை அனுப்ப மாட்டேன்னு சொல்லிட்டானே..”

“ அவனா..?”

“ அவர்ர்ர்... போதுமா..”

“ இப்படியே சொல்லிப் பழகுங்க..”

“ பார்க்கலாம்..”

“ ஒரு நேரம் போல.. ஒரு நேரம் இருக்காது.. இப்பப் போலவே வாயில் வார்த்தை வந்து தொலைத்து.. அதை சின்ன மருமகனின் ஆள்கள் கேட்டு விட்டா.. கதை கந்தலாகிடும்.. உங்க நல்லதிற்குத்தான் சொல்றேன்..”

மனைவி சொல்வதில் உண்மையிருப்பதை ரங்கநாதனால் புரிந்து கொள்ள முடிந்தது.. எதற்கும் இருக்கட்டுமென்று அவர் ராப்பகலாகய் ஹரிஹரனை மனதிற்குள் “ அவர்...... என்று சொல்லப் பயிற்சி எடுத்துக் கொண்டார்..

## 30

## நெஞ்சினிலே வந்தவளே...

## நினைவினிலே நின்றவளே...

“ அவர் அனுப்பி வைக்கிற காரில் நான் வரமாட்டேன்..”

“ ரொம்ப நல்லதாப் போச்சு.. நீங்க வீட்டைப் பார்த்துக்கங்க.. நானும்.. நவீனும் விழுப்புரத்துக்கு போயிட்டு வர்றோம்.. எதுக்கும் உள் தாழ்ப்பாளை பலமாய் போட்டுக்கங்க.. உங்க மேல சின்ன மருமகனின் ஆள்களுக்கு நிறைய காண்டு இருக்கு.. வாடா நவீன்.. நாம கிளம்பலாம்.. ம்ஹீம்.. நம்மகூட இருந்தால்தான் உங்க அப்பாவுக்கு பாதுகாப்பு.. அது தெரியாம இவர் கிடந்து ஆடறார்..”

வீரலட்சுமி கிளம்பி வாசலுக்கு வந்த போது.. அவளுக்கு முதலில் காரில் போய் முதல் ஆளாக உட்கார்ந்து கொண்டு விட்டார் ரங்க நாதன்..

நவீனுக்கு சிரிப்புப் பொத்துக் கொண்டு வர.. அவன் சிரிப்பை அடக்க முடியாமல் வீட்டுக்குள் ஓடினான்..

மனம் விட்டு சிரித்து முடித்து விட்டு திரும்பி வந்தவனிடம் “ எதுக்குடா வீட்டுக்குள்ள ஓடினே..?” என்று கேட்டு வைத்தார் ரங்க நாதன்..

“ பாத்ரூமுக்கு போயிருப்பான்.. இது ஒரு கேள்வியா..?” என்று கேட்டு வீரலட்சுமி அவனைக் காப்பாற்றினாள்..

கார் கிளம்பி வேகமெடுத்து.. பாதி தூரம் கடந்த போது..

“ ஏண்டி.. எதுக்கு அத்தனை பாத்திரங்களை அடுக்கியிருக்க..?” என்ற சந்தேகம் கேட்டார் ரங்கநாதன்..

“ அக்காவுக்கு பலகாரம் செய்தாங்கப்பா..” நவீன் கூறினான்..

“ இத்தனை பலகாரத்தையா செய்தா..?”

ரங்கநாதன் இப்படிக் கேட்ட போது.. காரை ஓட்டிக் கொண்டிருந்த சோமு திரும்பி.. அவரை அன்பாய் ஒரு பார்வை பார்த்து வைத்தான்..

“ உங்க மேல.. சின்ன மருமகனின் ஆள்களுக்கு நிறைய காண்டு இருக்கு.....

மனைவியின் குரல் மனதினில் ஒலிக்க.. அவசரமாக மாற்றிப் பேசினார் ரங்கநாதன்..

“ இத்தூனூண்டு பலகாரத்தையா செய்தா..?”

“ இத்தூனுண்டா..? ஏன்ப்பா.. அம்மா எவ்வளவு அதிகமா செய்திருக்காங்கன்னு உங்களுக்குத் தெரியுமா..?”

“ என்னடா அதிகம்..? மாப்பிள்ளையின் வீட்டில் ஆள்.. அம்பு ஜாஸ்தி.. அத்தனை பேருக்கும் கொடுக்க வேணாமா..?”

டிரைவர் சோமுவிற்கு “ உனக்கும் பங்கு உண்டு..... என்று உணர்த்தி விட்ட நிம்மதியுடன் ரங்கநாதன் அமைதியாகிவிட..

“ ஏன் தம்பி.. “ மாத்தியோசி... ன்னு ஒரு படம் வந்ததே பார்த்தீங்களா..” என்று நவீனிடம் கேட்டான் சோமு..

நவீனுக்கு சிரிப்பு வந்து விட்டது.. இப்போது தகப்பனாருக்குத் தெரியாமல் சிரிக்க மறைவிடம் கிடைக்காத காரணத்தினால்.. சிரிப்பை அடக்கிக் கொள்ள படாதபாடு பட்டான் நவீன்..

“ என்ன தம்பி பதில் சொல்ல மாட்டேங்கறீங்க..”

அவனுக்கு அருகில் அமர்ந்திருந்த நவீனிடம் மீண்டும் கேட்டான் சோமு..

பின்சீட்டில் இருந்த ரங்கநாதனுக்குத் தெரியாமல் சும்மாயிருக்கும்படி ஜாடை செய்தான் நவீன்..

சிரிப்பை அடக்குவதற்காக அவன் தவித்துக் கொண்டிருந்ததைக் கண்ட சோமு.. போனால் போகிறதென்று அதற்கு மேல் பேசாமல் காரை ஒட்டினான்..

ரங்கநாதன் மௌனவிரதம் காத்தவராக.. கண்மூடி சீட்டில் சாய்ந்து கொண்டு வந்தார்..

“ ஐயா தூங்கறாங்களா..?”

இடையில் சாப்பாட்டிற்காக ெயுா£ டÈ மீ௳ காரை நிறுத்திய போது சோமு அன்பொழுக கேட்டான்..

நவீன் “ இல்லை... என்பதைப் போல சைகை செய்தான்.. சோமு புருவங்களை உயர்த்தி விட்டு பேசாமலிருந்து விட்டான்..

ஒருவழியாக விழுப்புரத்திற்கு சென்று சேர்ந்தது கார்.. காரிலிருந்து அவர்கள் இறங்குவதற்கு முன்னாலேயே “ அம்மா” என்றபடி ஓடிவந்து பார் கதவைத் திறந்து விட்டாள் ரூபிணி..

“ மெல்லம்மா.. கர்ப்பிணிப் பொண்ணு இப்படி ஓடி வரலாமா?” கனிவுடன் மகளைக் கடிந்து கொண்ட வீரலட்சுமி மகளைத் தழுவிக் கொண்டாள்..

தாயின் தோள் வளைவில் முகம் புதைத்துக் கொண்டாள் ரூபிணி.. சோமு.. டிக்கியிலிருந்த பலகாரத்தூக்குகளை எடுத்தபடி வள்ளிக்கு குரல் கொடுத்தான்..

“ வள்ளி..”

“ என்னங்க..”

வள்ளி பாரபட்சம் பார்க்காதவள்.. கார்மேகமாக இருந்தாலும் சரி.. சோமுவாக இருந்தாலும் சரி.. அது தாம்ஸனாக இருந்தாலும் சரி.. யாரிடம் அவள் பேச நேர்ந்தாலும்.. கட்டிய கணவனை பேசுவதைப் போலத்தான் பேசி வைப்பாள்..

“ இந்த பலகார டப்பாக்களையெல்லாம் உள்ளே கொண்டு போய் அடுக்கலாம்.. வா..”

“ நீங்க சொல்லி.. எதை நான் செய்யாமல் இருந்திருக்கிறேன்..? கொடுங்க..” என்று வள்ளி கை நீட்ட..

“ அப்படி இவகிட்ட நான் என்னத்தைச் சொல்லி.. இவ செய்துட்டா..... என்று யோசிக்க ஆரம்பித்தான் சோமு..

“ நவீன் குட்டி..”

“ ஏன்க்கா.. இன்ஜினியரிங் முடிக்கப் போறேன்.. இன்னும்  உனக்கு நான் குட்டியா..?”

“ போடா .. உனக்குக் கல்யாணமாகி.. நீ பேரன் பேத்தியே எடுத்தாலும்.. எனக்கு நீ குட்டிதான்..”

அவள் தாயிடமும்.. தம்பியிடமும் செல்லம் கொஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்த்தபடி.. வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தான் ஹரிஹரன்..

அகன்ற போர்டிகோவை ஒட்டிய.. வெளிப்புற பால்கனியைப் போன்ற மேடையான அமைப்பில் நின்றபடி.. அதன் கம்பிவளைவுகளைக் கொண்ட அலங்காரமான சுற்று வேலியில் கை வைத்து..

“ வாசலிலேயே செல்லம் கொஞ்சிக்கிட்டு இருக்கனுமா..? மீதி செல்லத்தையும் வீட்டுக்குள் போய் கொஞ்சலாமே..”  என்று மனைவியிடம் கூறினான்..

31

வாராது வந்த மாமணியே…?

உனைப் போக விடுமோ… எனது நெஞ்சம்?

“ பாருங்கம்மா.. “ ரூபிணி சிணுங்க.. வீரலட்சுமி சிரித்தாள்..

“ வாங்க அத்தை.. வா நவீன்.. “ என்று அவர்களை வரவேற்றான் ஹரிஹரன்..

“ இவனுக்கு என்னைப் பார்த்து “ வா… ன்னு கூப்பிடனும்னு தோணலையா..?… ரங்கநாதன் கவலைக்குள்ளானார்..

அவன் வரவேற்காததைப் பற்றி அப்படியொன்றும் அவர்க்கு எதிர்ப்பார்ப்பில்லை.. இன்னும் சொல்ல போனால்..” இவனென்ன என்னை அழைப்பது….. என்ற கெத்து காட்டுபவர்தான் ரங்கநாதன்..

ஆனால்.. அவர் பாவம்.. என்ன செய்வார்..?

அது ஹரிஹரன் கோட்டை.. வாசல் காவலாளியிலிருந்து.. காரை ஓட்டும் டிரைவர் வரை.. எல்லோருமே கடோத்கஜன்களாக இருந்து வைத்தார்கள்..

காரை ஓட்டிக் கொண்டு வந்த சோமு.. அவரை இனம் கண்டு கொண்டு விட்டானே.. என்று ஒரு சஞ்சலம் அவர் மனதில் விரவிக் கிடந்தது..

இப்படியாகப்பட்ட சூழ்நிலையில்.. விருந்தாளியாக வந்து இறங்கியிருக்கும் மூன்று பேரில்.. இரண்டு பேரை மட்டும் ஹரிஹரன் " வா" வென்று வரவேற்று விட்டு.. அவரை வரவேற்காமல் விட்டுவிட்டால்.. அவர் வேண்டாத விருந்தாளியாக ஆகிவிட மாட்டாரா..?

ஹரிஹரனுக்கு வேண்டிய விருந்தாளியாக என்றைக்குமே அவருக்கு விருப்பமில்லை..

சுற்றியிருக்கும் அவனுடைய காவல் படைக்கு அவர் வேண்டாத விருந்தாளியாக தோற்றமளித்து விடக்கூடாது என்ற எண்ணம்தான் அவருக்கு..

நல்லவேளையாக.. அவரையும் ஒரு வார்த்தை..

" வாங்க மாமா.." என்று அழைத்து வைத்தான் ஹரிஹரன். ஆவசரமாக தன்னைச் சுற்றிப் பார்வையை ஓட்டிய ரங்கநாதன் ஹரிஹரனின் ஆள்கள் அதைக் கவனித்துக் கொண்டதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டார்..

" ம்ம்ம்..."

வேறு வழியின்றி ஒரு பதில் முணுமுணுப்பை வெளிப்படுத்தி வைத்தார் ரங்கநாதன்..

வீரலட்சுமிக்கு மகளிடம் கேட்பதற்கு ஆயிரம் விசயங்கள் இருந்தன.. ரூபிணிக்கும் தாயிடம் பகிர்ந்து கொள்ள அதே அளவு விசயங்கள் இருந்தன..

அவர்கள் மற்றவர்களைக் கவனிக்காமல் தங்களுக்குள் பேசியபடி உள்ளே செல்ல.. நவீனும்

இயல்பாக அவர்கள் பேச்சில் கலந்தபடி.. ஒட்டிக் கொண்டு சென்று விட்டான்..

எதிரும்.. புதிருமாக.. வாசலில் தனித்து விடப்பட்ட ஹரிஹரனு«ு.. ரங்கநாதனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்..

புருவங்களை மேலே உயர்த்தி கித்தாய்ப்பாக ஹரிஹரன் பார்த்த பார்வையில் ரங்கநாதன் கதிகலங்கிப் போனான்..

“ என்ன் ன்.. ன.. மாமா.. சௌக்கியமா..?”

“ இதுவரையிலும் சௌக்கியம்தான்.. இனிமே என்னாகும்ன்னுதான் தெரியலையே.....

“ வாசலிலேயே நின்னுட்டிங்க..?”

“ அதுவும் வேணாம்ன்னா சொல்லு.. ஊருக்கு ஓடிப் போயிடறேன்.....

“ உள்ளே வாங்க..”

“ நிஜமாத்தான் சொல்றியா..?...

“ பேசவே மாட்டேங்கறிங்க..?”

“ எங்கே.. உன் முன்னால் பேச்சே வர மாட்டேங்குது.....

“ கார் மேகம்..” ஹரிஹரன் அழைக்கவும்..

“ இப்போ என்னத்துக்கு அவனை.. இவன் கூப்பிடுகிறான்..?... என்று ரங்கநாதன் நடுங்கிப் போனார்..

“ என்னங்கய்யா..”

ஹரிஹரன் அருகில் வந்து நின்ற கார்மேகம்.. ரங்கநாதனைப் பார்த்த பார்வையில் துளிக்கூட நட்பில்லை..

“ என் மாமனாரைப் பார்த்தியா..?” ஹரிஹரன் வினவ..

“ இப்ப எதுக்கு அவன்கிட்ட என்னை அடையாளம் காட்டறான்..... ரங்கநாதனுக்கு படபடவென்று வந்தது..

“ கோவில் பட்டியிலேயே இவரை எனக்குத் தெரியும் ஐயா..”

“ அடக்கடவுளே.. இவன் கோவில்பட்டியை மறந்தாலும் அவன் மறக்க விட மாட்டான் போல இருக்கே.....

“ நினைவிருக்கா கார்மேகம்..”

“ அவன்தான் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்ங்கிறதைப் போலச் சொல்கிறானே.. அப்புறமும் எதுக்கு இவன் நினைவிருக்கான்னு கேட்டு.. மலரும் நினைவுகளை மலர வைக்க பார்க்கிறான்..?...

“ மறக்க முடியுமா ஐயா..” என்று கேட்டபடி ரங்கநாதனைப் பார்த்த கார்மேகத்தின் கண்களில்.. தனுஷ் பாடிய பாடல் எதிரொலித்தது..

“ கொலை வெறி.. கொலைவெறி..... என்ற பாடல் ரங்கநாதனின் மனதிற்கு மட்டும் கேட்டு வைக்க.. அவசரமாக வீட்டுப் பக்கம் பார்வையை செழுத்தினார் அவர்..

“ வீரலட்சுமி.. என்னைத் தனியா விட்டுவிட்டுப் போயிட்டயேடி..... அவர் மனம் புலம்பியது..

வீட்டுக்குள் போய்.. மனைவியின் அருகில் பாதுகாப்பாய் உட்கார்ந்து விடலாமென்றால்.. அதற்கும் வகையில்லாமல் ஹரிஹரன் வழி மறித்து நின்று கொண்டிருந்தான்..

அவனைக் கடந்து செல்லும் தைரியம் ரங்கநாதனுக்கு கடுகளவு கூட இல்லை..

முன்னால் ஹரிஹரன்.. பின்னால் கார்மேகம்.. நடுவினில் ரங்கநாதன் என்று அவர்கள் மூவரும்.. மூன்று நேர் புள்ளிகளைப் போல நின்று கொண்டிருந்தனர்..

“ மறக்கத்தான் முடியாது கார்மேகம்..” ஹரிஹரனின் கண்கள் இடுங்கின..

“ மறக்காதே.. பாட்டுப்பாடு..... ரங்கநாதன் அவர்களுக்கும் சேர்த்து மானசீகமாக மனதில் பாட ஆரம்பித்தார்..

“ காகித ஓடம்..

கடலலை மேலே...

போவது போலே...

மூவரும் போவோம்......

ஆதரவின்றி ஓடம் ஆடியதோ இல்லையோ.. அவரின் மனம் அல்லாடியது...

32

சின்னஞ்சிறு கண்ணசைவில்...

சிறகடித்தாய்.. என் நெஞ்சத்திலே...

“ என்னங்க.. அம்மா கொண்டு வந்திருக்கிற பலகாரத்தை  சாப்பிட்டு விட்டுப் போகலாமே...” என்றபடி வாசலுக்கு வந்த  ரூபிணி அவர்கள் மூவரையும் விசித்திரமாகப் பார்த்தாள்..

“ என்னப்பா.. யூாலிலேயே நின்னுட்டிங்க..?”

“ உன்னைப் பெத்ததுக்கு நான் வேற எங்கே நிற்பேன் மகளே.....

“ வீட்டுக்குள்ள வர வேண்டியதுதானே..?”

“ எனக்கு மட்டும் இங்கேயே நின்னு.. “ மறக்க முடியுமா.. ... படப் பாட்டை மனசுக்குள்ள பாடிக்கிட்டு இருக்கனும்ன்னு ஆசையா? உன் புருசன் வழியை விட்டாத்தானேம்மா.....

“ ஏங்க.. நீங்களாவது அப்பாவைக் கூப்பிட்டுக்கிட்டு வரலாமில்ல..?”

ரூபிணி ஹரிஹரÅ ட« ் கேள்வி கேட்க..

“ என்னம்மா இப்படிச் சொல்லிட்ட.. இவர் யாரு..?” என்று பதிலுக்கு கேட்டபடி கார்மேகத்தைப் பார்த்தான் ஹரிஹரன்..

“ கேள்வி இங்கே.. பார்வை அங்கேயாா..?...

“ என் அப்பா..” என்றாள் ரூபிணி..

“ உனக்கு அப்பா.. எனக்கு யாரு..? நீ சொல்லு கார்மேகம்.. இவர் எனக்கு யாரு..?”

திரும்பவும் அவன் கார்மேகத்திடம் கேட்டு வைக்க..

“ ஊ” ூம்.. இவன் ஒரு முடிவோடதான் இருக்கிறான்..... என்று.. தனக்குள் ஒரு முடிவிற்கு வந்து விட்டார் ரங்கநாதன்..

“ உங்க மாமனாருங்கய்யா..” கார் மேகம் ரங்க நாதனை முறைத்தபடி.. ஹரிஹரனுக்கு பதில் சொன்னான்..

“ ஏண்டா.. பதிலை அங்கே சொல்லிக்கிட்டு பார்வையை இங்கே விடறே..... நொந்து போனார் ரங்கநாதன்..

“ வெறும் மாமனாரில்ல கார்மேகம்..”

“ பின்னே..? லட்டு.. ஜிலேபி.. போல.. இனிப்பைப் போட்ட மாமனாரா..? இவன் என்னதான் சொல்ல வருகிறான்..?...

“ ஆசை மாமனார்.. என்ன கார்மேகம்.. நான் சொல்றது சரிதானே..?”

ஹரிஹரன் கேட்ட அபிப்ராயத்திற்கு.. “ ஆமாங்கய்யா.. ... என்ற பதிலை கார்மேகம் தரவேயில்லை..

“ இப்படிப்பட்ட மாமனார் கிடைக்க நான் என்ன தவம் பண்ணியிருக்கனும்..? இல்ல.. கார்மேகம்..”

கார்மேகத்தின் பார்வையே..” இல்லை..... என்றது.. போதாக்குறைக்கு கனல் வீசும் பார்வையொன்றை

ரங்கநாதனின் மேல் அவன் வீசவும் செய்தான்..

ரங்கநாதன் இப்படிப்பட்ட இக்கட்டைத் தந்த மகளைப் பெற்றதற்கு என்ன தவம் செய்தோமோ என்ற பரிதாபப் பார்வையொன்றை மகளின் மீது வீசினார்..

தகப்பனின் நிலையைப் புரிந்து கொண்ட ரூபிணி..

“ போதுங்க.. உங்க விளையாட்டு..” என்று கணவனைக் கடிந்து கொண்டாள்..

“ உன் புருசன் பேச்சு.. உனக்கு வெறும் விளையாட்டாய் போச்சா..? அது வீர விளையாட்டு மகளே.. இந்த அப்பன் அதைத் தாங்க மாட்டான்.....

“ நீங்க வாங்கப்பா.. போகலாம்..”

“ இதை முதலிலேயே செய்திருக்க கூடாதா..?...

ஒருவழியாய் அவரை சிறை மீட்டு.. வீட்டுக்குள் அழைத்துச் சென்றாள் ரூபிணி..

நிம்மதியுடன் மகளைப் பின் பற்றி அவர் வீட்டுக்குள் காலடி வைத்த போதே..

“ என்னங்க.. நீங்களும் உள்ளே வாங்க..” என்று ஹரிஹரனை அழைத்து அவரின் நிம்மதியைக் குலைத்தாள் ரூபிணி..

“ அவரையேம்மா இப்போக் கூப்பிடறே..”

“ டிபன் சாப்பிடத்தான்ம்மா..”

“ ஏதோ முக்கியமான வேலையாய் வெளியே கிளம்பிப் போகிறார் போல.. அவரை எதுக்கு டிஸ்டர்ப் பண்ற..?” ரங்கநாதன் அவசரமாக மகளைத் தடுத்தார்..

“ இல்லியேப்பா.. நீங்கள்ளாம் வந்து.. போகிற வரைக்கும்.. அவர் வெளி வேலையாய் போகக் கூடாதுன்னு ஆர்டர் போட்டுவிட்டேனே..”

ரூபிணி அணுகுண்டைத் தூக்கிப் போட்டாள்..

33

பார்த்ததும்தான் பார்த்தாய்.. உன்

பார்வையிலே... என் நெஞ்சில் வந்தாய்...

இப்படியொரு வேலையைப் பண்ணிவிட்டு.. அதனால் தன் தகப்பன் மனப்பாதிப்புக்கு உள்ளாவார் என்பதை அறியாதவளாக.. அதைப் பற்றி பெருமையாக கூறிய மகளை.. வெறுமையாகப் பார்த்து வைத்தார் ரங்கநாதன்..

அவரது பார்வையில் எதைக் கண்டாளோ.. ரூபிணியின் புருவங்கள் முடிச்சிட்டன..

“ அப்பாவை மிரட்டறீங்களா..?”

தனியறையில் கணவனிடம் கோபப்பட்டாள் அவள்.. அதற்குப் பதில் சொல்லாமல் மனைவியின் தோள்களில் இரு கைகளையும் போட்டு அவள் விழிகளுக்குள் பார்த்தான் ஹரிஹரன்..

“ அசத்தறடி..” என்று மனைவியை கொஞ்ச வேறு செய்தான்..

“ பேச்சை மாத்தாதீங்க..” அவன் கைகளை தட்டிவிட்டாள்.. ரூபிணி..

அவன் பிடியோ உடும்புப்பிடியாய் இருந்தது.. அவள் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டிருந்த அவன் கரங்கள் விலகவேயில்லை..

“ எதையும் மாத்திக்கிற வழக்கமே இந்த ஹரிஹரனுக்கு கிடையாதுடி..” அவன் அவளை வாசம் பிடித்தான்..

“ அதுதான் எனக்குத் தெரியுமே..” அவன் நெருக்கம் தந்த கிறக்கத்தில் விழிமூடி அவள் சொக்கினாள்..

அவளது முகத்தில் தெரிந்த மயக்கம் ஹரிஹரனை ஈர்த்தது.. அவளது கூந்தல் மலரின் மணத்தை நுகர்ந்தவன்..

“ மதுரை மல்லிகைப் பூவா..? என்று கேட்டான்..

“ ஆமாம்.. அம்மா வாங்கிக்கிட்டு வந்தாங்க..”

“ மருமகனின் ரசனையறிஞ்ச மாமியார்..” அவளின் காதோடு.. ஹரிஹரன் ரகசியமாகப் பேச ஆரம்பிக்க..

“ ச்சீய்..” என்று முகம் மூடினாள் ரூபிணி..

“ ம்ச்சு.. முழுசாய் கேளு..”

விரல் மூடிய அவள் முகத்தை... விரல் விலக்கிப் பார்க்க முயன்றான் ஹரிஹரன்..

“ மாட்டேன்..”

அவள் அவனுக்கு முகம் காட்டாமல் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்..

அவளது முதுகைச் சுற்றி அவன் கரம் வளைத்தது.. அவளது கூந்தல் மலரில் முகம் புதைத்திருந்தவனின் விழிகளில் கர்வம் மின்னியது..

“ அப்பா.. பாவம்..”

“ இதையேண்டி என்கிட்டச் சொல்ற..?”

“ அவரை பயமுறுத்த வேணாம்..”

“ ஏய்ய்.. என்னைப் பார்த்தா உனக்கு பூச்சாண்டி மாதிரி தெரியுதா..?”

அவள் அவனைப் பார்த்த பார்வையில் காதல் மின்னியது..

“ ம்ம்.. ஹீரோ மாதிரி தெரியுது..”

“ ஹீரோ மாதிரியா..? நான்தாண்டி உன் ஹீரோ..”

“ அப்படியே என் அப்பாவுக்கும் ஹீரோவாகி விடுங்களேன்..”

“ எனக்கு மட்டும் அந்த ஆசையில்லையா.. என்ன..? அவர்தாண்டி என்னை வில்லன் மாதிரி பார்த்து வைக்கிறார்..”

“ அப்படியா சொல்கிறீங்க..?”

“ அப்படித்தான் சொல்கிறேன்..”

ரூபிணி அவனை விட்டு விலகி.. சோபாவில் சாய்ந்து அமர்ந்தாள்.. நெற்றியில் ஆள்காட்டி விரலால் தட்டினாள்.. அவள் செய்கையைக் கவனித்த ஹரிஹரனுக்கு அது வேடிக்கையாக இருந்தது.. அவளருகில் அமாந்து அவள் தோள்மீது கை போட்டுக் கொண்டான்..

“ என்னடி.. மண்டையை நொட்டு.. நொட்டுன்னு தட்டுகிற..?”

“ ஸ்ஸ்ஸீ..”

“ அடேங்கப்பா..”

“ டிஸ்டர்ப் பண்ணாதீங்க...”

“ எதை..?”

“ நான் யோசிக்கறேனாக்கும்..”

“ அப்படியா.. ? எதை யோசிக்கறீங்க.. மேடம்..?”

“ அப்பா.. எதுக்காக உங்களை வில்லனைப் போலப் பார்க்கனும்..?”

“ இதை அவரிடம்தான் நீ கேட்கனும்..”

“ உங்களுக்கு என்ன தோணுது..”

“ சொன்னா நீ கோவிச்சுக்கக் கூடாது..”

“ நினைச்சேன்..”

“ என்னையா..?”

“ அதுதான் தினசரி பிழைப்பாச்சே..”

“ ஓஹோ.. இது புது நினைப்பாக்கும்..”

“ ஆமாம்..”

“ என்ன நினைச்சே..?”

“ அப்பாவைப் பத்தி நீங்க பேச ஆரம்பிச்சாலே வில்லங்கமாகத்தான் பேசி வைப்பீங்கன்னு நினைச்சேன்..”

“ ஆஹா.., புருசன் மேல உனக்கிருக்கிற நம்பிக்கையைப் பார்த்து எனக்கு புல்லரிச்சுப் போச்சுடி..”

“ எனக்குப் புருசனா உங்க மேல எனக்கு நம்பிக்கை அந்த வானமளவுக்கு இருக்கு.. ஆனா.. எங்கப்பாவுக்கு மருமகனா அந்த நம்பிக்கை துளிக்கூட இல்லை..”

ஹரிஹரன் கடகடவென்று பலத்த குரலில் சிரித்தான்..

“ உன் புருசனை சரியாய் எடை போட்டு வைச்சுருக்கடி..”

“ சிரிக்காம.. சொல்ல வந்ததைச் சொல்லுங்க..”

“ அதுவா.. ஒரு பழமொழியைக் கேள்வி பட்டிருக்கியா..?”

“ ஒரு பழமொழின்னு மொட்டையாய் சொன்னா என்ன தெரியும்..?”

“ காமாலைக் கண்ணுக்கு.. கண்டதெல்லாம் மஞ்சள்்ன்னு சொல்வாங்க..”

“ ம்ம்ம்.. அதையெதுக்கு சார்.. இப்ப.. வந்து சொல்கிறீங்களாம்..?”

“ உன் அப்பாவே ஒரு வில்லன்டி.. அவருக்கு என்னைப் பார்த்தா ஹீரோ மாதிரி எப்படித் தெரியும்..? வில்லன் கண்ணுக்கு மத்தவனெல்லாம் வில்லன்தான்..”

ரூபிணிக்கு கோபம் வந்து விட்டது.. கணவனை முறைத்தவள் அவன் கையைத் தள்ளிவிட்டு எழுந்து நின்றாள்.. ஒற்றை விரலை நீட்டி அவனை எச்சரித்தாள்..

“ இந்தக் கதையெல்லாம் இங்கே காணோம்.. அவர் வில்லனோ.. இல்லை.. கள்ளனோ.. அதைப் பத்தின பேச்சே

இல்லை.. அவர் என் அப்பா.. அவ்வளவுதான்.. அவரை பயமுறுத்துகிற வேலையெல்லாம் வைத்துக்கிட்டா நான் பொல்லாதவளாகி விடுவேன்..”

“ ஆ.. பயமாயிருக்கே..”

ஹரிஹரன் பயப்படுவதைப் போல நடித்தபடி எழுந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டான்..

34

மலரைப் போன்ற மென்மையுடன்...

என் நெஞ்சத்தை கொள்ளைகொண்டாய்...

“ நீ பொல்லதவளா..?”

அவள் காதோரமாக கேட்டான் அந்தப் பொல்லாதவன்..

அவனது அருகாமையில் அவளது கோபமெல்லாம் பறந்து விட எதுவும் செய்ய இயலாதவளாக அவன் தோளைக் கட்டிக் கொண்ட ரூபிணி கண் மூடிக் கொண்டாள்..

“ ஏய்ய்.. உன் அப்பாமேல எனக்கும் அக்கறையிருக்கு.. அவரா என்னைப் பார்த்து பயந்தா.. அதுக்கு நான் பொறுப்பில்ல.. புரியுதா..? போ.. போய்.. வேலையைக் கவனி.. சும்மா.. மனதைப் போட்டு உழப்பிக்காதே.. வயிற்றியிலிருக்கும் என் மகனுக்கு அது ஆகாது..”

“ ஆமாம் தெரியாமல்தான் கேட்கிறேன்..”

“ ஆரம்பிச்சுட்டாப்பா.. இவ தெரிஞ்சு கேட்டாலே அது வில்லங்கம்தான்.. தெரியாம கேட்டா.. அது எப்படியிருக்குமோ.. கேளுடி.. கேளு..”

“ எதுக்கெடுத்தாலும்.. என் மகன்.. என் மகனங்கிறீங்களே.. அது மகனாய் இல்லாமல்.. மகளாய்

பிறந்தால் என்ன செய்வீங்க..?"

" ரொம்ப சந்தோசப் படுவேன்.."

இதைக் கேட்டதும் ரூபிணிக்கு முகம் மலர்ந்து விட்டது.. அவனது சட்டையின் பொத்தான்களைத் திருகியபடி..

" நான்.. என்னவோன்னு நினைச்சேன்.. " என்றாள்..

" என்னன்னு நினைச்சே..? இவனுக்கு பையன்தான் பிறக்கனும்ன்னு நினைப்பு.. பெண்குழந்தையை வெறுக்கிறான்னு நினைச்சியா..?"

" நீங்கதானே அப்படிப் பேசினீங்க.."

" போடி பைத்தியம்.. எல்லோரும் சொல்கிறதைப் போலத்தான் நானும் சொல்லி வைச்சேன்.. மத்தபடி.. குழந்தையில.. ஆண் குழந்தைன்னா உசத்தி.. பெண் குழந்தைன்னா குறைவுன்னு நான் நினைக்கல.. இன்னும் சொல்லப் போனா.. பெண் குழந்தைகள்.. காலில் கொலுசோடு.. வீட்டை வலம் வந்தால்.. அந்த அழகே தனிதான்.. வீடே நிறைஞ்சிருக்கும்.. உதாரணத்துக்கு நம்ம வீட்டையே எடுத்துக்கயேன்.. நீ வருவதற்கு முன்னால்.. இந்த வீடு.. வீடாகவா இருந்தது..?"

" ஏன் அப்படிச் சொல்கிறீங்க..?"

" சம்பாதிச்சேன்.. இருக்கிற வீடு என் அந்தஸ்தைக் காட்டனும்கிறதுக்காக.. பிரம்மாண்டமாய் இந்த வீட்டைக் கட்டினேன்.. அதைத்தவிர.. இந்த வீட்டின் மேல் எனக்கு எந்தவிதப் பிடிப்பும் இல்லை.. மேக்ஸிமம் நான் நம்ம ஹோட்டல்களில்தான் தங்குவேன்.."

" அதை வசதியாய்.. ஃபீல் பண்ணினீங்களா.."

" யெஸ்.. இங்கே வந்தால் எனக்காக யார் காத்திருக்கிறாங்கன்னு தோணும்.. இந்த வீட்டின் பிரம்மாண்டமே ஒரு தனிமையை உணர்த்தும்.. அதுவே.. ஹோட்டலில் இருந்தால்.. என்னைச் சுற்றி ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருப்பாங்க.. எனக்கு தனிமை தெரியாது.."

எப்போதும்.. சத்தமும்.. சந்தடியுமாக இருக்கும் ரூபிணியின் பிறந்தவீடு.. அவளது மனக் கண்ணில் தோன்றியது..

தாரிணிக்கு மேக்அப் பண்ணிக் கொள்ள மிகவும் பிடிக்கும்.. ரூபிணியின் துணிகளை அவளைக் கேட்காமல் எடுத்துப் போட்டுக் கொள்வாள் அவள்..

நவீன் வேறுவகையில் தொல்லை கொடுப்பான்.. அவனுக்குப் பிடித்தது.. ரூபிணியின் பேனாக்களும்.. புது நோட்டுகளும்தான்.. தினமும் ஒரு பேனாவைத் தொலைத்து விட்டு ரூபிணியின் பேனாவில் கை வைப்பான்..

ரங்கநாதனுக்கும்.. வீரலட்சுமிக்கும் சொற்போர் மூள காரணங்களே தேவையில்லை.. சிறு பொறி பறந்தாலும்.. பற்றிக் கொள்ளும் அனல் பேச்சாளர்கள் அவர்கள்..

“ அம்மா.. இந்த தாரிணியைப் பாருங்கம்மா.. என் சிகப்புக் கலர் புது சுடிதாரை இவ எடுத்து போட்டுக்கிட்டா..”

“ ஏய்ய்.. தாரிணி.. அவளைக் கேட்காம அவ சுடிதாரை ஏன் எடுத்த..?”

“ இல்லைம்மா.. இவதான் போட்டுக்கச் சொன்னா..”

“ பொய் சொல்கிறாம்மா..”

“ நானா பொய் சொல்கிறேன்..? நீதான் பொய் கோளி..”

“ அம்மா..”

“ இப்ப என்னடி..?”

“ இந்த நவீனைப் பாருங்கம்மா..”

“ அவன் என்னடி செய்தான்..?”

“ என் பேனாவை கை வைச்சிட்டான்ம்மா..”

“ டேய் நவீன்.. இங்கே வாடா.. உன்னோட பெருந்தொல்லைடா.. தினமும் ஒரு பேனாவை தொலைச்சே ஆகணும்ன்னு வேண்டுதல் எதுவும் வைச்சிருக்கியா..?”

“ நானாம்மா ஆசைப்பட்டு களவு கொடுக்கறேன்..? அது தானா தொலைஞ்சு போகுதும்மா..”

“ ஆமாம்டா மகனே.. பேனாவுக்கு கால் முளைச்சு.. தானாய் போகுது.. இவன் சொல்கிறான்.. நான் கேட்டுக்கனும்.. அதுக்கு எதுக்குடா.. அவ பேனாவை கை வைக்கிற..? என்கிட்ட கேட்க வேண்டியதுதானே..”

“ அக்காங்கிற பாசம்தான்ம்மா..”

“ உன் பாசத்தை பேனாவை கைப்பத்தறதில காண்பிக்காம வேற வழியில காண்பி.. பாசமாம்.. பாசம்.. உனக்கும்.. தாரிணிக்கும் இவகூட வம்பு வளர்க்கலைன்னா பொழுதே போகாதா..?”

“ ஏண்டி வீரலட்சுமி..”

“ கூப்பிட்டுடாருடா.. நம்ம குடும்பத் தலைவர், என்ன..? வீரலட்சுமிக்கு என்னத்தை வைத்திருக்கீங்க..”

“ எதையும் வைத்திருந்தால்தான் பெண்டாட்டியைக் கூப்பிடனுமா..?”

“ அதானே.. அப்படி எதையும் மடியில் கட்டியிருந்தா.. நீங்க உங்க அக்காவைத்தானே தேடுவீங்க.. பெண்டாட்டியைத் தேட மாட்டிங்களே.. சொல்லுங்க.. எந்தக் கடனை அடைக்க என் உதவி உங்களுக்கு வேனும்..?”

வீரலட்சுமி.. ரங்கநாதனை சரியாக நாடி பிடித்து வைத்திருப்பாள்.. அக்காவுக்கு உதவி செய்ய சொஸைட்டி லோனைப் போட்டு விட்டு.. அதை அடைக்க முடியாமல்.. வழிதேடி மனைவியிடம் தஞ்சம் புக வந்திருக்கும் ரங்கநாதன் திருதிருப்பார்..

“ இவ மட்டும்.. எப்படியோ.. என்னை கண்டுபிடிச்சுடறாளே.....

அது சந்தைக் கடை.. ஆனால் .. அதுதான் சொர்க்கம்..

பாலைவன வாழ்வில் - என் நெஞ்சம்..

உன்மடியில் இளைப்பாறியது...

முரட்டுத்தனமாக இருந்தாலும்.. பொழுது விழுந்தால் வீட்டுக்கு வந்து சேர்ந்து விடும் அப்பா.. கணவன் கூட மல்லுக்கட்டியாவது.. பெற்ற பிள்ளைகளை தேவைக்கு அதிகமாக வசதி செய்து கொடுத்து கவனித்துக் கொள்ளும் அம்மா.. கேட்காமல் துணிகளை போட்டுக் கொண்டாலும்.. தனது பாக்கெட் மணியில் தங்கைக்கு புதுத்துணி எடுத்துதரும் அக்கா.. தினமும் ஒரு பேனாவை கை வைத்தாலும்.. அவள் வர நேரமாகி விட்டால்.. பொறுப்பாக பஸ் ஸ்டாப்பிற்கு வந்து காத்திருந்து கூட்டிக் கொண்டு போகும் தம்பி..

அது ஒரு சொர்க்கம்தானே..

அப்படிப்பட்ட குடும்பச் சூழலில்் வளர்ந்தவள் ரூபிணி.. கோடிஸ்வரனாக இருந்தும்.. ஊரே மரியாதைக் காட்டும் வல்லமை படைத்தவனாக இருந்தும்.. குடும்பச் சூழலை தொலைத்துவிட்டு.. தனிக்காட்டு ராஜாவாக.. தனிமையில் வெம்பி நின்ற கணவனைக் கண்டு ரூபிணிக்குள் பரிதாபம் சுரந்தது..

“ இனித்தான் நான் வந்துட்டேனே..” என்றாள் அவள் ஆறுதலாக..

“ அதைத்தான் நானும் சொன்னேன்.. நீ வந்த பின்னால்தான் இந்த வீடு.. மாளிகையாக மாறுச்சு.. கொலுசு சத்தத்துடன் நீ இங்கேயும்.. அங்கேயும் நடக்கும் போது.. எனக்கு வேலைக்குப் போகத் தோணாது.. வீட்டிலேயே இருந்து விடலாமான்னு தோணும்..”

“ தோணும்.. தோணும்.. ஏன் தோணாது..?”

ரூபிணி வெட்கத்துடன் சிரித்து கொண்டாலும். மனதிற்குள் மிகப் பெருமையாக உணர்ந்தாள்..

“ நீ பூஜை பண்ணும் போது.. எங்க வீட்டு மகாலட்சுமியாய் உன்னைப் பார்ப்பேன் ரூபிணி.. அதைப் போலத்தான் நமக்கு பெண் பிறந்தாலும் நினைப்பேன்..”

இரவு உணவை பிரமாதமாக தயாரித்திருந்தாள் வனஜா..

“ நாளைக்கு அசைவம் சமைச்சுக்கலாமுன்னு அம்மா சொல்லிட்டாங்கய்யா.. அதனால சைவத்துல ஜமாச்சுடனும்னு புகுந்து விளையாடிருக்கேன்.. சாப்பிட்டுப் பாருங்க..”

காளான் பிரியாணியும்.. சேனைக் கிழங்கு வறுவலும் நாக்கின் உமிழிநீரை ஊறவைத்தாலும்.. ரங்கநாதனுக்கு உணவின் சுவையை விட.. அவரை முதன்மையாகக் கருதி விருந்தைத் தயாரித்ததாக  வனஜா கூறியது மிகவும் பிடித்திருந்தது..

அதற்காகவே.. முகச் சிணுக்கத்தை கைவிட்டு.. தட்டின் முன்னால் உட்கார்ந்து சாப்பிடப் போனார்..

முதல் கவளத்தை எடுக்கும் போதே.. ஹரிஹரன் அங்கே வந்துவிட.. முள்ளின் மேல் இருப்பதைப் போல உணர்ந்தார்..

“ இவன் முன்னாலே தொண்டையில் சாப்பாடு இறங்குமா..?...

நல்ல வேளையாக.. ஹரிஹரன் செல்போனை காதுக்கு கொடுத்து.. யாரிடமோ பேசிக் கொண்டே.. தோட்டத்துக்கு சென்று விட .. நிம்மதியாக அவர் சாப்பிட ஆரம்பித்தார்..

ரூபிணிக்குத் தெரியும்.. அவர்.. அவன் முன்னிலையில் இயல்பாக சாப்பிட மாட்டார் என்பதால்தான்.. அவன் வாசல் பக்கம் போய் விட்டான் என்பது..

“ அம்மா.. நீங்களும் அப்பா கூடவே உட்காருங்க..”

“ இருக்கட்டுமா.. நீயும்.. நானும் சேர்ந்து சாப்பிடலாம்.. நீ .. மாப்பிள்ளையை கூப்பிடு.. அப்பா கூட அவர்

உட்காரட்டும்..”

அவ்வளவுதான் ரங்கநாதனுக்கு தொண்டையில் சாப்பாடு சிக்கிக் கொள்ள.. விக்கல் வந்து விட்டது..

அவசரமாக அவர் பக்கம் தண்ணீர் தம்ளரை நகர்த்தி வைத்த ரூபிணி.. தாயை அழமாட்டாத குறையாய் பார்த்தாள்..

அவள் சொல்ல நினைத்ததை நவீன் சொல்லி விட்டான்..

“ நீங்க வேற ஏம்மா அப்பாவை சோதிக்கறீங்க.. அவர் முன்னாலே உட்கார்ந்தா அப்பாவுக்கு பேச்சே வராது.. சாப்பாடு தொண்டையில இறங்குமா..?”

“ ம்ஹும்.. நீயாவது அப்பா பக்கத்தில் உட்காருடா..”

“ இவர் பக்கத்திலா..? ஊஹும்..”

“ ஏண்டா..?”

“ எனக்கு சாப்பாடு தொண்டையில் இறங்க வேண்டாமா..?”

“ அதுக்கு..?”

“ நான் அத்தான் கூடச் சேர்ந்து சாப்பிட்டுக்கறேன்..”

“ அப்பாவுக்கு கம்பெனி கொடுடா..”

“ அதைத்தான் தினமும் ஊரில் கொடுக்கிறேனே.. அத்தான் கூட கம்பெனி கொடுக்கத்தான் ஊருக்கே வந்திருக்கிறேன்.. வேணும்னா நீங்க அப்பாவுக்கு கம்பெனி கொடுங்க..”

“ அதைத்தான் ஆயுசு பூராவும் கொடுக்கப் போகிறேனே.. இன்னைக்கு நான் உன் அக்காவுக்கு கம்பெனி கொடுக்கிறேன்..”

நடந்த வழக்கை கவனித்துக் கொண்டிருந்த வள்ளி..

“ அடப்பாவமே.. ஐயா கூட உட்கார்ந்து சாப்பிட இந்த வீட்டில ஒரு ஆளு கூடவா இல்லாம்ம போயிருச்சு..?” என்று வருத்தப்பட்டாள்..

“ இவ .. எவ..?” வீரலட்சுமி பார்வையில் வள்ளியைச் சுட்டபடி மகளிடம் கேட்டாள்..

“ நம்ம வீட்டில் வேலை செய்கிற பெண்ணும்மா.. சூதுவாது தெரியாத அப்பாவிப் பொண்ணு.. வள்ளியை உங்களுக்கு தெரியாதா..?”

“ பார்த்தா அப்படியொன்னும் தெரியலையே.. போன தடைவ நான் பார்த்தப்போ.. இவ்வளவு விவரமாய் இவ பேசி வைக்கலையே.. ஏம்மா வள்ளி.. நீ வேணும்னா ஐயாகூடச் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடறயா..?”

“ அதுக்கென்னம்மா..”

வள்ளியே ஏற்கனவே செம பசியோடு இருந்தாள்.. வனஜாவின் பிரியாணி வாசனை எட்டு ஊருக்கு மணக்க.. சமையறையில் போய் ருசிப் பார்க்க முடியாமல் அல்லாடிக் கொண்டு இருந்தாள்..

என்றைக்கு வனஜாவின் சாம்பாரினால்தான் ரூபிணி.. வாந்தியும்.. மயக்கமுமாக ஆனாள் என்று வள்ளி குற்றம் சாட்டினாளோ.. அன்றிலிருந்தே வனஜா வள்ளியுடன் சரியாக முகம் கொடுத்துப் பேசுவதில்லை..

“ சமைச்சு வைக்கிறது என் பொறுப்பும்மா.. உங்களுக்கும் ஐயாவுக்கும்.. இந்த வீட்டில இருக்கிற மத்தவங்களுக்கும் நான் பரிமாறுகிறது என் கடமைம்மா.. இந்த வள்ளிக் கழுதைக்கு என் கையாலே நான் ஒரு கரண்டி கூட போடமாட்டேன்.. அவளா வந்து போட்டுச் சாப்பிட்டுக்கட்டும்..” என்று தீர்மானமாக சொல்லி விட்டாள்..

அந்தக் காரணத்தினால் அல்லாடிக் கொண்டிருந்தவள்.. வீரலட்சுமி கோபத்துடன் சொல்கிறாள் என்பதை புரிந்து கொள்ளாமல் உற்சாகமாக சாப்பிட்டத் தயாராகி விட்டாள்..

“ அதுக்கென்னம்மா.. எனக்கும் ஒரு கரண்டி போடுங்க..”

“ இதென்னடி.. இவ இப்படிச் சொல்கிறா..?”

“ இதிலிருந்து இவ விவரத்தை புரிஞ்சுக்குங்க..”

“ உனக்கு கரண்டியில போட மாட்டேன்.. கரண்டியிலேயே ஒரு போடு போடுவேன் சம்மதா..?”

வீரலட்சுமி வினவியதும்.. வள்ளி ஏதோ வேலையிருப்பதைப் போல சமையலறைக்கே போய் சட்டமாக சாப்பிட ஆரம்பித்து விட்டாள்..

முறைப்பாக பார்த்த வனஜாவிடம்..

“ என்ன பார்க்கிற..? நீ அன்னைக்கு சாம்பார் வைத்த லட்சணம் போல எதையாவது எகனைக்கு மொகனையாய் செய்து வைத்திருந்தால் என்ன செய்றது..? எதுக்கும் நான் ஒருவாய் சாப்பிட்டுப் பார்த்துட்டு அம்மாவை சாப்பிடச் சொல்றேன்.. “ என்று எரிச்சலைக் கிளப்பியும் விட்டாள்..

“ இவ திருந்தவே மாட்டேம்மா..” வனஜா புகார் சொல்ல..

“ விடு வனஜா.. அவ குணம்தான் உனக்குத் தெரியுமே..” என்றாள் ரூபிணி..

ஹரிஹரனுட‹ நவீன் சாப்பிட அமர்ந்தான்.. அவனுக்கு ஹரிஹரÅ ட« ் கேட்பதற்கு நிறைய கேள்விகள் இருந்தன.. அதற்கெல்லாம் பொறுமையாக பதிலைச் சொன்ன ஹரிஹரனை¡ கண்டு வீரலட்சுமியின் மனம் நிறைந்து விட்டது..

“ நவீன்.. அத்தானைச் சாப்பிட விடு..”

ஊடே அவள் மரியாதைக்காக கூறிய போது..

“ இருக்கட்டும்.. எனக்கு இவனோடு பேசப் பிடிக்கிறது..” என்று ஹரிஹரன் கூறிவிட்டான்..

அப்படியொரு குடும்பச் சூழ்நிலையில் அதுவரை இருந்ததில்லை என்று அன்றைய இரவில் ரூபிணியிடம் ஹரிஹரன் கூறினான்..



“ ரூபிணிக்கு வளைகாப்பு செய்யனும். அடுத்த மாசம் செய்துவிடலாமுன்னு நினைக்கிறோம்.. உங்க வசதி எப்படி..?” வீரலட்சுமி பணிவோடு கேட்டாள்..

“ அடுத்த மாசமே செய்யனும்னு ஏதாவது கணக்கிருக்கா..?” யோசையுடன் கேட்டான் ஹரிஹரன்..

“ ஆமாங்க தம்பி.. ஒற்றைப் படை மாசத்திலே வளைகாப்பு செய்யனும்.. ஏழாம் மாதம் இல்லைன்னா.. ஒன்பதாவது மாதம்.. இப்படி கணக்கிருக்கு..”

“ அப்படியா.. அப்போ.. அடுத்த மாதமே.. அந்த பங்சனை நடத்தி விடலாம்..” என்றான் ஹரிஹரன்..

“ எதுக்கும்.. உங்க தாய் மாமா கிட்டயும் அத்தைகிட்டயும் ஒருவார்த்தை கேட்டு விடலாமே..” வீரலட்சுமி கூறவும்..

“ போன் போட்டுத்தரேன்.. பேசுங்க..” என்று ஹரிஹரன் செல்போனை எடுத்து நம்பர்களை அழுத்தினான்..

“ ஹலோ.. மாமா.. கோவில்பட்டியில் இருந்து அத்தை வந்திருக்காங்க.. உங்ககிட்ட பேசனுமாம்..” என்று கூறிவிட்டு வீரலட்சுமியிடம் கொடுத்தான்..

வீரலட்சுமி மரியாதையுடன் அதை வாங்கி பேசி விட்டுக் கொடுத்தாள்.. ஏழாம் மாதம் வளைகாப்பு சீமந்தம்

செய்வது என்று முடிவானது வந்த வேலையை வெற்றிகரமாக முடித்துவிட்டு ரூபிணியின் குடும்பத்தார் கோவில்பட்டிக்கு திரும்பி விட்டார்கள்..

வளைகாப்பு தேதி நெருங்கிய போது ஹரிஹரனுக்கு டெல்லியில் அவசர வேலை வந்து விட.. அவன் வளைகாப்பைத் தள்ளிப் போடச் சொல்லி விட்டான்..

“ ஹோட்டல் கட்டிக்கிட்டு இருக்கேன் அத்தை..”

“ எங்கே மாப்பிள்ளை..?”

“ டெல்லியில..”

“ அதுக்கென்ன மாப்பிள்ளை..? அதுக்கும் நம்ம ரூபிணியின் வளைகாப்பை நீங்க தள்ளிப் போடச் சொல்கிறதுக்கும் என்ன சம்மந்தமிருக்கு..?”

“ அதில்லை அத்தை.. ஹோட்டல் கட்டறதில ஏதோ பிரச்சனை.. நான் உடனே போய் அதை சரிபண்ணியாகனும்.. அங்கே ஒரு மாச அளவுக்கு தங்க வேண்டியிருக்கும்..”

“ அப்படியா சொலறீங்க..?”

“ ஆமாம்.. அதனால.. நாங்க டெல்லி போய் திரும்பி வந்த பின்னாலே வளைகாப்பை நடத்தலாமே..”

“ நாங்கன்னா..? ரூபிணியையும் கூப்பிட்டுக்கிட்டு போறீங்களா..?”

“ ஆமாம் அத்தை.. “

“ அது எதுக்கு மாப்பிள்ளை.. பிள்ளை தாய்ச்சிப் பொண்ணு.. வாயும் வயிறுமா இருக்கு.. அதுக்கு பயணம் தோது வராது..”

“ பிளைட்டில் போயிட்டு.. பிளைட்டில் வரப் போகிறோம்.. நோ பிராப்ளம்.. நான் பார்த்துக்குவேன்..”

“ அதுக்கில்லை மாப்பிள்ளை.. உங்களுக்கும் ஆயிரம் வேலை இருக்கும் நீங்க ரூபிணியை என்கிட்ட விட்டுவிட்டு

டெல்லிக்கு போய் வரலாமே.. நீங்களும் நிம்மதியாய் வேலையைப் பார்ப்பீங்க.. நானும் நிம்மதியாய் ரூபிணியை பார்த்ததுக்குவேன்..”

வீரலட்சுமி சொன்னதைக் கேட்டிருந்தால்.. இப்படி ரூபிணியைத் தொலைத்துவிட்டு பரிதவித்திருக்க வேண்டாமே என்று ஹரிஹரன் அதிர்ந்து நின்ற நாளும் வந்தது..

அப்படியொரு நாள் வரப்போவதை தெரியாமல்.. டெல்லியில் அவர்களுக்கு ஆபத்து காத்துக் கொண்டிருப்பதை அறியாமல்.. ஹரிஹரன் தீர்மானமாக வீரலட்சுமியின் வார்த்தைகளை மறுத்து விட்டான்..

“ என் பெண்டாட்டி என் கூடத்தான் இருப்பா..”

“ இதென்ன பிடிவாதம் மாப்பிள்ளை..? எப்படியும் வளைகாப்பு முடிந்ததும் பிரசவத்துக்கு எங்கள் வீட்டுக்குத்தானே நாங்க ரூபிணியை அழைத்துக்கிட்டுப் போகனும்.. அதை இப்பவே செய்ததைப் போல நினைத்துக்கங்க..”

“ இது வேற இருக்கா? அப்படியெல்லாம் ரூபிணியை பிரசவத்துக்கு உங்க வீட்டுக்கு அனுப்ப முடியாதுங்க.. எங்க ஊரில் இல்லாத ஹாஸ்பிடலா?”

“ வழக்கம்ன்னு ஒன்னு இருக்கே..”

“ வழக்கத்தை மாத்துங்க..”

ஹரிஹரன் பிடிவாதக் குரலில் கண்டிப்பான தொனியில் கூறிவிட்டு செல்போனை துண்டித்து விட்டான்.. வீரலட்சுமி செய்வதறியாதவளாக வீட்டில் புலம்பினாள்.. செய்தியைக் கேட்ட ரங்கநாதன் சொல்லிக் காட்டினார்..

“ அவனே தன் போக்கில் வாழுகிற ஆளு.. அவனுக்கென்னடி பழக்க வழக்கத்தைப் பத்தித் தெரியும்..? அவனே வளமை கெட்டவன்.. அவனுக்கு போயி பெண்ணைக் கொடுத்தா இப்படிப் பேசாம வேற எப்படிப் பேசுவான்..”

ஹரிஹரன் ரூபிணியோடு விமானத்தில் ஏறியபோது கார்மேகத்தை கூட அழைத்துச் செல்ல மறக்கவில்லை..

“ கார்மேகம் எதுக்கு..?” ரூபிணிக்கு புரியவில்லை..

“ டில்லியில் காரோட்ட ஆள் வேண்டாமா..?”

“ ஏன்.. நீங்க ஓட்ட மாட்டீங்களா..?”

“ இருபத்தி நாலு மணி நேரமும் நான் உன் கூட இருக்க முடியுமா? நாம டெல்லியில் ஒருமாதம் இருந்தாகனும்.. உதவிக்கு கார்மேகம் வேனும்..”

அதுதான் காரணம்.. ஹரிஹரன் ஹோட்டல் கட்டுகிற இடத்துக்கும் மற்ற வேலைகளுக்கும் போய் விடுகிற நேரத்தில்.. ரூபிணியை காவல் காக்க கார்மேகம் வேண்டும்.. அதனால் அவர்கள் தங்கிய ஹோட்டலிலேயே கார்மேகத்திற்கும் ரூம் போடப்பட்டது..

37

தொட்டுச் சென்ற உன் நெஞ்சத்தை…

விட்டு விடுமோ.. எனது நெஞ்சம்…

கார்மேகம் இரவும்.. பகலும் விழித்திருந்து தான் காவல் காத்தான்.. எங்கே.. எப்படி.. எவ்வாறு அது நிகழ்ந்தது என்று தெரியவில்லை..

ரூபிணி.. காற்றில் மறைந்த புகையைப் போல ஒருநாள் காணாமல் போய் விட்டாள்.. காலையில் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டு விட்டு ஹோட்டலுக்குப் போய் விட்ட ஹரிஹரன் மதிய உணவுக்கு அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வந்த போது.. ரூபிணி ரூமில் இல்லை..

“ எதிர் ரூமில்தானே இருக்கேன்..? எனக்குத் தெரியாமல் எப்படி அவங்க காணாமல் போயிருக்க முடியும்..?” கார்மேகம் கலங்கினான்..

ஹோட்டல் சிப்பந்திகளுக்கு ஒன்றும் தெரியவில்லை.. ஒருவன் மட்டும் ரூபிணியின் அறையில் இருந்து ஒரு பர்தா பெண் போனதாக கூறினான்..

கார்மேகம்.. அப்படி இல்லையென்றான்..

“ நன்றாக யோசித்துப் பார் கார்மேகம்.. எங்கள் ரூமுக்கு எதிலேயே உனக்கு ரூம் போட்டதுக்கு முக்கியமான காரணம்.. நீ நானில்லாத நேரத்தில் ரூம் கதவை திறந்து வைத்து.. எங்கள் ரூமை காவல் காக்க வேண்டும் என்பதற்காகத்தான்.. உன்னை டைவர்ட் பண்ணுகிறதைப் போல.. எதுவும் நடந்ததா..?” ஹரிஹரன் பதட்டத்தை வெளிப்படுத்திக் கொள்ளாமல் விசாரித்தான்..

கார்மேகம் யோசித்தான்.. கண்களில் மின்னலடிக்க நிமிர்ந்தான்..

“ நம்ம அம்மாதான் என்னைக் கூப்பிட்டு ஹோட்டலில் இருக்கிற ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் ஒரு சாமானை வாங்கிட்டு வரச் சொன்னாங்கய்யா.. நானும் கதவை மூடிக்கச் சொல்லிவிட்டுத்தான் போனேன்.. திரும்பி வந்து அவங்க ரூம் கதவை தட்டினேன்.. கதவு திறந்துச்சு.. அவங்க எனக்கு முதுகைக் காட்டி உட்கார்ந்து புத்தகம் படிச்சுக்கிட்டு இருந்தாங்க.. வாங்கிட்டு வந்ததை எதிரேயிருந்த டீப்பாயில வைத்துவிட்டுப் போய் விடச் சொன்னாங்க..”

பர்தாப் பெண்ணொருத்தி அவர்களின் அறையை விட்டுப் போனதாக ெயுா£ டமீ பணியாள் கூறிய நேரத்தில்தான் கார்மேகம் அவனுடைய அறையை விட்டு அகன்றிருந்தான்..

“ நீ அந்த திங்ஸை வாங்கிட்டு வர எவ்வளவு நேரமாச்சு..?”

“ பத்து நிமிசம் இருக்கும்ங்கய்யா..”

பத்து நிமிசம், அந்தப் பத்து நிமிடத்தில்தான் ஏதோ நடந்திருக்கிறது..

ஹோட்டலில் வேலை செய்த பணியாள்.. அவர்கள் அறையை விட்டு வெளியேறிய பர்தா பெண்ணொருத்தியை பார்த்திருக்கிறான்.. கார்மேகம் திரும்பி வந்த போது ரூபிணி அவனுக்கு முகத்தைக் காட்டாமல் முதுகைக் காட்டி திரும்பி அமர்ந்திருந்தாள்..

இரண்டுக்கும் இடையில் ஏதோ ஒரு சம்மந்தம் இருப்பதை ஹரிஹரனால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

" அது என்ன..?...

அவன் மூலையை கசக்கி யோசிக்க ஆரம்பித்தான்..

38

உன் நிழல்தேடி நானும் வந்தேன்...

உன் நெஞ்சத்தில் நீ குடிவைத்தாய்...

ஒரே நொடியில் அந்த தொடர்பை ஹரிஹரன் கண்டு பிடித்து விட்டான். அது.. அந்த இரண்டு பேரும் மற்றவர்களுக்கு முகம் காட்டவில்லலை..

பர்தா அணிந்தவளும் முகத்தை மறைத்திருக்கிறாள்.. ரூபிணியும் கார்மேகத்திடம் முகத்தைக் காட்டாமல் முதுகு திருப்பி அமர்ந்திருக்கிறாள்..

அப்படியானால்.. அப்படியானால்.. கார்மேகம் திரும்பி வந்து பார்த்தபோது.. அறைக்குள் அமர்ந்திருந்தவள் ரூபிணியல்ல..

ரூபிணி எங்கே போனாள்..? ஒரு வேளை.. அந்த பர்தாவிற்குள் ஒளிந்திருந்தது.. ரூபிணியாக இருக்குமோ..?

ஏன் இருக்கக் கூடாது..? என்று தோன்ற.. ஹரிஹரன் அந்த ஹோட்டல் பணியாளை மீண்டும் விசாரித்தான்..

“ அவங்களைப் பார்த்தா.. கர்ப்பிணிப் பெண் போலத்தான் தெரிஞ்சது..” என்றான் அவன்..

ஹரிஹரன் சந்தேகம் ஊர்ஜிதமானது..

“ நான் அந்த திங்ஸை வைத்தப்போ திரும்பவும் அம்மா எனக்கு வேலை ஒன்னைச் சொல்லிட்டாங்கய்யா..” என்றான் கார்மேகம்..

“ என்ன வேலையைச் செய்யச் சொன்னாள்..?”

“ பியுட்டி பார்லரில் கூட்டம் அதிகமிருக்கான்னு பார்த்துட்டு வரச் சொன்னாங்க.. நான் போயிட்டு வந்தப்போ.. கதவு.. மூடியிருந்தது.. அப்புறமாய் சொல்லிக்கலாமுன்னு நானும் என் ரூமில் உட்கார்ந்துட்டேன்.. அதுக்கப்புறம் நீங்க வந்தீங்க.. அம்மாவைக் காணோம்ன்னு சொன்னீங்க..”

ஹரிஹரனுக்கு “ சுரீர்... என்றது..

ரூபிணிக்கு பியுட்டி பார்லர் போகும் வழக்கமில்லை.. அதுவும் ஹோட்டலில் உள்ள பியுட்டி பார்லருக்கு ஏழுமாத கர்ப்பிணியாக இருக்கும் இந்த நிலைமையில் அவள் போக விரும்புவாளா..?

அதே சமயம்.. ஹோட்டலில் உள்ள ஷாப்பிங் காம்ப்ளெக்ஸிற்கு கார்மேகத்தை ரூபிணிதான் அனுப்பி வைத்திருக்கிறாள்.. பர்தா அணிந்து தானாகத்தான் ஹோட்டல் அறையை விட்டு வெளியேறியிருக்கிறாள்..

அதுதான் ஏன்..?

ஹரிஹரன் சிந்திக்க நேரமிருக்காமல் விரைந்து செயல்பட்டான்.. டில்லியிலிருந்த அவனுடைய நிழல் உலக நண்பர்களுக்கு செய்தி பரவியது..

“ விழுப்புரம் ஹரிஹரன் மனைவி.. டில்லியில் காணாமல் போய் விட்டாள்.....

காட்டுத்தீ போல பரவிய செய்தியில்.. ஆங்காங்கே.. ரூபிணியை பலரும் தேட ஆரம்பித்தார்கள்.. ஒரு மணி நேரத்திற்குள் ஹரிஹரனுக்கு ரூபிணி இருக்குமிடம் தெரிந்து விட்டது..

டில்லியின் புராதனமான தெரு ஒன்றில்.. பழங்காலக் கட்டிடத்தின் உட்புறமாக.. ஒரு அறையில் ரூபிணி கட்டி வைக்கப்பட்டிருந்தாள்..

அவளை சிறை பிடித்திருந்தது.. ஹரிஹரன் சொன்னதால் கொல்லப்பட்ட ஹீராலால் சேட் சகோதரன்.. மஹிந்தர்லால் சேட்.

39

என் நெஞ்சத்தை உனக்களித்தேன்...

நேசக்கிளியே வந்துவிடு...

" என் தம்பியை நீ கொன்றாய்.. உனக்கு அந்த இழப்பின் வலி தெரிய வேண்டாமா..? அதனால்தான் உன் மனைவியைக் கொல்ல நினைத்தேன்.."

அடிபட்டு.. ரத்தகாயம் கசிந்த நிலையிலும்.. ஹரிஹரனை தீப்பிழம்பாய் பார்த்தபடி மஹிந்தர் லால் சேட் கூறினான்..

" அரே பச்சா.. யாரிடம் மோத நினைத்தாய்.. ஹரிஹரன் என்னோட படா தோஸ்த்து.. என் இடத்தில.. என் நண்பனின் மனைவியை நீ கொல்ல நினைத்தாயா..?" ஹரிஹரனின் நண்பனான சலிம் கோபப்பட்டான்"

அவனுடைய ஆள்கள் அவனுடைய கண்ணசைவிற்காக காத்திருந்தார்கள்..

“ பொறு சலீம்.. “ ஹரிஹரன் அவனை கையமர்த்தினான்..

“ என் மனைவியை தானாக வெளியே வரச் செய்திருக்கிறான் இவன்.. அது எப்படின்னு எனக்குத் தெரியனும்..” அவன் குரலில் அழுத்தம் இருந்தது..

“ கூடப்பிறந்த அக்கா வந்து கதறினால் அவள் வெளியேற மாட்டாளா..?” மஹிந்தர் லால் சேட்டின் குரலில் வெற்றியின் மமதை தெரிந்தது..

“ கூடப்பிறந்த அக்காவா..? யார்..? தாரிணியா..?”

கார்மேகம் கெட்டிக்காரன்.. ரூபிணி அணிந்திருந்த புடவையைத்தான் அறைக்குள் இருந்த பொண்ணும் கட்டியிருந்தாள் என்பதை கவனித்து ஹரிஹரனிடம் சொல்லியிருந்தான்..

“ தாரிணிக்கு என் துணிகளை உடுத்திக்கிறதுன்னா அல்வா சாப்பிடதைப் போல.....

ரூபிணி அடிக்கடி சொல்லும் வாசகம் இது..

அதனால்தான்.. ரூபிணியின் குரலும்.. தாரிணியின் குரலும் ஒன்று போல இருந்ததால்தான்.. ரூபிணி கட்டியிருந்த அதே புடவையை தாரிணியும் கட்டியிருந்ததால்தான்.. கார்மேகம் சந்தேப்படாமல் இருந்திருக்கிறான்..

“ கொக்கு தலையில வெண்ணையைப் பத்திக் கேட்டிருக்கிறாயா.. நீ தமிழ்நாட்டுக்காரன்.. நிச்சயமாய் கேட்டிருப்பாய்.. அதைப் போலத்தான்.. நாங்களும்.. உன்னைவிட்டுவிட்டு.. உன் மனைவியின் அக்காவின் குடும்பத்தை ஆராய ஆரம்பித்தோம்.. பெங்களூரில் அந்தக் குமாரையும்.. தாரிணியையும் எளிதாக கடத்திவிட்டோம்.. அந்தத் தாரிணியின் கண் முன்னாலேயே குமாரை சித்திரவதை செய்தோம்.. ஹரிஹரனை வரவைக்கனுமுன்னா ரூபிணியைக் கொண்டு வான்னு சொன்னோம்.. தமிழ்நாட்டுப் பொண்ணு.. புருசன்

உயிருக்காக தன் உயிரையே கொடுக்கும்.. தங்கச்சி உசிரையா கொடுக்காது..?”

“ இல்லை..” என்று ஹரிஹரனின் காலில் விழுந்து கதறினாள் தாரிணி.. “ எனக்கு உங்களைப் பற்றித் தெரியும்.. நான் ரூபிணியைக் கூப்பிட்டுக் ொகொண்டு வரவில்லைன்னா.. இவன் என் புருசனின் உயிரை எடுத்திருப்பான்.. எப்படியும் ரூபிணியைத் தேடி நீங்க வந்துவிடுவீங்கன்னு தெரியும்.. அதனால்தான் அந்த ரிஸ்க்கை எடுத்தேன்.. மத்தபடி.. ரூபிணியின் மேல துரும்பு பட்டிருந்தாலும் அவளுக்கு முன்னால் நான் உயிரை விட்டிருப்பேன்..”

“ உன் தம்பி செய்த கற்பழிப்புக் கொலைக்காகத் தான் நான் அவனைக் கொல்லச் சொன்னேன்.. நான் என்ன தப்பு செய்தேன்னு.. நீ என் பெண்டாட்டியைக் கடத்தினாய்..? உன் குடும்பத்துக்கே பெண்களிடம் தான் பேடித்தனம் செய்ய தோணுமா?”

மளª த® லாலை உயிரோடு மட்டும்தான் விட்டு வைத்தான் ஹரிஹரன்.. மற்றபடி அவனுடைய ரூபிணியை கடத்தியதற்கான வெகுமதியை கொடுத்துவிட்டான்..

## 40

மான்விழியே! உன் விழியசைவில்…

மயங்குதடி எனது நெஞ்சம்…

பச்சைப் புல்வெளியின் மத்தியில் வெறுமையாக அந்த பிளேகிரவுண்ட தெரிந்தது.. நடுவில் வலை கட்டப் பட்டிருக்க.. இரண்டு பக்கமும் நின்று பதினைந்து வயது ரூபனும்.. பதினொரு வயது ஹரிதாவும் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தனர்..

கார் சத்தம் கேட்டது.. திரும்பிப் பார்த்தனர்.. காரிலிருந்து ஹரிஹரன் இறங்கினான்..

“ அப்பா..” என்று கையாட்டியவர்களை நோக்கி வந்தான்..

“ அப்பா.. நான் தான் அதிக பாயிண்ட்ஸ் எடுத்தேன்..” ரூபன் சொன்னான்..

“ இல்லைப்பா.. நான்தான் அதிக பாயிண்ட்ஸ் எடுத்தேன்.. அவன் பொய் சொல்றான்.. “ ஹரிதா குதித்தாள்..

“ நீதான் தோத்துட்ட..”

“ இல்லை.. நீதான் தோத்துட்ட..”

இரண்டு பேரும் வழக்கடித்துக் கொள்ள... ஹரிஹரன் அவர்களைச் சமாதானப் படுத்திவிட்டு.. ஆழ்ந்த குரலில் கூறினான்..

“ ரூபன்.. ஹரிதா.. இதை இப்படியும் சொல்லலாமே..”

“ எப்படிப்பா..”

“ நீங்க ரெண்டு பேருமே ஜெயிச்சுருக்கீங்க..”

“ ஆமாமில்லை..”

“ தட்ஸ் குட்.. ஹரிஹரனின் பிள்ளைகள் ஜெயிக்கப் பிறந்தவர்கள்..”

“ ஷ்யூர்..”

வீட்டுக்குள் சென்ற ஹரிஹரனை காபியுடன் வரவேற்றாள் ரூபிணி.. சற்று சதைப்பிடிப்பாக இருந்தாள்.. முகத்தில் துறுதுறுப்பு குறைந்து.. ஓர் அமைதியும் நிதானமும்.. பொறுப்பும் தெரிந்தன..

“ அன்னைக்கு முதன் முதலில் உன்னைப் பார்த்தப்போ.. எப்படி இருந்தயோ.. அப்படியே இன்னமும் இருக்கேடி..” மனைவியை கட்டிப்பிடித்தான் அவன்..

“ ஸ்ஸ்.. பிள்ளைகள் வந்துடப் போறாங்க.. “ விலகாமல் எச்சரித்தாள் அவள்..

“ அவங்க விளையாட்டில் மும்முரமாய் இருக்காங்க.. ஏன் ரூபிணி.. டெல்லியில் அந்த இக்கட்டான சூழ்நிலையில் நீ பயப்படவே இல்லையா..?”

“ இல்லைங்க .. எனக்குத் தெரியும்.. எப்படியும் நீங்க என்னைத் தேடி வந்து விடுவீங்கன்னு.. அந்த செகண்டில்.. நம்மால் தாரிணியக்காவின் புருசன் ஆபத்தான நிலைமையில் இருக்கிறார் என்பது மட்டுமே என் மனதில் இருந்தது.. நன்றாக யோசித்து பாருங்கள்.. மஹிந்தர் லால் சேட்டுக்கும்.. தாரிணியக்காவின் குடும்பத்திற்கும் என்ன சம்மந்தம்..? குமார் அத்தான் செய்த தவறு தான் என்ன..? உங்கள் பெண்டாட்டியின் அக்காவை அவர் கல்யாணம் பண்ணியிருக்கிறார்.. அதைத் தவிர.. அவர் வேறு என்ன தவறு செய்தார்..?”

ரூபிணி இதைக் கூறிய பின்னால்தான் ஹரிஹரனுக்கு தாரிணியின் மேல் இருந்த கோபம் குறைந்தது.. இல்லையென்றால் அவளையும் உண்டு இல்லையென்று ஒரு வழி பண்ணியிருப்பான் அவன்..

அந்த அளவுக்கு கொதித்து போயிருந்தான் ஹரிஹரன்..

மஹிந்தர்லால் உடலில் இருந்த அனைத்து பாகங்களையும் அன்று அவன் செயல் இழக்க வைத்துவிட்டான்..

தங்கையின் கணவன் அடித்த அடியின் அளவை தாரிணி அன்று நேரில் கண்டு அரண்டு விட்டாள்..

“ உன் தம்பி.. ஒன்னுந்தெரியாத ஏழை அப்பாவிப் பெண்ணை கற்பழிச்சு சின்னா பின்னமாக்கி.. கொன்று புதைப்பான்.. அவனை கை குலுக்கி பாராட்டிக்கிட்டு நாங்க பேடிகளாக இருந்திருக்கனும்.. அப்படித்தானே.. அவன் சாவுக்கே நீயெல்லாம் நியாயம் கேட்க கிளம்பறியே.. அந்தப பெண்ணின் சாவுக்கு.. நாங்க நியாயம் கேட்டா அது தப்பா..?”

ஹரிஹரன் அழ எப்படிப்பட்ட அடி என்று அறிந்திருந்த அவனது நிழல் உலக நண்பர்கள் விலகி நின்று விட்டனர்..

“ இனி நீ உயிரோட மட்டும்தாண்டா இருப்ப.. இனி எந்தப் பெண்ணையும் கடத்த திட்டம் போட.. உன் மூளையும் வேலை செய்யாது.. உன் கைகாலும் ஒத்துழைக்காது..”

குவியலாகக் கிடந்தவனை விட்டுவிட்டு குமாரை மீட்டனர்.. குற்றுயிரும்.. குலையுயிருமாக இருந்தவனை டில்லி மருத்துவ மனையில் சேர்த்தான் ஹரிஹரன்..

“ நம்மால்தானே அவருக்கு இந்த நிலைமை..?”

திரும்பத் திரும்ப இந்தக் கேள்வியைக் கேட்டு.. தாரிணியின் செய்கைக்கு பின்னாலிருந்த நியாயத்தை உணர வைத்தாள் ரூபிணி..

“ அவர் பாட்டுக்கு.. அவருண்டு.. அவர் வேலையுண்டுன்னு இருந்தாரு.. அவனுக அவரைக் குறிவைத்தானுக.. ஏன்..? அவர் உங்களுக்கு சகலை.. அதற்காகத்தான்..”

“ நான் இதை எதிர்ப்பார்க்கலை ரூபிணி..”

“ தாரிணி எனக்குப் போன் பண்ணினா.. என்னன்னு கேட்டேன்.. கார்மேகத்துக்கு தெரியாம என்னைப் பார்க்கனும்முன்னு சொன்னா.. கார்மேகத்துக்கு வேலை சொல்லி அனுப்பி வைத்தேன்.. பர்தாவோட வந்து சேர்ந்தா.. என் புருசன் உயிரு உன் கையிலன்னு சொல்லி “ ஓ... ன்னு அழுதா.. உன் புருசனாலேதான் என் புருசனுக்கு இந்த நிலைமைன்னா.. என்னால் தாங்க முடியலை.. உங்களால அவ புருசன் உயிருக்கு ஆபத்துன்னா.. உங்க மேல பழி வராம தடுக்க என் உயிரைக் கொடுத்தாலென்னன்னு தோணிருச்சு.. எப்படியும் என்னைத் தேடி நீங்க வந்து விடுவீங்கன்னு தெரியும்.. அதனால என் உயிரை பணயம் வைச்சுட்டேன்..”

ஹரிஹரன் மனம் நடுங்க அவளை அணைத்துக் கொண்டான்.. குமாரின் உடல் நிலை சரியானதும் குமாரிடம் இரண்டு விமான டிக்கெட்டுகளை நீட்டினான்..

“ உங்களுக்கும்.. உங்க மனைவிக்கும் யு. எஸ். ஏவில் வேலை காத்துக்கிட்டு இருக்கு.. என்னால் உங்க இரண்டு பேருக்கும் ஏற்பட்ட துன்பங்களுக்காக நான் செய்கிற சின்ன காம்பன்சேசன் இது..”

தாரிணியின் மனதில் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த கசப்புணர்வு மறைந்து போனது.. பெங்களூரில் நடந்தவைகளை கனவாக மறந்து.. வெளிநாட்டிற்கு பறந்து விட்டார்கள் அவ® கŸ..

“ அக்காவோட ஊரிலேயே எனக்கும் மேலே படிக்க சீட் வாங்கிக் கொடுத்துவிட்டார் அத்தான்..”

நவீன் தாரிணியைத் தொடர்ந்து.. யு. எஸ். ஏவிற்கு பறந்தான்..

“ எங்க சின்ன மருமகன் மனசு வைச்சா.. முடியாதது எதுவும் இல்லை..” இதைப் பெருமையுடன் அடிக்கடி சொல்வது.. வீரலட்சுமியில்லை.. ரங்கநாதன்..

அவருடைய குடும்பம் மேம்பட.. ஹரிஹரன் செய்து உதவிகள் அவர் மனதை இளக்கியிருந்தன..

ஒன்பதாம் மாதத்தில் வளைகாப்பு முடிந்து.. ரூபிணி சாஸ்திரத்திற்காக கோவில்பட்டிக்கு வந்து ஒருநாள் மட்டும் தங்கி விட்டுச் சென்றாள்.. அவள் விழுப்புரத்திற்கு திரும்பிய போது.. வீரலட்சுமியும் கூடச் சேர்ந்து சென்று விட்டாள்..

ரூபிணிக்கு மகன் பிறந்தான்.. “ ஹரிஷ்... என்று கணவனின் பெரைப் போன்ற சாயலில் பெயர் வைக்க ரூபிணி முனைய.. அவனோ மனைவின் பெயர் சாயலில் “ ரூபன் ... என்று பெயர் வைத்தான்..

கோவில்பட்டியில் பிரம்மாண்டமான பங்களா ஒன்றைக் கட்டி மாமியாரின் பெருக்கு மாற்றிக் கொடுத்தான் ஹரிஹரன்..

ரூபனுக்கு மூன்று வயதான போது.. ரூபிணிக்கு பெண் குழந்தை பிறந்தது.. “ இப்ப என் சாய்ஸ்.. இவ பெயர்

ஹரிதா..” என்றாள் ரூபிணி.. மனம் கொள்ளாத பெருமையுடன் மகளைத் தூக்கி உச்சி முகர்ந்தான் ஹரிஹரன்.. குழந்தைகள் வளர. வளர.. அவன் வீட்டில் அவன் விரும்பிய கலகலப்பான இனிமையான சந்தடி பரவி நிறைந்தது..

“ அப்பா.. அவனைப் பாருங்க..”

“ இவதான் வம்புக்கு வருகிறாப்பா..”

வேலை முடிந்து வீட்டுக்கு வரும் ஹரிஹரனிடம் வழக்குகள் வந்தன.. அவன் நீதிபதியாகி தீர்ப்புக் கூறி.. குடும்பத்தலைவன் ஆனான்

தாரிணிக்கும்.. குமாருக்கும் குழந்தைகள் பிறந்தன.. நவீனுக்கு யு. எஸ். ஏவிலேயே வேலை கிடைத்தது.. சென்னையில் பெண் கிடைத்து திருமணமும் ஆனது.. வீரலட்சுமியும்.. ரங்கநாதனும்... இந்தியாவுக்கும்.. வெளிநாட்டிற்கும் இடையே.. மாறிமாறிப் பறந்தார்கள்..

அவர்களது இனிய சின்ன மருமகனின் மேல் அன்பு அவர்கள் நெஞ்சத்தில் உதயமானது.. ரூபிணியின் காதல் நெஞ்சத்தில் சங்கமித்த ஹரிஹரன் அன்பு.. அந்தக் குடும்பத்தையே வாழ வைத்தது..

41

பொங்கி வரும் வெள்ளம் போல...

சங்கமித்த நெஞ்சமடி...

உண்மையான காதலுக்கு என்றுமே சக்தி அதிகம்.. அந்தக் காதல்.. ரூபிணியை ஹரிஹரனின் கைகளில் கொண்டு போய் சேர்த்தது.. சத்தம் போட்டு பேசக்கூட தயங்குகிறவளை.. காதலை ஒப்புக் கொள்ள வைத்தது.. எவருக்கும் அஞ்சாத ஹரிஹரனை.. ரூபிணியின் காதல் கிடைக்குமோ... கிடைக்காதோ என்று பயப்பட வைத்தது.. எவருக்கும் கட்டுப் படாத சிங்கமானவனை.. அவளது கண்ணசைவிற்கு கட்டுப்பட வைத்தது..

" டாடி நீங்க ஊருக்குத்தான் சிங்.."

ஹரிதா கண்சிமிட்டிச் சிரிப்பாள்.. ரூபிணிக்கு கோபம் வந்து விடும்.

" என்ன பேச்சுடி பேசற.." மகளைக் கண்டிப்பாள்..

" ஸ்ஸ்.. ரூபிணி.. என் மகள் காரணமில்லாமல் எதையும் சொல்ல மாட்டாள்.. ஏண்டா செல்லம் அப்படிச் சொன்ன..?"

" பின்னே என்ன டாடி.. ஊருக்குள்ள நீங்க பேசறதுக்கு தலையாட்டுகிறாங்க.. வீட்டுகுள்ளே என்னடான்னா.. மம்மி சொல்கிறதுக்கு.. நீங்க தலையாட்டி வைக்கிறிங்க.."

" அதுவாடா செல்லம்... ஊருக்குள்ளே நான்தான் ராஜா.. ஆனா வீட்டுக்குள்ளே உங்க அம்மாதானே என்னோட மகாராணி..."

அவன் காதலுடன் மனைவியைப் பார்த்தபடி கூற அவள் முகம் சிவந்தாள்.

" போதுமே.. அப்பாவும்.. பொண்ணும் சேர்ந்து என்னை வாரனுமா..?" என்று சிணுங்க வேறு செய்தாள்...

" மம்மியோட ஆர்டரை ஓகே பண்ணுகிற ஆள் மட்டும்தானா நீங்க..? என்ன டாடி இது.. பெண்கள் சொல்கிறதைக் கேட்கறிங்க.." ரூபன் வேண்டுமென்றே பேசினான்..

அவனுக்கு அது பிடித்தமான விளையாட்டு.. பெண்களைப் பற்றி சிறிது குறைவாகச் சொன்னால் கூட.. ஹரிதா வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்து விடுவாள்.. ரூபிணி மகளுக்கு பரிந்து கொண்டு வருவாள்..

தாயையும்.. தங்கையையும்.. ஒரே சமயத்தில் வம்புக்கு இழுக்க.. அடிக்கடி இந்த அஸ்திரத்தைப் பயன் படுத்துவான் ரூபன்..

" டேய்.. நீ எப்படி பெண்கள்ன்னு குறைவா பேசலாம்.. ஸாரி சொல்லுடா.."

“ ஸாரியா.. ஹரிஹரனின் மகன் ஸாரி சொல்வதா..? ஹ...”

“ ரொம்பத்தான் அலட்டிக்காதே.. நான் ஹரிஹரனின் மகள்.. ஸாரி சொல்ல வைக்காம விட மாட்டேன்..”

“ இதப்பாரு ஹரிதா.. உண்மையைச் சொன்னதுக்குப் போய் ஸாரி சொல்ல என்னால் முடியாது..”

“ எதுடா உண்மை..? பெண்கள்ன்னா உனக்கு குறைவாப் போச்சா? மம்மி.. இவன் சொன்னதைக் கேட்டிங்களா..?”

“ ரூபன்.. ஹரிதாகிட்ட ஸாரி சொல்லு..”

“ நோ.. மம்மி...”

“ அப்போ..  என்னிடம் பேசாதே...”

“ மம்மி...”

“ உன் தங்கை மட்டும்தான் பெண்ணா...? நானும் பெண்தான்..”

“ ஸாரி மம்மி...”

“ அவகிட்ட ஸாரி சொல்லுடா..”

“ நான் ஹரிஹரனின் மகன் மம்மி..”

இதைக் கேட்டதும்.. ரூபிணியின் முகம் கனிந்து விடும்.. அவள் காதலுடன் கணவனைப் பார்க்க ஆரம்பித்து விடுவாள்.

இவன்.. இந்த டிரிக்கை கண்டு பிடித்து வைத்திருக்கிறானே.. ஹரிதா பல்லைக் கடிப்பாள்..

“ மம்மி.. டாடியோட முகத்தை பார்க்கிறதை விட்டுவிட்டு இவன் முகத்தைப் பாருங்க..”

ஹரிதா ரூபிணியின் கவனத்தை திருப்புவாள்.. விலக மனமில்லாமல் ரூபிணியின் விழிகள் விலகும்.. அதைக் கண்ட ஹரிஹரனின் விழிகள் மின்னும்...

“ டேய்.. இதை என்கிட்டேயே சொல்கிறியா..? நீ தி கிரேட் ஹரிஹரனின் மகன் தான்.. அதைச் சொல்லி என்னை பயமுறுத்தப் பார்க்கிறியா..?”

வலுக்கட்டாயமாக பொய் கோபத்தை வரவழைத்துக் கொண்டு.. அவள் பேச.. ஹரிஹரன் அதை ரசித்து

ஹா.. ஹாா.. என்று சிரிப்பான்..

அவனின் சிரிப்பை விரும்பி ரசிக்க ஆரம்பிப்பது.. இப்போது ரூபிணியின் முறையாகிவிடும்..

வரிசைப் பற்கள் தெரிய.. கண்ணோடு.. முகமும் சேர்ந்து சிரிக்கும் அந்தச் சிரிப்பை.. அவள் கன்னத்தில் கைவைத்து பார்க்க ஆரம்பித்து விடுவாள்..

“ மம்மி.. இப்படியிருந்தா.. அவனை எப்படித்தான் பனிஷ் பண்ணுவது?”  ஹரிதா அழமாட்டாத குறையாக வினவுவாள்...

“ கவலைப் படாதே செல்லம்.. அம்மா நானிருக்கேன்.. இவனை பனிஷ் பண்ணாம விடமாட்டேன்..”

“ கிழிச்சீங்க.. அவன் அப்பா பெயரைச் சொல்லியே.. உங்களை கிளின் போல்டாக்கி விடுவான்.. நீங்க ஆட்டத்துக்கே வராதீங்க.. நானா.. இவனான்னு.. நான் முடிவு பண்ணிக்கிறேன்..”

“ என்னத்தை முடிவு பண்ணுவ..?”  ரூபன் சண்டைக்கு வருவான்..

“ ஹரிஹரனின் மகன் ஒருநாளும் மன்னிப்புக் கேட்க மாட்டான்.. என்ன மம்மி.. நான் சொல்கிறது சரிதானே..?”

இப்படிக் கேட்டால் ரூபிணி.. எப்படிப் பதில் சொல்வாள் என்று ஹரிதாவுக்கு தெரியாதா என்ன..?

“ டேய்.. மம்மியை விடு.. நீ டாடியின் பெயரைச் சொல்லியே அவர்களை கவிழ்த்து விடுவ.. டாடி.. நீங்களே சொல்லுங்க.. நான் உங்களின் மகள்.. ஹரிஹரனின்

மகள்கிட்ட.. ஸாரி சொல்ல வேண்டிய ஒருவன்.. ஸாரி சொல்லாமல் போகலாமா..?”

“ நிச்சயமாய் அது கூடாது.. ரூபன்.. ஹரிதாவிடம் ஸாரி சொல்லு..”

ஹரிஹரனின் குரல் கண்டிப்புடன் ஒலிக்கும்.

“ ஸாரி…” ரூபன் கடுப்புடன் சொல்வான்..

இப்போது.. மகளின் முகம் பார்ப்பான் ஹரிஹரன்..

“ என்ன டாடி…?”

“ ரூபன் கிட்ட நீ ஸாரி சொல்லு..”

“ ஸோ.. வாட்..?”

“ ஃபோர்ஸ் பண்ணி ஸாரி சொல்ல வைத்தியே அதுக்காக..” ஹரிஹரனின்  நியாயம் இப்படித்தான் இருக்கும்.





“ அவன் பேசினது தப்பு டாடி…”

“ இட்ஸ் ஜஸ்ட் ஃபார் ஃபன் ஹரிதா..”

“ ஸாரிடா..”

“ தட்ஸ் குட்.. ஹரிஹரனின் பிள்ளைகள்.. அவர்களுக்குள் கூட தோற்றுப் போகக் கூடாது…”

பிள்ளைகளை சிங்கங்களாக வளர்த்தான் ஹரிஹரன்.. அவர்களும் அப்படியே அவனின் பிரதி பிம்பங்களாக வளர்ந்தார்கள்.. மேல் படிப்புக்கு வெளி நாடு சென்றார்கள்.. ரூபிணி… பிழியப் பிழிய அழுதாள்..

“ ஏய்ய்… உன்னை வருத்தப் படுத்தனும்னு எனக்கு மட்டும் ஆசையாடி? ஒரளவுக்கு மேல.. பிள்ளைகளை

கட்டுப்படுத்தக் கூடாதுடி.. சுதந்திரம் கொடுக்கனும்.. நம்ம பாசத்தைக் காட்டி அவங்களை சிறைவைக்கக் கூடாது..”

“ இதை நீங்க சொல்றிங்களா..?”

“ ம்ம்ம்.. நான் உன்னை மட்டும்தான் சிறைபிடித்தேன்.. சிறைபிடிப்பேன்.. பெண்டாட்டிக்கும்.. பிள்ளைகளுக்கும் வித்தியாசம் உண்டு ரூபிணி.. அவங்க என் ரத்தம்.. ஆனால்.. அவங்களுக்கான வாழ்க்கை தனியானது.. நீ அப்படியில்லை.. உன் வாழ்க்கை என்னோடு.. என் வாழ்க்கை உன்னோடு..”

“ எனக்கு அழனும் போல இருக்கே..”

“ அழு.. சாய்ந்து கொள்ள என் தோளிருக்கு.. பட்.. ரூபன் வேறு ஒரு பெண்ணுக்கு தோள் கொடுக்கனும்.. ஹரிதா வேறு ஒரு ஆணின் தோள் சாயனும்.. இதை மறந்து விடாதே.. உனக்கு நான்.. எனக்கு நீ...”

ரூபிணி பக்குவப் பட்டாள்.. குழந்தைகளை தன் சிறகிலிருந்து விடுவித்தாள்.. அவர்கள் படித்து விட்டுத் திரும்பி வந்தபோது ஹரிஹரன் சென்னையிலிருந்த தொழில்களை ரூபனின் பெயருக்கு மாற்றினான்..

“ இதுவும் ஒரு வகையான பட்டாபிஷேகம் தாண்டி..”

ரூபிணியிடம் காரணம் சொன்னான்..

“ ஆனா.. இந்த விழுப்புரத்தில் இருக்கும் தொழில்கள்..?”

“ அது என்னைச் சேர்ந்தது.. என் காலத்திற்கு பின்னால் தான் ரூபனைச் சேரும்..”

“ அது மட்டும் ஏன்..?”

“ ஏன்னா.. நான் விழுப்புரம் ஹரிஹரன்.. இந்த அடையாளத்தை என் உயிருக்கிற வரை விட்டுத்தர மாட்டேன்.. இந்த ஊரை விட்டு நகரவும் மாட்டேன்.. இந்த அடையாளத்துடன் தான் உன்னை நான் சந்தித்தேன்.. இந்த விழுப்புரம்தான் உன்னுடைய அறிமுகத்தை எனக்குத்

தந்தது.. உனக்கும்.. எனக்குமான காதல் பயிரை வளரச்செய்தது.. உன்னை என்னிடம் கொண்டு வந்து சேர்த்தது.. கடைசி வரை.. நீயும்.. நானும் இந்த ஊரில்தான் வாழ்வோம்..”

அவனுடைய காதலில் கரைந்து போனாள் ரூபிணி..

அவன் வேகமான காதலனாக இருந்தான்.. அன்பான கணவனாக இருந்தான்.. பொறுப்பான தகப்பனாக இருந்தான்..

“ ஹரிதாவுக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கேன்..”

வார  இறுதியில் வந்த மகனை அருகில் வைத்துக் கொண்டு ரூபிணியிடம் சொன்னான் ஹரிஹரன்..

“ எந்த ஊர்ப்பா..”

“ டில்லி...”

“ அவ்வளவு தூரமா..?.”  ரூபிணி பரிதவித்தாள்..

“ அந்த ஊர் மாப்பிள்ளையைத்தானே.. ஹரிதா விரும்புகிறாள்..” ஹரிஹரன் அமைதியாக சொன்னான்..”

“ ஹரிதா காதலிக்கிறாளா...?”

“ காதலித்தால் தப்பில்லை ரூபன்.. உன் அம்மாவும்.. நானும் காதலித்து கல்யாணம் செய்து கொண்டவர்கள் தான்.. பட்.. ஹரிதா காதலிக்கவில்லைன்னு சொல்கிறாள்.. அந்தப் பையன் விரும்புகிறானாம்.. இவள் வீட்டில் பேசுங்கண்னு சொன்னாளாம்..”

“ ஓ...”

“ பட்.. ஒன்திங் ரூபன்.. உன் தங்கை அவனின் காதலை மறுக்கவில்லை.. வீட்டில் பேசச் சொல்லி சொல்லியிருக்கிறாள்..”

“ ஓ...”

“ இதிலிருந்தே அவள் மனம் புரியவில்லையா..?”

ஹரிஹரனின் கேள்வியில் ரூபிணியும்.. ரூபனும் அமைதியடைந்து விட்டார்கள்.. ஹரிதாவின் திருமணம் நிச்சயமாகியது.. ஹரிஹரன்.. டில்லியிலிருந்த அவனுடைய சொத்துக்களை.. ஹரிதாவின் பெயருக்கு மாற்றினான்.

மகனையும்.. மகளையும் அருகருகே நிற்க வைத்து.. மகளிடம் பத்திரங்களை கொடுத்தான்.

“ ஹரிதா.. உன் அண்ணனுக்கு என் தொழில்களைக் கொடுத்திருக்கிறேன்.. உனக்கு என் சொத்துக்களை கொடுத்திருக்கேன்.. இது இரண்டுமே ஈக்குவல் புராபெர்டி..”

“ நாங்க கேட்கலையே டாடி..”

“ சொல்வது என் கடமை.. எனக்குப் பின்னால்.. இந்த விழுப்புரத்திலிருக்கும் சொத்துக்கள் ஹரிதாவுக்கு வரும்.. தொழிலகள் ரூபனுக்கு வரும்.. ஏன்னா.. மகனுக்கு தொழில்களையும்.. பெண்ணுக்கு சொத்துக்களையும் கொடுக்கனும்கிறது நம்ம பாரம்பரிய வழக்கம்..”

“ டாடி.. ப்ளீஸ்...”

“ எனக்குப் பின்னால் உங்களுக்கு சொத்துக்களைத்தான் விட்டுப்போவேன்.. உங்க அம்மாவை விட்டுப் போக மாட்டேன்.. அவள் என்னுடனே வந்து விடுவாள்.. நான் அழைத்துக்கொண்டு போய் விடுவேன்..”

ரூபனும்.. ஹரிதாவும் உறைந்து போனார்கள். ஹரிதா திருமணம் முடிந்து.. டில்லிக்கு பறந்து விட்டாள்... ரூபனுக்கு திருமணம் முடிந்து.. அவனும் சென்னையில் தனிக் குடித்தனத்தை ஆரம்பித்தான்..

“ வாழ்ந்தால்.. எங்க அப்பா.. அம்மாவைப் போல வாழனும்...

இந்த வார்த்தைகளை.. ஹரிஹரனின் பிள்ளைகள் இருவரும் அடிக்கடி சொல்லிக்கொண்டே இருப்பார்கள்..

ஹரிஹரனைப் போலவே.. ரூபனும்.. மனைவியை அதீதமாக காதலித்தான்..

ரூபிணியைப் போலவே.. ஹரிதாவும்.. தனக்கு தாலிகட்டிய கணவனின் மேல் உயிரை வைத்தாள்...

சங்கமித்த நெஞ்சங்களைக் கொண்ட ஹரிஹரனும்.. ரூபிணியும் தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்கு கற்றுத் தந்த பாடம் அது..

ஹரிஹரன் தன் நெஞ்சத்தை ரூபிணியிடம் கொடுத்துவிட்டு அவளது நெஞ்சத்தை எடுத்துக் கொண்டான்.. இருவரின் நெஞ்சங்களும் சங்கமித்த போது.. அங்கே.. அற்புதமான வாழ்க்கை உதய மானது... நமக்கும் நெஞ்சங்கள் உண்டு.. இதுவரை இல்லாவிட்டாலும்... இனியாவது சங்கமிக்கலாமே...

- முற்றும் -